# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

## பொதுத்தமிழ்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012.

## நான்காம் பருவம்

| Course Code | | | | 41T | (TITLE OF THE COURSE)<br>பகுதி - ஒன்று - பொதுத்தமிழ் நான்காம் தாள் |
|---|---|---|---|---|---|
| L | T | P | C | | |
| 5 | 2 | 0 | 6 | | |

**பாடத்திட்டத்தின் நோக்கங்கள் (Course Objectives) சங்க இலக்கியத்தின் சிறப்புகளை உணர வைத்தல்**

**எதிர்பார்க்கும் படிப்பின் முடிவுகள் (Expected Course Outcomes)**

| | | |
|---|---|---|
| CO1 | மாணவர் பண்டைத் தமிழரின் பண்பாட்டினை அறிந்து கொள்வர் | $K_1,K_4,K_6$ |
| CO2 | வாழ்வியலுக்கான பொருள் இலக்கணத்தைக் கற்றுக் கொள்வர் | $K_2,K_5$ |
| CO3 | இலக்கியங்கள் வாயிலாக வாழ்வியல் அறங்களைப் புரிந்து கொள்வர் | $K_1,K_3,K_5$ |
| CO4 | வரலாற்றுப் பின்புலங்களை மையமாகக் கொண்டு நாடகங்கள் படைக்கும் உந்துதலைப் பெறுவர். | $K_2,K_6$ |
| CO5 | சங்க இலக்கியங்களின் வரலாற்றையும், தனிச்சிறப்புகளையும் அறிந்து கொள்வர். | $K_2,K_5$, |

**K1 - நினைவில் கொள்ளுதல் (Remember) K2 - புரிந்து கொள்ளுதல் (Understand) K3 - விண்ணப்பித்தல் (Apply) K4 - பகுத்தாய்தல் (Analyze) K5 - மதிப்பிடு**

**செய்தல் (Evaluate) K1 - உருவாக்குதல் (Create)**

| அலகு - 1 | செய்யுள் | 30 Hours |
|---|---|---|
| நற்றிணை முதல் பட்டினப்பாலை வரை<br>நியூ செஞ்சுரி புக் ஹாவுஸ் (பி) லிட்., திருநெல்வேலி - 1 தொலைபேசி எண். 0462 2323990. | | |
| **அலகு - 1** | **இலக்கணம்** | **30 Hours** |
| 1. பொருள் இலக்கணம்<br>2. ஓரெழுத்து ஒருமொழிகள்<br>3. மரபுச் சொற்கள்<br>4. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுதல் | | |

<table>
<tr><td>அலகு - 3</td><td>உரைநடை</td><td>15 Hours</td></tr>
<tr><td colspan="3">வாழ்வியல் அறம் - தொகுப்பாசிரியர் - முனைவர் ச.பொ.சீனிவாசன் நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்., சென்னை - 50. தொலைபேசி எண் 044 26251968, 26258410, 48601884.</td></tr>
<tr><td>அலகு - 4</td><td>நாடகம்</td><td>15 Hours</td></tr>
<tr><td colspan="3">ஆதி அத்தி - ஆசிரியர் - பெ.தூரன் - பதிப்பாசிரியர் - முனைவர் சொ.சேதுபதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 50 தொலைபேசி எண் 044 26251968, 26258410, 48601884.</td></tr>
<tr><td>அலகு - 5</td><td>இலக்கிய வரலாறு</td><td>15 Hours</td></tr>
<tr><td colspan="3">1. எட்டுத்தொகை நூல்கள்<br>2. பத்துப்பாட்டு நூல்கள்<br>3. சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகள்</td></tr>
<tr><td colspan="3">மேற் பார்வை நூல்கள்<br>இலக்கணம் : புறப்பொருள் வெண்பாமாலை<br>இலக்கிய வரலாறு : ஆசிரியர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன்.<br>பாவை பப்ளிகேஷன்ஸ் 142, ஜானி ஜான் கான் சாலை இராயப்பேட்டை<br>சென்னை - 14 தொலைபேசி எண் : 28482441<br>முனைவர் பெ. சுயம்பு<br>பாரதி பதிப்பகம் 113, இராஜீவ் தெரு திசையன்விளை - 57<br>தொலைபேசி எண் : 04637 - 272096<br>மாணவர்களைக் கள ஆய்விற்கு அழைத்துச் செல்லலாம்</td></tr>
</table>

# நான்காம் பருவம் - சங்க இலக்கியம்

## அலகு - 1

## செய்யுள்

### எட்டுத்தொகை ஓர் அறிமுகம்

சங்கத் தமிழ் நூல்கள் பத்துப்பாட்டு , எட்டுத்தொகை என்று இரு பெரும் நூல்களின் தொகுப்பு. இதில் அடங்கியுள்ள ஒவ்வொரு நூலுமே ஒரு தொகுப்பு எனலாம். இவற்றில் உள்ள பாடல்கள் பல்வேறு கால கட்டங்களில் , பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. இந்தப் பாடல்கள் மிகப்பெரும்பாலும் கி.மு 300 க்கும் கி.பி 200 க்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டவை. ஆனால் இவை தொகுக்கப்பட்ட காலம் கி.பி 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டு என்று கருதுவர்.

எட்டுத்தொகை நூல்களாவன: நற்றிணை , குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவை.. இவற்றை ஓர் அழகிய வெண்பா வரிசைப்படுத்தும். நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல் கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று இத்திறத்த எட்டுத் தொகை

இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை அகம் பற்றிய பாடல்களைக் கொண்டவை. பதிற்றுப்பத்து , புறநானூறு ஆகியவை புறம் பற்றிய பாடல்களைக் கொண்டவை. பரிபாடல் அகம் , புறம் ஆகிய இருவகைப் பாடல்களையும் கொண்டது.

எட்டுத்தொகைப் பாடல்கள் மிகப்பெரும்பாலும் ஆசிரியப்பா எனப்படும் அகவற்பா இனத்தைச் சேர்ந்தவை. ஒரு சில பாக்கள் வஞ்சி அடிகள் கலந்து வரக் காண்கிறோம். கலித்தொகை முழுவதும் கலிப்பா வகையைச் சேர்ந்த பாடல்களைக் கொண்டது. பரிபாடல் வெண்பா , ஆசிரியப்பா ஆகியவற்றின் இலக்கணங்களைக் கொண்டது.. இந்த எட்டுத்தொகைப் பாடல்களுள் மிகச் சிறிய பாடல் 3 அடிகளைக் கொண்டதாகவும் , மிகப்பெரிய பாடல் 140 அடிகளைக்

கொண்டதாகவும் உள்ளது. ஆசிரியப்பா வகையில் அமைந்த அகத்திணைப் பாடல்களில், பாடல் அடிகளின் எண்ணிக்கையைக் கொண்டு இப் பாடல்களை பல்வேறு தொகுப்புகளாகக் கொண்டனர். .

3 முதல் 6 அடி வரையிலான பாடல்கள் இருப்பது ஐங்குறுநூறு

4 முதல் 8 அடி வரையிலான பாடல்கள் இருப்பது குறுந்தொகை

9 முதல் 12 அடி வரையிலான பாடல்கள் இருப்பது நற்றிணை

13 முதல் 31 அடி வரையிலான பாடல்கள் இருப்பது அகநானூறு

இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்கள் ஏறக்குறைய 400 பாடல்களைக் கொண்டவை. இவற்றில் ஐந்து திணைகளைச் சார்ந்த பாடல்களும் பல்வேறு எண்ணிக்கைகளில் கலந்து உள்ளன.

ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் என்று கொண்டு 500 பாடல்களைக் கொண்டது ஐங்குறுநூறு.

அகநானூறுக்கு இணையாகப் புறப்பாடல்கள் 400-ஐத் தொகுத்து அதனைப் புறநானூறு என்றனர். இப்பாடல்களுக்கு அடி வரையறை இல்லை.. இந்தப் புறநானூற்றில் சில பாடல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை.. புறத்திணைப் பாடல்கள் மிகப் பெரும்பாலும் மன்னர்களைப் பற்றியும் , அவர்களிடையே நடந்த போர்களைப் பற்றியும் அவர்களின் கொடைத்திறம் பற்றியும் கூறுவன. எனினும் , புறத்திணைகளுள் வாழ்க்கைக்கு என்றும் இன்றியமையாத அறங்களையும் , ஒழுக்கங்களையும் வலியுறுத்தும் பாடாண் முதலிய துறைகளையும் பாடியுள்ளனர்

கலித்தொகை 150 பாடல்களைக் கொண்டது. குறிஞ்சிக்கலி , முல்லைக் கலி என்று ஒவ்வொரு திணைக்குமான பாடல்கள் தனித்தனியே பகுக்கப்பட்டுள்ளன.

பதிற்றுப்பத்து என்பது பத்து சேர மன்னர்களைப் பற்றி , ஒவ்வொரு மன்னனுக்கும் பத்துப்பாடல்கள் என்ற வகையில் 100 பாடல்களைக் கொண்டிருந்தாலும், இன்றைக்கு நமக்குக் கிடைத்திருப்பன முதற்பத்தும் , இறுதிப்பத்தும் தவிர இடையிலிருக்கும் 80 பாடல்களே. முழுக்க முழுக்க சேர

மன்னர்களைப் பற்றிய பாடல்களைக் கொண்டது இந்நூல் என்ற சிறப்பு இதற்கு உண்டு.

பரிபாடல் என்பது பண் வகுக்கப்பட்ட இசைப்பாடல்களைக் கொண்டது. இது 70 பாடல்களைக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் , நமக்குக் கிடைத்திருப்பன 22 பாடல்களே. இவற்றுள் திருமாலைப் பற்றி 6 பாடல்களும், செவ்வேள் என்ற முருகனைப் பற்றி 8 பாடல்களும் வையை ஆற்றைப்பற்றி 8 பாடல்களும் அடங்கும். இவற்றில் புராணச் செய்திகள் பல உண்டு.

பொதுவாக, பண்டைய தமிழரின் பண்பாட்டுக்கூறுகள் பலவற்றையும் , பல வரலாற்றுச் செய்திகளையும் இந்த எட்டுத்தொகை நூல்களால் அறியலாம்.

## 1. நற்றிணை

### நூல் அறிமுகம்

நற்றிணை என்னும் இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது . நல் (நல்ல + திணை = எனப்படும் . 9 அடி முதல் 12 அடி வரைவியலான அகப்பாடல்களின் தொகுப்பே இந்நூல் . கடவுள் வாழ்த்துப் பாடலுடன் 401 பாடல்களை உடையது . பாடிய புலவர்களின் தொகை 275. பெயர் தெரியாது புலவர்கள் பாடிய தொடர்களால் பெயர் பெற்றவையும் உணடு . நாட்களைக் கணக்கிட சுவரில் கோடிட்டு எண்ணுதல் . பல்லி ஒலித்தல் கொண்டு சகுணம் அறிதல் . மகளிர் கால்பந்து விளையாடுதல் போன்ற செய்திகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன .

## பாடல் - 1

### ஆசிரியர் அறிமுகம்

நற்றிணையில் 110 ஆம் பாடலைப் பாடியவர் போதனார் . பாலைத் திணைப்பாடல் போற்றதற்குரியது . தலைவனோடு உடன்போக்கு நிகழ்தல் தலைவியின் விளையாட்டுப் பருவத்தை எண்ணித் தாய் மனம் கலங்கி இவள் எத்தன்மையில் இல்லறம் ஆற்றுவாளோ என்று எண்ணுவது போன்று இவர் பாடியுள்ளார். சங்க இலக்கியத்தில் நற்றிணை 110 ஆம் பாடலில் இடம் பெற்றுள்ள இப்பாடல் போதனார் பாடியது என்பது குறிப்பிடத்தக்கது .

**திணை** : பாலைத்திணை

**துறை** : மனை மருட்சி - மகள் நிலை உரைத்தலும் ஆம். தலைவியின் இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் உரைத்தது.

**ஆசிரியர்** : போதனார் ..... (பாடல் எண் 110)

**நற்றாய் கூற்று**

**கூற்று** - மனைமருட்சி, மகள் நிலை உரைத்தூஉம் ஆம்

**பாடல்**

**பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்**
**புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**"உண்" என்று ஒக்குபு பிழைப்பத் தெண்நீர்**
**முத்து அரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று.**
**அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்**
**பரிமெலிந்து ஒழிய, பந்தர் ஓடி**
**ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுஉணர்ந் தனள்கொல்?**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென.**
**கொடுத்த நந்த்தை கொழுஞ்சோறு உள்ளாள்,**
**ஒழுகுநீர் நுணங்குஅறல் போலப்**
**பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே!**

பாடல் பொருள் விளக்கம்

மென்மையான நரைத்த கூந்தலையுடைய வயதான செவிலியர், தேன் கலந்த நல்ல சுவையடைய இனிய வெண்ணிறப் பால் கலந்த உணவைப் பொற்கலத்தில் இட்டு. அதனைக் கையில் ஏந்தி மெல்லிய சிறுகோலால் ஓங்கிப் பயமுறுத்தி, நீ உண்க என்று அடித்தனர். தெளிந்த நீரின் முகிழ்ந்த முத்துக்களைப் பரவலாக இட்டுப் பொன்சிலம்புகள் ஒலிக்குமாறு தாவி ஓடும் தன்மையள் என் மகள். அவள் செவிலியர் பின்தொடர இயலாது விரைவாகச் சென்று பந்தலின்கீழ் நின்று உண்ணேன் என்று மறுக்கும். சிறுவிளையாட்டுப் பருவத்தினள். அத்தகையவளுக்கு எவ்வாறு அறிவும் ஒழுக்கமும் வந்தன. தான் மணந்த தலைவன் குடி வறுமையுற்ற சூழலிலும் தன்னைப் பெற்ற தந்தையின் வளமான உணவினைக் கருதாதவள் ஆனாள். எப்பொழுதும் தன் கொள்கையில் நிற்கும் வலிமை பெற்றவள் ஆனாள். இது வியப்பாக உள்ளது.

**பாடல் - 2**

**ஆசிரியர் அறிமுகம்**

நற்றிணையில் 210 ஆம் பாடலைப் பாடியவர் மிழளகிழான் நல்வேட்டனார். மருதத் திணைக்குரிய பாடலாகும். ஊடலும் ஊடல் நிமித்தமும் உரிப்பொருளாக்க் கொண்டுள்ள இப்பாடலில் தலைவனின் செயலைக் கண்டித்துத் தலைவியின் சினம் தீருமாறு கூறியுள்ளார்.

**திணை** : மருதம்

**துறை** : பரத்தையற் பிரிவில் நயந்த தலைவன் மீண்டும் தலைவியை நாட அவன் தோழியின் உதவியை வேண்டுகிறான். (தோழி தலைமகனை நெருங்கிச் செல்லுவாளாய் வாயில் நேர்ந்தது).

**ஆசிரியர்** : மிளைகிழான் நல்வேட்டனார் (பாடல் எண் 110)

**தோழி கூற்று**

**கூற்று** - தோழி தலைமகனை நெருங்கிச் சொல்லுவாளாய் வாயில் நேர்ந்தது.

**பாடல்**

**அரிகால் மாறிய அம்கண் அகல்வயல்**
**மறுகால் உழுத ஈரச் செறுவின்,**
**வித்தொடு சென்ற வட்டி பற்பல**
**மீனொடு பெயரும் யாணர்ஊர!**
**நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**
**செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே**
**சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கட் செல்வம் செல்வம்என் பதுவே**

**பாடல் பொருள் விளக்கம்**

நெல்லறுத்து முடித்த அகன்ற வயலில் மீண்டும் ஈரமான சேற்றில் உழுது விதைக்கும் பொருட்டு, விதைகளை ஓலைப் பெட்டியில் (கடகப் பெட்டியில்) கொண்டு சென்றனர். விதைத்து திரும்புகையில் ஓலைப்பெட்டி நிறைய மீன்களைக் கொண்டுவரும் புதுவருவாயை உடைய ஊரனே. நீ அரசரிடம் பரிசு பெறுதலும் விரைந்த தேரில் செல்லுதலும், குதிரை, யானை இவற்றின் மேல் செல்லுதலும் செல்வம் எனறு நினைக்கின்றாய். அவையாவும் முன்பு செய்த விலீனயால் ஏற்படும் பயன்களாகும்.

சான்றோர் பலரும் செல்வம் என்ற கருதுவது தம்மை அடைக்கலமாகக் கொண்டு வந்தவர்க்கு ஏற்படும் துன்பத்திற்கு அஞ்சும் பண்பாகும். அவர் துன்பம் நீக்கி அவரைக் கைவிட்டு நீங்கும் கொடுமை இல்லாது அன்போடு இருக்கும் பண்பே செல்வமாகும். அதனை நீ அறிந்திலை போலும்.

## 2. குறுந்தொகை

### நூல் அறிமுகம்

கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூற்று ஒரு (401) பாடல்களை உடைய இந்நூல் குறுந்தொகை என அழைக்கப்படுகிறது. 4 அடி முதல் 8 அடி வரையிலான அகப்பாடல்களின் தொகுப்பே இந்நூல். 307, 309 ஆம் பாடல்கள் மட்டுமே 9 அடிகளைப் பெற்றுள்ளன. குறைந்த அடிகளால் ஆன பாடல்களின் தொகுப்பான்மையால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. பாடிய புலவர்களின் எண்ணிக்கை 205. பாடிய தொடர்களால் பெயர் பெற்றவர்கள் சிலர். நம் பாடப்பகுதியில் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். உறையூர்ச் சல்லியன் குமரனார். சாத்தனார். கயமனார் போன்ற நான்கு புலவர்களின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**பாடல் - 1**

### ஆசிரியர் அறிமுகம்

மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரனார் எழுதியுள்ள இப்பாடல் தலைவனுடைய வருகையால் அப்பசலை நோய் நீங்கிப் போகும் என்பதாகும். தலைவன் விரைந்து வந்து திருமணம் செய்து சொள்வான் என்பதனைப் இப்பாடலில் சுட்டியுள்ளார்.

**திணை** : குறிஞ்சி

**கூற்று** : தோழி கூற்று. தலைவனுடைய வருகையால் நம் வருத்தம் நீங்கும் என்ற தோழி கூறுகிறாள். ஆதலால் உன் மேனிப் பசலை அவருடைய வரவால் நீங்கும் என்ற தோழி கூறுகிறாள்.

**ஆசிரியர்** : மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரனார்

**தோழி கூற்று**

**கூற்று** - வரைவிடை வைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி

**பாடல்**

**அழியல் ஆயிழை! அன்புபெரிது உடையன்**

**பழியும் அஞ்சும், பயமலை நாடன்**

**நில்லா மையே நிலையிற்று ஆகலின்,**

**நல்இசை வேட்ட நயனுடை நெஞ்சின்**

**கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்**

**தங்குதற்கு உரியது அன்று நின்**

**அங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே**

**பாடல் பொருள் விளக்கம்**

அழகிய "அணிகளை அணிந்துவளே வருந்தாதே, பல பயன்களைத் தருகிற வளமிக்க மலைநாடன் நம்மிடம் மிகுந்த அன்புடையவன் பிறர்கூறும் பழிச்சொல்லுக்கு அஞ்சுபவன் உலகின் நிலையாமையை உணர்ந்தவன், நல்ல புகழை விரும்பவன், அன்புள்ள மனத்தோடு கடமையாற்றும் பண்புடையவன், அவன் பொருள் நல்ல காரியத்திற்குப் பயன்பெறுவதுபோல நின் அழகு ஒழுகும் உடம்பில் பரந்த பசலை நிறமும் நிலையாகத் தங்குவதற்கு உரியது அன்ற, உடனே மறைந்துவிடும் அதனால் வருந்தாதே.

**பாடல் - 2**

**திணை** : மருதம்

**கூற்று** : தோழி கூறுறு, நீ கொடுமை செய்தாலும் யாம் உன்னை வெறுக்க மாட்டோம் என்றவாறு பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனை நோக்கி நீர் எம்மை அகன்று இன்னாதன செய்பினும் யாம் உமக்கு அன்புடையோமாகி நடப்போம் என்ற தோழி வாயில் நேர்ந்த்து.

**ஆசிரியர்** : உறையூர்ச் சல்லியன் குமாரனார்

**தோழி கூற்று**

**கூற்று** - பரத்தையிற் பிரிந்து வந்த கிழவற்குத் தோழி வாயில் நேர்ந்த்து.

**பாடல்**

**கைவினை மாக்கள்தம் செய்வினை முடிமார்**

**கரும்புஉண மலர்ந்த வாசம் கிழ்ப்பட**

**நீடிய வரம்பின் வாடிய விடினும்**

**"கொடியோர் நிலம்பெயர்ந்து உறைவோம்" என்னாது**

**பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்**

**நின்ஊர் நெய்தல் அனையேம் பெரும!**

**நீ எமக்கு இன்னாதனபல செய்யினும்**

**நின் இன்ற அமைதல் வல்லா மாறே.**

**பாடல் பொருள் விளக்கம்**

தலைவி! நீ எமக்கு இன்னாதன பலவற்றைச் செய்தாலும் உன்னை அன்றி வாழ்தல் இயலாது என்ற காரணத்தால், தொழில் செய்யும் உழவர் தம் பயிர் வளர்க்கும் தொழிலைச் செய்யும்போது வண்டுக்ள உண்ணுமாறு தாதுடன் மலர்ந்த மணமுடைய நெய்தல் மலரை வரப்பில் வாடுமாறு பறித்துப் போட்டாலும் அந்நெய்தல் இக்கொடியோர் நிலத்தில் வாழாது வேறு நிலத்தில் சென்று வாழ்வோம் என்று எண்ணாது மீண்டும் அந்த வயலிலே தழைத்து மலரும். உனது ஊரின் நெய்தல் கொடியைப் போன்ற தன்மை உடையேம் யாம்.

**பாடல் - 3**

**திணை** : நெய்தல்

**கூற்று** : தலைவி கூற்று, பரத்தை மாட்டுப் பிரிந்து வந்த தலைமகன் கேட்கும் அண்மையனாகத் தோழிக்குத் தலைவி கூறியது.

**ஆசிரியர்** : சாத்தனார்

## தலைவி கூற்று

**கூற்று** - பரத்தைமாட்டுப் பிரிந்து வந்த தலைமகன் கேட்கும் அண்மையனாக தோழிக்குக் கிழத்தி கூறியது.

**பாடல்**

**"அடும்புஅவிழ் அணிமலர் சிதைஇய மீன்அருந்தி**
**நடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்**
**தண்ணம் துறைவற் றொடுத்து, நம்நலம்**
**கொள்வாம்" என்றி தோழி! கொள்வாம்**
**இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய**
**கொடுத்து "அவை தா எனக் கூறலின்,**
**இன்னா தோநம் இன்உயிர் இழப்பே?**

**பாடல் பொருள் விளக்கம்**

தோழி! அடும்பங் கொடியின் அழகிய மலரைச் சிதைத்து அம்மலர்மீது இருந்து மீனைத்தின்னும் வளைந்த காலை உடைய நாரை இருக்கும் மணல்மேட்டையுடைய குளிர்ச்சி பொருந்திய அழகிய நெய்தல் நிலத்தலைவனைக் கண்டு வளைத்து முன்நின்று என் பெண்மை நலத்தைத் திரும்பத்தா என்று கூறி நமது அழகைப் பெறுவோம் என்று சொல்கிறாய், சரி அதுபோலக் கொள்வோம், ஆனால் ஒருவரது துன்பத்தைக் கண்டு வருந்தி அவர் இரந்து கேட்ட பொருளைக் கொடுத்துப் பின்பு அதைத் திரும்பத்தா என்று கேட்பதைவிட நம் இன்னுயிரை இழப்பது கொடுமையானது ஆகுமோ?

### பாடல் - 4

**திணை** : பாலை

**கூற்று** : செவிலி கூற்று. (தலைவனுடன் தலைவி சென்றபின் செவிலித்தாய் அவளது இளமைத் தன்மையையும் பாலையின்

வெம்மையையும் நினைத்து வருந்தியது.

**ஆசிரியர்** : கயமனார் (396)

**செவிலித்தாய் கூற்று**

**கூற்று** - மகட் போக்கிய தாய் உரைத்தது

**பாடல்**

**பாலும் உண்ணாள், பந்துடன் மேவாள்**
**விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே**
**எளிதுஎன உணர்ந்தனள் கொல்லோ முளிசினை**
**ஓமைக் குத்திய உயர்கோட்டு ஒருத்தல்**
**வேனிற் குன்றத்து வெவ்வறைக் கவாஅன்**
**மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்**
**கழைதிரங்கு ஆர்இடை, அவனொடு செலவே?**

**பாடல் பொருள் விளக்கம்**

நம் மகள், வீட்டில் இருந்த காலத்தில் பாலையும் அருந்த மாட்டாள். தோழியருடன் பந்தும் விளையாட மாட்டாள். ஒரு காலத்தில் தோழியருடன்கூடி விளையாடியவள் இப்போது கொடிய பாலை நில வழியில் உலர்ந்த கிளைகளை உடைய ஓமை மரத்தைக் குத்திய நீளமான கொம்பை உடைய ஆண் யானை கொடை வெப்பம் மிகுதியாக உள்ள பாறைகளை உடைய பக்க மலையில் மேகங்கள் முழங்கும் கடுமையான இடிக்குரலைக் கூர்ந்து கேட்கும் வாடிய மூங்கில்கள் உள்ள அரிய பாலைநில வழியில் தன் காதலனுடன் செல்லுதல் எளிது என எண்ணினள் போலும்.

## ஐங்குறுநூறு

### நூல் அறிமுகம்

500 பாடல்கள் கொண்ட நூல் 3 அடி முதல் 6 அடி வரையுள்ள அகப்பாடல்களின் தொகுப்பு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் திணைகளுக்கு நூறு பாடல்கள் வீதம் 500 பாடல்களை உடையது. ஒவ்வொரு நூறு பாடல்களும் பத்துப் பிரிவுகளாக உள்ளன. ஒவ்வொரு பிரிவும் பத்துப் பாடல்களை உடையது. ஒவ்வொரு பத்துப் பாடல்களும் பொருளாலோ அகப்பாடல்களில் பயிலும் சொற்களாலோ பெயர் பெற்றது. பாடிய புலவர்களின் தொகை 5 திணைக்கு ஒருவராகப் பாடியுள்ளார்.

| | | |
|---|---|---|
| மருதம் | - | ஓரம்போகியார் |
| நெய்தல் | - | அம்மூவனார் |
| குறிஞ்சி | - | கபிலர் |
| பாலை | - | ஓதலாந்தையார் |
| முல்லை | - | பேயனார் |

ஆதன் - ஆவினி போன்ற குறுநில மன்னர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்திர விழா, மார்கழி, நீராடல், தொண்டி, கொற்கை போன்ற துறைமுகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தாய் முகம் பார்த்து ஆமைக்குட்டி வளரல், முதலை தான் பெற்ற குட்டிகளையே தின்றல் போன்ற உயிரியில் செய்திகளும் இந்நூலில் உள்ளன. நமக்குப் பாடப்பகுதியாக வெறிப்பத்து, குரக்குப் பத்து, கிள்ளைப் பத்து போன்றவற்றிலிருந்து பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

### வெறிப்பத்து - விளக்கம்

வெளியயர்தல் என்பது பழந்தமிழ் மக்களிடத்தில் நிலவி வந்த வழிபாடு ஆகும். தம்மால் அறியவோ, தீர்க்கவோ முடியாத சிக்கல்கள் தோன்றும்பொது அதனைத் தீர்த்தருளுமாறு தம் வழிபடு தெய்வத்திற்குப் படையலிட்டுப் போற்றி வேண்டும் மரபு இதுவாகும். குறிஞ்சி நிலத்தவர் தம் தெய்வமாகிய முருகனை

வழிபட்டு போற்றுவர். ஒரு குறியை நோக்கிச் செல்லும் உறுதியான மனப்போக்கும் "வெறி" எனப்படும். அந்த மனப்போக்குடன் வேலனை வேண்டும் வெறியயர்தல் பற்றிய செய்திகள் செய்யுள் தோறும் வருதலால் இப்பத்தினை "வெறிப்பத்து" என்றனர்.

நூல் அறிமுகம்

குறிஞ்சிக்குக் கபிலர் என்று போற்றப்படக் கூடியவர். குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பகுதியும் ஆகும். இவர் பாண்டி நாட்டுத் திராதவூரினர் என்பர். சங்கப் பாடல்களுள் மிகுதியாகக் காணப்படுவது கபிலருடையதே. குறிஞ்சியே இவருக்குப் பிடித்த திணையாகும். இந்த ஐங்குறுநூற்றுக் குறிஞ்சிச் செய்யுட்கள் நூறுடன் குறிஞ்சிக் கலியையும், குறிஞ்சிப் பாட்டையும் மற்றும் குறிஞ்சி பற்றிய எண்ணற்ற செய்யுட்களையும் செய்தவர் இவர். பாரியின் சிறந்த நண்பர் கபிலர் ஆவார். பாரியின் மறைவிற்கு பின் அவன் மக்களைத் தம் மக்களைப்போல காத்தார். பாரி மகளிரை மலையமான் மக்கட்குச் சிறப்பாக மணமுடித்துத் தம் கடமை தீர்த்த பின், தன் நண்பனான பாரியின் பிரிவை மேலும் தாங்கி உயிர் வாழாது. தீப்புகுந்து உயிர் துறந்தவர் கபிலர் என்ற செய்தியும் உண்டு. இவருக்கு மற்றொரு நண்பர் பரணர். "கபில பரணர்" என்றே சேர்த்துக் கூறுவர். இவர்தம் குறிஞ்சி சார்ந்த இங்குறுநூற்றின் செய்யுட்கள் நான்கினை அறிவோம்.

### 1. வெறிப்பத்து

### வேலன் கூறுவதையே மனங்கொள்ளல்

**திணை** : குறிஞ்சி

**துறை** : தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது

**ஆசிரியர்** : கபிலர்

**துறை விளக்கம்** : மகளின் மாற்றத்தைக் கண்டு, தாய் வெறியாடற்கு வேண்டுவன செய்கின்றாள். அதனையறிந்த தோழி அவட்கு உண்மை உணர்த்துவாளாகச் சொல்வதாக அமைந்த செய்யுள் இது.

## தோழி கூற்று

**கூற்று** - தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது.

**பாடல்**

**கறிவளர் சிலம்பில் கடவுள் பேணி**
**அறியா வேலன், வெறிஎனக் கூறும்**
**அதுமனம் கொள்குவை, அனையிவள்**
**புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே** **(243)**

**பாடல் பொருள் விளக்கம்**

அன்னை தலைவியின் புதிய மலர்போன்ற கண்கள் அழுது வருந்துகின்ற நோய்க்கு மிளகுக்கொடி வளர்கின்ற மலைவாழ் முருகனைப் பேணி, இவர்கள் காதலை அறியாத வேலன் தெய்வக் குற்றம் எனக் கூறுவதை நீ மனம் கொள்கிறாய்.

## 2. குரக்குப்பத்து

செய்யுள்தோறும் குரங்காகிய கருப்பொருள் அமைந்து வருதலால் இதனைக் குரக்குப்பத்து என்றனர். குரங்கினத்தில் ஆணைக் கடுவன் எனவும பெண்ணை மந்தி எனவும் குட்டியைக் குட்டி, “பறழ்“ எனவும் முன்னோர் கூறுவர். தலைமக்களின் காதல் உணர்வுகளை இலக்கியப்படுத்தற் குரங்குகளின் செயல்களுள் சில பொருந்தி வரும். இதனைப் பாடியவர் கபிலர் ஆவார்.

### கவனும் பாயலும் கொண்டு போனான்

**திணை** : குறிஞ்சி

**துறை** : வரைவிடை வைத்தும் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் கூறியது.

**ஆசிரியர்** : கபிலர் (பாடல் எண் 274)

**துறை விளக்கம்** : தலைமகனின் பிரிவாலே மனம் கலங்கி வருந்தியிருப்பாளைத் தெளிவிக்கும் வகையில் சில கூறுகின்றாள் தோழி. அவளுக்குத் தலைவி தன்னுடைய உள்ளத்தின் நிலையைக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**தலைவி கூற்று**

**கூற்று** - வரைவிடை வைத்துப் பிரிந்துழி, ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது..

**பாடல்**

**மந்திக் கணவன் கல்லாக் கடுவன்,**

**ஒண்கேழ் வயப்புலி குழமலின், விரைந்து உடன்**

**குன்றஉயர் அடுக்கம் கொள்ளும் நாடன்**

**சென்றனன் வாழி, தோழி! என்**

**மென்தோட் கவினும், பாயலும் கொணடே (274)**

**பாடல் பொருள் விளக்கம்**

தோழி வாழ்க! மந்தியின் கணவனான அறியாமையுடைய ஆண் குரங்கு ஒளிபொருந்திய நிறமுடைய வலிமையான புலி முழங்குதலால் அச்சம் கொண்டு மிக விரைவாகப் பக்க மலையின் உச்சிக்குத் தாவிச் செல்லும் தன்மையுடைய மலைநாடன் என்னை விட்டுப் பிரிந்தான். எனது மென்மையான தோளின் அழகையும் உறக்கத்தையும் கொண்டு சென்றான்.

**3. கிள்ளைப் பத்து**

காட்டுச் சிறு கிளிகட்கும் காட்டுக் குறவரின் கன்னியர்களுக்கும் நெருங்கிய உறவும் பழக்கமும் நெடுநாளாகவே உள்ளதெனக் கூறலாம். அவரை தினை புனம் காவலுக்குத் தட்டையுடன் செல்லச் செய்வதே கிளியினம்தான். அவர்தம் கனவு மலர்தலும் வளர்தலும் இந்தப் புனங்காவல் பூண்டிருக்கும் காலத்தில் தான் அத்தகைய கிளிகளைத் தொடர்புபடுத்தி செய்துள்ள பகுதியாதலால் கிள்ளைப்பத்து.

**திணை** : குறிஞ்சி

**துறை** : ஆயத்தோடு விளையாட்டு விருப்பினாற் பொழிலகம் புகுந்த தலைவியை எதிர்பட்டு ஒழுகுகின்ற தலைமகன் எதிர் கண்டு கூறியது.

**ஆசிரியர்** : கபிலர் (பாடல் எண்கள் - 281, 284)

**தலைவன் கூற்று**

**கூற்று -** ஆயத்தொடு விளையாட்டு விருப்பினால் பொழிலகம் புகுந்த தலைவியை எதிர்ப்பட்டு ஒழுகுகின்ற தலைமகன், அவள் புனம்காவற்கு உரியளாய் நின்றது கண்டு மகிழ்ந்து சொல்லியது

**பாடல்**

**வெள்ளை வரம்பின் ஊழி போகியும்**
**கிள்ளை வாழிய, பலவெ! ஒள்ளிழை**
**இரும்பல் கூந்தல் கொடிச்சி**
**பெருந்தோள் காவல் காட்டி யவ்வே** **(281)**

குறிஞ்சிநிலக் கருப்பொருளாகிய கிள்ளை - கிளி, பாடல் தோறும் இடம்பெறுகிறது. ஆகவே இப்பத்து கிள்ளைப்பத்து என்றாயிற்று.

பாடல் பொருள் விளக்கம்

கிளி வாழ்க! பல ஊழிகளாகிய வெள்ளம் என்ற இலட்சம் ஆண்டுகளுக்குமேல் வாழ்க, அவைதாம் என் தலைவியாகிய ஒளி பொருந்திய ஆபரணங்களையும் நீண்ட கரிய கூந்தலையும் பருத்த் தோள்களையுமுடைய குறிஞ்சிநிலப் பெண்ணைக் காவனுக்கு வரச்செய்தலை அக்கிளிகளே! அதனால் அவை வாழ்க.

## 4. கிள்ளைப்பத்து

**திணை** : குறிஞ்சி

**துறை** : தினை அரிந்தபின் தலைவியை நாடி வந்து தலைவன் ஒரு புறமாக ஒதுங்கி நிற்பதை அறிந்தாள் தோழி, அவனிடம் தலைவியை ஒப்பகைடக் உடன் சென்றாள் தோழி. கிளியை நோக்கி கூறுவதுபோல தலைவனின் கடமையை தோழி உணர்த்துகிறாள்.

**ஆசிரியர்** : கபிலர் (பாடல் எண் 284)

### தோழி கூற்று

**கூற்று** - தினையரிந்துழிக் கிளியை நோக்கிக் கூறுவாள் போல், சிறைப்பறமாக ஓம்படுத்தது.

**பாடல்**

**அளிய தாமே, செவ்வாய்ப் பைங்கிளி**
**குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்**
**இருவி நீள்புனம் கண்டும்,**
**பிரிதல் தேற்றாப் பேரன் பினவே.**

**பாடல் பொருள் விளக்கம்**

சிவந்த அலகினையும் பச்சை இறகினையும் உள்ள கிளிகள் இரங்கத்தக்கன. குறிஞ்சி நில மக்கள் தினையைக் கொய்த பின்பு அடித்தட்டையான (தானியங்கள் நீக்கப் பெற்ற தட்டைகள் உள்ள) வறிய கொல்லையைக் கண்ட பின்னும் பிரிந்து செல்ல மனமில்லாத பேரன்பினை உடையன ஆயின அக்கிளிகள். அவை இரங்கத்தக்கன.

## 4. அகநானூறு

**நூல் அறிமுகம்**

நானூறு அகப்பாடல்களை உடைய இந்நூல் 13 அடி முதல் 31 அடி வரையிலான நெடிய பாடல்களை உடையது. 1 முதல் 120 பாடல்கள் களிற்றியானைநரை எனவும், 121 முதல் 300 வரையிலான பாடல்கள் மணிமிடைப்பவளம் எனவும், 301, முதல் 400 வரையிலான பாடல்கள் நித்திலக்கோவை என்றம் பெயர் பெறும். பாடல் எண்களின் அடிப்படையில் திணை அமைக்கப்பட்டுள்ளது.

1. 1,3,5,7 என ஒற்றைப்படை எண் கொண்ட பாடல்கள் யாவும் பாலைத் திணைப் பாடல்கள்.
2. 2,8 என முடியும் எண்களைக் கொண்டவை குறிஞ்சித் தியைப் பாடல்கள்
3. 4 என முடியும் எண்களைக் கொணடவை முல்லைத் திணைப் பாடல்கள்
4. 6 என முடியும் எண்களைக் கொண்டவை மருதத் திணைப் பாடல்கள்
5. 10,20,30 என்று முடிவன நெய்தல் திணைப் பாடல்கள் ஆகும்.

அகநானூற்றைப் பாடிய புலவர்களின் பாடிய புலவர்களின் தொகை 145 பாடல் தொடரால் பெயர் பெற்றவர்களும் உண்டு. குடவோலைத் தேர்தல் முறை, தமிழர் மணமுறை பல்வேறுபட்ட வரலாற்றுச் செய்திகள், பங்குனி விழா, கார்த்திகை விளக்கு, ஐம்படைத் தாலி போன்ற பண்பாட்டு நெறிகளை இந்நூல் உணர்த்துகின்றது.

### 1. முல்லை மலரும் - கார்ப்பருவமும்

**திணை** : முல்லை

**துறை** : தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது

**ஆசிரியர்** : குறுங்குடி மருதனார் (பாடல் எண்.4)

**காட்சி அமைவு** : வினை வயிற்பிரிந்த தலைவனை எண்ணி தலைவி வருந்திய நிலையில் தோழி தலைவியை நோக்கி தேற்றிக்கூறியது.

**தோழி கூற்று**

**கூற்று** - தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது.

**பாடல்**

**முல்லை வைந்நுனை தோன்ற, இல்லமொடு**
**பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ,**
**இரும்பு திரித்தன்ன மாஇரு மருப்பின்,**
**பரல்அவல் அடைய, இரலை, தெறிப்ப**
**மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்ப,**
**கருவி வானம் கதழ்உறை சிதறி,**
**கார்செய் தன்றே, கவின்பெறு கானம்**
**குரங்குஉளைப் பொலிந்த கொய்சுவல் புரவி,**
**நரம்புஆர்த் தன்ன வாங்குவள்பு அரிய**
**பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி,**
**மணிநா ஆர்த்த மான்வினைத் தேரன்,**
**உவக்காண் தோன்றும் - குறும் பொறை நாடன்,**
**கறங்குஇசை விழவின் உறந்தைக் குணாது**
**நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தள்**
**போதுஅவிழ் அலரின் நாறும்**
**ஆய்தொடி அரிவை நின் மாண்நலம் படர்ந்தே.**

**பாடல் பொருள் விளக்கம்**

கார்காலம் வந்துவிட்டது. அதனால் வானத்தில் இருந்து மழைத்துளிகள் சிதறின. பாலைநில வழி அழகு பெற்றது. முல்லை மொட்டுக்களும் தேற்றா

மொட்டுக்களும், கொன்றை மொட்டுக்களும் கட்டவிழிந்து மலர்களாயின. இரும்பைத் திரித்தது போன்ற கருநிறமுடைய கொம்புகளைக் கொண்ட மான்மகள் துள்ளிக் குதித்து ஆடின. தலைவன் வளைந்த தலையாட்டத்தை உடைய பிடரி மயிரினைக் கொண்ட குதிரையில் தலைவியைக் காண வருகிறான். கார்காலத்தில் சோலைகள் அனைத்திலும் பூக்கள் மலர்ந்திருந்தன. பூக்களில் உள்ள தாதை உண்பதற்கு தலைவன் தன் தேரை இழுத்து வருகின்ற குதிரைகளின் கழுத்தில் உள்ள மணிகளின் ஓசையால் வண்டுகள் அஞ்சம் பிரியும் என்ற கருதி மணிகளை ஒலிக்காமல் கட்டி விரைவாகத் தலைவியைக் காண வந்து கொண்டிருக்கிறான். அருகில் உள்ள குன்றத்தில் காந்தள் மலர்கள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தன. இந்நிலையில் தன தலைவியைக் காணத தலைவன் வருகிறான்.

### 2. கல்லுப்புக்குப் பண்ட மாற்றம் செய்த நெல்

**திணை** : நெய்தல்

**துறை** : இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற்கு உரைத்தது

**ஆசிரியர்** : அம்மூவனார் (பாடல் எண் 140)

**துறை விளக்கம்** : தலைவன் ஒருவன் தன் காதலியைக் கண்டு மகிழ்ந்து திரும்பினான். அவனுடைய தன்மையைக் கண்ட பாங்கன் இத்தனைகய வேறுபாடு எதனால் உணடாயிற்று என்ற கேட்க பாங்கனுக்குப் பதிலுரைத்தது.

### தலைவன் கூற்று

**கூற்று** - இயற்கை புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன், பாங்கற்கு உரைத்த்து.

**பாடல்**

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**

**இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த**

**வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி,**

**என்றூழ் விடர குன்றம் போகும்**

**கதறழ்கோல் உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எவ்வளை தெளிர்ப்ப வீசி,**
**“நெல்லின் நேரே வெண்கல் உப்பு“ எனச்**
**சேரி விலைமாறு கூறலின், மனைய**
**விளிஅறி ஞமலி குரைப்ப, வெரீஇய**
**மதர்கயல் மலைப்பின் அன்னகண் எமக்க**
**இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்**
**மாமூ தள்ளல் அழுந்திய சாகாட்டு**
**எவ்வம் நீர் வாங்கும் தந்தை**
**கைபூண் பகட்டின் வருந்தி,**
**வெய்ய உயிர்க்கும் நோய்ஆ கின்றெ**

**பாடல் பொருள் விளக்கம்**

சிறுகுடியில் வாழ்ந்து பெருங்கடலில் மீன் வேட்டையாடும் பரதவர், உப்பங்கழியை ஒட்டிய உவர் நிலத்தில் உழாமலே விளைவித்த வெண்ணிற உப்பை வண்டியில் ஏற்றி, ஏனைய நிலங்களுக்குக் கொண்டு சென்று விற்பர். உமணரின் அன்பு மகள் சேரியில் வளை ஒலிக்க, ஒருகை வீசி நடந்து உப்பு விற்றாள். ஒருபடி நெல்லுக்கு ஒருபடி உப்பு என்ற விலை கூறினாள். வேற்றாள் குரல் கேட்ட வீட்டு நாய் குரைத்தது. அவ்வீட்டிலுள்ள இளமங்கை எட்டிப் பார்த்தாள். அவள் பார்வை அச்சத்துடன் இருந்தது.

குறிஞ்சி நிலத்துக் குரவன் புதிய காட்டை உருவாக்கத் தாள்களை எரித்து நிலத்தை உழுது தண்ணீர் பாய்ச்சிச் சேறாக்கி உழுதான். அவை இழுக்கின்ற மாடுகள் முக்கி முனுகி சூடாகப் பெருமூச்சு விடும். அதுபோன்ற என் நிலை ஆயிற்று.

## கலித்தொகை

### நூல் அறிமுகம்

கலித்தொகை என்பது சங்க்கால தமிழிலக்கியத் தொகுதியாகும். இது எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். நால்வகைப் பாக்களுள் பா வகையால் பெற்ற நூல் இது ஒன்றாகும். கடவுள் வாழ்த்து உட்பட 150 அகப்பாடல்களை உடையது. 11 அடி முதல் 80 அடி வரை உடைய பாடல்கள். 5 புலவர்கள் பாடியுள்ளனர் திணைக்கு ஒரு புலவர் வீதம் பாடியுள்ளனர்.

பாலை 35 பாடல்கள் - பாடியவர் பாலை பாடிய பெருங்கடுக்கோ

குறிஞ்சி 29 பாடல்கள் - பாடியவர் கபிலர்

மருதம் 35 பாடல்கள் - பாடியவர் மருதனிள நாகனார்

முல்லை 17 பாடல்கள் - பாடியவர் சோழன் நல்லுருத்தினார்

நெய்தல் 33+1 பாடல்கள் - பாடியவர் நல்லந்துவனார்

என்பனவாறு ஐந்து புலவர்ள் ஐந்து திணைகள் பற்றிக் கலிப்பாவில் பாடினர். திணையின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுவது ஒரு சிறப்பாகும்.

கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று போற்றப்படும் கலித்தொகைப் பாடல்கள் யாவும் பாவின் பெயரால் பெயர் பெற்றது. இத்தொகை நூலில்தான் தமிழரின் வீரவிளையாட்டான ஏறு தழுவுதல் பற்றி செய்தி உள்ளது. பாண்டியன், பாண்டிய நாடு, மார்கழி நோன்பு, தமிழச் சங்கம் முதலிய செய்திகள் உள்ளன. நமக்குப் பாடமாக முல்லைக் கலியிலிருந்து ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது.

### ஆசிரியர் அறிமுகம்

முல்லைக் கலி 17 பாடல்களைக் கொண்டது. பாடியவர் உருத்திரன், சோழன் நல்உருத்திரன் என்று சொல்வாரும் உளர், சோழா மரபிலே வந்தவர் இவர். இருப்பினும் பாண்டிய நாட்டைச் சிறப்பித்தே இவர் பாடியிருக்கிறார். பாண்டிய நாட்டில் நீண்ட காலம் இரந்தாரோ என்னவோ தெரியவில்லை.

முல்லை நிலத்தின் சிறப்பு, அந்த மக்களின் பண்பு, இவற்றையெல்லாம் மிக நன்றாகப் பாடியிருக்கிறார். இந்த அளவுக்கு வேறு எவரும் பாடவில்லை என்ற கூறுவாரும் உளர். சாமுத்திரிகம், நிமித்தம் போன்ற நுண்ணிய துறைகளிலும் இவருக்குப் புலமை உண்டு. இவரது பாடல்களே இதற்குச் சான்று முல்லை நில மக்களின் வாழ்வை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார் சோழன் நல்லுருத்திரனார்.

**திணை** : முல்லை

**ஆசிரியர்** : சோழன் நல்லுருத்தினார்

**பெருண்மை** : காதல் வென்றது காளை பணிந்தது

**சுற்றத்தார் கூற்று**

**கூற்று -** இஃது ஆயன் தலைவனாய் ஏறு தழுவினமை சுற்றத்தார் கண்டு நின்ற கூறியது.

**தலைவன்**

**கண்ணகன் இருவிசும்பில் கதழ்பெயல் கலந்துஏற்ற**
**தண்நறும் பிடவமும், தவழ்கொடித் தளவமும்,**
**வண்ணவன் தோன்றியும், வயங்கிணர்க் கொன்றையும்**
**அன்னவை பிறவும், பன்மலர் துதையத்,**
**தழையும் கோதையும் இழையும் என்றிவை**

**தைஇயினர், மகிழந்து, திளைஇ விளையாடும்**
**மடமொழி ஆயத்தவருள் இவள்யார் உடம்போடு**
**என்உயிர் புக்கவன், இன்று?**
**ஓஒ! “இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்,**
**திருமாமெய் தீண்டலர்“ என்று கருமமா.**

எல்லாரும் கேட்ப, அறைந்துஅறைந்து, எப்பொழுதும்
சொல்லால் தரப்பட் டவன்,

சுற்றத்தார்க்குத் தலைவன் செய்தி சொல்லி
அனுப்ப, அவர், "ஏறுதழுவும் விழாவிற்குப்
பறை அறக! எனல்

"சொல்லுக"'! "பாணியேம்" என்றார். "அறைக்" என்றார். பாரித்தார்
மாணிழை ஆறாகச் சாறு.

**கண்ட சுற்றத்தார் கூற்று**

**சாற்றுள் பெடையன்னார் கண்பளீத்து, நோக்கும்வாயெல்லாம்**
**மிடைபெறின, நேராத் தகைத்து**
**தகைவகை மிசைமிசைப் பாயியர், ஆர்த்து, உடன்**
**எதிர்எதிர் சென்றார் பலர்.**
**கொலைமலி சிலைசெறி செயிர்அயர் சினம்சிறந்து,**
**உருத்துஎழுந்து ஓடின்ற மேல்.**
**எழுந்த்து துகள், ஏற்றனர் மார்பு,**
**கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்**
**அவருள் மலர்மலி பகழ்எழ**
**அலர்மலி மணிபுரை நிமிர்தோள் பிணைஇ.**
**எருத்தோடு இமிலிடைத் தோன்றினன், தோன்றி,**
**வருந்தினான் மன்ற, அவ்வேறு,**
**ஏறெவ்வம் காணா எழுந்தார் -எவன்கொலோ**
**ஏறுடை நல்லார் பகை?**

**மடவரே, நல்லாயர் மக்கள் - நெருநை**
**அடலேற்று எருத்து இறுத்தார்க் கண்டும் மற்றுஇன்றும்**
**உடலேறு கோள்சாற்று வார்! ஆங்கினித்**
**தண்ணுமைப் பாணி தளராது எழூஉக**
**பண்ணமை இன்சீர்க் குரவையுள், தெண்கண்ணி,**
**திண்தோள், திறல்ஒளி, மாயப்போர், மாமேனி,**
**அந்துவர் ஆடைப் பொதுவனோடு, ஆய்ந்த**
**முறுவலாள் மென்தோள்பா ராட்டிச் சிறுகுடி**
**மன்றம் பரந்து உரை.**

**இஃது கொச்சகக் கலி.**

**பாடல் பொருள் விளக்கம்**

**தலைவன், பாங்கனிடம்** - மிகுந்த மழையின் காரணமாக மலர்ந்த மணம்மிக்க பிடவ மலர்கள், முல்லை மலர்கள், காந்தள் பூக்கள், கொன்றை மலர்கள் எனப் பலவகை மலர்கள் இவற்றைத் தொடுத்துத் தழை, கோதை, இழை என்ற மாலை வகைகளைச் சூடித் தம்முள் கலந்து மகிழ்ந்துவிளையாடும் மகளிர் கூட்டத்தில் என்னை ஈர்த்து என் உயிரினுள் சென்று அமர்ந்த இவள் யார்?

**பாங்கன்** - இவள், சுற்றத்தாரால் போர்புரிவதில் வல்ல சிறந்த காளையைத் தழுவுவோரைத் தவிரப் பிறர் தனது மாநிற மேனியைத் தீண்டுவதற்கு உரியவர் அல்லர் என்று பறை அறைந்து அனைவரும் அறியுமாறு அறிமுகப்படுத்தப் பெற்றவள்.

தலைவன் - நான், ஏறுதழுவி இவளைப் பெறுவேன் என்று கூறுக.

சுற்றத்தார் - தழுவுவதற்கு நாங்கள் காலம் தாழ்த்த மாட்டோம் அணிகலன்களை உடைய இந்தப் பெண்ணின் காரணமாக ஏறுதழுவும் விழா நடைபெறும் என்று பறையறைந்து அறிவிப்பீராக எனப் பணியாளர்க்குக் கூறினர்.

விழாவில் பெண்புறாவை ஒத்த மகளிர் கண்மலர்ந்து பார்க்கு இடமெல்லாம் அவர்களுக்குத் தெரியுமாறு பரண்கள் அமைத்தால் நன்றாக இருக்கும்.

பலவண்ணமுடைய அழகிய காளைகளின்மீது பாய்வதற்கு இளைஞர் பலர் அவற்றின் எதிரே சென்றனர். காளைகளும் கொன்று குவிக்கும் வில்லைப் போல அதிக அளவு சினத்துடன் அவர்கள் மீது பாய்ந்தன. எங்கும் தூசி எழப் பாய்ந்த காளைகளின் கொம்பைத் தம் மார்பில் ஏற்பதற்க ஆயத்தமாக நிற்க. காளைகள் அவர்களைக் கீழே தள்ளிக் கொம்புகளைத் தாழ்த்தின. அதைக் கண்டு பலரும் கலங்கினர்.

அவர்களுள் மாலையணிந்த மார்பின்ன் ஒருவன் தன் நீண்ட கரிய கைகளால் காளையின் கழுத்தை இறுகத் தழுவி. மறைந்து நின்ற சட்டென. அதன் இமில் (திமில்) மீது ஏறிப் போரிட்டு, அதன் வலிமையை அடக்கினான். அப்போரில் இயலாமல் சினத்தோடு எழுந்து நின்றார். காளையை அடக்கியவனிடம் அந்நல்லோர் பகை கொள்வது ஏன்? கொல்கின்ற ஆற்றலையுடைய காளையை நேற்றும் ஒருவன் அடக்கினான் இன்றும் இளைஞர் பொருது தழுவலாம் என்று பறையறைந்த ஆயர்கள் அறியாமை உடையோரே.

சிறுகுடி மன்றத்தில் பண்ணும், தாளமும் பின் அணியாகக் குரவைக் கூத்து நிகழ்கின்றது. அதில் கரிய மேனியையும் துவராடையையும் உடைய திறமைமிக்க ஒருவன் பொலிவுடன் தலைமாலை சூடித் தனது போர்த்திறமை விளங்குமாறு ஏறுதழுவிய வீரத்தை நினைத்து மகிழ்ந்து புன்னகை த்தும்பிய தலைவயின் மெல்லிய தோளைப் பாராட்டிப் பாடி ஆடினர். அதனால் திருமன முரசில் ஓசை இடைவிடாது ஒலிப்பதாக.

## பதிற்றுப்பத்து (நான்காம் பத்து)

### நூல் அறிமுகம்

பத்து சேர மன்னர்களைப பற்றிப் பாடிய புறப்பாடல்களின் தொகுப்பு நூல். ஒவ்வொரு மன்னனையும் குறித்துப் பத்துப்பாடல்கள் உள்ளன. முதல் பத்தும், இறுதிப்பத்தும் கிடைக்கவிலை. 20 பாடல்கள் கிடைக்காமையால் 80 பாடல்களே

உள்ளன. அகவற்பாவில் ஆன பாடல்கள். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு (இசை) ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகச் செய்யுள் உள்ளது.

இது பாடல் வரலாறு கூறுவதாக உள்ளது. வழக்கில் இல்லாத பழமையான சொற்களை மிகுதியாகப் பெற்றுள்ளது. றாட்டுவளம், மக்கள் வாழ்வு, வீரம், கொடை ஆட்சிமுறை முதலிய செய்திகளைக் கூறுகிறது. இது சேரர் வரலாற்று நூலாகும். பகைவரின் மகளிர் கூந்தலை அறுத்துக் கயிறாகத் திரித்து யானைகளைக் கட்டி இழுக்கும் செய்தி இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய மலைநாடே (கேரளா) சேர நாடாகும். நன்னன் போன்ற குறுநில மன்னர்கள் தகடூர் அதியன் வெல்லப்பட்டமை, மேற்குக் கடலில் கலங்கரை தாக்கும் கடம்பர்களை அடக்கியமை முதலிய வரலாற்றுச் சுவடுக்ள இந்நூலின் உள்ளன. பத்து சேர அரசர்களைப் பற்றி பத்துப்பத்து பாடல்களில் பாடப்பட்ட ஒரே வரலாற்று இலக்கிய நூல் பதிற்றுப்பத்து ஆகும். நமக்குப் பாடப்பகுதியாக நான்காம் பத்தில் ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது.

## நான்காம் பத்து

### ஆசிரியர் அறிமுகம்

களங்காய்க் கண்ணி நார்முடிச் சோலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. பதிற்றுப்பத்தில் நான்காம பத்தாக இடம் பெற்று உள்ளது. தமிழலக்கியத்தில் சேர மன்னனைப் பற்றி எழுந்த ஒரே இலக்கிய நூல் இதுவாகும். நான்காம் பத்தில் ”கமழ் குரல் துழாய்“ என்ற தலைப்பிலானப் பாடலைப் பாடியவர் காப்பியனார் ஆவார். கழையமல் கழனி, வரம்பில் வெள்ளம், ஒண்பொறிக் கழற்கால், மெய்யாடு பறந்தலை, வாள் மயங்கு கடுந்தார், வலம்படு வென்றி, பரிசிலர் வெறுக்கை, ஏவல் வியன், பனை, நாடு காணவீர் சுடர் போன்ற பத்துப்பாடல்களைப் பாடியுள்ளார். பாடிப் பரிசல் பெற்ற இவர் நாற்பது நூறாயிரம் பொன் ஒழுங்கு கொடுத்துத்தான் ஆள்வதற்கு பாகங் கொடுத்தான். களங்காய்க் கண்ணி நார்முடித்சேரல் அவையின் 25 ஆண்டுகள் வீற்றிருந்தான் என்று அறிய முடிகிறது.

திணை, துறை, வண்ணம், தூக்கு என்பன இந்த நூலில் மட்டுமே கூறப்பட்டுள்ள சிறப்பாகும். நமக்குப் பாடப்பகுதியாக நான்காம் பத்தில் முதல் பாடல் இடம் பெற்றுள்ளது. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய பாடலைப் பார்ப்போம்.

**துறை** : செந்துறைப் பாடாண் பாட்டு

**வண்ணம்** : ஒழுகு வண்ணம்

**தூக்கு** : செந்தூக்கு

**பெயர்** : கமழ் குரல் துழாய்

**ஆசிரியர்** : களங்காய்க்கண்ணி, நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது.

**பாடல்**

**கமழ் குரல் துழாய்**

(மன்னர்க்கு உரிய மாட்சிமையெல்லாம் எடுத்து ஒருங்கே புகழ்தல்)

பெயர் - கமழ் குரல் துழாய்

துறை - வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு

வண்ணம் - ஒழுகு வண்ணம்

தூக்கு - செந்நூக்கு

**குன்றுதலை மணந்து குழூஉக்கடல் உடத்த**
**மண்கெழு ஞாலத்து, மாந்தர் ஒராங்குக்**
**கைகமந்து அலறும் பூசல், மாதிரத்து**
**நால்வேறு நனந்தலை, ஒருங்குஎழுந்து ஒலிப்ப**
**தெள்உயர் வடிவமணி எறியுநர் கல்லென.** (5)

**உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி,**

வண்டுஊது பொலிதார் திருஞெமர் அகலத்துக்
கண்பொரு திகிரி, கமழ்குரற் துழாஅய்
அலங்கல், செல்வன், சேவடி பரவி
நெஞ்சுமலி உவகையர் துஞ்சுபதிப் பெரே

மணிநிற மைஇருள் அகல, நிலாவிரிபு,“
கோடுகூடு மதியம் இயலுற் றாங்கு
துளங்குகுடி விழுத்திணை திருத்தி, முரசுகொண்டு,
ஆண்டகடன் இறுத்தனின் பூண்கிளர் வில்மார்பு
கருசி வானம் தண்தளி தலைஇய,

வடதெற்கு விலங்கி, விலகுதலைத்து எழிலிய,
பனிவார் விண்டு விறல்வரை யற்றே
கடவுள் அஞ்சி வானத்து இழைத்த
தூங்குஎயில் கதவம் காவல் கொண்ட
எழுஉநிவந் தன்ன, பரேர்எறுழ் முழுவுத்தோள்,

வெண்திரை முந்நீர் வளைஇய உலகத்து
வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்டன் அனையைமன் நீயே, வண்டுபட
ஒலிந்த கூந்தல், அறம்சால், கற்பின்,
குழைக்குவிளக்கு ஆகிய ஒள்நுதல், பொன்னின்,

இழைக்கு விளக்கு ஆகிய அவ்வாக்கு உந்தி,
விசும்புவழங்கு மகளி ருள்ளும் சிறந்த

**செம்மீன் அனையள், நின் தொல்நகர்ச் செல்வி.**

**நிலன்அதிர்பு இரங்கல ஆகிய, வலன்ஏர்பு**

**வியன்பணை முழங்கும் வேல்மூசு அழுவத்து,**

**அடங்கிய புடையல், பொலங்கழல் நோன்தாள்,**

**ஒடுங்காத் தெல்வர், ஊக்குஅறக் கடைஇ,**

**புறங்கொடை எறியார் நின் மறப்படை கொள்ளுநர்,**

**நகைவர்க்கு அரணம் ஆகிய பகைவர்க்குச்**

**சூர்நிகழ்ந் தற்ற, நின் தானை,**

**போர்மிகு துருசில்! நீ மாண்டனை பலவே**

**பாடல் பொருள் விளக்கம்**

குன்றகள் நெருங்கியதும், கடல் வளமிகுந்ததும் ஆகிய நிலவுலகத்த மக்க்ள தலைக்குமேல் கைகளைக் கூப்பி ஒன்றுபட்டுக் குரல் எழுப்பி வழிபடும் ஒலி எல்லாத் திசைகளிலும் ஒலிக்கின்றது. ஓசைகொண்ட மணியை அடித்து வழிபெற்றனா. வரம் வேண்டி உண்ணாநோன்பு கொண்ட மக்கள் கூட்டம் கடல் துறையில் நீராடி வண்டுக்ள மொய்க்கும் மாலையை அணிந்த திருமகள் விளங்கும் மார்பினைக் கொண்டகண்களைக் கூச வைக்கும் கச்சராயுத படையை உடைய மணம் கமழும் துளசி மாலையை அணிந்த திருமால் திருவடிகளைப் புகழந்து வண்ஙகி மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு த்ததம் ஊர்களுக்குத் திரும்புவர்.

நீலமணி போன்ற இருள்நீங்க முழு ஒளி தருகின்ற முழுநிலா வானில் சென்றது போலத் தளிர்ந்திருந்த குடிமக்கள் மகிழும்படி நீ செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விளங்குகின்றாய், உன்னுடைய அணிகலன்கள் அணிந்த அகன்ற மார்பு இடிமின்னல்கள் ஆகிய தொகுதிகொண்ட முகம் குளிர்ந்து மழை பெய்த மலையை ஒக்கும்.

வலிமைமிக்க முழவினைப் போன்ற உன் தோள்கள் தேவர்களுக்கு அஞ்சி அசுரர்களால் வானில் அமைக்கப்பெற்ற தொங்கும் மதிலின் கதவினைக் காக்க

அமைத்த கணைய மரத்தினை தூக்கி நிறுத்தினாற் போன்று உள்ளன. வண்டு மொய்க்கும் கூந்தலினையும் அறக்கற்பினையும் காதணிக்கு விளக்கம் தரும் நெற்றியினையும் அழகிய உந்தியையும் அணிகளுக்கு விளக்கம் தரும் உடம்பினையும் கொண்டு உன் தொன்மையான அரண்மனையில் விளங்கும் பெருந்தேவி வானுலக மகளிரில் சிறந்து விளங்கும் அருந்ததியை ஒத்து விளங்குகின்றாள்.

உன் முரசுகள் மக்கள் நடுங்கும்படி முழங்காதனவாய் வெற்றியை முழங்குவனவாக உள்ளன. போர்க்களத்தில் பனம்பூ மாலையை அணிந்த உன் படைத் தலைவர்கள் புறமுதுகு காட்டிச் செல்லும் பகைவர்களின் முதுகில் படைகளைச் செலுத்தமாட்டார். உன் சேனை உன்னிடம் நட்பாக உள்ளவர்களுக்குப் பாதுகாப்பாக அமைகின்றது. பகைவர்களுக்கு அஞ்சத்தக்க தெய்வம்போல் விளங்குகின்றது. போர்க்களத்தில் மேம்பட்டுத் திகழும் தலைவனே. நீ பல பெருமைகளைப் பெற்று விளங்குகிறாய்.

## புறநானூறு

### நூல் அறிமுகம்

400 பாடல்களை உடைய புறப்பாடல்களின தொகுப்பு, சில பாடல்கள் கிடைக்கிவில்லை. சிதைந்த நிலையில் உள்ளன. பாடிய புலவர்களின் தொகை 165,160 பாடல்களுக்குப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. 15 பாண்டியர், 18 சேரர், 18 சோழர், 18 வேளிர் முதலியோரை இந்நூல் குறிப்பிடுகிறது. பண்டைய படைத்திறம், போர்முறை, கொடை கபிலர்-பாரி, ஔவை-அதியன், பசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் ஆகியோரின் நட்ப, வள்ளல்களின் மாண்ட முதலிய செய்திகள் பரவலாகக் காணக் கிடைக்கின்றன. கி.மு.விற்கு முந்தைய வரலாற்றச் செய்திகள் கிடைக்கின்றன. முதுமக்கள் தாழியில் புதைத்தல், நடுகல், வழிபாடு, கைம்மை தோற்றல், உடன்கட்டை ஏறுதல் பொன்ற சமூகப் பழக்கங்கள் தெரிவிக்கின்றன. பல போர்க்களங்கள் சுட்டப்படுகின்றன. அரசியல், கல்வி, நாகரிகம், பண்பாடு, வீரம், கொடை முதலிய பல சமூக நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன.

**"உண்பது நாழி உடப்பன இரண்டே"**

**"செல்வத்துப் பயனே ஈதல்"**

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**"தீதும் நன்றும் பிறர் தர வாரா"**

என்பன போன்ற அடிகள் இடம் பெற்று சமூகத்தினை மேம்படுத்தும் அறக்கருத்துக்கள் .இடம் பெற்றள்ளன.

**ஆசிரியர்**

பெருந்தலைச் சாத்தனார், கமண வள்ளலைப் பற்றி பாடியுள்ளார். காடு பற்றியிருந்த குமணன், புலவர் பரிசில் வேண்டிய பாடத் தன் தலையைக் கொண்டு தம்பியிடம் கொடுத்து பொருள் பெற்ற போகுமாறு சொல்லித் தன் வாளைக் கொடுக்கப் பெற்றுப் புலவர் பாடியது எனச் சாத்தனாரை அறியலாம்.

1. **இழத்தலினும் இன்னாது**

**துறை** : பாடாண்

**வண்ணம்** : பரிசில் விடை

**தூக்கு** : காடு பற்றியிருந்த குமணன் புலவர் பரிசில் வேண்டிய பாடத் தொடங்கினார் . தன் தலையைக் கொய்து கொண்டு தம்பியின் கையில் கொடுத்துப் பொருள் பெற்றுப் போகுமாறு சொல்லித் தன் வாளைக் கொடுக்கப் பெற்றுப் புலவர் பாடியது.

**ஆசிரியர்** : பெருந்தலைச் சாத்தனார்

**பெருந்தலைச்சாத்தனார் பாடியது**

திணை - பாடாண்

துறை - பரிசில் விடை

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைக் கண்டு, அவன் தன் வாள் கொடுப்பக் கொண்டு வந்து, இளங்குமணற்குக் காட்டி பெருந்தலைச் சாத்தனார் பாடியது.

**பாடல்**

**மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தன்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே**
**துன்அரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்,**
**இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்,**
**தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே**
**தாற்தாழ் படுமணி இரட்டும், பூநுதல்**
**ஆடுஇயல் யானை பாடுநர்க்கு அருகாக்**
**கேடுஇல்நல் இசை வயமான் தோன்றலைப்**
**பாடிநின்றனெ னாக, "கொன்னே**
**பாடுபெறு பரிசிலன் வாடின்ன் பெயர்தல்என்**
**நாடுஇழந்த தனினும் நனிஇன் னாது"என,**
**வாள்தந் தனனோ தலைஎனக்கு ஈயத்**
**தன்னின் சிறந்தது பிறிதுஒன்று இன்மையின்,**
**ஆடுமலி உவகையொடு வருவல்**
**ஓடாப் பூட்கைநின் கிமையோற் கண்டே**

**திணை** - பாடாண், ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் ஆகியவற்றைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுவது.

**துறை** - பரிசில் விடை, பரிசில் பெற வந்தவன் அதனைப் பெற்றாயினும் பெறாமலாயினும் பரிசில் நாடிவந்தோனிம் விடை பெறுதல்

**பாடல் பொருள் விளக்கம்**

நிலைபேறில்லாத உலகத்தில் நிலைபேற்றைக் கருதியவர், தம் புகழை நிலைநிறுத்தித் தாம் இறந்தனர். எட்டுதற்கரிய சிறப்பினையுடைய செல்வர் வறுமையால் வந்தவர்க்குக் கொடுத்து உதவாமையால் புகழாளர் வரலாற்றில் தொடர்பில்லாது போயினர். பெரிய மணிகள் மாறி மாறி ஒலிக்கும் புள்ளிகளை உடைய நெற்றியையும் அசையும் இயல்புடைய யானையைப் பாடுநர்க்குக் கொடுக்கும் பெரிய புகழை உடைய உன்னைப் பாடி நின்றேன். பாடிப் பரிசு பெற வந்த பாவலன் பரிசு பெறுதல் இன்றி வெறுமனே திரும்புதல் இல்லை. என் நாட்டை இழந்ததனினும் கொடுமையானது நான் கொடுக்க இயலாமை. அதனால் என்னிடம் வாளைத் தந்தான். தன் தலையைப் பரிசாகக் கொடுப்பதற்கு அதனின் சிறந்தது அவனுக்கு வேறொன்றும் இல்லை. புறங்கொடுத்தல் இல்லாத கொள்கையை உடைய உன் தமையனைக் கண்டு வெற்றிக் களிப்போது வந்தேன்.

### 2. வேலன் கூறுவதையே மனங்கொள்ளல்

**திணை** : பொதுவியல்

**துறை** : முதுமொழிக் காஞ்சி, சேரமான் கணைக்கால் இரும்பொரை சோழன் செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் போரிட்டான். போரில் தோற்று குடவாயிற் கோட்டத்து சிறையில் இருந்தான். தன்னீர் தா என்று கேட்டான். தண்ணீர் பெறாது பெயர்த்துப் பெற்று கைக் கொண்டு உண்ணான் சொல்லித் துஞ்சிய பாடல்

**பாடியவர்** : சேரமான் கணைக்கால் இரும்பொறை

### சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடியது

திணை - பொதுவியல்

துறை - முதுமொழிக்காஞ்சி

சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது. பற்றக் கோட்பட்டுக் குடவாயில் கோட்டத்துச்

சிறையில் கிடந்து, தண்ணீர் தா என்று பெறாது. பெயர்த்துப் பெற்று, கைக் கொண்டிருந்தது உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு.

**பாடல்**

**குழலி இறப்பினும், ஊன்தடி பிற்ப்பினும்,**

**"ஆள்அன்று" என்ற வாளின் தப்பார்,**

**தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**

**கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்,**

**மதுகை இன்றி, வயிற்றுத்தீத் தணியத்**

**தாம்இரந்து உண்ணும் அளவை**

**ஈன்ம ரோஇவ் உலகத் தானே?**

**திணை** - பொதுவியல், எல்லாத் திணைகளுக்கும பொதுவானச் செய்திகளைத் தொகுத்துக் கூறுவது.

**துறை** - முதுமொழிக் காஞ்சி அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள் நலத்தினைக் கூறுதல்.

**பாடல் பொருள் விளக்கம்**

பிடிக்கும்போதே குழந்தை இறந்து பிறந்தாலும், குழந்தையின் முழுவடிவம் அமையாமல் தசைத் தடியாகவே பிறந்தாலும் அவற்றை ஆள் அல்ல என்று கருதாது வாளால் பிளப்பர். அது அரசர் குடியின் வழக்கம். சங்கிலியால் பிணிக்கப் பெற்ற நாயைப் போலச் சிறைப்பட்டிருக்க, உறவல்லாத உறவினர் முயற்சியால் வந்த சிறிய உணவை உறுதிப்பாடு இல்லாமல் வயிற்றின் பசித்தீயைத் தணித்துக் கொள்ளக கேட்டுப் பெற்று உண்ணும் அளவில் இவ்வுலகில் அரச குடியினர் மகவைப் பெறுவாரோ? (மாட்டார்).

# பத்துப்பாட்டு

## நூல் அறிமுகம்

பாட்டும் தொகையும் என்பதில் பாட்டு என்பது பத்துப்பாட்டினைக் குறிக்கும். மூத்தோர்கள் பாடியதில் பத்துப்பாட்டும் சிறப்புடையது. திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகியவை பத்துப்பாட்டு எனப்படும்.

இதனை 8 புலவர்கள் பாடியுள்ளனர். குறைந்த அடியுடைய பாட்டு முல்லைப்பாட்டு, 103 அடிகளை உடையது. நீண்ட பாடல் மதுரைக்காஞ்சி, 782 அடிகளை உடையது. வஞ்சிபடி பயின்று வந்த பட்டினப்பாலை தவிர்ந்த 9 பாட்டுகளும் ஆசிரியப்பாவால் ஆனவை. அகம் சார்ந்தவை மூன்று. அவை முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, அகமும் புறமும் சேர்ந்த பாட்டு நெடுல்வாடை புறப்பாட்டு 6. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி என்பனவாகும்.

மதுரைக்காஞ்சி நிலையாமையைப் பாடியுள்ளது மற்றும் ஐந்து ஆற்றுப்படை பாடல்கள், பரிசில் பெற்ற கலைஞன், தன்மைப் போன்று வறுமையிலிருக்கும் கலைஞர்களைத் தனக்குப் பரிசு கொடுத்த வள்ளலிடம் சென்ற பரிசு பெற்ற வளமோடு வாழ வழிகாட்டுவதாக அமைந்தவை. இப்பாடல்கள் அனைத்தும் நடப்பியலின் அடிப்படையில் அமைந்தவை ஆகும்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய 301 அடிகள் உடைய பாட்டு இது. வஞ்சியடி விரவிய ஆசிரியப்பாவாக உள்ளதால் இதனை “வஞ்சி“ நெடும்பாட்டு எனபர். பொருள் தேடிச் செல்வதற்காகத் தலைவியைப் பிரிய எண்ணகிறான் தலைவன். இது செலவழுங்குதல் என்னம் அகத்துறையைச் சார்ந்தது.

காவிரி கடலோடு கலக்கும் காவிரிப் பூம்பட்டினத்தின் (பூம்புகார்) சிறப்பு கரிகாலனின் வீரம், பரதவர் வாழ்க்கை, கடல் வாணிகம், துறைமுகச் சிறப்பு

இறக்குமதி சுங்கம், சோழனின் புலிச்சின்னம், அங்காடிகள் போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன. அளவிடற்கரிய புகழினை உடைய பூம்புகார் நகரத்தையே கொடுத்தாலும் தலைவியை விட்டுப் பிரியேன் என்று கூறும் தலைவனின் மன உணர்வு நுட்பமாகக் கூறப்பட்டுள்ளது.

**“முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**

**வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய**

**வாரேன் வாழிய நெஞ்சே”**

என்பன போன்று தலைவனின் நுட்பமான மன உணர்வை வெளிப்படுத்தும் வகையில் கூறப்பட்டுள்ளது.

**ஆசிரியர் அறிமுகம்**

கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவரே இதனை இயற்றியுள்ளார். பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு அதன் செல்வ வளம் கரிகாலனுடைய வீரச் செயல்கள் ஆகியனவற்றைப் பாடியுள்ளார். பெரும்பாணாற்றுப்படை என்ற நூலினையும் இவர் தான் எழுதியுள்ளார். தொண்டைமான் இளந்திரையன் மீது பாடப்பட்டது. ஆகவே இவர் கரிகாலன் இளந்திரையன் என்ற இரண்டு அரசர்களின் அன்பிற்கு உரியவர். இவரின் வரலாற்றினை அறிவதற்கான சான்று அதிகமாக இல்லை. கடியலூர் என்பதை இவர் பிறந்த ஊராகக் கருதுகின்றனர். இவர் தொண்டைமானையும், சோழனையும் பாடியிருப்பதால் இந்த ஊர் சோழ நாட்டிலோ, தொண்டை நாட்டிலோ தான் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். இவர் கூறியிருக்கும் இயற்கை நிகழ்ச்சிகளும் உவமைகளும் அக்கால காவிரிப்பூம்பட்டினத்தை நம் மனக்கண்முன் படம்பிடித்துக் காட்டுகிறது. தமிழ்நாட்டின் பெருமை, தமிழ் நாகரிகத்தின் உயர்வு தமிழர்களின் வீரம் பண்பாடு இவையெல்லாம் இந்தப் பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ளது.

## பட்டினப்பாலை

**திணை** : பாலைத்திணை

**துறை** : செலவழுங்கல் துறை

**கூற்று** : தலைவன் கூற்று

**கேட்போர்** : நெஞ்சுக்குக் கூறியது

**ஆசிரியர்A** : கடியலூர் உருத்திரங்கண்ணனார்

**பட்டினப்பாலை பெயர்க்காரணம்**

இந்நூலில் பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணை ஆகலின் இதற்குப் பட்டினப்பாலை என்று பெயர் கூறினர். பாலையாவது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் கூறுவது. இப்பாட்டு பாலைத்திணைக்குரிய உரிப்பொருளைப் பெற்று வந்தமையால் இப்பெயர் பெற்றது எனலாம்.

**பாடல்**

**காவிரியின் சிறப்பு**

**வசைஇயல்புகழ் வயங்குவெண்மீன்**

**திசைதிரிந்து தெற்கு ஏகினும்,**

**தற்பாடிய தனியுணவின்**

**புள்தேம்பப் புயல்மாறி**

**வான்பொய்ப்பினும், தான்பொய்யா** (5))

**மலைத்தலைய கடல் காவிரி**

**புனல்பரந்து பொன்கொழிக்கும்**

**சோழநாட்டின் சிறப்பு**

**விளைவுஅறா வியன்கழனி**

**கார்க்கரும்பின் கமழ்ஆலைத்**

தீத்தெறுவின் கவின்வாடி
நீர்ச்செறுவின் நீள்நெய்தல்
பூச்சாம்பும் புலத்து ஆங்கண்
காய்ச்செந்நெல் கதிர்அருந்தி
மோட்டுஎருமை முழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும்
கோள்தெங்கின் குலைவாழைக்
காய்க்கமுகின் கமழ்மஞ்சள்
இனமாவின் இணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளைஇஞ்சி
அனகர் வியல்முற்றத்து
சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளிர் உணங்குஉணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை
பொற்கால் புதல்வர் புரவிஇன்று உருட்டும்
முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை அல்லது கலங்குபகை அறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு,

நகரச் சிறப்பு

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி,
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி

பனைநிலைப் பரவின் அணைமுதல் பிணிக்கும்
கழிசூழ் படப்பைக் கலியாணர்ப்
பொறிற்புறவின் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீன்

உருகெழுதிறல் உயர்கோட்டத்து
முருகுஅமர்பூ முரண்கிடக்கை
வரிஅணிசுடர் வான்பொய்கை
இருகாமத்து இணைஏரிப்
புலிப்பொறிப் போர்க்கதவின்

திருத்துஞ்சும் திண்காப்பின்
புகழ்நிலைஇய மொழிவளர,
அறம்நிலைஇய அகன்அட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்துஒழுகி.

ஏறுபொரச் சேறாகித்
தேர்ஓடத் துகள் கெழுமி,
நீறுஆடிய களிறுபோல,
வேறுபட்ட வினைஓவத்து
வெண்கோயில் மாசுஊட்டும்

தண்கேணித் தகைமுற்றத்துப்
பகப்பெருத்தின் பலசாலை

தவப்பள்ளித் தாழ்காவின்
அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை முனைஇ. குயில்தம்
மாயிரும் பெடையோடு இரியல் போகிப்
பூதம் காக்கும் புகல்அருங் கடிநகர்த்
தூதுஉண்அம் புறவொடு துச்சில் சேக்கும்
ஏற்றுமதி இறக்குமதி நிகழும் பண்டகசாலை முற்றம்
வாலிணர் மடல்தாழை
வேல்ஆழி வியன்தெருவில்
நல்இறைவன் பொருள்காக்கும்
தொல்இசைத் தொழில்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகல்தொறும் அசைவின்றி.
உல்குசெயக் குறைபடாது.
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்,
மலைப்பொழிந்தநீர் கடல்பரப்பவும்,
மாரிபெய்யும் பருவம்போல,
நீரினின்றும் நிலத்துஏற்றவும்
நிலத்தினின்று நிர்ப்பரப்புவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்புஅறியாமை வந்துஈண்டி

அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்அணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி,
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போர் ஏறி,
மழைஆடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூர்உகிர் ஞமலிக் கொந்தாள் ஏற்றை
ஏழகத் தகரோடு உகளும் முன்றில்,

## வணிகர்களின் வாழ்க்கை முறை

நீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலும்
ஏமர்ப்ப இனிது துஞ்சிக்
கிளைகலித்துப் பகை பேணாது,
வலைஞர் முன்றில் மீன்பிறழவும்,
வலைஞர் குரம்பை மாஈண்டவும்
கொலை கடிந்தும், களவுநீக்கியம்,
அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
நல்ஆனொடு பகடுஓம்பியும்,
நான்மறையோர் புகழ்பரப்பியும்,
பண்ணியம் அம்டியும், பசும்பதம் கொடுத்தும்,
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை
கொடுமேழி நசை உழவர்

நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நல்நெஞ்சினோர்
வடுஅஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது,
கொடுப்பதூஉம் கறைகொடாது,
பல்பண்டம் பகர்ந்து வீசும்
ஒருவேம்எனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்எயில்
மின்ஒளி எறிப்ப, தம்ஒளி மழுங்கி
விசிபிணி மழவின் வேந்தர் சூடிய,
பசுமணி பொருத பருஏர் எறுழ்க் கழற்கால்
பொன்தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்
முற்றுஇழை மகளிர் முகிழ்மலை திளைப்பவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பின் ஒண்பூண்
அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன், தெல்வர்க்கு ஓக்கிய

## தலைவன் தலைவியைப் பிரிதற்கு அருமை கூறல்

வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே!

## பாடல் பொருள் விளக்கம்

பட்டினப்பாலை என்பது சங்க காலத்துத் தமிழ்நூல் தொகுப்பான பத்துப்பாட்டில் அடங்கிய ஒரு நூல், பெரும்பாணாற்றுப்படை என்னம் நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவரே இதனைப் பாடியுள்ளார். பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, அதன் செல்வவளம் கரிகாலனுடைய வீரச் செயல்கள், மக்கள் வாழ்க்கைமுறை ஆகியவற்றை எடுத்து இயம்பும் இப்பாடல் 301 அடிகளால் அமைந்துள்ளது. இப்பாடலில் சோழ மன்னன் கரிகால்பொருளத்தானின் பெருமைகளை எடுத்துக்கூறுகிறார். புலவர், கரிகாற்சோழன் திரைகடலில் நாவாய்கள் பல செலுத்தி சுங்கமுறையை ஏற்படுத்தி வெளிநாடுகளுடன் வாணிகத் தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப் புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆணட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம், கரிகாற்சோழனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டிப்பாலை ஆகும்.

**பட்டினம்**

துறைமுகத்தை ஒட்டியுள்ள பெருநகரங்க் பட்டினம் என்றழைக்கப்படும் சோழநாட்டின் தலைநகராக இது விளங்கியது. இது தமிழிகத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் கீழ்க்கோடியில் காவிரிநதி கடலோடு கலக்கும் இடத்தில் உள்ளது. இப்போது இது சிறிய ஊராகும். 1500 ஆண்டுகளுக்கு முன் இந்த நகரம் கடலில் மூழ்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. மணிமேகலையில் இதற்கான செய்தி கூறப்பட்டுள்ளது.

**பாலை**

பொருள் தேடப் பிரிந்து செல்ல நினைக்கிறான் தலைவன். பிரிந்து சென்றால் தன் காதலியின் நிலை என்னவாகும். தன் பிரிவைப் பொறுப்பாளா? தான் விரும்பும் வரை அவள் உயிர்கொண்டு உறைவாளா? என்ற ஐயம் அவள் உள்ளத்தில் எழுந்து அவனை வாட்டுகிறது. பிரிந்து சென்றால் தானும் மன அமைதியோடு சென்ற இடத்தில் செயலாற்ற முடியாது. வேதனைதான் மிஞ்சும் வேதனையோடு செய்யும் செயலில் வெற்றி காணமுடியாது. ஆகையால் இப்பிரிவு

காதலிக்கும் துன்பம் தருவதோடு தனக்கும் துன்பம் தரும் என நினைத்து மனதிற்குக் கூறுவதாக உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார்.

**கதைச்சுருக்கம்**

இப்பாடலில், தலைவன் ஒருவன் காவிரியின் சிறப்பு, சோழநாட்டின், பெரும்வளம், காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்ப, அங்குள்ள இரவு நேர அங்காடி ஏற்றுமதி, இறக்குமதி, விழா நீங்காத கடைவீதி ஊரின் பல பகுதிகளில் உள்ள கொடிகள், அங்கு வாழும் உழவர்கள், வணிகர்கள், பன்னாட்டினரும் ஒன்று கூடி வாழ்தல் ஆகியவற்றை மிக அழகாக விவரித்து சிறப்புமிக்க காவிரிப்பூம்பட்டினத்தை எனக்குப் பரிசாகக் கொடுத்தாலும் என் தலைவியை விட்டுப் பிரியேன் எனத் தலைவன் கூறுகிறான். திருமாவளவனின் போர்த்திறன், அவன் அடைந்த வெற்றி, பகைவர் ஊர்களை அவன் பாழ்படுத்தியது ஊர்களை உருவாக்கியது. அவனது குடும்ப வாழ்க்கையின் சிறப்பு ஆகியவற்றை விளக்கி அவன் செங்கோலை விடக் குளிர்ச்சியானவை என் தலைவியின் தோள்கள் என்கிறான்.

**காவிரியின் பெருமை**

குற்றம் இல்லாத, புகழுடன் விளங்குகின்ற வெள்ளி என்ற கோள்,, திசை மாறி தான் நிற்கவேண்டிய வடதிசையில் நிற்காமல் தென் திசைக்கண் பொனாலும் வானை நோக்கிப் பாடும் நீர்த்துளிகளை உணவாகக் கொண்ட வானம்பாடி வருந்துமாறு மழை பெய்தலைத் தவிரித்து வானம் பொய்த்தாலும், குடகுமலையின்கண் தொடங்கிக் கடலில் புகும் காவிரி ஆறானது பொய்யாது, தன்னுடைய நீரை நிலத்திற்கு வழங்கி வளமையைச் சேர்க்கும்.

**மருதநிலத்தின் பெருமை**

விளைச்சல் நீங்காத அகன்ற வயல்களில் கருமை நிறமான முதிர்ந்த கரம்பின் மணமுள்ள பாகைக் காய்ச்சும் ஆலைகளின் நெருப்பின் புகைச் சுடுவதால் அழகு கெட்டு, நீரையுடைய வயல்களில் உள்ள நீண்ட நெய்தல் மலர்கள் வாடும் அந்த இடத்தில், காய்ந்த செந்நெல்லின் கதிரைத் தின்ற

வயிற்றையுடைய எருமையின் முதிர்ந்த கன்றுகள் நெற்கதிர்களின் நிழலில் உறங்கும். குலைகளையுடைய தென்னையினையும் குலைகளையுடைய வாழையினையும், காயையுடைய கமுகினையும் மணங்கமழும் மஞ்சளையும், குலைகளையுடைய பனையையும், கிழங்கையுடைய சேம்பையும், இஞ்சியையும் உடையமாக மருத நிலம் திகழ்கின்றது.

**காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வச் செழிப்பு**

அகன்ற இல்லத்தின் பெரிய முற்றத்தில் ஒளியையுடைய நெற்றியையம் மடப்புடைய நோக்கினையும் உடைய, பொருந்திய அணிகளை அணிந்த பெண்கள் காயவைத்த உணவை உண்ண வரும் கோழிமீது எறிந்த அவர்களுடைய காதணிகள் பொன்னினால் செய்த சிலம்பணிந்த சிறுவார்கள் தேரினைத் தடுத்து நிறுத்தும் வளமுடையதாக செல்வச் செழிப்புடையதாக காவிரிப்பூம்பட்டினம் திகழ்கிறது.

**காவிரிப்பூம்பட்டினத்து அட்டில் சாலைகள்**

புலிச் சின்த்தையுடைய தம்மில் நன்கு இணைக்கப்பட் கதவுகளையுடைய, செல்வம் தங்கும் திண்மையான மதியை உடையதாக, புகழ் பெற்ற சொற்கள் பரவ அறம் நிலைபெற்ற, பெரிய சமையல் அறைகளில் சோற்றிலிருந்து வடித்த கொழுமையான கஞ்சி, ஆற்றினைப் போலப் பரந்து தெருவில் ஓடி அவ்விடத்தில் காளைகள் போரிடுவதால் சேறு ஆகிறது. தேர் ஓடிக் கிளப்பிய தூசியில் விளையாடிய ஆண் யானையைப் போன்று வேறுபட்ட தொழில்களையுடைய ஓவியம் வரையப்பட்ட வெள்ளை நிறமுடைய அரண்மனியல் துஸசிப் படிந்தது.

**காவிரிப்பூம்பட்டினத்து இரவு நேர நிகழ்வுகள்**

பெரிய காவிரி ஆறு மலர்களின் மணங்களைக் கொண்டு வந்து கூட்டும் கரையில் உள்ள தூயமணலில் துயின்று, வெள்ளை மலர்க்கொத்துக்களையும் மடலை உடைய தாழையுடைய கடற்கரையின்தான் உள்ள அகன்ற தெருவில் நல்ல மண்ணின் பொருட்களைக் காக்கும், பழைய புகழையுடைய சுங்கத் தொழிலைச் செய்பவர்கள், சுடும் கதிர்களையுடைய கதிர்களையுடைய கதிரவனின்

தேரில் கட்டப்பட்ட குதிரைகளைப் போல நாள்தோறும் சோம்பல் இல்லாது சுங்க வரியைக் குறையாமல் கொள்வார்கள்.

**பண்டகசாலை முன்றில்**

முகில் கடலிலிருந்து முகந்த நீரை மலைமேல் பொழியவும், மலையில் விழுந்த நீரை ஆறுகள்மூலம் கடலில் சேர்க்கவும், மழை பெய்யும் பருவம்போல, கடலிலிருந்து நிலத்திற்கு ஏற்றவும், நிலத்திலிருந்து கடலுக்குப் பரப்பவும் அளந்து அறியமுடியாத பல பொருட்கள் எல்லை இல்லாது வந்து குவிந்து கிடக்க பெறுதற்கு அரிய பெருங்காவலையுடைய வலிமையுடன் மிகுந்த அதிகாரமுடைய ஒருவன் சோழ மன்னனுக்குரிய புலிச் சின்த்தைப் பொறித்து. புறத்தில் வைத்த விளை நிறைந்த பல்வேறு பண்டங்களைக் கட்டி வைத்து மூடைக்குவியலின்மீது ஏறி, முகில் உலவும் உச்சிலையுடைய உயர்ந்த மலையின் பக்க மலையில் விளையாடும் வருட மானின் தோற்றம் போல, கூர்மையான நகங்களையும் வளைந்த கால்களையும் உடைய ஆண் நாய்களும் ஆட்டுக் கிடாய்களும் தாவிக் குதிக்கும் பண்டக சாலையின் முற்றத்தில் காவலர்கள் காவல் புரிந்துள்னர்.

**விழா நிங்காத கடைவீதி**

சிவந்த அடியையும், நெருங்கிய தொடையையும், புதிய அணிகலன்களையும், அகன்ற அல்குலையுமட, தூய்மையான உடையையும், பவளம் போன்ற உடலையும் மயிலின் இயல்பையும், மானின் பார்வையும், கிளியின் மழலையையும், மென்மையான சாயலையும் கொண்ட பெண்கள் காற்ற வரும் சாளரம் வழியாக நோக்கி உயர்ந்த மலை அருகில் நுண்மையான தாதுக்களை உதிர்க்கும் காந்தள் மலர்களின் அழகிய இதழ்களைப் பொன்ற உள்ள தங்களுடைய நிறைய வளையல் அணிந்த முன்கையைக் கூப்பி வணங்க, முருகனுக்காக வெறியாட்டம் ஆடிய பெண்களும் இணைந்து புல்லாங்குழல் ஒலிக்க யாழ், முழவு, முரசு ஒலிக்க நீங்காத விழாவினை உடையதாக கடைவீதிகள் இருந்தன.

**கப்பலின் மேலுள்ள கொடிகள்**

கட்டப்பட்டிருக்கும் தறியை அசைக்கும் களிற்று யானைகளைப் போல இனிய பூம்புகாரின் அலைகளையுடைய கரையின் முன் அசையும் கப்பல்கள் நெருங்கி இருந்தன. அவற்றின் கூம்புகளின் மேல் வணிகர்களால் விரும்பப்படும் கொடிகளும் உள்ளன. மீனை வெட்டி இறைச்சியை அறுத்து, அந்த தசையைப் பொரிக்கும் ஒலிகளையுடைய பலர் புகம் கள் விற்கும் கடையின் முற்றத்தில் மணலைக் குவித்து மலர்களைச் சிதறிப் பலியைக் கொடுக்கும் கதவுகள் அருகே கொடிகள் அசைந்தாடின. வேறு பிற கொடிகளும் மிகவும் நெருங்கி பல்வேறு உருவங்களில் இருந்தன. கதிரவனின் கதிர் நுழைய முடியாதபடி இருந்த்து அச்செழிப்பான நகரின் கடற்கரை என்று கூறியுள்ளார்.

**காலின் வந்த கருங்கறி மூடை**

காவிரிப்பூம்பட்டினத்து எல்லையில் கெடாத நல்ல புகழை உடைய தேவர்கள் பாதுகாவலினால், கடலில் வந்த நிமிர்ந்த நடையையுடைய குதிரைகளும், வண்டிகளில் வந்த கறிய மிளகு மூடைகளும், வடமலையில் பிறந்த பொன்னும், குடகு மலையில் தோன்றி சந்தனமும், அகிலுமை, தென் கடலின் முத்தும், கீழ்திசைக் கடலின் பவளமும், கங்கை ஆற்றினால் உண்டான பொருட்களும், காவிரி ஆற்றினால் உண்டான பொருட்களும் ஈழத்து உணவும், மியன்மாரின் பொருட்களும் நிலத்தை நெளிக்கும்படி திரண்டு ஒன்றோடொன்று கலந்திருந்தன..

**வணிகர் குடிச்சிறப்பு**

கலப்பையின் நீண்ட தடியின் நடுவில் பொருந்திய கொழுமுனை போல, நடுவு நிலைமையுடைய நல்ல நெஞ்சினோர், பழிக்கு அஞ்சி உண்மையைக் கூறி, தம்முடையதையும், பிறருடையதையும் ஒப்பாக எண்ணி, தாம் கொள்ளும் பொருட்களை மிகுதியாகக் கொள்ளாது. தாம் விற்கும் பொருட்களையும் குறைவாகக் கொடுக்காது. பல பொருட்களின் விலையைக் கூறி விற்கும், தொன்றுதொட்டு செல்வம் ஈட்டிய வணிகர்கள் நிறைந்துள்ளனர்.

**திருமாவளவனின் போர்த் திறமை**

தன்னுடைய அரசுரிமையைப் பெற்றதற்காக அவன் மகிழ்ச்சி அடையவில்லை. பகைவரின் காவலுடைய கோட்டைகளை அழித்த கதவுகளை உடைக்கும் தந்தங்களையுடைய, பகை மன்னர்களின் முடியையுடைய கரிய தலைகளை உருட்டும் முன்கால் நகங்களைக் கொண்ட அடிகளையுடைய உயரமான அழகிய யானைகளுடனும், அழகிய மணிகளையுடைய குதிரைகளுடனும், பகைமறவர்கள் வீழ, பெரிய நல்ல வானத்தில் பருந்துகள் பறக்க, சிறிய செடிகள் படர்ந்த கொடிய பாறைகளைப போல செடிகளும், உமிஞை மலர்களும் நிரம்பியிருந்தன. பகைவரை விரட்டி விட்ட சிறப்பிற்குரியவன் திருமாவளவன் என்ற உண்மை தெரிகிறது.

**திருமாவளவனின் வெற்றிச்சிறப்பு**

ஒளிநாட்டார் பணிந்து ஒடுங்கவும், தொன்மையான அருவாள நாட்டு மன்னர்கள் வந்து பணிந்து அறிவுரை கேட்கவும், வடக்கில் உள்ள அரசர்கள் வாடவுமட, குடநாட்டு மன்னர் மகிழ்ச்சி குறையவும், ஆத்திரம் அடைந்து பகை மன்னர்களின் நிலையான கோட்டைகளைக் கைப்பற்றவும், பாண்டிய மன்னனின் வலிமை கெடவும், செருக்கினையும் வலிமையையும் உடைய முயற்சி, பெரிய தாளை, மறமுடைய வலிமை ஆகியன உடைமையால் சினத்தால் சிவந்த கண்களால் நோக்கி, புலிலிய முல்லை நிலத்தின் மன்னர்களின் வழிமுறை கெடவும் இருங்கோவேள் என்ற மன்னனின் சுற்றத்தார் கெடவும் திருமாவளவன் போர் புரிந்தான்.

**வளம் பொருந்திய வளவன்**

காடுகளை அழித்து நாடாக்கி குளங்களைத் தோண்டி, வளமையைப் பெருக்கி, பெரிய மாடங்களையுடைய உறந்தை நகரை வரிவுபடுத்தி அரண்மனைகளுடன் குடிகளை நிறுவி அரண்களில் பெரியதாகவும் சிறியதாகவும் வாயில்கள் அமைத்து அரண்களின் ஏவல் அறைதோறும் அம்புக் கூட்டை நிறுவி ”போர் செயவேன் நான்“ என்ற சூள் உரைத்து “விட்டு அகலமாட்டேன்“ என்ற கூறி புறமுதுகிடாது இருந்தான் கரிகாலன்.

**திருமாவளவனின் அகவாழ்வும் புறவாழ்வும்**

தங்களின் மறம் குறைந்த, வார் இறுக்கமாகக் கட்டிய முழவினையுடைய வேந்தர்களின் பச்சை மணியையுடைய முடி, பருத்த அழகிய வீரக் கழலினைக் கட்டிய கரிகாலனின் கால்கள், பொன்னால் செய்த தொடிகளை அணிந்த அவனது புதல்வி ஓடி ஆடி விளையாடவும், அணிகலன்களை அணிந்த அவனது மனைவிமார்கள் அவனது சிவந்த சந்தனம் அழிந்த மார்பில் உள்ள ஒலியையுடைய அணிகலன்களுடன் சிங்கத்தைப் போன்ற வலிமையுடன் கரிகாலன் பகைவர்மேல் உயர்த்திய வேலைக் காட்டிலும் கொடியது காடு. அவனது செங்கோலை விட குளிர்ச்சியானவை என் தலைவியின் மெல்லிய தோள்கள் என்று தலைவன் கூறி மகிழ்ந்தான் என்று கரிகாற்பெருவளத்தான் பட்டினத்தைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

**வினாக்கள்**

1. நற்றிணைப் பாடல் தரும் செய்தி யாது?
2. பதிற்றுப்பத்தில் நான்காம்பத்து பாடல் தரும் விளக்கம் யாது?
3. குறுந்தொகை தோழிக் கூற்று பாடல் தரும் செய்திகள் யாவை?
4. பட்டினப்பாலையின் சோழ நாட்டின் சிறப்பு யாது?
5. காவிரியின் சிறப்பு யாது?
6. பட்டினப்பாலையில் வணிகர்களின் வாழ்க்கை முறையை விளக்குக.
7. ஐங்குறுநூற்றில் வெளிப்பத்து, குரக்குப்பத்து, கிள்ளைப்பத்துப் பாடல் தரும் செய்திகள் யாவை?
8. முல்லைக்கலியில் தலைவன் ஏறு தழுவும் பாடல் தரும் விளக்கம் யாது?

## அலகு - 2

## இலக்கணம்

### தொல்காப்பியரின் பொருளதிகாரம்

பொருளதிகாரம் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

1. அகத்திணையியல்
2. புறத்திணையியல்
3. களவியல்
4. கற்பியல்
5. பொருளியல்
6. மெய்ப்பாட்டியல்
7. உவமவியல்
8. செய்யுளியல்
9. மரபியல்

என்று ஒன்பது இயல்களாகும். இவற்றுள் அகத்திணையியல் களவியல் , கற்பியல் ஆகியவை அகத்திணை பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. பொருளியல் என்பது அகத்திணை பற்றிய செய்திகள் சிலவற்றையும் , புறத்திணைக்குரிய செய்திகள் சிலவற்றையும் கூறுகின்றது.

மெய்ப்பாட்டியல் எட்டுவகை மெய்ப்பாடுகளைக் கூறுகின்றது. மெய்ப்பாடு என்பது உடம்பில் தோன்றும் உணர்வுகளாகும். உள்ளத்தில் தோன்றிய உணர்வுகள், அவ்வுள்ளத்தில் இருந்து எவ்வாறாவது வெளிப்பட்டு விடும். அதுவே மெய்ப்பாடாகும்.

உவமையியல் இரண்டு பொருள்களுக்கிடையே காணும் ஒப்புமைத் தன்மைகளைக் கூறுகின்றது.

செய்யுளியல் செய்யுள் இலக்கணத்தையும் , மரபியல் தமிழில் பழைய காலந்தொட்டு இருந்து வரும் சொற்பொருள் மரபு பற்றியும் , முறைமைகள் பற்றியும் கூறுகின்றன.

**தொல்காப்பியர் கூறும் திணைப்பாகுபாடு**

திணைகளை அகம், புறம் என்று பிரித்த தொல்காப்பியர், அகத்திணையை ஏழு பிரிவுகளாகப் பிரிப்பார். அவை

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்
5. பாலை
6. கைக்கிளை
7. பெருந்திணை

எனப் பெயரிடப்பட்டன.

தொல்காப்பிய அகத்திணையியலின் முதல் நூற்பா அகத்திணையைப் பற்றிக் கூறும் போது,

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப"**

என்கிறது.

திணை என்றால் ஒழுக்கம் என்று பொருள்படும். அகமாவது ஓர் ஆணும், ஒரு பெண்ணும் தமக்குள்ளே கண்டு, காதல் கொண்டு ஒன்றுபடுதல்; சில காரணங்களால் பிரிதல்; பிரிந்து தனித்திருத்தல்; அத்தனிமைக்கு இரங்குதல்; சில நேரங்களில் பிணக்குக் கொள்ளுதல் என ஐந்துவகை அன்பு உரிப்பொருளைக் கொண்டுள்ளது. இவற்றைக் கூடல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பர். இவை குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் எனவும் குறிப்பிடப்படுகின்றன.

**அன்பின் ஐந்திணை**

ஒருவனும், ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதல் கொள்வது குறிஞ்சித் திணை என்று பெயர் பெறுகிறது. காதலன் பொருளீட்டுவதற்கோ , போர்க்களத்திற்கோ, கல்வி கற்பதற்கோ , தூதுவனாகவோ சென்ற நேரத்தில் பிரிந்து இருக்கும் சூழலில் காதலி காத்திருப்பது முல்லைத் திணை என்னும் பெயர் பெறுகிறது.

தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே பல்வேறு காரணங்களால் பிணக்குகள் வரலாம். இதனை ஊடல் என்று கூறுவர். இந்த ஊடலைக் குறிக்கும் திணை மருதத் திணை எனப்படும். கடலில் மீன் பிடிக்கச் சென்றோ , பிற காரணங்களாலோ தலைவன் பிரிந்து சென்று , திரும்பி வர இயலாத சூழலில் தலைவி அவனுக்காகக் கவலைப்பட்டு இரங்கி நிற்றலை நெய்தல் திணை என்பர். தன் ஊரிலே வறட்சியின் காரணமாக வெளியூர் சென்று பொருளீட்டி வரலாம் என்று தலைவன் பிரிந்து செல்லும் நேரத்தில் இல்லத்தில் இருக்கும் தலைவியின் நிலை குறித்து அவன் கவலைப்படுதலும் , செல்லும் வழியில் தலைவனுக்கு என்ன நேருமோ என்று தலைவி இல்லத்தில் இருந்து கவலைப்படுதலும் பாலைத் திணை எனப்படும். இவையே அன்பின் ஐந்திணை என்றும் அழைக்கப்படும்.

பொருள் அகம், புறம் என இருவகைப்படும் ; அகம் என்பது இன்னது என்று வெளிப்படுத்த இயலாத காதலின்பம் ; புறம் என்பது ஊர் பெயர் குறிப்பிடப்பட்டு நடக்கும் உலகத்து நிகழ்ச்சிகள். அகத்தைக் கூறுவது அகப் பொருள் என்பர்.

இதனை அன்பின் ஐந்திணை என்றும் கூறுவர். மன மொத்த காதலை ஐந்திணை என்று கூறுவர் ; ஒருதலைக் காதலைக் கைக்கிளை என்று கூறுவர். பொருந்தாக் காதலைப் பெருந்திணை என்று கூறுவர். ஈண்டு அன்பின் ஐந்திணையே கூறப்படுகிறது.

காதல் ஒழுக்கம் களவியல் , கற்பியல் என்ற பாகுபாடுகளைக் கொண்டது. மணம் நடைபெறுமுன் ஏற்படும் சந்திப்புகளும், கூட்டமும், பிரிவும் களவு ஒழுக்கம் எனக் கூறப்படும். மணமானபின் ஏற்புடும் பிரிவுகளையும் , மீண்டும் அவர்கள் கூடி இன்புற்று வாழ்தலையும் கற்பியல் என்று கூறுவர். கற்பியலில் ஊடல் நிகழும்.

இச் செய்திகளையே வள்ளுவர் காமத்துப் பாலில் 25 அதிகாரங்களில் கூறுகிறார். இருவரும் முதன்முதலில் சந்திக்கும் சந்திப்பில் நிகழ்ச்சிகள் அமைகின்றன. உரையாடல்கள் நாடகப்பாங்கில் தலைவன் கூற்றாகவும் , தலைவி கூற்றாகவும், கவிஞன் கூற்றாகவும் இடம் பெறுகின்றன.

**கைக்கிளை, பெருந்திணை**

ஆண் விரும்பி , பெண் விரும்பாமலோ அல்லது பெண் விரும்பி , ஆண் விரும்பாமலோ இருப்பின் அது கைக்கிளை. அதாவது ஒரு தலைக் காமம்.

காதலிக்கும் ஆணைவிடப் பெண் மிகவும் மூத்தவளாகவோ , பெண்ணைவிட ஆண் மிகவும் மூத்தவனாகவோ இருப்பின் அது பெருந்திணை என்று பெயர் பெறும். இது பொருந்தாக் காமம்.

கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் தமிழ்ச் சான்றோர்களால் போற்றப்படாத ஒழுக்கங்களாகும். ஒருவனும் ஒருத்தியும் விரும்புகின்ற ஐந்திணைகள் மட்டுமே அன்பின் ஐந்திணை என்று போற்றப்பட்டது.

## ஐந்திணைகளின் முதல் கரு உரிப்பொருட்கள்

அகப்பொருள் இலக்கணத்தில் முதன்மையானதும் சிறப்பானதும் ஐந்திணையே ஆகும். அது அன்பின்ஐந்திணை என்று அழைக்கப்படும். குறிஞ்சி , முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து பெயர்களில் வழங்கப்படும். இவை தலைவன் - தலைவி இருவரது மனம் ஒத்த அன்பை மையமாக வைத்து வகுக்கப்பட்ட இலக்கணங்கள் ஆகும்.

### ஐந்திணை முப்பொருள்

ஐந்திணை ஒழுக்கத்தோடு தொடர்புடைய உலகப்பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்று பாகுபாடுகளில் அடக்கிக் கூறுவர்.

### முதற்பொருள்

முதற்பொருள் நிலம், பொழுது என இருவகைப்பட்டது.

### ஐந்து திணைகளுக்கும் உரிய நிலங்கள்

| | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| பாலை | குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் இருந்து மாறிய நிலை |

### ஐந்து திணைகளுக்கும் உரிய பொழுதுகள்

**பொழுது பெரும் பொழுது, சிறு பொழுது என இருவகைப்படும்.**

பெரும்பொழுது என்பது, ஓர் ஆண்டின் கூறுபாடு. ஓர் ஆண்டுக்கு உரிய ஆறு பருவங்களும் பெரும்பொழுது எனப்படும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு மாத கால அளவினை உடையதாகும்.

### பெரும்பொழுது உரிய மாதங்கள்

1.இளவேனிற்காலம் - சித்திரை, வைகாசி

2. முதுவேனிற்காலம் - ஆனி, ஆடி

3. கார்காலம் - ஆவணி, புரட்டாசி

4. குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை

5. முன்பனிக்காலம் - மார்கழி, தை

6. பின்பனிக்காலம் - மாசி, பங்குனி

(வேனிற்காலம் - வெயிற்காலம் ; கார்காலம் - மழைக்காலம் ; முன்பனிக்காலம் - மாலைக்குப் பின் பனி விழும் காலம் ; பின்பனிக்காலம் - காலையில் பனி விழும் காலம்).

**சிறுபொழுது**

சிறுபொழுது என்பது நாளின் கூறுபாடு. ஒரு நாளை , 1. வைகறை, 2. காலை, 3. நண்பகல், 4. எற்பாடு, 5. மாலை, 6. யாமம் என்பனவாக , ஆறு கூறுகளாக்கி , அவற்றைச் சிறுபொழுது என வழங்குவர். ஒவ்வொரு சிறுபொழுதும் நான்கு மணி நேரம் கொண்டது. எனவே , ஆறு சிறுபொழுதும் சேர்ந்து , இருபத்து நான்கு மணி நேரம் ஆகும்.

**சிறு பொழுதுக்குரிய நேரம்**

1. வைகறை - இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை
2. காலை - காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை
3. நண்பகல் - முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை
4. எற்பாடு - பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை
5. மாலை - மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
6. யாமம் - இரவு 10 மணி முதல் நள்ளிரவு 2 மணி வரை

('எற்பாடு' என்பது எல்-படு நேரம்; அதாவது சூரியன் மறையும் நேரம். 'எல்' என்பதற்குச் சூரியன் என்பது பொருள்).

**ஐந்திணைகளுக்கு உரிய பொழுதுகள்**

| திணைகள் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனிற்காலம், முதுவேனிற்காலம், பின்பனிக்காலம் | நண்பகல் |

**கருப்பொருட்கள்**

ஒவ்வொரு நிலத்தையும் சார்ந்து - அங்கு வாழும் உயிரினங்கள் , பொருள்கள் யாவும் கருப்பொருள்கள் எனப்பட்டன. இலக்கண நூல்களில் 13 வகையான கருப்பொருள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை , தெய்வம், மக்கள், ஊர், நீர், மரம், மலர், உணவு, பறவை, விலங்கு, பறை, யாழ், பண், தொழில் ஆகியனவாகும்.

| | **குறிஞ்சி** | **முல்லை** | **மருதம்** | **நெய்தல்** | **பாலை** |
|---|---|---|---|---|---|
| **தெய்வ ம்** | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| **மக்கள்** | குறவன், குறத்தி | இடையர், இடைச்சியர் | உழவர், உழத்தியர் | பரதர், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| **உணவு** | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணல் | மீன், உப்பு விற்றுப் பெற்றவை | வழிப்பறி செய்தன, சூறை கொண்டன |
| **ஊர்** | சிறுகுடி | பாடி, சேரி | ஊர்கள் | பட்டினம், பாக்கம் | பறந்தலை, குறும்பு |
| **நீர்** | சுனை நீர் | காட்டாறு | ஆறு, பொய்கை | மணல்கிணறு, உவர்க்குழிநீர் | கூவல், வற்றிய சுனை |
| **மரம்** | வேங்கை, அகில் | கொன்றை, குருந்தம் | வஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இருப்பை, பாலை |
| **பூ** | குறிஞ்சி | முல்லை, | கழுநீர், | நெய்தல், | மரா, குரா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பிடவு | தாமரை | தாழை | |
| **பறவை** | கிளி, மயில் | காட்டுக்கோழி, சேவல் | நீர்க்கோழி, நாரை | அன்னம், கடற்காகம் | கழுகு, பருந்து |
| **விலங்கு** | புலி, கரடி | பசு, முயல் | எருமை, நீர்நாய் | உப்பு சுமக்கும் எருது, சுறா | வலிவற்ற யானை, புலி |
| **பறை** | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழவு | மீன்கோட்பறை | நிரைகோட்பறை |
| **யாழ்** | குறிஞ்சியாழ் | முல்லையாழ் | மருதயாழ் | நெய்தல்யாழ் | பாலையாழ் |
| **பண்** | குறிஞ்சிப்ண் | சாதாரிப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| **தொழில்** | தினை அகழ்தல், வெறியாடல் | நிரை மேய்த்தல், களை விடுதல் | நெல்லரில் களை பறித்தல் | மீன் பிடித்தல் , உப்பு விளைத்தல் | வழிப்பறி, சூறையாடல் |

**உரிப்பொருள்**

ஒவ்வொரு நிலத்து மக்களும் நிகழ்த்தும் 'ஒழுக்கம்' உரிப்பொருள் எனப்படும்.

| | |
|---|---|
| குறிஞ்சி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

## புறப்பொருள்

பிறரிடம் கூறத்தக்க அறம் , பொருள், வீடு பற்றியும் கல்வி , வீரம், கொடை, புகழ் பற்றியும் கூறுவது புறப்பொருள் ஆகும். புறத் திணைகள் பன்னிரண்டு வகைப்படும். அவையாவன , வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பனவாகும்.

1. வெட்சித் திணை - பகை நாட்டினர் பசுக் கூட்டங்களைக் கவர்ந்த வருதல்.
2. கரந்தைத் திணை - பசுக்களை மீட்டு வருதல்.
3. வஞ்சித் திணை - பகைவர் நாட்டின்மீது படை எடுத்தல்.
4. காஞ்சித் திணை - படை எடுத்து வந்தவர்களை எதிர்நின்று தடுத்தல்
5. உழிஞைத் திணை - பகை நாட்டினர் மதிலை வளைத்துப் போர் புரிதல்
6. நொச்சித் திணை - பகைவர்கள், மதிலைக் கைப்பற்ற விடாமல் காத்தல்
7. தும்பைத் திணை - இரு நாட்டு வீரர்களும் எதிர்நின்று போரிடல்
8. வாகைத் திணை - பகைவரை வென்றவர் வெற்றி விழாக் கொண்டாடுதல்
9. பாடாண் திணை - ஒருவருடைய புகழ், கல்வி, கொடை முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதல்
10. பொதுவியல் திணை - மேற்கூறிய புறத்திணைகளுக்குப் பொதுவாய் அமைந்தனவும் அவற்றுள் அடங்காதவும் பற்றிக் கூறுதல்.
11. கைக்கிளை - ஒருதலைக் காதல், ஆண், பெண் இருவருள் ஒருவரிடம் மட்டும் தோன்றும் அன்பு/காதல்
12. பெருந்திணை - பொருந்தாக் காதல் - ஒத்த வயது உடைய தலைவன் - தலைவி அல்லாதாரிடம் தோன்றும் காதல்.

## I. பொருள் இலக்கணம்

1. அகப்பொருள் - விளக்கம்: எழுதிணைகளின் விளக்கம்

2. புறப் பொருள் - விளக்கம்: வெட்சி முதல் பாடாண் திணை (விளக்கம் மட்டும்)

## II. ஓரெழுத்து ஒருமொழிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆ | - | பசு, ஆன்மா |
| 2 | ஈ | - | ஈக்கள், கொடு |

| | | | |
|---|---|---|---|
| 3 | ஊ | - | இறைச்சி, மாமிசம் |
| 4 | ஏ | - | அம்பு |
| 5 | ஐ | - | தலைவன், அழகு, தந்தை, சிவன், வியப்பு |
| 6 | ஓ | - | வினா, மதகு |
| 7 | கா | - | சோலை, காத்தல், வலிமை |
| 8 | கூ | - | பூமி, கூவுதல் |
| 9 | கோ | - | மன்னன், பசு |
| 10 | தா | - | கொடு, கேட்பது |
| 11 | தீ | - | நெருப்பு |
| 12 | து | - | எரித்தல், நடத்தல், பரிவு, உண் |
| 13 | தூ | - | வெண்மை, தூய்மை |
| 14 | தே | - | கடவுள், அருள், நாயகன் |
| 15 | தை | - | மாதம், தைத்திங்கள் |
| 16 | நா | - | நாக்கு |
| 17 | நீ | - | நின்னை (உன்னை) |
| 18 | நே | - | அன்பு, நேயம் |
| 19 | நை | - | வருந்து, நைதல் |
| 20 | நொ | - | துன்பம், நோய் |
| 21 | பா | | பாட்டு, அழகு, நிழல் |
| 22 | பீ | | மலம் |
| 23 | பூ | | மலர் |
| 24 | மா | | பெரிய, விலங்கு, மேன்மை |
| 25 | வீ | | மலர், விரும்புதல் |

### III. மரபுச் சொற்கள்

1. ஒலி மரபு - யானை - பிளிறும், சிங்கம் -முழங்கும், குரங்கு அலப்பும், வண்டு - முரலும், பசு கதறும், பூனை - சீறும்.

2. வினைமரபு - பூ பறித்தாள்,ஆடை நெய்தார். மாத்திரை - விழுங்கினான், பால் - பருகினான், தண்ணீர் - குடித்தான், சோறு உண்டான்.

3. இருப்பிடமரபு - கறையான் - புற்று, மாட்டு - தொழுவம், கோழி பண்ணை, குருவி - கூடு. சிலந்தி - வலை, ஆடு - பட்டி.

4. தாவர உறுப்பு - மரபு வேப்பந்தழை, வாழைத் தண்டு, முருங்கைக் கீரை,

தென்னங் - கீற்று, கீரைத் - தண்டு, நெல் தாள்.

5. இளமைப்பெயர் -அணில் - பிள்ளை, கிளி - குஞ்சு, மரபு நாய் - குட்டி, புலி -பறழ், சிங்கம் - குருளை, யானை கன்று,

## IV. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுதல்:

### அ) ஆங்கிலச் சொற்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | ஃபேக் நியூஸ் | - | பொய்ச்செய்தி |
| 2 | இண்டஸ்ட்ரி | - | வாழ்த்தொப்பம் |
| 3 | ஆட்டோகிராப் | - | தொழிலகம் |
| 4 | எடிட்டோரியல் | - | தலையங்கம் |
| 5 | சர்ஜரி | - | அறுவை சிகிச்சை |
| 6 | டெட்லைன் | - | குறித்த காலம் |
| 7 | பாஸ்போர்ட் | - | கடவுச்சீட்டு |
| 8 | புல்லட்டின் | - | சிறப்புச் செய்தி இதழ் |
| 9 | ஸ்நாக்ஸ் | - | சிற்றுணவு |
| 10 | ஸ்பீக்கர் | - | பேசுபவர் |

### ஆ) வடமொழிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | அதிபர் | - | தலைவர் |
| 2 | ஆராதனை | - | வழிபாடு |
| 3 | இங்கிதம் | - | இனிமை |
| 4 | ஈனஸ்வரம் | - | மெலிந்த ஓசை |
| 5 | உற்சாகம் | - | ஊக்கம் |
| 6 | ஐதீகம் | - | சடங்கு, நம்பிக்கை |
| 7 | கீர்த்தி | - | புகழ் |
| 8 | சபதம் | - | சூளுரை |
| 9 | திகில் | - | அதிர்ச்சி |
| 10 | ஜோதி | - | ஒளி |

### இ) உருதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | தபால் | - | அஞ்சல் |
| 2 | பட்டுவாடா | - | கணக்குத்தீர்ப்பு |
| 3 | மகால் | - | அரண்மனை |
| 4 | மௌசு | - | கவர்ச்சி |

| | | | |
|---|---|---|---|
| 5 | லத்தி | - | குறுந்தடி |
| 6 | வாபஸ் | - | திரும்பப் பெறுதல் |
| 7 | ஜமீன்தார் | - | நிலக்கிழார் |
| 8 | ஜல்தி | - | விரைவு |
| 9 | மாகாணம் | - | மாநிலம் |
| 10 | பைசல் | - | தீர்வு |

**வினாக்கள்**

1. அகப்பொருள் திணைகளை விளக்குக.
2. புறப்பொருள் திணைகளை விளக்குக.
3. வெட்சித், வஞ்சித்திணையைக் குறிப்பிடுக.
4. அன்பின் ஐந்திணையைக் கூறுக.
5. வாகை, பாடாண் திணையf; கூறுக.
6. ஓரெழுத்து ஒருமொழிச் சொற்கள் எவை? விளக்கம் தருக.
7. ஒலிமரபு - வினைமரபு சொற்கள் இரண்டினைத் தருக.
8. ஆட்டோகிராப். இண்டஸ்ட்ரி - தமிழ்ச்சொல் தருக.
9. இளமைப் பெயர்களைக் குறிப்பிடுக.
10. ஏதேனுனம இரு தாவர உறுப்பு மரபுப் பெயர்களைக் குறிப்பிடுக.

## அலகு - 3

## வாழ்வியல் அறம்

### 1. சீவ காருணியம்

**(மறைமலையடிகள்)**

**"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு**

**கல்லாமற் கைதவரோ டிணங்காமல் கனவினும் பொய்"**

"சீவ காருணியம்" என்பது இரண்டு சொற்களால் ஆகிய ஒரு சொற்றொடராகும். இதனைப் பிரித்தால் சீவ என்றம் காருணியம் என்றும் இரண்டு சொற்கள் பெறப்படும். சீவர்கள் என்பன யாவையோ வென்றால், தொட்டால் அறியும் ஓர் அறிவு மட்டும் உடைய புல் மரஞ் செடி கொடி முதலியனவுந், தொட்டால் அறிவதொடு நாவினாற் சுவைக்குஞ் சுவையுணர்வும் உடைய ஈரறிவு உயிர்களான நத்தை, சங்கு, கிளிஞ்சல் முதலியனவுந், தொட்டறிந்து நாவாற் சுவைத்தலொடு மூக்கால் நாற்றத்தையுணரும் மூன்றறிவுயிர்களான கரையான், எறும்பு, ஈசல் முதலியனவுந், தொடுதலுஞ் சுவைத்தலும் முகருதலும் என்னும் உணர்வகளொடு கண்ணாற்காணும் அறிவுமுடைய நான்கறிவுயிர்களான நண்டுந்தும்பியும் வண்டுந் தேனீயும் முதலியனவுந், தொடுதல் சுவைத்தல் முகருதல் காணல் என்னும் நான்கு உணர்வுகளொடு காதாற் கேட்டுணரும் அறிவும் உடைய ஐந்தறிவுயிர்களான விலங்குகள், பறவைகள், காட்டு மிராண்டிகள் முதலியனவுந், தொடுதல் சுவைத்தல் முகருதல் காண்டல் கேட்டல் என்னும் ஐந்தறிவுகளொடு நல்லதிது தீயதிது என்று பகுத்துணரும், மனவுணர்வு உடைய அற்றிவுயிர்ளான மக்களும் என்று சொல்லப்பட்ட இந்த ஆறு வகையில் அடங்கிய உயிர்கள் அத்தனையுஞ் சீவாகளென்றே சொல்லப்படும்.

இனிக், காருணியம் என்பது அருள் அல்லது இரக்கம் என்னும் பொருளைத் தருவதாகும். இவ்விரக்கம் என்னும் உயர்ந்த குணமானது, இது நல்லது இது தீயது

என்றும் பகுத்துக் காணும் உணாச்சிவாய்ந்த மக்களிடத்து மட்டுங் காணப்படுகின்றதேயல்லாமல், மக்கள் அல்லாத மற்ற ஐந்து வகைப்பட்ட உயிர்களிடத்துங் காணப்படவில்லை. இவ்வைந்து வகை உயர்களிற் சில பசியெடுத்த காலங்களிலெல்லாந் தம்மினுங் கீழ்ப்பட்ட உயிர்களைச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்று அவற்றின் உடம்பைச் சிதைத்துத் தின்னுகின்றன. ஆதலால், இரக்க குணம் மக்கள் அல்லாத மற்றைய உயிர்களிடத்தில் இல்லை என்பது இனிது விளங்குகின்றதன்றோ?

இனி, இவ்விரக்க குணமென்பது எந்த உயிர்களிடத்து இல்லையோ அந்த உயிர்கள் எல்லாங் கொடிய வன்னெஞ்சமுங் கொலைத் தொழிலும் உடையனவாய் இருக்கின்றன. இரக்க குணம் எந்த உயிர்களிடத்த இருக்கின்றதோ அந்த உயிர்கள் இனிய மென்னெஞ்சமும் எல்லாரும் விரும்பத்தக்க இனிய செய்கையும் உடையனவாய் இருக்கின்றன. இந்தக் காரணத்தினாலேதான் இரக்க குணம் உள்ள உயிர்களின் தன்மை தெய்வத்தன்மை என்றும் வழங்கி வருகின்றோம். இனி மக்களின்றன்மையோ இவ்விரண்டிற்கும் நடுவில் நிற்கும் இயல்பு வாய்ந்ததாய் இருக்கின்றது. பசிநோய் தீரும் பொருட்டுக் கொடிய வன்னெஞ்சம் உடையராய்ப் பிற உயிர்களிடத்துச் சிறிதும் இரக்கம் இன்றி அவற்றைக் கொலை செயது அவற்றின் ஊனைத் தின்பவர்கள் விலங்கின்றன்மையை அடைகின்றார்கள். தமக்குக் கடும்பசி உண்டான காலத்துந் தம்முயிர்போல் மன்னுயிரை எண்ணி அவற்றிற்குச் சிறிதுந் தீங்கு செய்யாமல் தமக்குக் கிடைத்த காய் கனி கீரை கிழங்கு பயறு முதலியவற்றை உணவாகக் கொண்டு எல்லாவுயிர்களிடத்தும் இரக்கம் வைத்து ஒழுகுபவர்கள் தெய்வத் தன்மையுடையராகின்றார்கள் எல்லா உயிர்களிடத்தும் இரக்க மு௯டயவரான ஆண்டவனது பேரின்பத்தை நாம் நுகர வேண்டுமாயின் அவர்போல் அளவிறந்த இரக்க குணமாகிய தெய்வத் தன்மையை அடைதல் வேண்டும். எவர் மென்மையான இனிய இரக்க குணம் உடையவராகின்றார்களோ அவர்களுக்கே எல்லாம் வல்ல கடவுள் அருள் புரிவான் இது,

**"கல்லால் எறிந்துங் கைவில்லால் அடித்துங் கனி மதுரச்**

**சொல்லாற்றுதித்தும்நற் பச்சிலை தூவி யுந்தொண்டரினம்"**

என்று அருட்பெருஞ் செல்வரான தாயுமான அடிகள் கூறியவாற்றானுந், திருவருட்செல்வரான் இராமலிங்க அடிகள்,

**"வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்**

**மனங்கலந்து மதிகலந்து வயங்காநின்ற"**

என்னும் அருட்பாவினாற் கொலைக்குணமில்லாதவர்களின் உடம்பு உயிரெல்லாம் இறைவன் கலந்து நின்று பொலிகுவான்எ ன்ற கூறியவாற்றானும் நன்கு விளங்கும்.

இன்னும் பேரிரக்க குணமான கொல்லாமை உடையவர்களுக்கு எல்லா நற்குணங்களுந் தாமே வந்து பொருந்துமெனவும், அவ்விரக்க குணம் இல்லாதவர்களுக்கு எல்லாத் தீய குணங்களும் மேன்மேற் கிளைத்தெழுந்து அவர்களைத் தனி விலங்குகளாக்கி விடுமெனவும் இனிது விளக்கும்பொருட்டே நம் தாயுமான அடிகள்,

**"கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்"**

என்றும்,

**"கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர்மற்**

**றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"**

என்றும் அருளிச் செய்தனர்களாயிற் கொல்லா விரதமாகிய தெய்வத் தன்மையின் மேன்மையையுங் கொலைக்குணமாகிய விலங்கின்றன்மையின் தாழ்மையையும் யாம்விரித்துச் சொல்லுதலும் வேண்டுமோ?

இங்ஙனமே இரக்கமற்ற கொடிய கொலைத் தொழிலையும் அதனால் வரும் புலால் உண்ணுதலையும் நாம் பழகி வருவோமாயின் இரக்கமற்ற கொடிய விலங்குளாகிய புலி கரடி சிங்கம் முதலிய விலங்குகளின் இயல்பை நாம் அடைவதொடு நம்மைச் சேர்ந்தவர்களையும் அக்கொடிய தன்மையை

அடையும்படி செய்துவிடுவோம். ஒரு குடும்பத்தில் ஒருவர் புலால் தின்ற பழகுவராயின் அவரோடு சேர்ந்த அக்குடும்பத்தாரும் நண்பர்களும் அவரைப்போற் புலால்தின்று கெட்டுப்போவர். இது பற்றியே,

**"கொலையிலான் உதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகும்**

**கொலையுளான் உதவும் அன்னங் கூறிற் பேர் விடமதாகும்"**

என்னும் திருமொழியும் எழுந்தது.

இனி, அன்புருவாயும் அருளுருவாயும் இரக்கவுருவாயும் விளங்கா நின்ற நம் ஆண்டவன் தன்போல் அன்பும் அருளும் இரக்கமும் நிரம்பியிருக்கின்ற உயிர்களிடத்து மட்டுமே குடிகொண்டு தோன்றுவான். இரக்கமில்லாமற் பல உயிர்களையும் கொன்று தின்று வாழும் மக்களிடத்து அன்பு வைத்து அருள்புரியான் என்பதும் வெளிப்படையாகும்.

நாம் நம் தாயின் கருப்பையிலே தங்கியிருந்த காலத்தும், நிலத்திற் பிறந்து வளர்ந்து வருகின்ற காலத்தும் நமக்கு வேண்டுவனவற்றை நாம் கேளாமலே தானே அறிந்து கொடுக்கும் ஆற்றலும், நம்மாற் சிறிதுஞ் செய்யலாகாத உடம்பின் அமைப்புகளையெல்லாம் ஒவ்வொரு நொடியுந் தவறாமல் இழைத்துவரும் ஐயன் அருள்வலிமையும் இங்கு என்னென்று எழுதுவோம்!

இத்தனை இரக்கமுள்ள எல்லாம்வல்ல கடவுளாகிய முதற்பெருந் தந்தைக்கு அருமைப் புதல்வர்களாம் உரிமை வாய்ந்த எல்லா உயிர்களுந் தம்முள் அன்பும் இரக்கமும் பூண்டு நடத்தல் இன்றியமையாத கடமையாகும். இதனை நினையாமல் மக்களான நாம் நம்மினுந் தாழ்ந்த உயிர்களகை கொலை செய்து அவற்றின் ஊனைத் தின்றால் அதனைக் கண்டு நம் அப்பன் சினங்கொண்டு நம்மைக் கொடுந் துன்பத்துக்கு உள்ளாக்குவா னென்பது திண்ணம் இது குறித்தே,

**"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**

**வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்"**

என்றும்,

**“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**

**எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்”**

என்றுந் திருமூல நாயனார் திருவாய் மலர்ந்தருளினார். நாம் இப்பிறப்பிற் புலால் தின்றால் மறு பிறப்பிற்றானே ஏதோ கடவுள் ஒறுக்கப் போகின்றார் என்று எண்ணி விடாதீர்கள்! புலால் உண்பதனால் இந்தப் பிறவியிலேயே கோமாரி, அம்மை, க்க்கற்கழிச்சல், வயிற்றுவலி முதலிய நோய்களையும், வறுமை, மனக்கவலை, சண்டை, கிறுக்குப் பிடித்தல் முதலான பொல்லாங்குகளையும் ஏவி நம்மை நம் ஆண்டவன் துன்பப்படுத்தி ஒறுப்பான் என்பதற்கு நம் ஆசிரியரான சுந்தரமூர்த்தி நாயனார்ருளிச் செய்த,

**“குற்றொருவரைக் கூறைகொண்டு**

**கொலைகள்சூழ்ந்த களவெலாஞ்”**

என்னும் திருமொழியே சான்றோகும். இன்னுங் கொல்லாதவர்களைக் கொல்லச் சொல்லியும், புலால் தின்னாதவர்களைத் தின்னச் சொல்லியுங் கட்டாயப்படுத்தினவர்களெல்லாரும் நிரயத்திற் சேர்வார்களேன்று காசிகாண்டம் கூறுகின்றது.

**“எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்**

**தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே”**

என்றபடி எல்லாவுயிர்களையும் நம்முயிர்போல் எண்ணி இரக்கத்தோடு நாம் நடக்க வேண்டும். நம் உடம்பில் ஒரு முள்ளுக் குத்தினாலும் ஒரு கத்தி வெட்டுப்பட்டாலும் நாம் எவ்வளவு துன்பத்தை அடைகின்றோம். நம்மை ஒருவர் வெட்ட வந்தால் தப்பிப் பிழைக்க ஓடுகின்றோமல்லேமோ? இங்ஙனமே ஆடு, மாடு, கோழி, கொக்கு, பன்றி, மீன் முதலான உயிர்களெல்லாந் தம்மை ஒருவர் கொல்ல வரும்போது எவ்வளவு நடுக்கத்தோடு அஞ்சி ஓடுகின்றன! ஐயோ! அவற்றில் பல எவ்வளவு துன்பத்தோடு வாய்விட்டுக் கதறி அழுகின்றன! அவற்றின் கழுத்தை இரக்கமில்லாக் கொடியோர் கத்தி கொண்டறுக்க நினைத்து பார்த்தால் நெஞ்சம் நீராய் உருகவில்லையா? ஐயோ, பாவம்! வாயற்ற அவ்வேழை

உயிர்களைக் கொல்லவுங் கொன்றதைத் தின்னவும் பெண்பாலார் அஞ்சிக் கைவிட்டால் ஆடவர்கள் புலால் தின்பது ஒழியுமன்றோ? நெடுநாளாக உயிர்களைக் கொன்று தின்று வந்த பாவச் செய்கையை நினைந்து இரக்கமுற்று நம் இறைவனாகிய தந்தையிடஞ் சொல்லி மன்னிப்புக் கேட்டு எந்த உயிர்க்குந் தீங்கு செய்யாமல் இரக்கம் பூண்டு ஒழுகுதலே மக்களுடைய கடமையாம்.

**"கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க**

**எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே"**

என்னுந் தாயுமான அடிகளின் திருமொழிப்படி கொல்லா அறத்தின் மேன்மையை எங்கும் பரவச் செய்து அன்பும் இரக்கமும் உடையவர்களாய்த் தெய்வத்தன்மையை நாம் அடைந்து கடவுளுடைய திருவருளைப் பெறுதல் வேண்டும்.

## 2. தமிழ்நாட்டில் தாய்வழிச் சமுதாயம்

**- நா.வானமாமலை**

பண்டைத் தமிழ் நூல்களில் பல அரசர் சிற்றரசர்களைப் பற்றிப் படிக்கிறோம். சிறப்புப் பெற்ற அவர்களெல்லாம் ஆண்கள். அவர்கள் தாய்முறை ஆண் வழியாகவே காணப்படுகிறது. தெய்வங்களில் ஏற்றமுடைய அனைத்தும் ஆண் வழியாகவே காணப்படுகின்றன. குறிஞ்சித் தெய்வமான சேயோன் (முருகன்), முல்லைத் தெய்வமான மாயோன் (திருமால்), நெய்தல் தெய்வமான வருணன், மருதத் தெய்வமான இந்திரன் ஆகிய அனைவரும் ஆண்பால் தெய்வங்களே காவியங்களில் ஆண்களே தலைமை பெறுகிறார்கள். மணிமேகலை கதைத் தலைவியாக உருவாக்கப்பட்டிருப்பினும் அவளது ஆசிரியர் அறவணர் என்ற ஆண் என்பது சிந்தனைக்குரியது. சீவக சிந்தாமணி பெருங்கதை ஆகிய காவியங்களில் ஆண் தலைமை பெறுவதும், பல பெண்கள் அவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனது வெற்றிக்கு உதவுவதும் பெண்களுக்கு ஆணுக்குத் தாழ்ந்த இடத்தைத்தான் காவியங்கள் அளிக்கின்றன என்பது தெளிவாகிறது.

புறநானூற்றில் பெரும்பாலான செய்யுட்கள், ஆண்களின் வெற்றிச் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் போற்றுகின்றன. பெண் கவிகள் சிலர் பாடிய செய்யுட்கள் இத்தொகை நூலிற் காணப்பட்ட போதிலும் அவை ஆண்களுடைய வீரத்தையும், கொடையையும் பாராட்டுவனவாகவே உள்ளன. ஒன்றிரண்டு செய்யுட்கள் பெண்களுடைய துயரங்களை சித்தரித்த போதிலும் அவை ஆண்களைப் பிரித்தபோது பெண்கள் படும் வேதனையாக இருக்கிறது.

இவை எல்லாவற்றையும் சான்றாகக் காட்டி தமிழ்நாட்டில் எப்பொழுதும் தந்தை வழிச் சமுதாயமே இருந்து வந்திருக்கிற தென்றும், ஆண் ஆதிக்கச் சமுதாயமே எப்பொழுதும் நிலைகொண்டிருந்தது என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வருகிறார்கள். அவர்கள் முடிவு சரிதானா? மேற்கூறிய சான்றுகளை மட்டும் தொகுத்து முடிவு கண்டால் அவர்கள் முடிவு சரியே. ஆனால் தாய்வழிச் சமூகம் இலக்கிய காலத்திற்கு முந்தியது. சரித்திர காலத்திற்கு முந்தியது. மிகவும் பழமையானது என்பதைக் கவனத்தில் கொண்டால் இலக்கியச் சான்றுகளிலிருந்து மட்டும் மேற்கண்ட முடிவுக்கு வருவது தவறாக முடியும். தற்போது இருக்கும் சமூகத்தில் ஆண் ஆதிக்கத்துக்கே சான்றுகள் அதிகமாக உள்ளன. சமீபகால முறைக்குச் சான்றுகள் அதிகம் அகப்படுவது இயற்கையே. பெண் ஆதிக்கச் சமுதாயம் மறைந்துவிட்டது. மறைந்துவிட்ட சமூக முறைகளைப் பற்றிய சான்றுகள் தேடிப்பித்தால்தான் அகப்படும். அதுவும் சிற்சில எச்சமிச்சங்களே கிடைக்கும் அவற்றிலிருந்து அச்சமுதயாத்தை நாம் புனரமைத்து வருணிக்க வேண்டும்.

இத்தகைய எச்சமிச்சமான சான்றுகள் இன்று அகப்படுகின்றனவா? என்ற தவமும் தமிழ்நாட்டில் பெண் ஆதிக்கச் சமுதாயம் இருந்ததா? இருந்திருந்தால் எந்தச் சமூக அடிப்படையின் மீது மேற்கோப்பாக அது இங்கிற்று என்பதையும் நாம் அறிந்துகொள்ள முயலுவோம்.

மனிதன் தனது உணவை வேட்டையாடிப் பெற்றான் என்பது சமூக நூல் ஆராய்ச்சியாளர் முடிவு. வேட்டையாடி உணவு பெற்ற மனிதரை “வில்லேருழவர்“ என்று பண்டை நூல்கள் அழைக்கின்றன. அக்காலத்தில் வேட்டைத் தொழிலில்

சிறந்தவர்களுக்கு ஏற்றம் இருந்தது காரணம் சமூகத்திற்குத் தேவையான உணவை அவர்களே தேடி அளித்தார்கள் உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் மனிதன் வேலை செய்தான் வேல், வேட்டைக் கருவி ஆயிற்று. வேலைக் குறி பார்த்துத் திறமையாக எறிபவன் சிறப்பாக வேலன் என்று அழைக்கப்பட்டான். உணவு தேடுவதில் அவனுக்கிருந்த முக்கியப் பங்கு குறித்து அவன் சிறப்புப் பெற்றான். வேலன் சக்தி மிகுந்தவன் என்று கருதப்பட்டான். அவனை வேடர்கள் போற்றினார்கள். தங்கள் வாழ்க்கையில் தோன்றும் சங்கடங்களைப் போக்க அவனை நாடினார்கள். மற்றவரைவிட அவன் அறிவு மிகுந்தவன் என்ற நம்பினர். வர வர இவனுக்குச் செல்வாக்கு மிகுந்தது. நாட்பட அவன் தெய்வமானான் வேடர்கள் உணவு தேட வேறு வழி தேடிக்கொண்டபோதும் வேலனை மறக்கவில்லை. உணவு தந்த வேலன் உணவு தராதபோதும் செழிப்பின் சின்னமாகிவிட்டான். அவனை அவர்கள் கற்பனையில் தங்களைவிட சக்தி மிகுந்தவனாகக் கருதித் தெய்வமாக வழிபட்டனர்.

மனிதன் வேட்டையாடி உணவு தேடிய காலத்தில் ஆண்களே வேட்டைத் தொழில் செய்தனர். அவர்களே சமுதாயத்தில் ஆதிக்கம் வகித்தனர். அவர்கள் செடி, கொடிகளைக் கண்டனர். அவற்றின் இனப்பெருக்கத்தை அனுபவத்தில் கண்டனர். இயற்கையைப் பின்பற்றித் தாங்களும் கொட்டைகளைப் பூமியில் விதைத்தனர். விதைகளை நிலத்தில் ஊன்றினர். கிழங்குகளை நிலத்தை அகழ்ந்து புதைத்து மூடினர். அவை வளர்ச்சியுற்றுப் பலனளித்தன. இவ்வாறு பண்டைப் பயிர்த் தொழில் தோன்றிற்று. பயிர்த் தொழிலிலிருந்து, வேட்டைத் தொழிலிலிருந்து கிடைப்பதைவிட அதிகமாக உணவு கிடைத்தது முதலில் பெண்களே பயிர்த்தொழிலில் ஈடுபட்டனர். அவர்களே பயிர்த்தொழிலை கண்டுபிடித்தனர். பயிர்த்தொழில் செய்ய ஆள்பவன் வேண்டும். அதற்குரிய மக்களை ஈன்றதும், அவர்களுக்குப் பயிர்த் தொழிலைக் கற்றுக்கொடுத்ததும் பெண்களே. ஆண்கள் வேட்டைக்காக நெடுந்தூரம் சுற்றி அலைவார்கள். ஆகவே பயிர்த்தொழிலின் தொடக்கச் காலத்தில் ஆண்களுக்கு அதில் அதிகப்பங்கு இருந்ததில்லை. குடும்ப வளர்ப்பிலும், அதிகப் பங்கு இருந்ததில்லை. பெண்களே புராதனப் பண்பாட்டை உருவாக்குவதில் முக்கியப் பங்கு பெற்றனர். வேட்டை

முக்கியத் தொழிலாக இருந்தது மாறி பயிர்த் தொழில் முக்கியத் தொழிலாயிற்று. பயிர்த் தொழிலில் பங்கு பெற்ற பெண்களும் ஆண்களைவிட உயர்வு பெற்றனர். தொல்குடிகளைப் பற்றி ஆராய்ந்து அறிஞர் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் உண்மை இது.

இந்நிலையில் மனிதனது கருத்துக்களும் மாறின. பெண் ஆதிக்கச் சமுதாயம் தோன்றி வளரும் சரித்திர முற்காலத்தில் பெண் தெய்வங்கள் தோன்றின. பயிர்த்தொழில் செழிப்பைக் கொடுத்தது. ஆகவே செழிப்பைக் குறிக்கும் தெய்வங்கள் பல நாடுகளிலும், பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. சீதேவி, கிரேக்க தெய்வங்களான சைபீல்டெடோன, டெல்பி முதலியவை பெண் தெய்வங்களே. செழிப்பை வேண்டி நடத்தப்படும் விரதங்களிலும், விழாக்களிலும், இன்றும் ஆண்களுக்குப் பங்கில்லை. உதாரணமாக பாவை நோன்பை நோக்குவோம். பாவைகள் பலவகைப்படும். அல்லிப்பாவை, கொல்லிப்பாவை, தெற்றிப் பாவை, மணற்பாவை, வண்டற்பாவை முதலியன நாடுவளம் கொழிக்க இவற்றைப் பெண்கள் பூசை செய்வார்கள். மழைவளம் சுரக்கவும், ஆற்று நீர் நிலத்தை விதையேற்கும் பருவாக்கவும், முளை வளரவும், பயிர்வளம் பல்கவும் பாவையை வாழ்த்துகிறார்கள். “திருப்பாவை“ இப்பாவை நோன்பை வருணிக்கிறது. இந்நோன்பிலே ஆண்களுக்கு இடமில்லை. பாவையை வணங்கி விழா கொண்டாடினால் வளம் சுரக்கும். பெண்மக்களுக்கு இன்பமும் சுரக்கும் என்று “திருப்பாவை“ கூறுகிறது. பாவைக்கு நோன்பு செய்தால் கண்ணன் பறை தருவான், அருள் தருவான் என்றும் “திருப்பாவை“ கூறுகிறது. இதிலே கூர்ந்து நோக்க வேண்டியது, கண்ணனுக்குப் பூசை இல்லை, விழாவும் இல்லை. பாவைக்குத்தான் பூசை, பாவை மணலாலும் வண்டலாலும் கிழங்கினாலும் செய்யப்பட்டது. பாவை நிலத்திற்கு அடையானம், நிலமோ பெண், பெண்ணே செழிப்பைத் தருபவள், அவளை வணங்கினால் வளம் அருளுவான். இங்கே கண்ணன் பார்த்து நிற்பவளே, அவனுக்கு முக்கியத்துவம் இல்லை. ஆண்டாளுடைய காலத்துக்கு முன் தமிழ்நாட்டுப் பெண்கள் பாவை நோன்பு கொண்டாடியிருக்க வேண்டும். அப்பொழுது கண்ணனுக்கு அதில் சற்றும் இடமிருந்திராது என்பது நிச்சயம். பாவை நோன்பு பாவைக்கு மட்டுமே, அதில் பங்கு பெறுபவர் பெண்கள் மட்டுமே

ஆண்டாள் காலத்தில் மிகப் புராதன காலத்தில் நடந்த விழாவொன்றின் மிச்சங்கள் பாவை நோன்பில் எஞ்சிக் காணப்பட்டன.

பண்டைத் தமிழ் நூல்களில் பெண் தெய்வம் ஒன்றின் பெயர் காணப்படுகிறது. அவள் பலவாறு அழைக்கப்படுகிறாள். "முதியோள்" என்பது அவளது பெயர்களுள் ஒன்று எல்லோரிலும் பெரியவள் என்ற அதன் பொருள் அதே பொருளில் அவள் "பழையோள்" என்றும் அழைக்கப்பட்டாள். இவள் யாரால் வணங்கப்பட்டாள்? அதற்கு அவளுடைய மற்றொரு பெயர் புதிலளிக்கிறது. பரிபாடல் பதிகத்தில் அவள் "காடுகாள்" என்று அழைக்கப்படுகிறாள். "காடுகிழாள்" என்று மறுபெயரும் அவளுக்கு உண்டு. குறிஞ்சி நில மக்கள் வேட்டைத் தொழிலிலிருந்து புராதனப் பயிர்த்தொழிலுக்குத் திரும்பிய காலத்தில் புன்புலப் பயிர் செய்யத் தொடங்கினார்கள். அக்காலத்தில் பெண்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கினார்கள். ஆகவே காட்டில் பெண்கள் பயிர் செய்யத் தொடங்கிய காலத்தல் காடு கிழாளும் தோன்றினாள்.

அதற்கு முனபே, சேயோன் (வேலன்), கடவுளாகி விட்டானல்லவா? அவனுடைய சிறப்பு ஆண் ஆதிக்கத்தை யல்லவா குறிக்கிறது? பெண் ஆதிக்கச் சமுதாயம் அவனுக்கும் ஓர் இடம் கொடுக்க வேண்டும் ஆகவே அவனைக் காடு கிழாளின் மகனாக ஏற்றுக்கொண்டது. அவன் வீரன், ஆகவே அவளையும் வீரமங்கையாக்கியது. வீரகத் தொழிலில் வெற்றி பெறுவோருக்கு அவள் கொற்றவை ஆனாள் அவனும் கொற்றவைச் சிறுவன் ஆனான். பிற்காலத்தில் வேட்டைத் தொழிலை விட்டு, ஆண்கள் ஏர் உழவின் மூலம், பயிர் தொழிலில் முக்கிய பங்கு பெறத் தொடங்கியபின், மறுபடியும் வேலன் தாய்க் கடவுட் சேய் ஆகிவிட்டான். பெண்ணாதிக்கச் சமுதாயத்தில் தாய்வழி உறவு பெருமையாகச் சொல்லப்படுகிறது. ஆணாதிக்கச் சமுதாயத்தில், தந்தை வழி உறவு பெருமையாகச் சொல்லப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் கொற்றவை வழிப்பாட்டு முறை சொல்லப்படுகிறது. கொற்றவை கோயில் ஐயைக் கோட்டம் என அழைக்கப்படுகிறது. ஐயைக்கு விழாச் செய்ய வேண்டுமென நான் குறித்துச் சொல்லுபவள். அவள்

தெய்வமேறிகொண்டு ஆடுபவள். "பழங்கடனுற்ற முழங்குவாய்ச் சாலினி" என்று அவள் வருணிக்கப்படுகிறாள். ஐயைக்குப் வடிவமில்லை. ஒரு குமரிப் பெண்ணைக் கோலம் புனைந்து ஐயை என்ற பெயரிட்டுக் கலைமான் மீது ஏற்றி வணங்குகிறார்கள்.

**"இட்டுத் தலையெண்ணும் எயின ரல்லது**

**சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்**

**சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்**

**குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி"**

பறையும், குழலும், தூறைச் சின்னமும், முழங்கவுமட, மணியிரட்டவும், தெய்வமென எழுந்தருளுவித்து வேடர்கள் (எயினர்) வணங்குகின்றனர். பூசைக்குரிய சந்தனத்தையும், மலரையும், சாம்பிராணியையும் எயிற்றியர் (பெண்கள்) ஏந்தி வருகிறார்கள். தெய்வமும், பெண் தெய்வம், பூசனை முழுவதும் பெண்களின் உரிமை. இது பழங்காலப் பெண்ணாதிக்கத்தின் எச்சம், சிலப்பதிகார காலம் ஆணாதிக்கமும் தந்தை வழி முறையும் வளர்ச்சி பெற்றிருந்த காலம். அக்காலத்தில் தொன்மையின் எச்சம் இவ்வழிபாட்டில் காணப்படுகிறது.

பிற்காலத்தில் ஆணாதிக்கச் சமுதாய அடிப்படையில் தோன்றிய கடவுளர்களும், இத்தெய்வங்களின் உறவினர்களாக்கப்படுகின்றனர். இத்தெய்வத்தின் செயல்களேனப் புராணங்கள் வருணிக்கும் நிகழ்ச்சிகள், ஐயை மீது ஏற்றிக் கூறப்படுகின்றன. உதாரணமாக சிவனது தன்மைகள் சில ஐயை மீது ஏற்றிக் கூறப்பட்டுள்ளது.

**"மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி**

**நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்"**

கண்ணனது செயல் இவள் மீதேற்றிக் கூறப்படுகிறது.

**"மருதின் நடந்த நின் மாமன் செய் வஞ்ச**

**உருளும் சகடம் உதைத்தருள் செய்குவாய்"**

எப்படியாயினும் இப்பெண் தெய்வத்தின் கணவன் எவன் என்று கூறப்படவில்லை. இவளே குமரி, இவளே செழிப்பின் செல்வி, இவளது வழிபாட்டை நடத்தும் உரிமையுடையவர்கள் பெண்களே, ஆண்கள் எட்ட நின்று அருள் பெறுவதற்கே உரியவர்கள், பெண்ணாதிக்கச் சமுதாயத்தின் எஞ்சிய மரபென்று இதனை ஐயமறக் கொள்ளலாம்.

## எளிமை ஓர் அறம்

**- டாக்டர் மு. வரதராசன்**

கடவுள் நெறியில் ஆர்வம் மிகுந்தவர்கள் சிலர் கடுமையான துறவறத்தை மேற்கொண்டார்கள். குடும்பம், வீடு, செல்வம் முதலியவற்றை அடியோடு துறந்தார்கள். தமக்கென்று ஒரு பொருளும் இல்லாதவர்களாய்த் திரிந்தார்கள். பல நாடுகளில் இப்படிப்பட்ட உண்மைத் துறவிகள் இருந்திருக்கிறார்கள்.

அவர்களைப் போல் எல்லாரும் துறவிகள் ஆக வேண்டியதில்லை குடும்பத்தில் வாழ்ந்துகொண்டே, செல்வத்திற்கு இடையில் இருந்த படியே, பற்றுக் குறைந்தவர்களாக வாழ்ந்தால் போதும். அப்படி வாழ்ந்த சான்றோர் பலர் உண்டு. அவர்களும் துறவிகள் போன்ற சிறப்பு உடையவர்கள். அவர்களின் வாழ்வில் ஆடம்பரம் காண முடியாது. உடை முதலிய எல்லாவற்றிலும் எளிமையே போற்றுவார்கள். தம்மிடம் உள்ள செல்வத்தைப் பிறர்க்கு உதவியாகப் பயன்படுத்துவார்களே தவிர தம்முடைய பெருமைக்கும் புகழுக்கும் ஆடம்பரமாகச் செலவு செய்யமாட்டார்கள். அவர்கள் வீண் செலவு செய்யமாட்டார்கள். எதிலும் சிக்கனமாக இருப்பார்கள். அவ்வாறு எளிய வாழ்க்கை நடத்துவோர் துறவிகளுக்கு நிகரானவர்கள்.

எளிமையும் சிக்கனவும் தொடர்பு உள்ளவை ஆடம்பரமும் திருட்டு உறவு உடையவை. திருவள்ளுவர் துறவைப் பற்றித் தனியே ஓர் அதிகாரம் எழுதியிருக்கிறார். ஆனால் சிக்கனத்தைப் பற்றித் தனி அதிகாரம் எழுதவில்லை. கள்ளாமை (திருடாமை) என்ற அதிகாரத்தில் சில குறள் மணிகளில் சிக்கனத்தைப்

பற்றிக் கூறுகிறார். அளவறிந்து வாழ்க்கை நடத்தாதவர்களே திருட்டில் ஈடுபடுவார்கள் என்கிறார். ஆகவே, ஆடம்பரத்திற்கும் திருட்டுக்கும் உறவு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

காந்தியடிகள் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த சான்றோர் என்பது உலகறிந்த செய்தி, அவர் மிகச் சிக்கனமாக வாழ்ந்து அவ்வகையிலும் நமக்கு வழிகாட்டியாக விளங்கினார். எழுதித் தேய்ந்துபோன சிறு பென்சிலாக இருந்தாலும் அதை இழக்க மனம் வராமல், தேடுவாராம், சிறு காகிதத்தையும் வீணாக்காமல், அதில் கடிதங்களுக்கு மறுமொழி எழுதுவாராம். அவர் விரும்பியிருந்தால், ஆடம்பரமாக அரச வாழ்வு வாழந்திருக்கலாம். ஆனால் எளிமையை ஓர் அறமாகப் போற்றிய அவருடைய மனம் அதற்குச் சிறிதும் இடம்தரவில்லை. ஆடம்பரத்தைப் பாவம் என்ற கருதியவர் அவர்.

இன்சொல், ஈகை முதலியவற்றை எப்படி அறம் என்று போற்றுகிறோமோ, அப்படியே எளிமை சிக்கனம் என்பவற்றையும் அறநெறியாகப் போற்றவேண்டும். நம்மிடம் எப்படியோ செல்வம் சேர்ந்திருந்தாலும், அதை நமக்காகவே செலவு செய்துவிட உரிமை இல்லை. நம்முடைய அடிப்படைத் தேவைகளுக்கு மட்டுமே சிக்கனமாகச் செலவு செய்ய நமக்கு உரிமை உண்டு. பொருள் நம்மிடம் சேர்ந்திருப்பதாலேயே, அதை நமது என்று எண்ணிவிடக் கூடாது, அதற்கு நாம் அறக்காப்பாளர் - தர்மகர்த்தா - என்று எண்ணவேண்டும் என்பது காந்தியடிகளின் அறிவுரை. அவருடைய அறிவுரையைச் செல்வர் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், இன்று நாட்டில் புரட்சி மனப்பான்மை பெருகிப் பல இன்னல்கள் ஏற்பட்டுவருகின்றன.

நம்மைப்போல் இந்த நாட்டில் பிறந்தவர்கள் கோடிக்கணக்கானவர்கள். அடிப்படைத் தேவைகளே இல்லாமல் வாடுகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்காத வசதிகளை எல்லாம் நாம் தேடிக்கொள்வது பாவம் என்று உணரவேண்டும். அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தா புகழுடன் விளங்கிய காலத்தில், ஒரு செல்வரின் விருந்தினராகப் பெரிய மாளிகையில் உயர்ந்த கட்டிலில் வசதிகள் மிகுந்த நிலையில் இருந்த போது, இந்தியாவில் வறுமையால் வாடித் தவிக்கும்

கோடிக்கணக்கான ஏழைகளை நினைத்து கண்ணீர்விட்டுக் கலங்கினாராம். காந்தியடிகள் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்த காலத்தில், மானத்தை மறைப்பதற்குப் போதுமான ஆடை இல்லாமல் வாடும் ஏழைத் துணியே கிடைக்காதபோது, எனக்கு மட்டும் இவ்வளவு சட்டைகள் என்று மதுரையில் ஒருநாள் எண்ணிக் கலங்கினார். எண்ணி எண்ணி ஒரு முடிவுக்கு வந்தார். மேல் சட்டையைக் களைந்தார். நீண்ட கீழ்ப்பாய்ச்சையும் தலைப்பாகையையும் அகற்றினார். முழங்கால் வரையில் உடுத்து மேல் துண்டோடு வெளியே கிளம்பினார். வாழ்நாள் முழுவதும் அந்த எளிய கோலமே கண்டார். அவரைப்போல் அவ்வளவு பெரிய தியாகம் செய்யாவிட்டாலும், ஆடம்பரமாக வாழ்வதையாவதுவிட வேண்டும் அல்லவா? இந்த உலகம் கடவுளின் குடும்பம் என்ற உணர்வாவது அல்லது உலக சமுதாயத்தில் நான் ஒரு சிறு உறுப்பினன் என்ற உணர்வாவது உண்மையாக இருக்குமானால், மற்றவர்களுக்கு எட்டாத ஆடம்பர வாழ்க்கை நடத்த மனம் வருமா? உண்மையான கடவுள் நெறி உடையவனாக இருந்தாலும், உண்மையான சமுதாயக் கொள்கை உடையவனாக இருந்தாலும், ஒருவன் ஆடம்பரத்தை நாடவே மாட்டான்.

மற்றவர்கள் அடையமுடியாத வசதிகள் தமக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்வதில் நான் முந்தி நீ முந்தி என்று செல்வர்கள் போட்டி போடுவது தவறு. திருமணத்துக்கு, அவன் இவ்வளவு செலவு செய்தான், ஆகையால், நான் அதைவிட மிகுதியாகச் செலவிடப்போகிறேன் என்ற போட்டியிடுவது தவறு. அவளிடம் உள்ள நகைகளை விடப் புதுமையாக உயர்வாக என்னிடம் பல நகைகள் உள்ளன என்று போட்டியிட்டு நகைகளைக் காட்டிக்கொண்டு திரிவது தவறு. இந்தச் சடங்கு, அந்த விழா என்று சொல்லிப் பசி இல்லாதவர்களை எல்லாம் அழைத்துப் பெருவிருந்து நடத்துவதும் தவறு இவைகள் எல்லாம் தவறு என்பது மட்டும் அல்லாமல், கடவுள் நெறிக்கு மாறானவை என்ற உணரவேண்டும். பாவம் என்று உணர வேண்டும். ஏனென்றால், சிலர் இப்படி ஆடம்பரமாக வாழ்வதைப் பார்த்துப் பலர் ஏங்குகிறார்கள். பொருள்வளம் இல்லாத குடும்பங்களில் இதையும் அதையும் கேட்டு மனைவியர் கணவன்மார்க்குத் தொல்லை கொடுக்கிறார்கள். மாப்பிள்ளைகள் பெண் வீட்டுப் பெற்றோர்களுக்குத்

தொல்லை கொடுக்கிறார்கள். அதனால் இளம் பெண்கள் பலர்க்குத் திருமணம் செய்ய முடியாமல் பெற்றோர்கள் கலங்குகிறார்கள். ஏழைக் குடும்பங்களில் கவலைகள், குழப்பங்கள், தற்கொலைகள் முதலியவை நடக்கின்றன. இத்தனை ஏக்கங்களுக்கும், தொல்லைகளுக்கும், குழப்பங்களுக்கும் காரணம் யார்? ஆடம்பரமாக வாழந்து காட்டுகின்ற சிலர்தான். ஆகவே இந்தக் குறைகளை வளர்க்கின்ற பாவம் அவர்களுடையதே.

இப்போது ஆடம்பரமாக வாழ்கிறவர்களைப் பார்த்து ஏங்குவது குறைந்துவருகிறது. அவர்களைப் பார்த்துப் பழிப்பதும், பகைப்பதும் பெருகிவருகின்றன. அவர்களைப் போல் நம்மால் வாழமுடியவில்லையே என்ற எண்ணி உருகுவது குறைந்து, அவர்கள் இப்படி எல்லாம் வாழ விடலாமா என்ற குமிறிக் கொதிக்கும் மனப்பான்மை எழைகளிடம் வளர்ந்து வருகிறது. அதனால் சமுதாயத்தில் பல பூசல்களும் சில கொலைகளும் கூட நடக்கின்றன. அவற்றிற்கு எல்லாம் வித்திடுவது ஆடம்பர வாழ்க்கைதான்.

ஆகவே, எவ்வகையில் பார்த்தாலும் ஆடம்பர வாழ்வு கூடாது என்பது தெளிவாகிறது. எல்லாரும் ஆடம்பரமாக வாழும் இந்த உலகத்தில் நாம் மட்டும் எளிய வாழ்க்கை வாழ்வதால் பயன் இல்லையே என்ற எண்ணிச் சோர்வுகொள்ளக்கூடாது. இராமன் இலங்கையைக் கடக்க முயன்ற போது, ஓர் அணில் கடல் நீரில் நனைந்து மணலில் புரண்டு உடலில் ஒட்டிய அந்த மணலைக் கடலில் விட்டு மறுபடியும் மறுபடியும் அவ்வாறு செய்து இராமனுக்கு உதவ முயன்றதாகக் கூறுவார்கள், அது ஒரு கதைதான், அணில் அவ்வாறு உணர்ந்து செய்ய முடியாது. அது கற்பனையே ஆனால், அந்தக் கதையில் ஒரு நீதி உள்ளது. ஒவ்வொருவரும் அவரவரால் இயலும் அளவுக்கு நல்வழியில் தொண்டு செய்து உலகத்திற்கு உதவவேண்டும் என்பதே அந்த நீதி. ஆகவே, பொருளை உதவித் தருமம் செய்ய இயலாவிட்டாலும் எளிய வாழ்க்கை வாழ்ந்து ஆடம்பரத்தைக் குறைக்க முயலவேண்டும்.

நாம் மட்டும் எளிமையாக இருந்துவிட்டால் உலகத்தைத் திருத்திவிட முடியுமா என்று கேட்கலாம். இப்படி ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டு

முன்னேறாமல் இருந்தால், சமுதாயம் திருந்துவது எப்படி? கோயில் பூசைக்குக் குடத்தில் பால் வார்க்கச் சென்றவர்கள் மற்றவர்க்குத் தெரியாமல் ஒவ்வொருவரும் தண்ணீரை வார்த்துக் கடைசியில் குடம் நிறையத் தண்ணீரே இருந்த கதைபோல் ஆகிவிடுமே. தனிமனிதர் திருந்தினால்தான் சமுதாயம் திருந்தும். ஆகவே, அறிவுள்ளவர்கள் தெளிவுள்ளவர்கள் வீண்காரணங்கள் சொல்லிக் கொண்டிருக்காமல் எளிய வாழ்க்கை வாழ்ந்து காட்டவேண்டும். சமுதாயத்துக்குத் தொண்டு செய்யும் வகையில் நடப்பதே உண்மையான கடவுள் பூசை என்றும், சமுதாயத்தை மறந்து கடமையை மறந்து கடவுளின் பெயரால் செய்வது பூசை ஆகிவிடாது என்றும் உணரவேண்டும். ஆனால், கடவுளின் பெயரால் ஆடம்பரத்தை வளர்க்கும் போக்கையே இன்று காண்கிறோம். அதனால் உண்மையான கடவுள் நெறி ஓங்கவில்லை. இளைஞர்கள் அதில் ஏமாற்றம் இருப்பதாக எண்ணுகிறார்கள். கடவுளுக்காகத் தன்னை இழப்பது என்றும், யான் எனது எனும் செருக்கை அறுப்பது என்றும் வாயால் பேசிக்கொண்டு. செயலளவில் தன் பெருமையை வளர்ப்பது என்றும் ஆடம்பரத்தைப் பெருக்குவது என்றும் வாழக்கூடாது. வாழ்க்கையில் விளங்கமுடியாத சமயம் உண்மையான கடவுள் நெறி ஆகாது.

"வேண்டின் உண்டாகத் துறக்க" என்கிறார் திருவள்ளுவர் செல்வம் உள்ளபோதே அதைத் துறக்க வேண்டும் என்கிறார். துறவு என்ற அளவுக்குப் போக வேண்டா. எளிமை என்ற அறத்தைப் போற்றினாலும் போதும். ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் காட்டிய வழி அது. ஆடம்பரத்திற்கு வாய்ப்பு உள்ளபோதே அதைத் துறந்து எளிய வாழ்வு வாழவேண்டும். பட்டாடை உடுத்த வசதி உள்ளபோது அதைவிட்டு எளிய பருத்தியாடை உடுத்தி மகிழவேண்டும். பதவிகள் கிடைக்கும்போது பலவற்றைத் துறந்து சிலவற்றை மட்டும் ஏற்றுக் கடமையை ஒழுங்காகச் செய்யவேண்டும். புகழ் வாய்க்கும்போது, அதைப் பொருட்படுத்தாமல் விரும்பாமல், அடக்கமாக வாழ வேண்டும். இவ்வாறு உலகத்தைத் துறக்காமல் ஆடம்பரத்தைத் துறந்து வாழ்வது இக்காலத்துக்கு வேண்டிய நல்ல அறமாகும்.

சமுதாயத்திற்காக எளிய வாழ்க்கை நடத்துவது இருக்கட்டும் ஒருவன் தன்

நன்மைக்காகவும், ஆடம்பரத்தைத் துறந்து எளிமையாக வாழவேண்டும். ஏன் என்றால் ஆடம்பர வாழ்வில் என்றும் மன அமைதி பெற முடியாது. ஆடம்பரமாக வாழ்வோர் தம்மைவிட ஆடம்பரமாக வாழ்வோரைப் பார்த்து அவர்களைப் போல் வாழ முடியவில்லையே என்ற எப்போதும் ஏங்குகிறார்கள். தமக்கு மேல் இருப்பவர்களைப் பார்த்து ஏங்கும் வாழ்க்கையில் அமைதி எது? எளிய வாழ்க்கையில் அந்தக் குறை இல்லை. தமக்கு மேல் நிலையில் உள்ளவர்களைப் பற்றிக் கவலைப்படாத மன நிலையை எளிமை தருகிறது. அவர்கள் நடப்பது தவறு. இதுதான் நெறியான வாழ்க்கை என்ற மனநிறைவே அது அளிக்கிறது. “செல்வம் என்பது சிந்தையின் நிறைவே“ என்கிறார் பழங்காலத் தமிழ்ப் புலவர் ஒருவர். ஆடம்பரம் தராத இந்த மனநிறைவை எளிமை தருகிறது. அதுவே உயர்ந்த செல்வம் ஆகும்.

எளிமையிலே செம்மையைக் காணமுடியும். ஆடம்பரத்திலே செம்மையைக் காணமுடியாது. திருமணத்தை நன்றாக நடத்த வேண்டும். என்று விரும்பி ஆடம்பரமாகச் செய்கிறார்கள். நடத்தியவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? இல்லை. அலைச்சல் பெருகுகிறது இது குறையாகுமே. அது குறையாகுமே என்ற கவலைப்படுகிறார்கள். கடைசியில் ஏதேனும் குறை ஏற்பட்டு விடுகிறது. பெருங்கூட்டம் திரள்கிறது. வந்தவர்களை நன்றாக வரவேற்றுப் பேசி உபசரிக்க முடியவதில்லை. சமையலறையிலோ, பரிமாறும் பந்தியிலோ சிலர் செய்த தவறுகள் மனக்குறையை ஏற்படுத்துகிறது. எல்லாம் முடிந்த பிறகு ஏக்கத்துடன் பெருமூச்சு விடுவதுதான் கண்ட பயன்.

உயர்ந்த நகை ஒன்று செய்ய வேண்டும் என்று செல்வக் குடும்பத் தலைவி முயல்கிறாள். நகையும் செய்யப்படுகிறது. தான் விரும்பியபடி அமையாமல் ஒரு குறை ஏற்பட்டுவிடுகிறது. அல்லது, இன்னொரு குடும்பத் தலைவியிடம் உள்ள நகை இதைவிட உயர்ந்ததுபோல் தோன்றுகிறது. உடனே மனக்குறை ஏற்படுகிறது. அமைதி போய்விடுகிறது.

இப்படியே, எவ்வளவு உயரப் பறந்தாலும் வானம் எட்டாததாய் நிற்பது போல், ஆடம்பரங்களில் இன்பமும் எட்டாததாய் நிற்கிறது. “ஆசைக்கு ஓர்

அளவில்லை“ என்கிறார் தாயுமானவர். ஆனால் எளிமையோ அமைதியான புல்தரை போன்றது. அது எப்போதும் நம் எல்லைக்குள் இருப்பது. போதும் என்ற மனத்தை எளிமையில்தான் பெறமுடியும். “போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து“ என்ற பழமொழி எவ்வளவு பெரிய உண்மையை விளக்குகிறது.

## குலசேகராழ்வாரின் சிந்தனைகள்

**(முனைவர் ம. திருமலை)**

### முன்னுரை

இடைக்கால இந்தியாவில் பக்தி உணர்வு பெருவெள்ளமாகப் பரவிப் பாய்ந்தபோது, தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் பல சான்றோர்கள் தோன்றி, பக்தி உணர்வை வளர்த்தனர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் இந்த வகையில் தமிழகத்திற்கு அருந்தொண்டு ஆற்றியுள்ளனர். உலகம் கடந்த தனிமை சார்ந்த பக்தியாக இல்லாமல் உலகியல் சார்ந்த பக்தியை தமிழ்ச் சான்றோர்கள் வளர்த்தனர்.

### இறைவன் இப்பூவுலகில் எழுந்தருளியிருப்பதன் பயன்

பக்தியின் மூலம் இவ்வுலகத்தின் துன்பங்களை நீக்கி இயலும் என்று உலகிற்கு உணர்த்தியவர் குலசேகராழ்வார். அவரது அரிய சிந்தனைகள் இன்றும் உணர்ந்து இன்புறத் தக்கன. இப்பூவுலகில் திருவரங்கத்தில் இறைவன் ஏன் பள்ளிகொண்டிருக்கிறார்கள் என்பதை ஒரு பாடலில் குலசேகராழ்வார் உணர்த்துகிறார். விண்ணுலகில் வாழும் அமரர்கள் நன்னிலை அடைதல் இம்மண்ணுலகம் உய்தல், மனிதர்கள் மேன்மை பெறுதல், துன்பங்கள் நீங்குதல், இடையறாமல் மக்கள் வாழ்வில் செல்வளம் பெருகுதல் முதலான உயர் நோக்கங்களை உத்தேசித்துத் தான் திருமால் திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கிறார் என்று ஓர் அழகிய பாடலில் குலசேகார் தெளிவுபடுத்துகிறார். அப்பாடல் இவ்வாறு வருகிறது,

**“வன்பெரு வானகம் உய்ய, அமார் உய்ய,**

**மண் உய்ய, மண் உலகில் மனிசர் உய்ய,**

**துன்பம் மிகுதுயர் அகல அயர்வு ஒன்று இல்லா“**

**(குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி.10)**

இறையுணர்வு என்பது இவ்வுலக வாழ்வுடன் இணைந்திருக்கின்ற ஒன்றுதான் என்பதையும் மனித வாழ்வினை முன்னேற்றுவதே ஆன்மீகத்தின் முதல்நோக்கம் என்பதையும் குலசேகராழ்வாரின் மேற்காட்டிய பாடல் உணர்த்துகிறது.

புலன்கள் வசப்படுதல்

இறைநெறியில் ஒருவன் தன் மனத்தினை ஈடுபடுத்திக் கொண்டால், தீய பண்புகள் அம்மனிதனை விட்டு விலகி ஓடிவிடும். மனித மனத்தின் பொது இயல்பு ஆணவத்தின் வழி வந்த கோபம் ஆகும். தேவையற்ற சூழல்களில் சிறிய மிகச்சிறிய மிகச் சாதாரணமான காரணங்கட்காகக் கூட மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக் கொள்வதைப் பொதுவாக எங்கும் காணலாம். தான் முன்னேற வேண்டும் என்பதற்காகப் பிறரை வஞ்சிக்கும் இயல்பும் இன்றைய மனிதன் மேற்கொண்டிருக்கும் நடைமுறைகளுள் ஒன்று. மனத்தை அடக்க இயலாமல் புலன்களின் வழிச்சென்று துன்பங்களில் ஆழ்வதும் இன்றைய மனிதனிடம் காணக்கூடிய ஒன்றாகும். மனிதன் இன்புற மனத்தின் ஆணவம், வஞ்சம், புலன்வழிச் சேறல் முதலியன நீங்க வேண்டும். இறைவனை எப்போதும் எண்ணி மனத்தில் இருத்தி வழிபடும் இறையடியார்களின் மனத்தைவிட்டு மேற்சொன்ன குற்றங்கள் நீங்கும். இதனைப் பின்வரும் பாடலில் குலசேகர் அருமையாக உணர்த்துகிறார்.

**“மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்சம் மாற்ற**

**வன்புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம்”**

**(குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி. 7)**

உயர்ந்த பண்புடையவர்கள் அடையத் தகுந்த கதியாகப் பரம் பொருள் இருக்கிறான் என்பதை “அறம் திகழும் மனத்தவர் தம் கதியை“ என்ற நுட்பமாகக்

கூறுகிறார் குலசேகராழ்வார்.

**மனத்தின் தளர்நிலையும் மாற்றுவழியும்**

நடைமுறை வாழ்வில் நாம் சில குறிக்கோள்களை மனத்தில் வைத்து முன்னேறத் துடிக்கிறோம். சிலர் தம் குறிக்கோள்களைத் தம் கடின உழைப்பால் எய்த இயலும். சிலரால் எய்த இயலாமலும் போகும். எய்த இயலாதவர்கள் மனத்தினைத் தளரவிடுதல் கூடாது. குறிக்கோள்களை எய்தி வென்றவர்களைக் கண்டு மனத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஆன்மிகத் துறையிலும் இறை ஈடுபாட்டில் முழுமையாக ஈடுபட இயலாதவர்கள், மனம் தளர வேண்டியதில்லை. இறைவழியில் தம்மை நன்கு ஈடுபடுத்திக் கொண்ட அடியார்களைக் கண்டு உணர்வதன் மூலம், தத்தம் இறை ஈடுபாட்டினைப் புதுப்பித்துக் கொள்ளலாம். இச்சிந்தனையைக் குலசேகரர் தம் பாடலில் நன்கு புலப்படுத்துகிறார். அப்பாடல் இவ்வாறு வருகிறது.

**“தேட்டு அருந்திறல் தேனினைத் தென்**

**அரங்கனைத் திருமாது வாழ்**

**வாட்டம் இல் வனமாலை மார்பனை**

**வாழ்த்தி மால்கொள் சிந்தையராய்”**

**(குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி. 12)**

ஒப்பற்ற அடியார்களைக் கண்டு உணர்வு எழுச்சி பெற இயலும் என்பதை “மெய்யடியார்கள் ஈட்டம் என்று குறிப்பிடுகிறார் குலசேகரர். மெய்யடியார்கள் யார் என்பதை, “மால் கொள் சிந்தையராய் ஆட்டம் மேவி அலைந்து அழைத்து அயர்வு எய்தும்“ நிலை உள்ளவர்கள் தான் மெய்யடியார் என்று விளக்குகிறார்.

**அடியார்க்கும் அடியாராக வாழ்தல்**

.இந்த மனிதப் பிறவி பாவ புண்ணியங்கட்கு உட்பட்டது. விளைத் தொடர்புடையது. அதனால் பாவங்களைத் தொலைக்க, புண்ணிய நதிகளில் நீராட மனிதன் முந்துகிறான். ஆனால் புண்ணிய நதிகளில் நீராடிப் பயன்பெறுவதைவிட,

இறைவனின் உண்மை அடியார்களின் பாதக் கமலங்களில் பணிந்தால் மிகுந்த பயன்பெறலாம் என்ற சிந்தனையைக் குலசேகராழ்வார் வெளிப்படுத்துகிறார்.

**“ஆடிப்பாடி அரங்கா! ஓ! என்று**

**அழைக்கும் தொண்டர் அடிப்பொடி**

**ஆடநாம் பெறில், கங்கை நீர் குடைந்து**

**ஆடும் வேட்கை என் ஆவதே?“**

**(குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி. 13)**

என்ற பாடல் வரிகள் அடியார்க்கும் அடியவராக வாழ்வதுதான் இனிமையும் பயனும் உடையது என்ற குலசேகரரின் சிந்தனையை விளக்குகின்றன.

**பற்றும் பற்றுவிடலும்**

மனித உயிருக்குப் பல பிறவிகள் வாய்ப்பதற்கு அது நிலையற்ற பொருள்களின் மீது வைக்கும் பற்றே காரணமாக அமைகின்றது. எனவே மனித உயிர், தான் எதன்மீது பற்று வைக்கலாம் எதனை நீக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். இவ்வுலக வாழ்க்கையை மெய் என்று மனிதன் எண்ணுகிறான். அதனால் அதன் மீது பற்று வைக்கிறான். ஆனால் உலக வாழ்வின் உண்மை நிலையை ஆழ்ந்து உணரும்போது அது, மெய் போலத் தோற்றமளிக்கும் பொய் என்பது புலனாகும். இதனை உணர்ந்தால் இறையருள் கிட்டும் என்ற கூறுகிறார் குலசேகரர். அப்பாடல் இவ்வாறு வருகிறது.

**“மெய்இல் வாழ்க்கையை மெய் எனக் கொள்ளம்இவ்**

**வையம் தன்னொடம் கூடுவது இல்லை யான்“**

**(நாலாயிரத் திவ்விய பிரபந்தம். 668)**

என்று இக்கருத்தைத் தற்கூற்றாகக் கூறுகிறார் ஆழ்வார்.

இன்றைய உலகம் பெண்களை இன்ப நுகர்வுக்குரிய பொருளாகக் கருதித் தவறுகள் செய்கிறது. இம்மனப்பான்மை மாற வேண்டும் என்ற சிந்தனையை,

**“நூலின்நேர் இடையார் திறத்தே நிற்கும்**

**ஞாலம் தன்னொடும் கூடுவது இல்லை யான்”**

என்ற பாடல் வரிகளில் உணர்த்துகின்றார் ஆழ்வார்.

இன்றைய நுகர்வோர் காலாசாரத்தில் பேரிடம் பெறுவது நல்ல ஆடம்பரமான உடைகளும் சுவைமிக்க வகைவகையான உணவுகளும் தான். செய்தித்தாள்கள், இதழ்கள், பிற மக்கள் தொடர்புச் சாதனங்களின் வழி வரும் விளம்பரங்கள் அனைத்தையும் வகைப்படுத்தி நோக்கினால் அவை உணவு, உடை தொடர்பாக இருப்பதை உணரலாம். மனிதனின் எண்ணம், கல்வி, நலம் முதலான கூறுகள் பற்றிய சிந்தனை இவற்றில் இல்லை. இவ்வுலகம் உணவு உடைகட்குப் பின்னே ஓடுகிறது. இப்பண்பு மாறவேண்டும். உணவு, ஒருவன் உயிர்வாழ்வதற்கு மட்டும் தேவையான அளவுபோதும், உடை, மானம் காக்கும் அளவுக்கு மட்டும் இருந்தால் போதும் என்ற சிந்தனைகளை உள்ளடக்கிக் கூறுகிறார் குலசேகராழ்வார்.

**“உண்டியே உடையே உகந்து ஓடும் இம்**

**மண்டலத்தொடும் கூடுவது இல்லையான்”**

**நன்னெறியைப் பற்றுதல்**

மாயைத் தன்மை மிகுந்த உலக வாழ்வில் எந்த வழியிலேனும் தங்கள் எண்ணங்களை ஈடேற்றிக் கொள்ளும் மனிதர்களின் உறவினை விடுத்து, நல்ல வழிகளில் செல்லும் மனிதர் உறவினை ஒருவன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார் குலசேகராழ்வார் அப்பாடல்,

**“தீதில் நன்நெறி நிற்க அல்லாதுசெய்**

**நீதியாரொடும் கூடுவது இல்லை யான்”**

என்ற பாடல் வரிகளில் உணர்த்துகின்றார் ஆழ்வார்.

இவ்வுலக இன்பங்களின் மீது பற்றுக்களை நீக்கிக் கொள்ள வேண்டும். உணவு உடைகளின் மீது ஏற்படும் அளவற்ற காதல் குறைய வேண்டும்

தேர்ந்தெடுத்த நல்லோர் தொடர்பு வாய்க்கப் பெற வேண்டும் என்ற இவ்வேட்கைகள் எவ்வாறு வடிவம் பெறக்கூடும்? அது இறையருளால் நடைபெறும் என்கிறார் குலசேகராழ்வார். "அத்தமிழின் இன்பப் பாலினை, அவ்வடமொழியை, பற்ற அற்றார்கள் பயில் அரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும் கோவினை நாஉற வழுத்தி" வணங்கினால் நற்பேறு கைகூடும் என்பதைப் பிறிதொரு பாடலில் விளக்குகிறார்.

**"எத்திறத்திலும் யாரொடும்கூடும் அச்**

**சித்தந் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்"**

என்ற பாடல் வரிகளில் திருமாலின் திருவருளால் நல்வழி கைகூடும் என்ற செயதியைக் கூறுவார் குலசேகராழ்வார்.

ஆழ்வாரின் இப்பாடல் வரி ஆழமான பொருள் உடையது. உலகில் மனிதன் வாழ்கிறபோது, சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருக்கவியலாது. அவ்வாறு தொடர்புகொண்டாலும் மனத்தால் தீமைகளினின்று விலகி இருக்க வேண்டும். அதற்குரிய மனநிலை வேண்டும். அதனை இறைவன் தருவான் என்பதையே

**"யாரோடும் கூடும் அச்சித்தந்தன்னைத் தவிர்த்தனன்"**

என்று கூறுகிறார். இந்த நுட்பம் சிந்தித்து உணரத்தக்கது.

குலசேகராழ்வாரின் இத்தகைய சிந்தனைகளைக் காணும்போது அவர் உலக வாழ்வை வெறுப்பவராகக் காணப்படுவதைப் போலத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அவ்வாறில்லை. "அழகிய மணவாளன் பால் பித்தன் எனல்" என்ற இந்தப் பத்துப்பாடல்களின் இறுதியில்,

**"கொங்கா கோன் குலசேகரன் சொன்ன சொல்**

**இங்கு வல்லவர்க்கு ஏதம் ஒன்று இல்லையே"**

என்று கூறுகிறார். "இங்கு வல்லவர்க்கு ஏதம் இல்லையே" என்பதில் இந்த உலக வாழ்வில் இதனைக் கடைப்பிடிப்பவர்க்குத் துன்பம் இல்லையே" என்ற பொருள்

மறைந்து நிற்பதை உணரலாம். அதனால் இந்த உலக வாழ்வினைச் செம்மையாக நடத்த, உந்த உலகத்தின் இயல்பும் அதனின்று உய்யும் வழிகளும் தெரிந்திருக்க வேண்டும். என்பதற்காகவே குலசேகரர் இவ்வாறு கூறுகிறார் என்று கொள்ள வேண்டும். ஏனெனில் ஆழ்வார்கள் காட்டும் பக்தி உலகியல் சார்ந்தது மனித உணர்வு சார்ந்தது.

**உணர்வு நெறியும் அறிவு நெறியும்**

உணர்வு நெறிக்கு உகந்ததாக இருக்கும் ஒர் கருத்து தருக்க நெறிக்கு ஒத்துவராது. தருக்க நெறிக்கு ஒத்துவரும் ஒன்று உணர்வு நெறிக்கு அடங்காது. இது பொதுவான நியதி. ஆனால் குலசேகராழ்வார் கூறும் சிந்தனைகள் பக்தி என்ற உணர்வு நெறிக்கு ஆராய்ச்சி என்ற தருக்கநெறிக்கும் ஒத்துவரும் வகையில் அமைந்திருப்பதுதான் சிறப்பாகும். திருவேங்கடத்தில் பிறத்தல் பற்றிய அவரது பத்துப் பாசுரங்களும் மிக அரிய செய்திகளைக் கொண்டிருக்கின்றன.

இந்த உடலை வளர்க்கும் செல்வம் மிக்க பிறவி எனக்கு வேண்டாம் திருவேங்கடமலையில் வாழும் குருகாய் இருக்க விரும்புகிறேன் என்று திருவேங்கடமலைச்சுனையில் மீனாகவும் திருவேங்கட மலையில் செண்பகப் பூவாகவும், மலையில் புதராகவும், கொடியாகவும், காட்டாறாகவும், மலையின் வழியாகவும், கோயில் வாசலில் படியாகவும் பிறக்க விருப்பம் தெரிவித்துப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். ஆழ்வார்.

**"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே"**

**நெடியானே வேங்கடவா! நின்கோயிலின் வாசல்"**

என்ற தமது வேட்கையைக் குறிப்பிடுகிறார். திருவேங்கடமலையில் உள்ள பல பொருட்களைப் பற்றிக் குறிப்பிட்டு அப்பொருட்களாகப் பிறக்க விரும்பிய ஆழ்வார் மனம் நிறைவுறாமல் இறுதியில்

**"செம்பவள வாயான் திருவேங்கடம் என்னும்**

**எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே"**

என்று குறிப்பிடுகின்றார். இப்பாடல்கள் அனைத்திலும் குலசேகராழ்வாரின்

ஆழமான பக்தித் திறம் பளிச்சிடுகின்றது. “அச்சுதா! அமர்ரேறே ஆயர்தம் கொழுந்த! எனும் இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்!“ என்று உலக இன்பப் பேறுகளை வெறுத்து ஒதுக்கும் மனிநிலையும் திருவேங்கட மலையில் ஏதாவது ஒரு பொருளாகப் பிளந்து எப்போதும் திருமாலையே எண்ணிக் கொண்டிருக்கும் நிலையை வேண்டுகின்ற ஆர்வமும் புலப்படுகின்றன இப்பாடல்களில் பக்தி எனும் உணர்வினால் உணரத்தக்க நுட்பம் புதைந்துள்ளது. தான் விரும்பும் இடத்தில் இருக்க மனிதன் பொதுவாகவே விரும்பும்போது, திருமாலின் அடியவரான குலசேகரர் திருமலையில் இருக்கவிரும்பும் உணர்வு புரிந்துகொள்ளத் தக்கதுதான். ஆனால் அறிவு நிலையிலும் தருக்க நெறிக்கும் குலசேகராழ்வாரின் விருப்பம் உகந்ததாகக் காணப்படுவது தான் பெரிய சிறப்பு! அது என்ன?

குலசேகராழ்வார், இப்பத்துப் பாடல்களிலும் திருவேங்கட மலையில், குருகு, மீன், செண்பக மலர், புதர், வழி, மலைமுகடு, காட்டாறு, படி இறுதியாக ஏதேனும் ஒரு பொருள் இவ்வாறு பிறக்கவே விரும்புவதாகக் கூறுகிறார். மனிதனாகப் பிறக்க விரும்பவில்லை! காரணம் என்ன? மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன். அதனால் சிந்திக்கும் திறனுடைய அறிவு மனித மனத்தினைப் பல்வேறு வழிகளில் சலனப்படுத்தும் பக்தியில் ஒருமுகமான ஈடுபாடு இல்லாமல் போகலாம்! ஆனால் சிந்திக்கத் தெரியாத அஃறிணைப் பொருள்கள் அவற்றுக்கு விதிக்கப்பட்ட ஒருவழி தவிர, பிற வழிகளில் போகத் தெரியாது. மீன் நீந்துவதை மட்டுமே செய்யும். ஏன் நீந்துகிறோம் என்று சிந்திக்காது. மலர் மணம் வீச மட்டுமே செய்யும், ஏன் நாம் மணக்கிறோம் என்று சிந்திக்காது, ஆனால் மனிதன் சிந்திக்கக்கூடியவன் அதனால் சலனமடைபவனும் கூட! பக்தி என்பதே சிந்தனையை ஒருமுகப்படுத்துதல்தானே! மனிதனாகப் பிறந்து பக்தி செய்வதில் இத்தனை இடர்ப்பாடுகள் இருப்பதால்தான், “எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனும் ஆவேனே“ என்று வேண்டுகிறார் குலசேகரர் ஏதேனும் ஒர பொருளாகப் பிறந்து இடையறவுபடாத பக்தியைத் திருமாலிடம் செலுத்த விரும்புகிறார் குலசேகரர்.

எல்லா இடங்களிலும் எல்லா நேரத்திலும் இறைவன் நிறைந்திருக்க ஏன்

திருவேங்கடத்தில் சென்று பிறக்க வேண்டும் என்ற குலசேகராழ்வார் விரும்புகிறார்? இறைவன் புறக்கண்ணுக்குப் புலப்படாத காற்றுப் போல அனைத்திடங்களிலும் நிறைந்திருக்கிறான். என்பது உண்மைதான். ஆயினும் நறுமணம் வீசும் பூங்காவில், மலர்கள் நிறைந்திருக்கும் இடத்தில் இருக்கும் காற்றில் தனியாக நன்மணத்தை நம்மால் நுகர முடிவதுபோல் இறைவனின் திருமேனி நிலைத்திருக்கும் இடத்தில் அவனது அருளின் திட்பத்தினை மேலும் நுட்பமாக ஒரு மனிதனால் உணரக்கூடும். இக்காரணம் பற்றியே குலசேகரர் தமது பாசுரங்களில், திருவேங்கடத்தில் தாம் பிறந்து இறையறாத திளைக்க விரும்பவதாகக் கூறுகிறார் என்று கூறலாம்.

**முடிவுரை**

குலசேகராழ்வாரின் பாசுரங்களைக் கற்கும்போது மனித உயிர், இவ்வுலக வாழ்வு முதலியன பற்றி அவர் கொண்டிருந்த அனுபவம் சார்ந்த சிந்தனைகள் புலப்படுகின்றன. பக்தி உணர்வு இவ்வுலக வாழ்வினின்றும் வேறுபட்டதல்ல என்பதும் இவ்வுலக வாழ்வினை மேலும் வளமுடையதாக மாற்றவே அது பயன்படுகிறது என்பதும் குலசேகரரின் சிந்தனைகளாகும்.

மனித மனம் சார்ந்ததன் வண்ணமாக மாறும் இயல்புடையது என்பதால், எப்போதும் நல்ல எண்ணங்கள், நல்ல இலக்குகள் முதலியவற்றைச் சாரந்து மனித மனம் இயங்கக் கற்றுக் கொண்டால் விளைவுகள் நன்மை பயப்பனவாக இருக்கும் என்பது குலசேகரரின் பக்திச் சிந்தனையின் அடிநாதமாகத் திகழ்கிறது.

## பண்டைத்தமிழிரின் கடல் வாணிகம்

**(முனைவர் த. நிர்மலா)**

பண்டைத்தமிழர் தரை வழியாகவும் கடல் வழியாகவும் உலகின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வாணிகம் செய்துள்ளனர். இதற்கு இயற்கையாகவே தமிழகத்தில் அமைந்த நில அமைப்பு காரணமாக இருந்த்து. தொன்மைத் தமிழர் உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தைச் சிறப்பாகச் செய்ய கடல் வழியையே

அதிகம் பயன்படுத்தியுள்ளனர். கடல் வாணிகம் செய்யும் திறமையுடைய ஒரு சமுதாயம் பண்டைத் தமிழகத்தில் இருந்துள்ளது. அவ்வாணிகச் சமுதாயம் சுறுசுறுப்பான வாணிக நிலைமையைத் தமிழகத்தில் உருவாக்கியதில் வியப்பில்லை. ஆகவே, பண்டைத் தமிழகத்தில் நடைபெற்ற கடல் வாணிகச் செயற்பாடுகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**கடல் வாணிகம்**

பழந்தமிழா, தாம் வாழ்ந்த பகுதிகளைக் குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பிரிந்திருந்தனர். அவற்றுள் கடலும் கடல் சார்ந்த பகுதியை "நெய்தல்" என்றனர். சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆண்ட நிலப்பகுதிகளில் கடலே முக்கிய எல்லைகளாக இருந்தன. இவை தமிழரின் வரலாற்றை மட்டுமல்ல அவர்களின் கடல் வாணிகம் மற்றும் கடல் சார்ந்த அறிவியல் போன்றவற்றையும் உணர்த்தி நிற்கின்றன. பழந்தமிழர் இயற்கையாகவே கடற்பயணம் செய்வதிலும், கடல் வாணிகம் செய்வதிலும் மிகுந்த ஈடுபாடும், அக்கறையும் கொண்டிருந்தனர் என்பதை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

**சான்றுகள்**

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு", "செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை" போன்ற பழமொழிகள் தமிழரின் கடல் பயணம், கடல் வாணிகம் பற்றியனவாகும். பண்டைத் தமிழகத்தில் கடல் வாணிகம் மேம்பட்டிருந்த்தை அறிவதற்கு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கிய நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும் இலக்கியச் சான்றுகளாகின்றன. இவை தவிர பழந்தமிழ்க் கல்வெட்டுகள், வெளிநாட்டவரது பயணக்குறிப்புகள் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் போன்றவையும் சான்றகளாக அமைகின்றன.

கிரேக்க, யவனப் பயணிகளின் குறிப்புகளும் தமிழகத்தில் கிடைத்துள்ள ரோம நாணயங்களும் சங்கத்தமிழரின் கடல் வாணிகத்தைப் பறைசாற்றி நிற்கும். இவை தவிர ஈமச் சின்னங்களான சவக்குழிகள், கல்லறைகள், முதுமக்கள்

தாழிகள் போன்றவற்றில் கிடைத்த தொல் பொருட்களும் இதற்குச் சான்றுகளாக அமைகின்றன. ஈமச் சின்னங்களில் அகழாய்வு செய்யப்பட்டபோது கிடைத்த கார்னீலியன் கல்மணிகள், லாபிஸ் லசுலி கல்மணிகள், சூதுபவளம் மற்றும் உலோகத்தால் செய்யப்பட்ட பொருட்கள் போன்றவையும் பண்டைத்தமிழரின் கடல் வாணிகத்திற்குச் சான்றுகளாகின்றன. கி.பி.2 ஆம் நூற்றாண்டில் பாப்பிரஸ் தானில் எழுதப்பட்ட வணிக ஒப்பந்த ஆவணம் ஒன்றும் கிடைத்துள்ளது. இது முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகர் ஒருவருக்கும். அலெக்ஸாந்தியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையே நடைபெற்ற வணிகத் தொடர்பைக் குறிப்பிடுகிறது.

இவை தவிர செங்கடல் துறைமுகப் பகுதி அகழாய்வில் கிடைத்த பழந்தமிழ் எழுத்துப் பொறித்த பானையோடுகள், தமிழ் வணிகர்கள் கடல் கடந்து சென்று வணிகம் மேற்கொண்டமைக்குச் சான்றுகாளக அமைகின்றன. சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் அரசுக் கருவூலத்தில் சேர்க்கப்பட்ட வேண்டிய பொருட்களில் பாண்டிய நாட்டின் முத்தையும் குறிப்பிடுகிறது. பண்டையக் காலத்தில் பாண்டிய நாட்டு முத்து வடஇந்தியாவில் முக்கிய வணிகப்பொருளாக இருந்துள்ளது. கி.பி 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மாங்குளம் கல்வெட்டு நிகமை என்ற வணிக குழுவைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவை போன்ற கடல் வாணிகம் பற்றிய பல்வேறு சான்றுகள் நமக்குக் கிடைத்துள்ளன.

**நீருந்துகள்**

அன்றையத் தமிழர் கடலில் சென்று வாணிகம் செய்வதற்குப் பல்வேறு நீருந்துகளைப் பயன்படுத்தியுள்ளனர். சிறிய வகை படகுகளையும் பெரிய கப்பல்களையும் வணிகத்திற்காகப் பயன்படுத்தியுள்ளனர்.

பூம்புகார் துறைமுகத்திலே நாவாய்கள் எனப்படும் கப்பல்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. இத்துறைமுகப் பகுதியிலே கப்பல் வணிகர் பலர் வாழந்தனர். பல கப்பல்களை (நாவாய்) உரிமையாக உடைய பெரிய கடல் வாணிகருக்கு “மாநாவிகன்“ என்ற பெயரம் உண்டு “மாநாவிகன்“ என்ற சொல்லே பிற்காலத்தில் “மாநாய்கள்“ என்று திரிந்தது இதனடிப்படையிலேயே

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தந்தைக்கு “மாநாய்கள்“ எனப் பெயர் வழங்கப்பட்டது. பெரிய தரை வாயிலாகச் சாத்துக் கொண்டவன் “மாசாத்துவான்“ என அழைக்கப்பட்டான். இதனாலேயே கோவலனின் தந்தை “மாசாத்துவான்“ எனப்பெயர் பெற்றான். ஆக, கடல் வாணிகம் சார்ந்து பல பெயர்கள் தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

தமிழ் மொழியில் கடலில் செலுத்தப்படும் மரக்கலங்களைக் குறிப்பதற்குப் பல்வேறு சொற்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. அம்பி, புணை, திமில், நாவாய், வங்கம், கலம், தோணி, ஓடம், படகு, மதலை, மிதவை, தெப்பம், கைப்பரிசல், கப்பல், பாறு, பலசம், பஃறி, சதா, தொள்ளை, ஆனம், படுவை போன்ற பல்வேறு சொற்கள் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ளன.

சங்கரா, சோழந்தியா என்னும் இருவகைப் பெருங்கப்பல்களைப் பண்டைத் தமிழர் கடற்பயணத்திற்குப் பயன்படுத்தியதாக பெரிப்புளுஸ் என்னும் யவனரின் கையேடு குறிப்பிடுகிறது.

**“கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**

**நாவாயும் ஓடா நிலத்து”** **(குறள்.496)**

என்ற தெய்வப் புலவரின் கூற்றிலிருந்தும் கடற்பயணம் என்பது தமிழருக்கு மரபான ஒன்று என்பதை அறிய முடிகிறது.

வங்கம் என்பது விரைந்து செல்லும் கப்பல் ஆகும். இது உருவிலும் பெரியதாகும். இதன் சிறப்பையும், அமைப்பையும்.

**”உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்”** **(அகம்.255-1)**

என்ற அகநானூற்றுப் பாடல் வரி சிறப்பிக்கின்றது. கலம் என்பது நீண்ட தூரக் கடல் வாணிகத்துக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு நீருந்து ஆகும்.

**“யவனா தந்த வினைமாண் நன்கலம்**

**பொன்னோடு வந்து கறியொடு பெயரும்”** **(அகம்.149 9-10)**

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகள் கடல் வாணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட

மரக்கலமானது அழகிய வேலைப்பாடுகளுடன் யவனர்களால் செய்யப்பட்டுள்ளமையை உணர்த்துகிறது.

மதலை என்பதும் கடல் வாணிகத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு வகையான கப்பலாகும்.

**"...... கொழுநிதி குப்பை எல்லாம் உணர்ந்து தன்**

**மதலை ஏற்றி ஒருப்படுத்து ஊர்க்கு மீள்வான்" (சீவக.505)**

என்ற சீவக சிந்தாமணியின் காந்தருவதத்தை இலம்பகத்தில் சீதத்தன் என்ற வணிகன் தான் ஈட்டிய செல்வத்தை எல்லாம் மதலை என்ற கப்பலில் ஏற்றி தன் ஊருக்கு மீண்டு வந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**துறைமுகங்கள்**

பண்டைத் தமிழ்நாட்டில் பல்வேறு துறைமுகங்கள் இருந்தமையை இலக்கியங்கள் பலவும் பதிவு செய்துள்ளன. அக்காலத்தில் சிறந்து விளங்கிய கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களான காவிரிப்பூம்பட்டினம், கொற்கை பற்றியும் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களான முசிறி, தொண்டி ஆகியவை பற்றியும் இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. இவை தவிர வேறு பல துறைமுகங்களும் தமிழகத்தில் இருந்தமையை அயல்நாட்டவரின் பயணக்குறிப்புகளும், அகழாய்வுகளும் சான்றுகாட்டுகின்றன. அவ்வகையில், புதுச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள அழகன்குளம் போன்றன தொல்லியல் அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள துறைமுகங்களாகும். பெரிப்ளுஸ், பிளைனி, தாலமி போன்ற அயல்நாட்டவரின் பயணக்குறிப்புகளில் நவுரா (கண்ணனூர்), டிண்டிஸ் (சங்க இலக்கியம் குறிப்பிடும் தொண்டி என்றும், இன்று பொன்னானி என வழங்கப்படும் ஊர்), முசிறிஸ் (சங்க இலக்கியத்தில் முசிறி என்னும், இன்று கொடுங்கோளூர் என்றும் வழங்கப்படும் ஊர்), நெல்கிந்தா (கோட்டயத்திற்கு அருகிலுள்ள ஊர்) ஆகிய நகரங்கள் மிக முக்கியமானத் துறைமுகங்களாக இருந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பூம்புகார் பட்டினமே பழந்தமிழிரின் புகழ்பெற்ற துறைமுகமாக

விளங்கியுள்ளது. இது காவிரி ஆறு கடலில் கலக்கிற புகார் முகப்பிலே அமைந்துள்ளதையும் இங்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் மகிச் சிறப்பாக நடைபெற்றதையும் அறிய முடிகிறது.

கிறித்தவர்களின் வேத நூலான பழைய ஏற்பாட்டில் “ஒபிர்“ என்ற பெயருடைய துறைமுகம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சாலமன் மன்னன் மரக்கலங்களை அனுப்பி பொன், வாசனைத் திரவியம் மயில்தோகை போன்றவற்றை “ஒபிர்“ துறைமுகத்திலிருந்து பெற்றதாக பழைய ஏற்பாடு பேசுகிறது. பழைய ஏற்பாடு குறிப்பிடும் ஒபிர் துறைமுகம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இன்றைய உவரியே ஆகும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**அயல்நாட்டு வாணிகம்**

தமிழர்கள் கடல் வாணிகத்தில் அயல் நாட்டினரோடு வலுவானத் தொடர்பு கொண்டிருந்த்தைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. கடல்கடந்த நாடுகளாகிய காழகம் (பாமா), தக்கோலம், கடாரம், சாவகம், கிரேக்கம், ரோமாபுரி, எபிரேயம் முதலான இடங்களுக்கும் சென்று வணிகம் செய்துள்ளனர்.

இன்று பல்வேறு அயல்நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் சின்னங்களைக் காண முடிகிறது. அவை கடல் வாணிகத் தொடர்பின் அடையாளங்களே என்றால் மிகையாகாது.

கி.மு.11 ஆம் நூற்றாண்டில் ஏதென்சு நகரத்தை ஆண்ட மன்னன் செக்ராப்ஸ் ஆவான். அவனுக்குக் கடற்போரில் பாண்டிய மன்னன் உதவி செய்துள்ளான். இந்த நன்றிக்கடன் காரணமாக தன் மகனுக்கு “பாண்ட்ராசாஸ்“ (பாண்டியராசா) எனப் பெயரிட்டதாக கிரேக்க வரலாறு கூறுகிறது.

ரோமானியர்கள் கடலோடும் கலையைப் பாண்டியர்களிடமிருந்தே கற்றுக்கொண்டனர். இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக ரோமானியர் தாம் வெளியிட்ட பொன் நாணயங்களில் பாண்டியரின் சின்னமான மீன் இலச்சினையைப் பொறித்துப் பெருமைப்படுத்தியுள்ளனர்.

நம் முன்னோர்கள் பல்வேறு அயல்நாடுகளோடு கொண்டிருந்த கடல் வாணிக நெருக்கத்தை மேற்கண்ட சான்றுகள் பறைசாற்றி நிற்கின்றன.

**அரபு வணிகர்**

தமிழ்நாட்டுக்கு வடமேற்கிலிருந்து வந்த அரேபிய வணிகர் சேரநாட்டின் முசிறி துறைமுகத்துக்கு வந்து வாணிகம் செய்துள்ளனர். அவர்கள் வணிகம் செய்த இடத்தைப் "பந்தர்" என்று அழைத்தனர் பந்தா என்றால் அரபு மொழியில் "கடை வீதி" என்பது பொருள். முசிறி துறைமுகத்துப் பந்தரில் முத்துக்களும், விலையுயர்ந்த நகைகளும் விற்கப்பட்டன. சங்க இலக்கியமாகிய பதிற்றுப்பத்தில்,

**"நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்"**

**(பதிற்று. 6-ஆம் பத்து. செய்.5)**

என்றும்,

**"பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்"**

**(பதிற்று. 7-ஆம் பத்து. செய்.7)**

என்றும்,

**பந்தர் பயந்த பலர்புகழ் முத்தம்"**

**(பதிற்று. 8-ஆம் பத்து. செய்.4)**

என்றும் பந்தர் அங்காடி பற்றிய பல்வேறு குறிப்புகள் காணக் அரேபியர் சேர நாட்டிலிருந்து மூங்கிலைக் கொண்டுபோய் அரபி நாட்டில் வளர்த்துள்ளனர். மேலும், இவர்கள் சேர நாட்டில் விளைந்த மிளகைக் கொண்டுபோய் செங்கடல் துறைமுகத்திலும் எகிப்து நாட்டின் அலக்சாந்திரியத் துறைமுகத்திலும் கொண்டுபோய் விற்றுள்ளனர். இத்துறைமுகங்களில் கிடைக்கும் பொருட்களை வாங்கி தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து விற்றுள்ளனர். இதனால் தமிழகத்துக்கும், பல்வேறு நாடுகளுக்கும் இடையே வணிகத் தொடர்பு ஏற்பட அரபு வணிகர் காரணமாக இருந்துள்ளனர் என்றால் அது மிகையாகாது.

**யவன வணிகர்**

பழந்தமிழகத்துக்கும் பிறநாடுகளுக்கும் இடையே நடைபெற்ற கடல் வாணிக வரலாற்றில் யவன வணிகர்களுக்குக் குறிப்பிடத்தக்க இடமுண்டு. பண்டைக் காலத்தில் கிரேக்க நாட்டினரையும், ரோம் நாட்டினரையும் "யவனர்" என்றே குறிப்பிடுவர். தமிழர் - யவனர் வாணிகத் தொடர்பு பற்றி பிளினி, தாலமி முதலிய மேலை நாட்டார் எழுதிய நூல்களிலிருந்து அறிய முடிகிறது. பண்டைக் காலத்தில் வாணிகத்தின் பொருட்டு தமிழகத்துக்கு வந்த யவனர் சிலர் தமிழ் நாட்டிலேயே தங்கி தொழில் செய்துள்ளனர்.

பாண்டிய மன்னனின் பாசறையில் யவனர்கள் காவல் தொழில் புரிந்ததையும் அவர்களின் தோற்றம், உடை, உடல் வலிமை ஆகியவை பற்றியும் முல்லைப்பாட்டு அழகாக எடுத்துக் கூறியுள்ளது.

**"மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை**

**மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து**

**வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்"** **(முல்லை. 59-61)**

யவன வணிகரின் கடல் வாணிகத் தொடர்பால் யவன நாட்டில் உருவாக்கப்பட்ட பல்வேறு கலைப்பொருட்களையும் தமிழர்கள் வாங்கிப் பயன்படுத்தியுள்ளனர். அன்னப்பறவையின் உருவமாக அமைக்கப்பட்ட "ஓதிம" விளக்கும், பெண் வடிவமாக அமைந்த "பாவை" விளக்கும் யவனர் தமிழகத்துக்குத் தந்த கலைக் கொடையே.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்த யவன நாணயங்கள் அக்காலத்தில் நடைபெற்ற தமிழக யவன வாணிகத்துச் சான்றுகளாக அமைகின்றன.

**சாவக வணிகர்**

தமிழகத்துக்குக் கிழக்கே ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள கிழக்கிந்தியத் தீவுகளைச் சங்கத் தமிழர்கள் "சாவக நாடு" என்று குறித்தனர். அக்காலத்தில் சாவகம் சீன நாட்டுக்கும், இந்திய தேசத்திற்கும் இடையே மத்திய

வாணிக நிலையமாக இருந்து செயல்பட்டது. சாவகத்தீவை பண்டைத் தமிழர் “ஆபுத்திர நாடு“ என்றும் வழங்கியுள்ளனர். சாவக நாட்டோடு தமிழர் கொண்டிருந்த தொடர்பினை மணிமேலை காப்பியம் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. சாவகம் என்பது இப்போதுள்ள கிழக்கிந்தியத் தீவுகளில் ஒன்றான சுமத்திரா தீவு என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**புலம் பெயர் மாக்கள்**

வணிகத்தின் பொருட்டு கடல் கடந்து வந்த அயல்நாட்டு வணிகர் தமிழகத்தின் பல்வேறு துறைமுகப் பகுதிகளில் தங்கியிருந்தனர். இவர்களை இலக்கியங்கள் “புலம் பெயர் மாக்கள்“ என்று குறிப்பிட்டுள்ளனர்.

**“பயன் அறிவு அறியா யவனர் இருக்கையும்**
**கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்**
**கலந்தினி துறையும் இலங்குநீர் வரைப்பும்”** **(சிலம்பு.5, 10-12)**

என்ற சிலப்பதிகார பாடல் வரிகள் வாணிகத்தில் புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்திலே புலம் பெயர் மாக்களாகிய யவனர் தங்கியிருந்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

**“மொழிபல பெருகிய பழதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**
**முட்டாச் சிறப்பிற் பட்டினம்”** **(பட்டினப்.216-218)**

என் பட்டினப்பாலை அடிகளும் புலம் பெயர் மாக்கள் பற்றிய குறிப்பினைத் தந்துள்ளது.

ஆகவே, அயல்நாட்டு வணிகர் பற்றிய செய்திகளையும், அவர்களது கடல் வணிகச் செயற்பாடுகள் குறித்தும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் எண்ணற்ற சான்றுகள் இடம் பெற்றுள்ளன.

**உள்நாட்டு வணிகம்**

பழந்தமிழகத்தில் இருந்த பல்வேறு துறைமுகங்களுக்கிடையே பண்டமாற்று

முறையில் உள்நாட்டு வணிகம் நடைபெற்றதையும் அறிந்துகொள்ள முடிகிறது. பண்டமாற்றாகக் கொண்டு செல்லப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்குப் பெரிய நகரங்களில் சந்தைகளும், அங்காடிகளும் நிறுவப்பட்டிருந்தன. புகார், மதுரை ஆகிய பெரிய நகரங்களில் நாளங்காடி, அல்லங்காடி ஆகிய இருவகை அங்காடிகள் இருந்துள்ளன. உள்நாட்டு வணிகம் பெரும்பான்மையும் பண்டமாற்றாகவே நடைபெற்றுள்ளது. கடல் கடந்த வெளிநாட்டு வணிகத்திற்கே காசுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஏற்றுமதி பொருட்கள்**

சில அரியவகைப் பொருட்கள் தமிழகத்தில் மட்டுமே கிடைத்தால் அயல் நாட்டவர் அவற்றை மிகவும் விரும்பி வாங்கி மகிழ்ந்தனர். இதனால் தமிழகத்தில் கிடைக்கக் கூடிய பல பொருட்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| உணவுப்பொருள்கள் | -- | அரிசி, மிளகு, இஞ்சி |
| மணம் தரும் பொருட்கள் சமையலுக்கான வாசனைப் பொருள்கள் | - | சந்தனம், அகில் |
| சமையலுக்கான வாசனைப் பொருள்கள் | - | ஏலம், இலவங்கம், மஞ்சள் |
| அணிகலன்களுக்கான பொருள்கள் | - | தந்தம், முத்து, மரகதம் |
| ஆடைகளுக்கான பொருள்கள் | - | பருத்தி, பருத்தி துணி |
| மனையுறை விலங்குகள் | - | குரங்கு, மாடு |
| காட்டு விலங்குகள் | - | சிறுத்தை, புலி, யானை |
| பறவை | - | மயில் |

இவையாவும் தமிழகத்திலிருந்து கிரேக்கம், ரோமாபுரி போன்ற பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதையும் நாம் காணமுடிகிறது.

**இறக்குமதி பொருட்கள்**

அயல் நாடுகளிலிருந்து கடல் மூலமாக பல்வேறு பொருட்கள் தமிழகத்திற்கு வந்து இறங்கியுள்ளன. பட்டாடைகள், பல்வேறு எந்திரப் பொறிகள், மதுபான வகைகள், குதிரை, சீனரின் பீங்கான், சந்தனம், வாசனைப் பொருட்கள், பவளம், ஈயம், தகரம் போனற பல்வேறு பொருட்கள் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டதை அறிய முடிகிறது. இவை அரபு நாடுஈ, சாவகம், சீனா, கிரேக்கம், ஈழம் போன்ற பல நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்திலே பல நாட்டுக் கப்பல்களிலிருந்து பல்வேறு வகையான பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்டமையைப் பத்துப்பாட்டு நூலாகிய பட்டினப்பாலை எடுத்துக்கூறும்.

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**

**காலின் வந்த கருங்கறி மூடையும்" (பட்டினப், 185-186)**

என்ற பாடல் தமிழகத்திற்கு அயல்நாடுகளிலிருந்து கடல் வழியே குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதைச் சுட்டுகிறது. மேலும், மிளகு மூட்டைகள், பொன், மணி, சந்தனம், அகில், முத்து, பவளம், ஈழத்து உணவு, காழகத்து ஆக்கம் (தேக்கு) போன்றவையும் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ன என்பதையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

பாண்டியரின் கொற்கைத் துறைமுகம் முத்து வணிகத்தில் சிறப்புற்றிருந்ததை,

**"மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்**

**கொற்கைஅம் பெரும் துறை முத்து!" (அகம்.27 8-9)**

ஆக, தமிழகத்து துறைமுகங்கள் நாட்டை வளப்படுத்தும் பொருளாதார மையங்களாக இருந்துள்ளன.

**மொழிக்கலப்பு**

பல்வேறு நாட்டினர் தமிழ் நாட்டோடு கடல் வாணிகத் தொடர்பு

மேற்கொண்டமையால் மொழிக்கலப்பு ஏற்பட்டதையும் காண முடிகிறது. பல தமிழ்ச் சொற்கள் அயல் மொழிகளிலேயும், பல அயல்மொழிச் சொற்கள் தமிழிலேயும் கலந்துள்ளன.

அரேபியர் தமிழ் நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்டமையால் "அரிசி" என்னும் தமிழ்ச்சொல் "ஒருஜ்" என்று அரபு மொழியிலும், "ஓரைஸா" என்று கிரேக்க மொழியிலும் வழங்கப்பட்டு வருகிறது.

மத்திகை, சுருங்கை, கலம், கன்னல், ஓரை முதலான கிரேக்க மொழிச்சொற்கள் தமிழில் கலந்துள்ளன. இதற்குச் சங்க இலக்கியச் செய்யுள்களில் ஆதாரங்கள் உள்ளன.

மத்திகை என்பது குதிரை ஓட்டும் சம்மட்டி, இதனை முல்லைப்பாட்டு,

**"மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுஉடை"**

**((முல்லை.59)**

என்ற அடியில் குறிப்பிட்டுள்ளது.

சுருங்கை என்ற சொல் "சுருங்கை நெடுவழி" (பரி.20 104), "சுருங்கை வீதி" (சிலம்பு.14.65) என்று தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பதையும் பார்க்க முடிகிறது. சுருங்கை என்பது சுரங்கம் என்று கருதப்படுகிறது. இது தரைக்குக் கீழ் அமைக்கப்படும் நீண்ட வழி ஆகும்.

**கடல் வாணிக நடைமுறைகள்**

தொல் தமிழர் கடல் வாணிகம் செய்வதில் சில நெறிமுறைகளையும் கடைபிடித்து வந்துள்ளனர். கடலில் பயணம் மேற்கொள்ளும் போது தமிழ் வணிகர் தங்களுடன் மகளிரை அழைத்துச் செல்வதில்லை. இதனை தொன்மை இலக்கண நூலாகிய தொல்காப்பியம்,

**"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை"**

**(தொல். பொருள்.37)**

என்று சுட்டுகின்றது.

வணிகர்கள் பொருட்களுடன் கடல் கடந்து செல்லும் போது கொள்ளையர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள படை வீராகளையும் உடன் அழைத்துச் சென்றுள்ளனர். இவர்கள் “எறி வீரர்கள்“ எனப்பட்டனர்.

வணிகத்திற்குச் செல்லும்போது கப்பல்களில் முரசு ஒலிக்கப்படுவதுண்டு. பாய்மரத்தினின்று உயர்ந்த கொடி கப்பலில் பறந்தது. இதனால் அக்கப்பல் எந்த நாட்டைச் சார்ந்தது என்பதை அறிய முடிந்தது. துறைமுகங்களில் கப்பல்களைக் கடலின் அடியில் உள்ள பெரிய கற்களில் கட்டப்பட்ட நீண்ட பருத்த கயிறுகளால் கட்டி நிலை நிறுத்தியுள்ளனர். துறைமுகங்களில் கலங்கரை விளக்கங்களும் இருந்துள்ளன.

கடல் வாணிகம் சிறப்பாக நடைபெறுவதற்குப் பல்வேறு அமைப்புகளையும் நிறுவியுள்ளனர். இவ்வமைப்புகள் கடல் வாணிகம் செய்வதற்கு அரசர்களின் ஆதரவையும் பெற்றிருந்தன. நானாதேசி. பதினெண்விசயம், பதினெண் பூமி, ஐந்நூற்றுவர் போன்ற அயல்நாடுகளுடனும் கடல் வாணிகம் மேற்கொண்டதைக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

**“கொள்வதூஉம் மிகை கொளாது,**

**கொடுப்பதூஉம் குறை கொடாது” (பட்டினப்.210 211)**

என்ற பட்டினப்பாலை பாடல் வரி தொல்தமிழர் நேர்மையுடன் வணிகம் செய்வதைத் தமது கொள்கையாகக் கொண்டிருந்தனர் என்பதைப் பதிவு செய்துள்ளது.

எனவே தமிழ் வணிகர்கள் பொருளாதாரத்தைப் பெருக்கவும், அறிவியல் மற்றும் பண்பாட்டைப் பரிமாற்றம் செய்யவும் கடல் வாணிகத்தை ஒரு கருவியாக மேற்கொண்டிருந்தனர். மேலும், அவற்றிற்குச் சரியான வரையறைகளையும், நெறிமுறைகளையும் வகுத்துக் கொண்டுள்ளனர். கடல் வணிகத்தின் பொருட்டு காற்றின் தன்மை, கடல் ஓதம் போன்ற அறிவியல் செயற்பாடுகளை அறிந்த அறிஞர்களாக விளங்கியுள்ளனர். கப்பல் கட்டுதல், பழுது பார்த்தல், துறைமுகங்களை நிறுவுதல் போன்ற பல பணிகளைச் செய்யக்கூடிய

பொறியாளர்களாகவும் பண்டைத் தமிழர் வாழ்ந்துள்ளனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர்க்ள அறிவாலும், அனுபவத்தாலும், திறமையாலும், செயலாலும் கடல் வாணிகத்தின் மூலம் செழுமையாக வாழ்ந்துள்ளனர் என்பதைக் கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் மற்றும் அயல்நாட்டவரின் பயணக்குறிப்புகள் வாயிலாக அறிய முடிகிறது.

பண்டைத் தமிழரின் கடல் வாணிகத்தால் தமிழ்நாட்டின் பழம்பெருமையையும், பொருளாதார மேம்பாட்டையும் உணர முடிகிறது. அதுமட்டுமல்லாமல் தமிழகம் பிற நாடுகளோடு கொண்டிருந்த நட்புறவையும் அறிந்து கொள்ள முடிகிறது. கடல் சார்ந்த அறிவும், தொழில்நுட்ப நுணுக்கமும், கப்பல் இயக்கும் திறனும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழருக்கு மிகச் சிறப்பாக இருந்துள்ளது என்பதைக் காணும்போது வியப்பாகவே உள்ளது.

## அவ்வையும் அதியமானும்

**(சாமி. சிதம்பரனார்)**

அவ்வையும் அதியமானும் ஒரே காலத்தவர்கள். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்தவர்கள்.

அதியமான் தகடூரை ஆண்டவன். சேர மரபைச் சேர்ந்த ஒரு சிற்றரசன். வீரத்திலும், கொடையிலும் பேரரசன்.

அவ்வையார் ஒரு நாடோடிப் புலவர். அவரிடம் அதியமானுக்கு அளவுகடந்த அன்பு. அவ்வையார் வெறும் தமிழ்ப் புலவராக மட்டும் இல்லை. அதியமானுக்கு ஒரு அரசியல் ஆலோசகராகக் கூட இருந்திருக்கிறார்.

தொண்டைமானுக்கும் அதியமானுக்கும் ஒரு சமயம் போர் நடக்க இருந்தது. அப்பொழுது அவ்வையார் அதியமானுடைய தூதராகத் தொண்டைமானிடம் சென்றார். அதியமானுடைய வீரத்தை விளக்கிக் கூறித் தொண்டைமானைப் போரில் ஈடுபடாதபடி தடுத்தார்.

புறநானூற்றில் உள்ள அவ்வையார் பாடல்களிலே 20-க்கு மேற்பட்ட

பாடல்கள் அதியமானைப் பற்றிப் பாடியவை. இதிலிருந்தே அவ்வையார்க்கும் அதியமானுக்கும் எத்தகைய அன்பும் நட்பும் இருந்துள்ளது என்பதை அறியலாம். இருவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் இணைபிரியா நட்பினராயினர்.

**“ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்**

**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**

**தலைநாட் போனற விருப்பினன் மாதோ”  (புறம்.101)**

இது அதியமானைக் குறித்து அவ்வையார் கூறியது. “ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல நாம் அவனிடம் சென்ற நாட்கள் பல. பல நாட்கள் அவனோடு பழகினாலும், பலரோடு அவனிடம் சென்றாலும் அவன் முகம் சுளிப்பதில்லை. முதல் நாள் அவனைச் சந்தித்த அந்த வேளையில் அவன் எவ்வாறு வரவேற்று விருந்தளித்தானோ, அவ்வாறே எந்நாளும் வரவேற்றான், விருந்தளித்தான், பரிசில் தந்தான்“ இது மேலே பாடிய பாடலின் பொருள்.

விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பது ஒரு தமிழ்ப் பழமொழி, இதற்கு விலக்கானவன் அதியமான். அதியமான் நெடுமான் அஞ்சி, அஞ்சி என்பன இவனுடைய பெயர்கள். இவன் அவ்வையாரிடம் எவ்வளவு அன்பு கொண்டிருந்தான் என்பதற்கு மற்றொரு வரலாறு வழங்குகின்றது. அவ்வைக்கு அதியமான் நெல்லிக்கனி தந்த வரலாறு அது.

குதிரைமலையென்பது அதியமான் ஆட்சியிலிருந்த வளம் பொருந்திய மலை. அந்த மலையிலே எல்லாச் செல்வங்களுமிருந்தன. அதியமானும் ஓய்வுக் காலத்தில் உல்லாசப் பொழுதுபோக்கு அந்த மலைக்குப் போய் வருவான்.

ஒரு சமயம் அந்த மலையிலே போய் அதியமான் தங்கியிருந்தான். ஒரு நாள் மாலைப் பொழுதில் அந்த மலையின் காட்சியைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு நீர் அருவியையும் அதனை அடுத்த ஓர் உயர்ந்த பாறையின் பிளவிலே ஒரு நெல்லி மரமும் இருப்பதைக் கண்டான்.

அதே சமயத்தில் அங்கே மலைவாசிகள் பலர் கூடி நின்றனர். அந்த நெல்லிமரத்தை உற்று நோக்கி ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள்

அதியமானைக் கண்டவுடன் ஓடிவந்து, வணக்கம் கூறி, அந்த நெல்லி மரத்தைப் பற்றிய செய்தியைச் சொல்லத் தொடங்கினர்.

அரசே! இதோ இந்த மலைப்பாறைப் பிளவிலே வளர்ந்திருக்கும் நெல்லிமரம் ஓர் அதிசய மரம். அது அடிக்கடி காய்ப்பதில்லை. எப்போதாவது காய்க்கும். அது பழுத்தால் கருநிறமாகக் காணப்படும். எப்போதாவது அதிசயமாகக் காய்த்துப் பழுத்தாலும் ஒரே ஒரு பழந்தான் பழுக்கும். இத்தகைய அருமை நெல்லி மரம் அது. அந்தக் “கருநெல்லிக்கனியை உண்டவர்கள் என்றும் இறக்காமல் வாழ்வர். இப்பொழுது அதில் ஒரு கனி பழுத்திருக்கிறது. தங்களுக்கென்றே அது பழுத்திருக்கிறதென்று நினைக்கிறோம்“ என்றனர்.

“அப்படியா? ஆனால் அக்கனியைப் பறிக்க முடியுமா? முடியுமானால் பறித்துக்கொண்டு வாருங்கள்“ என்றான் அதியமான். அந்த மலைவாசிகள் அந்தக் கருநெல்லியைப் பறிக்க எவ்வளவோ முயன்றனர். அவர்களால் ஆகவில்லை. இறுதியில் அதியமானே தன் உயிரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அந்தப் பாறை வெடிப்புக்குள் இறங்கினான். பிறகு அந்தக் கனியைப் பறித்துக் கொண்டு வந்தான்.

அதை கண்ட மலைவாசிகள் அரசனை வாழ்த்தினர். அக்கனியை அருந்தும்படி வலியுறுத்தினர். அவன் “நான் அரண்மனைக்குச் சென்ற பின் அருந்துகிறேன்“ என்று சொல்லி விட்டு, அக்கனியை மிகவும் பாதுகாப்புடன் அரண்மனைக்குக் கொண்டு வந்தான். இக்கனியை உண்டவர்கள் இவ்வுலகில் நெடுங்காலம் உயிர் வாழலாம். இறப்பென்பது அவர்களை நெருங்காது என்ற மலைவாசிகள் கூறிய சொல்லைக் கேட்டவுடன் அதியமானுக்கு அவ்வையாரின் நினைப்பு வந்துவிட்டது. அந்தக் கனியைத் தானுண்டு நீண்ட நாள் வாழ வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு எழவில்லை.

எப்படியேனும் அந்தக் கனியை அவ்வையாருக்கு அளிக்க வேண்டும். அவரை அருந்தும்படி செய்ய வேண்டுமு. அவர் நீண்ட நாள் இவ்வுலகில் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவன் உள்ளத்தில் உதித்தது. ஆதலால் அவன் அந்தக் கனியை மிகவும் அருமையாகப் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்தான், அவ்வையாரின் வருகையை எதிர்பார்த்து நின்றான்.

அதியமான் எதிர்பார்த்தபடி அவ்வையார் வந்துவிட்டார். அரசனைக் கண்டு அளவளாவினார். அச்சமயத்தில் அரசன் அந்த நெல்லிக்கனியைக் கொண்டு வந்து அவ்வையாரிடம் கொடுத்தான். "அன்னையே, நீங்கள் வழி நடப்பால் களைப்படைந்திருக்கிறீர்கள். அந்த அரிய நெல்லிக்கனியை அருந்திக் களைப்பாறுங்கள்" என்று சொல்லி அன்புடன் அளித்தான்.

அவ்வையும் அதனை வாங்கி அருந்திவிட்டார். அவருக்கிருந்த தண்ணீர்த் தாகம், வழி நடந்து வந்த களைப்பு போன்றவை அக்கனியின் வரலாற்றை விசாரிக்கத் தூண்டவில்லை. அவனைச் சூழ்ந்திருந்தவர்களின் முகத்திலே வியப்புக் குறிகள் தாண்டவமாடுவதை அவ்வையார் பார்த்தார். அதியமானுடைய முகத்திலும் என்றுமில்லாத மகிழ்ச்சி இன்று பொலிவுறுவதைக் கண்டார். அவ்வையாரும், தான் உண்ட நெல்லிக்கனி மிகவும் சுவை பொருந்திருந்ததையும் அதற்கு முன் அத்தகைய கனியைத் தான் அருந்தியதே இல்லை என்பதையும் உணர்ந்தார். உடனே அவர் உள்ளத்திலும் ஐயம் தோன்றியது. "அரசே! ஏது இந்தக் கருநெல்லிக் கனி? மிகவும் இனிப்பாய் இருக்கிறதே. இதற்கு முன் இதுபோன்ற கனியை நான் கண்டதுமில்லை. உண்டதுமில்லையே" என்றார் அவ்வையார். அதன் பிறகுதான் அதியமான் அந்தக் கனியின் பெருமையைக் கூறினான். "நான் இந்தக் கனியையருந்தி நீண்ட நாள் வாழ்வதால் உலகிற்கு என்ன பயன்? நீங்கள் அருந்தி நீண்ட நாள் வாழவேண்டும். உங்களால் தமிழன்னை வளம் பெறவேண்டும். அதற்காகவே இக்கனியைத் தங்களிடம் தந்தேன்" என்று மகிழ்ச்சியோடு சொன்னான்.

அதியமானுடைய அன்பைக் கண்டு அவ்வையாருக்கு ஆனந்தக் கண்ணீர் வந்துவிட்டது. அதியமானுடைய தியாகத்தைப் பாராட்டி அவனை வாழ்த்தினார். "வெற்றியைத் தருகின்ற கூர்மையான வாளைக் கையில் ஏந்திப் பகைவர்கள் போர்க்களத்தில் வீழும்படி அவர்களைக் கொன்று குவித்து வீரக் காப்பணிந்த அதியமானே! மாற்றாரைப் போரிலே புறமுதுகிடச் செய்யும் வீரச் செல்வத்தையுடையவனே! அழகிய மாலையை அணிந்த அஞ்சியே! நீ, பால் போன்ற பிறைச்சந்திரனை ஒத்த நெற்றியையும் பிரகாசிக்கும் தலையையும்,

நீலநிறமுள்ள அழகிய கழுத்தையும் உடைய சிவபெருமானைப் போ நீடுழி வாழ்வாயாக!

பழமையான பெருமலையின் பாறைப் பிளவிலே வளர்ந்துள்ள மரத்திலே பறித்த கனியை - சிறிய இலைகளையுடைய நெல்லிமரத்தின் இனிமையான கனியை - அதன் பெருமையை வெளியிடாமல் உன் உள்ளத்திலேயே அடக்கிக் கொண்டு எமக்குக் கொடுத்தனை, நான் சாவின்றி நீண்ட நாள் வாழ்ந்திருக்க எண்ணி எனக்குக் கொடுத்தாய், உன்னுடைய இத்தகைய அன்பை நான் எப்படிப் புகழ்வேன்! என்று புகழந்து பாடினார்.

இந்த வரலாற்றைப் புறநானூற்றின் 91 -வது பாடலிலே காணலாம்.

**"வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்**

**களம்பட்க கடந்த கழல்தொடித் தடக்கை,**

**ஆர்கலி நறலின் அதியர் கோமான்**

**போர் அடு திருவின் பொலந்தார் அஞ்சி" (புறம்.91)**

நெல்லிக்கனியின் பெருமையைச சொல்லிவிட்டால் அவ்வையார் அதனை உண்ணமாட்டார். அதியமானையே உண்ணும்படி வற்புறுத்துவார். ஆதலால் அதன் சிறப்பை அதியமான் சொல்லாமல் அவ்வையாரிடம் அளித்தான். இக்கருத்து, "தீங்கனி குறியாது, ஆதல் நின் அகத்து அடக்கி" என்ற தொடரிலே அமைந்து கிடப்பதைக் காணலாம். அதியமானுடைய வீரத்தையும் கொடையையும் பாராட்டி அவ்வையார் பல பாடல்கள் பாடியிருக்கின்றார். அதியமான் இறக்கும் வரையிலும் அவனுடைய உயிர்த்தோழியாக வாழ்ந்தார். அவ்வையார் அவன் இறந்த பின்னும் அவனைக் குறித்துப் பாடினார்.

இந்த அவ்வையார் முதன் முதல் அதியமானைப் பார்ப்பதற்காகச் சென்ற போது இருவருக்கும் உடனே சந்திப்பு ஏற்படவில்லை. அதியமானைக் காண்பதற்காக அவர் நீண்ட நேரம் காத்திருந்தார். இறுதியில் பொறுமையிழந்தார். உடனே அதியமான் அரண்மனையின் வாயில் காவலனைப் பார்த்து, "ஏ காவலனே! உன்னுடைய அரசன் எப்பொழுதம் பரிசிலர்க்கு எளியன்! எந்த நேரத்திலும்

பரிசிலர்கள் அவனைச் சந்திக்கலாம் என்ற கேள்வியுற்றே நான் பரிசில் பெறவந்தேன். ஆனால் அவனோ என்னை மதிக்கவில்லை! எனக்கு இவ்வுலகில் சோறு கிடைக்காமலில்லை, எத்திசைக்கு நான் போனாலும் எனக்குச் சோறு கிடைக்கும்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் இக்கருத்தை அவர் ஒரு பாடல் மூலம் தெரிவித்தார்.

இச்சமயத்தில் அதியமான் ஓடிவந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவ்வையாரின் சிறந்த புலமையை அறிந்து அவரைத் தன் உண்மை ஆசிரியையாக ஏற்றுக்கொண்டான். இதுமுதல் தான் அவ்வையார்க்கும் அதியமானுக்கும் இடைவிடாது நட்பு வளர்ந்து வந்தது. இப்படி அவ்வையாருக்கும் அதியமானுக்கும் நட்பு வளர்ந்து பெருகுவதற்குக் காரணமாக இருந்த இப்பாடலின் பொருள் தான் கீழ்வருவது.

"வாயில் காவலோனே! வாயில் காவலோனே! பரிசிலர்க்கு அரண்மனை வாயிலை அடைக்காமல் எப்பொழுதும் திறந்திருக்கின்ற அதியமான் நெடுமான் அஞ்சியின் வாயில் காவலனே! புலவர்கள் வள்ளல்களின் காதுகளிலே சிறந்த மொழிகளை விதைப்பார்கள். தாம் நினைப்பதை எவ்வகையினும் முயன்று முடிக்கும் நெஞ்சுரம் உடையவர்கள் வள்ளல்களிடம் பரிசில் பெறுவதற்காக வருந்தித் திரிவார்கள். இவ்வாறு வருந்தித் திரிந்து பரிசல் பெறுவதையே வாழ்க்கையாகக் கொண்டவர்கள் புலவர்கள். இத்தகைய புலவர் மரபைச் சேர்ந்தவள் நான்.

உன்னுடைய அரசனோ, விரைந்து செல்லும் குதிரையையுடையவன் நெடுமான் அஞ்சி என்னும் பெயரை உடையவன். அவன் தன் தரத்தை எண்ணாமல் மறந்து விட்டானோ! அல்லது என்னையும் என்னுடைய தன்மையையும் அறியாமல் போய்விட்டானோ! இவ்வுலகில் அறிவும் புகழும் உடையவர்கள் இல்லாமற் போய்விடவில்லை. அவர்கள் அடியோடு மாண்டு மடிந்து போய்விடவில்லை, உலகமும் பாழாகிவிடவில்லை. எமக்குப் பரிசளிக்க இவ்வுலகில் புகழும் அறிவும் உடையோர் எவ்வளவோ பேர் இருக்கின்றனர்.

ஆதலால் எமது யாழை எமது தோளிலே சுமந்து கொண்டோம்,

வாத்தியங்கள் வைக்கும் எமது பையைச் சுருக்கிக் கொண்டோம்.

மரங்களை அறுத்துப் பல பொருள்களைச் செய்யும் தச்சனுடைய சிறுவர்கள் - முழு அதாவது வாய்ச்சியைப் பெற்ற வல்லமையையுடையவர்கள் - காட்டிலிருந்தால் அவர்கள் சும்மா இருப்பார்களா? அவர்கள் கைக்குத் தகுந்த வேலையை அந்தக் காடு அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்குமல்லவா? அவர்கள் விரும்பியதைத் தங்கள் கையிலிருக்கும் மழுவின் மூலம் அந்தக் காட்டிலே பெற்றுக் கொள்ள முடியும். அதுபோல்தான் எனது நிலைமையும் நான் எத்திசைக்குப் போனாலும் சென்ற திசைகளில் எல்லாம் எனக்குச் சோறு கிடைக்கும்.

இதுவே அவ்வையார் கூறிய பாடலில் அடங்கிய பொருள்,

**"வாயி லோயே! வாயி லோயே!**

**வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்**

**உள்ளியது முடிக்கும் ரன்உடை உள்ளத்து**

**வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்"** **(புற.206)**

உனது தலைவனாகிய அதியமான் நெடுமான் அஞ்சியின் பரிசிலால்தான் நான் வாழவேண்டுமென்ற அவசியம் இல்லை. எனக்குப் பரிசில் அளிப்போர் இந்த நாட்டின் பல பாகங்களிலும் இருக்கின்றனர் என்பதே இப்பாட்டில் அமைந்துள்ள கருத்து. இதன் மூலம் அவ்வையாரின் வீரத்தன்மையைக் காணலாம். இதுவே அவ்வையார்க்கும் அதியமானுக்கும் முதன் முதல் நட்பினை விளைவித்த கருத்தமைந்த பாடல் எனக் கருதலாம்.

## 7. சித்தர்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

**(முனைவர். கோ.சுரேஷ்)**

இன்றைய உலகின் மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், இறைநம்பிக்கை போன்ற சிந்தனைகளுக்கு முன்னோடியாகவும் முதன்மையாகவும் திகழ்ந்தவர்கள் சித்தர்களே. இயற்கைக்கு மாறான சக்திகளை,

தவத்தின் மூலமாக இறைசக்தியைப் பெற்றவர்களாகிய சித்தர்கள் தம் கருத்துக்களைத் தம் பாடல்கள் வாயிலாக வெளியிட்டு உள்ளனர். சித்த மருத்துவம், காற்றில் நடத்தல், நீரில் நடத்தல், காற்றை உணவாக உட்கொள்ளுதல், பிறர் கண்ணில் படாமல் உலாவுதல், கூடுவிட்டுக் கூடு பாய்தல், நாடி சோதிடம், எண் சோதிடம், முற்பிறப்பு ரகசியம், கரு உற்பத்தி போன்ற பலதரப்பட்ட செய்திகளையும் சித்தர்கள் தம் ஞானத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளனர். அக்கருத்துக்கள் இன்றைய மருத்துவ, விஞ்ஞான வல்லுநர்களுக்கே பெரும் சவாலாக விளங்குகின்றது. இறைவனின் தூதர்களாக விளங்கியவர்கள் கூறும் கருத்துக்காக சித்தர்களின் கருத்துகளாக காணப்படுகின்றன.

**சித்தர்கள் என்போர் யார்?**

இயற்கை உணவினை உட்கொண்டு மனதைத் திடப்படுத்தி, நல்ல சிந்தனைகளையும், நல்ல எண்ணங்களையும், அன்பினையும், கருணையையும் மனதில் நிலை நிறுத்தி தவத்தினை மேற்கொண்டு இயற்கையின் ஆற்றலை உணர்ந்து வெளிப்படுத்தியவர்களே சித்தர்கள் ஆவர் “சித்தன் போக்கு சிவன் போக்கு” என்ற பழமொழி கூட மேற்கண்ட உண்மைகளை உணர்த்துவதாக உள்ளது. மற்றவர்களது சிந்தனைகளைப் பற்றி எண்ணாது தனது மனத்திற்கு நல்லவனவாகத் தோன்றுவதைனைப் பின்பற்றியுள்ளனர்.

சித்து வேலைகளைச் செய்வோரும், கண்கட்டி வேலைகளைச் செல்வோரும் சித்தர்கள் என்பர். மற்றவர்களது சிந்தனையில் தோன்றாதவற்றை, தனது ஞானத்தால் உதித்ததைச் செய்கின்ற பொழுதும், தவத்தின் பயனால் கிடைத்த சக்திகளை வெளிப்படுத்தும் பொழுதும் மேற்கண்ட பேச்சுகள் எழுகின்றது. இன்றைய காலத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞானத் தொழில் நுட்பத்தை வியந்து நோக்கும் மானிடர்கள் அதனது அழிவுதரக் கூடிய சக்திகளைக் காணுகின்ற பொழுது முகம் சுழிக்கின்றனர். ஆனால் அன்றைய காலங்களில் ஆக்க சக்திக்கு மட்டுமே பயன்படுகின்ற செயல்களைப் பேணிப் பாதுகாப்பதில் நாட்டம் செலுத்தினர் சித்தர்கள்.

நோய் நொடிகளின்றி நீண்ட காலம் வாழ்வதற்கான முறைகளைக் கூறியவர்களும் சித்தர்களே. மருந்து வகைகளை உட்கொள்ளாமலும், உடம்பை வளர்க்கும் சித்தாந்தத்தைத் தம் மெய்யறிவுப் பாடல்கள் வாயிலாக வெளியிட்டவர்களும் அவர்களே. பாடல்களை அவர்களே பாடினரா? அல்லது அவர்களது கருத்துக்களைப் பிற்காலத்தினர் யாரேனும் பாடினரா? அவர்களது காலத்தில் இருந்த மொழிக்கூறு என்ன? அவர்கள் அனைவரும் இந்நாட்டைச் சார்ந்தவர்களா? சித்தர்கள் அனைவரும் ஒரே காலத்தினரா? அவர்களது காலம் என்ன? சித்தர்களுக்கு முன்னோடிகள் யார்? எனப் பல கேள்விகள் எழுகின்றன. இருப்பினும் ஒவ்வொரு சித்தரும் ஒவ்வொரு வகையான சிந்தனைகளைக் கூறிச் சென்றுள்ளனர்.

**பதிணெண் சித்தர்கள்**

பண்டைகாலத்தில் 1. திருமூலர், 2. இராமதேவர், 3. கும்பமுனி, 4. இடைக்காடர், 5. தன்வந்திரி, 6. வால்மீகி, 7. கமலமுனி, 8. போகர், 9. மச்சமுனி, 10, கொங்கணர், 11. பதஞ்சலி, 12. நந்திதேவர், 13. போதகுரு, 14. பாம்பாட்டிச் சித்தர், 15. சட்டைமுனி, 16. சுத்தானந்தா தேவர், 17. குதம்பைச் சித்தர், 18. கோரக்கர் ஆகிய பதினெண் சித்தர்க் இருந்த்தாகப் பல தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் சிலரோ அகத்தியர், கைலாச நாதர், கடன் கண்ணனார், வாத முனி, கமல முனி, பிரம்முனி போன்றவர்களும் பதினெண் சித்தர்களுள் அடங்குவர் என்பர். பிற்காலத்திலும் பட்டினத்தார், பத்திரகிரியார், இராமலிங்கர், பாரதி மற்றும் இசுலாமிய அறிஞர்கள், சிலரின் பாடல்களும் சித்தர்கள் பாடல்களின் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன.

**அட்ட சித்தி**

எட்டு வகையான சிறப்புக் குணங்களைக் கொண்டவர்களை அட்ட சித்தி என்பர். அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் போன்ற குணங்களை எண் வகைச் சித்தர்கள் என்று அபிதான சிந்தாமணி பொருள் கூறும்.

**1. அணிமா**

கண்ணுக்குத் தெரியாத சிறிய உருவினைக் கொண்டவராகத் திகழும் சக்தி பெறுதலை “அணிமா“ என்பர்.

**2. மகிமா**

விண்ணையே முட்டுமளவிற்கு மிகப்பெரிய தோற்றத்தைக் கொண்டவராக விளங்கும் சக்தி பெறுதலுக்கு “மகிமா“ என்று பெயர்.

**3. இலகிமா**

உடம்பினை நீரில் நடக்கவும், காற்றில் பறக்கவும் இலகுவாக மாற்றும் சக்தி பெறுதலை இலகிமா என்பர். முனிவர்கள் பல இடங்களில் திரிந்தது இச்சக்தியின் மூலமே என்பதை உணரலாம்.

**4. பிராப்தி**

வேண்டியவற்றைத் தமது சிந்தனை ஆற்றலால் அடையும் சக்திக்கு “பிராப்தி“ என்ற பெயர்.

**5. பிராகாமியம்**

தமது வல்லமையால், சக்தியால் வேண்டியவற்றை உருவாக்கிக் காட்டும் முயற்சிக்கு “பிராகாமியம்“ என்ற பெயர்.

**6. ஈசத்துவம்**

அனைவரும் தன்னைப் போற்றும்படி, வணங்கும்படியான சக்தியைப் பெறுதலுக்கு “ஈசத்துவம்“ என்று பெயர்.

**7. வசித்துவம்**

உலகையும், அதன் பெருமைகளையும் தன்னகத்தே வசியப்படுத்தி வைத்திருத்தலுக்கு “வசித்துவம்“ என்று பெயர்.

**8. கரிமா**

ஐம்புலன்களைக் கொண்ட தனது உடலமைப்பைத் தன் கட்டுக்குள் கொண்டு வந்து இன்ப துன்பங்களைக் கடந்து மனதை நிலைப்படுத்தும் ஆற்றலுக்கு “கரிமா“ என்ற பெயர்.

சித்தர்கள் என்றால் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள் மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள் என்று பொருள் சொல்லுவதே பொருத்தமாகும்.

**சித்த வைத்தியம்**

சித்தர்கள் இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளையும், தேன், மரப்பட்டை, வேர்கள், காய்கனி வகைகளையும் கலந்து நவபாசானங்களையும், மூலிகை மருந்துகளையும், கசாயங்களையும் உருவாக்கி மக்களைத் தீராத நோய்களிலிருந்து காப்பாற்றியுள்ளனர். அவ்வகை மருத்துவமுறைகள் உடலுக்கு எவ்விதப் பக்க விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. நாடி அறிந்து நோயின் குணங்களைக் கண்டுபிடிப்புது சித்த மருத்துவத்தின் சிறப்பம்சமாகும். நீண்ட நாட்கள் நோய்நொடியின்றி தவப்பயிற்சியின் மூலமும், காயகல்பப் பயிற்சிகள் மூலமும் வாழலாம் என்பது சித்த மருத்துவத்தின் சிறப்பாகும்.

சித்த மருத்துவத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட மூலிகை மருந்துகளில் எவற்றை உண்ண வேண்டும். எவற்றைப் பூச வேண்டும். எவற்றை நுகர வேண்டும் என்பதனையும், எந்த வேளையில் எந்த மருந்து வகைகளை உண்ண வேண்டும். எத்தனை நாட்கள் உண்ண வேண்டும். ஒரு வேளைக்கு எவ்வளவு உண்ண வேண்டும் என்பதனையும் குறிப்பிட்டுள்ளனர். ஒடிந்து போன எலும்பினை ஒட்ட வைக்கும் பச்சிலை வைத்தியத்தையும் சித்தர்கள் கண்டறிந்துள்ளனர்.

**சித்தர்கள் எழுதிய நூல்கள்**

சித்தர்கள் பல்வேறு வகைப்பட்ட நூல்களை இயற்றியுள்ளனர். மருத்துவம், சோதிடம், தியானம், வான சாஸ்திரம், வர்மக்கலை, மூச்சுப்பயிற்சி, நீண்ட நாட்கள் வாழும் பயிற்சி போன்ற பலதரப்பட்ட கருத்துக்களைத் தம் பாடலில் கூறியுள்ளனர். சட்டை முனியின் சட்டை முனிவாத காவியம் ஆயிரம்,

அகத்தியரின் பரிபூரணம் நானூறு, அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம், செந்தூரம் முந்நூறு, அகத்தியர் வைத்திய பூரணம், தேரையரின் தைல வர்க்கச் சுருக்கம், தேரையர் வைத்திய காவியம், தேரையர் வைத்தியம் ஆயிரத்தொன்று, நீர் நிறக்குறி சாத்திரம் என்ற நூல்களும் போகரின் போகர் எழுநூறு, போகர் ரத்தின வைப்பு என்ற நூல்களும், கோரக்கரின் மலைவாகடம் என்ற நூலும், மச்ச முனிவரின் மச்ச முனி நாயனார் எண்ணூறு என்ற நூலும், தன்வந்திரி முனிவரின் வைத்தியக்கும்மி, வைத்தியக் காவியம், கருக்கடை நிகண்டு என்ற நூலும், திருவள்ளுவரின் ஏணி ஏற்றம் இருநூறு, ஞானவெட்டியான் போன்ற நூல்களும் சித்தர்களின் பெருமையைப் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன.

**ரசவாதக்கலை**

இரும்ப, வெள்ளி, ஈயம் போன்ற உலோகங்களைப் பொன்னாக்கும் ரசவாதக் கலையில் சித்தர்கள் கைதேர்ந்தவர்கள் என்பது வாழையடி வாழையாக, செவிவழியாக, புராணங்கள் வாயிலாக, கதைகள் வாயிலாகக் கூறப்பட்டும், நம்பட்டும், ஏமாற்றப்பட்டும் வரும் ஒரு கலையாகும். ஆனால் ஒரு உலோகத்தை இன்னொரு உலோகமாக மாற்ற முடியாது என்பதும், ஒரு உலோகத்தை இன்னொரு உலோகத்தோடு சேர்க்கும் பொழுது நிற வேறுபாட்டால் அதனைப் போன்று தோன்றும். ஆனால் தனது தனித்தன்மையிலிருந்து மாறாது என்பதும் உண்மை. இதனையறியாமல் ஏமாற்றப்பட்டவர்களும், ஏமாற்றியோர்களும் ஏராளம். ஆனால் சித்தர்களின் ரசவாதம் என்பது வேறு ரசம் என்பது இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகள், வேர்கள், பட்டைகள், காய்கனிகள், தேன் போன்றவற்றை ஒன்றோடொன்று கலந்து ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனியாக மருந்துகளை அறிந்து கூறப்பட்டதே ரசவாதமாகும். ரசம் என்றால் சாறு என்றும், வாதம் என்றால் நோய்களை எதிர்த்து வெல்லுதல் என்பதும் பொருளாகும். எந்தத் தீர்க்க முடியாத நோயையும் சித்த மருத்துவத்தின் மூலம் தீர்க்கப்படுதலே ரசவாதமாகும்.

**தவப்பயிற்சி**

உலகில் அமைதி நிலவவும், மக்கள் மனதில் மகிழ்ச்சி தோன்றவும்,

பிரச்சினைகள் மறையவும், செல்வத்தையும், பதவியையும், அதிகாரத்தையும் வழங்குவதன் மூலம் ஏற்படுத்த முடியாது. மனதை ஒரு நிலைப்படுத்துவதன் மூலமும், தவப்பயிற்சியை வழங்குவதன் மூலமும்தான் நிறைவேற்ற முடியும். உலகம் முழுவதும் தற்காலங்களில் பயிற்சி நிலையங்கள் வாயிலாக இலவசமாகவும், கட்டணத்திற்கும், தவப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. யோகா, தியானம், நிஷ்டை, மௌனம் போன்ற பல பெயர்களில் இப்பயிற்சி நடைபெற்று வருகிறது. இப்பயிற்சிக்கு மூலமானவர்கள் சித்தர்களே ஆவர்.

**குதம்பைச்சித்தர்**

**"நாட்டத்தைப் பற்றி நடுவணை சேர்வோர்க்கு**

**வாட்டங்கள் ஏதுக்கடி - குதம்பாய்**

**வாட்டங்கள் ஏதுக்கடி?" (குதம்பைச் சித்தர், பா.எண்.9)**

மேற்கண்ட பாடலின் வாயிலாகக் குதம்பைச் சித்தர், "தவப்பயிற்சி பெற்றவர்கள் தமது ஞானத்தைப் புருவ நெற்றியில் காண்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் துன்பம் என்பதோ, குழப்பம் என்பதோ, குறை என்பதோ காணப்படாது. அவர்கள் வாழ்க்கையில் எதனைக் கண்டும் பயப்படமாட்டார்கள். எதனையும் ஞான நல்லறத் தோடும், வீரச் சிந்தனையோடும் வெற்றி காண்பார்கள். தவத்தின் பயனால் எதிரில் வரும் எமனையும் வெல்வார்கள்" என்கிறார்.

மனிதன் நூறாண்டுகள் தான் வாழமுடியும் என்று நம்புகிறான். ஆனால் சித்தர்கள் நோய் நொடியின்றி யாதொரு துன்பமில்லாமல், முன் வினைகள் ஏதும் வருத்தாமல் என்றும் இளமையுடன் மகிழ்ச்சியுடன் யோகப் பயிற்சியின் மூலமும் காயகல்பப் பயிற்சியின் மூலமும் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் வாழலாம் என்று கண்டறிந்துள்ளனர்.

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**

**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"**

**(திருமூலர். பா.எண்.724)**

என்பது திருமூலரின் வாக்கு உடம்பு நிலைத்திருக்கும் வரை உயிர் நின்றிருக்கும். உடம்பு நோய் நொடியிலோ, விபத்திலோ அழிய நேரிட்டால் உயிர் பிரிந்து சென்று விடும். உடம்பு அழியக்கூடியது. உயிர் நிலைத்திருக்கக் கூடியது என்பதனை மேற்கண்ட பாடலால் விளக்குகிறார். தியானத்தின் மூலம் மனதை நிலைப்படுத்தி முறைப்படுத்தினால் நோய் நொடியில்லாமல் உடம்பானது பலநூறு ஆண்டுகள் நிலைத்திருக்கும் என்பது சித்தர்கள் கண்ட சிந்தனையாகும்.

வேதாத்திரி மகரிஷி அவர்களும் தவப்பயிற்சியினால் மாணவர்களின் படைப்புத்திறன், மன உறுதி, மதிநுட்பம் மற்றவர்களை மதிக்கின்ற பெருந்தன்மை, பொறுமை, ஏற்புத்திறன், மற்றவர்களோடு இணைந்து வாழும் தன்மை ஆகிய உயர் விழுமியங்கள் பெருகுகின்றன என்பார்.

**சினம் தவிர்த்தல் வெற்றி பெறலாம்**

மனிதனுக்குள் குடி கொண்டிருக்கும் நச்சுத் தன்மை கொண்ட கொடிய கோபமாகிய பாம்பினை அடக்கி மடக்கினால் தான் அவன் வாழ்க்கையில் வெற்றபெற முடியும். மேலும், மற்றவர்களுக்கும் நன்மையைக் கொடுத்துத் தன்னையும் காத்து, பயன்பெற முடியும் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

**"சினம் என்னும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே - யாவும்**

**சித்தி என்றே நினையேடா தாண்டவக்கோனே"**

**(இடைக்காட்டுச் சித்தர், பா.எண்.14)**

இதே கருத்தினைப் பலரும் கீழ்க்கண்டவாறு வலியுறுத்துகின்றனர்.

**"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**

**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று" (குறள்.307)**

**"சினம் கொள்வார் தம்மைத்தாமே தீயால் சுட்டுச்**

**செத்திடுவார் ஒப்பாவார், சினம்கொள் வார்தாம்"**

**(மகாகவி பாரதியார்)**

**“ஒரு நாள் சினம் பலநூற்றாண்டுச்**

**சிறப்புகளை அழித்துவிடும்”**

**(திபெத்தயப் பழமொழி)**

பிறர்மேல் செலுத்துகின்ற கோபமானத நம்மையும் பாதிக்கிறது மனதில் படபடப்புத் தோன்றுகிறது. என்ன செய்கின்றோம் என்று தெரியாமல் நமது பொருளையே அழித்து விடுகிறோம். பிறரை வதைத்து விடுகிறோம். பிறகு நமது செயலை நினைத்தால் நமக்கே சிரிப்பு வருகிறது.

“ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு“ என்பது போல அறிவற்றவனின் செயல்போலச் சினம் கொள்ளுகின்ற பொழுது நடந்துகொள்கின்றோம். இந்செயல்களினால் சமுதாயத்தில் நமது மதிப்பை இழக்கிறோம். ஆகவே சினத்தைத் தவிர்த்து, பொறுமை காத்து, உடலுக்கு நோய்கள் வராமல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். மனதைவிட்டுச் சினம் அகன்றால்தான் ஆனந்தம் பிறக்கும். ஆனந்தம் பிறந்தால்தான் சிரிப்புத் தோன்றும். சிரித்துச் சிரித்து வாழ்ந்தால் ஆயுளும் பெருகும். கோபம் கொள்ளும்பொழுது அழகான முகமும் களையிழந்து காணப்படும். கோபத்தின் முடிவு விரக்தி, பகை, சண்டையில் முடிவடையும், இக்கருத்துக்களைச் சித்தர்கள் வாழ்வில் கடைப்பிடித்தும் அறிவுறுத்தியும் நூல்களை இயற்றியுள்ளனர்.

**உள்ளமே கோயில்**

இறைவன் எவர்கண்ணிலும் புலப்படாமல் இயற்கை சக்தியாக இருப்பதை உணர்வாயாக. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இறைவன் உள்ளான் என்பதையும் அறிவாயாக, உள்ளத்தைத் தூய்மையாகவும், கெட்ட எண்ணங்களுக்கு இடங்கொடுக்காமாலும், குழப்பங்கள் இல்லாமலும் தவத்தை ஒழுகினால் இறையுணர்வை அடையலாம். இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் போன்ற பல கருத்துக்களுக்கு வித்தாக அமைந்தது இடைக்காட்டுச் சித்தரின் பாடலாகும்.

**“கட்புலனுக்கு எள்ளளவும் காணாதிருந்து எங்கும்**

**உட்புலனாய் நின்ற ஒன்றை உய்த்துஅறிநீ புல்அறிவே”**

**(இடைக்காட்டுச் சித்தர். பா.எண்.68)**

சுற்றுப்புறத்தையும், உடலையும் தூய்மையாக வைத்திருந்தால் போதாது. இறைவன் உறைகின்ற இடமாகிய உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இச்சிந்தனைகளை காந்தியடிகளும் விவேகானந்தரும், பாரதியாரும் மற்றும் பலரும் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளனர்.

**“தீயவற்றைப் பார்க்காதே**

**தீயவற்றைக் கேட்காதே**

**தீயவற்றைப் பேசாதே” (காந்தியடிகள்)**

உள்ளமும் கோயிலும் வேறல்ல, இரண்டும் ஒன்றே. எப்படிக் கடல் நீரினில் உப்பும் நீரும் இணைந்துள்ளதோ அதனைப் போன்றது தான் இதுவும் என்கிறார் அகப்பேய்ச் சித்தர்.

**“ஒப்பனை அல்லவடி, அகப்பேய்!**

**உன் ஆணை சொன்னேனே!”**

**(அகப்பேய்ச்சித்தர், பா.எண்.81)**

உயர்வாகச் சொல்லவில்லை. பெருமையாகச் சொல்லவில்லை நீரில் எப்படி உப்பு கலந்துள்ளதோ அதுபோல உன்னுடைய உள்ளத்திலும் இறைவன் கலந்துள்ளான். அதனை உணர்ந்த தூய எண்ணத்தோடு, அன்போடு, இரக்க மனப்பான்மையோடு, சினமின்றி வாழ்வாயாக என்கிறார் திருமூலர். மேலும், “உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்“ என்று உள்ளத்தின் பெருமையையும் விளக்கியுள்ளார். ஒருவர் வாழ்ந்த போதும், வாழ்ந்து முடிந்தபோதும் பெருமைப்பட வைப்பது மிகுந்த செல்வம் பெற்றவர்களை அல்ல பெரிய உள்ளம் படைத்தவர்களை ஆகவே மிகுதியான செல்வத்தைத் தேடாமல் மிகுதியான பெருமையைத் தேடினால் அது என்றும் நிலைத்திருக்கும்.

**“மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்**

**மறலிதான் வருகையில் வாரிச் செல்வரே?”**

**(பாம்பாட்டிச் சித்தர் பா.எண்.44)**

என்ற பாம்பாட்டிச் சித்தரின் பாடல் மேற்கண்ட செய்தியையே பிரதிபலிக்கிறது. ஒருவர் மிகப்பெரிய மலையைப் போன்ற பொன்னையும் பொருளையும் தன்னிடத்தே வைத்திருந்தாலும் அவர் நோயினாலோ வேறு காணரத்தினாலோ உயிர்விடும் தருவாயில் இருப்பாரேயானால் அச்செல்வத்தினால் அவரது உயிரை மீட்க முடியாது. ஆகவே வாழ்கின்ற காலத்தே சாதி, மத, மொழி பேதங்களைக் கடந்து, துன்புறுவோர்க்கு உதவிசெய்தும், பிறருக்குத் துன்பமிழைக்காமலும் வாழ்பவரே இறப்பிற்குப் பின்பு இறவாத புகழோடு வாழ்வார்கள் என்கிறார்.

**“கானலைமான் நிர்எனவே கண்டு செல்லல்போல்**

**காசினிவாழ் வினைமூடர் கண்டு களிப்பார்”**

**(பாம்பாட்டிச் சித்தர், பா.எண்.49)**

என்றும் பாம்பாட்டிச் சித்தரின் பாடலில், கோடைக்காலத்தில் தொலைவிலே தோன்றும் கானல் நீரை நம்பி மான் ஓடிச்சென்று களைப்புடன் திரும்புவதைப்போல, மனதில் தூய்மையில்லாமலும் அன்பில்லாமலும், வஞ்சனைக்குணத்தோடு ஏமாற்றும் மூடர்கள் இறைவனை நினைத்துக் கொண்டு ஆலயத்திற்குச் சென்று காணிக்கை செலுத்தியும், அன்னதானம் படைத்தும், கால்நடையாகவும், கடல்மார்க்கமாகவும் புண்ணியத்தலங்களுக்குச் சென்று புண்ணிய காரியங்கள் செய்தும் பயன் ஒன்றும் இல்லை என்கிறார். பிறர் நலம் பேணுவோரும் இரக்க மனப்பான்மை கொண்டோரும் எவ்வித பூஜை, புனஸ்காரம், புண்ணிய யாத்திரை மேற்கொள்ளாவிட்டாலும் புகழ் பெறுவார்கள். இதனை பிற்காலப் புலவர்கள் போற்றியுள்ளனர். ஞானிகள் வாழ்ந்து காட்டியுள்ளனர்.

**நல்வழியை நாடிச் செல்**

**"நல்ல வழிதனை நாடு - எந்த**

**நாளும் பரமனை நத்தியே தேடு"**

**(கடவெளிச் சித்தர் பா.எண்.6)**

உலகினில் காணப்படுவனவற்றுள், தோன்றியவற்றுள் நல்லதும், காணப்படும், தீயதும் காணப்படும், அவற்றுள் நல்லனவற்றையே நீ நாடிச் செல்வாயாக. கல்வி, கேள்வி, ஞானம், மன உறுதி படைத்த நல்லவர்களையே பின்பற்றிச் செல்வாயாக. எச்செயலையும் நற்சிந்தனையோடு, உறுதியோடு இறைவனை மனதில் நினைத்துக் கொண்டு துவங்குவாயாக, வெற்றியையும், தோல்வியையும், புகழையும் பெருமையையும் இறைவன் வழங்குவான். மற்றவர்களைப் பற்றிச் கவலைப்படாதே. ஏமாற்றுக்காரர்கள். சோம்பேறிகள், பயங்கொள்ளிகளின் பேச்சுக்களை மறந்துவிடு.

உழைப்பாளிகளும், சான்றோர்களும், இரக்க குணமுடையவர்களும் உலகினில் தோற்றதாகவும், புறக்கணிக்கப்பட்டதாகவும் கூறுவதை ஏற்கமுடியாது. அவர்கள் இறந்திருந்தாலும் இன்றும் அவரது பெருமைகள் நம்மோடு உலாவிக் கொண்டிருப்பதை அறியலாம். காந்தி, விவேகானந்தர், திருவள்ளுவர், வள்ளலார், குமரகுருபரர் போன்றோர் இறந்திருந்தாலும் அவர்களது புகழானது உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது.

**சாதி பேதங்களைத் தவிர்த்துவிடு**

**"சாதிபேதம் இல்லை அகப்பேய்!**

**தானாகி நின்றவர்க்கே"**

**(அகப்பேய்ச் சித்தர் பா.எண்.68)**

உலகில் பிறந்த மக்களுக்குள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு கிடையாது. உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் எல்லாப் பொருள்களும் பொதுவானவை. யார் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். எதை

வேண்டுமானாலும் படிக்கலாம். எந்தப் பதவிக்கு வேண்டுமானாலும் செல்லலாம். அனைவருக்கும் அனைத்துத் தகுதிகளும் உண்டு. அனைவரது உடலில் ஓடுகிற இரத்தத்தில் எப்படி வேறுபாடு கிடையாதோ, அதுபோலவே பிறப்பிலும் உயர்வு தாழ்வு கிடையாது என்ற அகப்பேய்ச்சித்தர் மேற்கண்ட பாடலில் விளக்கியுள்ளார். அக்கருத்துக்களைப் பின்னாளில் தோன்றிய அனைத்து ஞானிகளும், மதங்களும் போற்றியுள்ளன. அவற்றைத் தற்பொழுது உலகம் பின் பற்றாததால் இயற்கை அழிவின் மூலம் ஏற்படுகின்ற உயிர்ச்சேதத்தைக் காட்டிலும் சாதிமதப் பிணக்குகளின் போது ஏற்படுகின்ற உயிரிழப்பு அதிகமாகும். இதைப் பலரும் வலியுறுத்திப் பலனேது இல்லை.

**“சாதியிரண்டொழிய வேறில்லை” (ஔவையார்)**

**“பொய்மதங்ள் போதனைசெய் பொய்க் குருக்களைப்**

**புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்”**

**(பாம்பாட்டிச் சித்தர். பா.எண்.11)**

வாழ்க்கைக்கு உதவாத பொய்ப் பிரச்சாரங்களை, தத்துவங்களை, போதனைகளைக் கூறிக்கொண்டும், தான் தான் கடவுளின் அவதாரம் என்று பறைசாற்றிக் கொண்டும் அலையும் பித்தலாட்டக்காரர்களை, மதபோதகர்களை மக்கள் அடையாளம் தெரிந்துகொண்டு அவர்களைப் புறக்கணிக்க வேண்டும். மக்களை நல்வழியில், நற்சிந்தனையில், நல்லெண்ணத்தில் ஊக்குவிக்கும், மெய்ஞ்ஞானிகளைக் கண்டறிந்து அவர்களது வழியாக மெய்யுணர்வைப் பெறுவோம் என்று ஆடுபாம்பே என்கிறார். பாம்பாட்டிச் சித்தர். சுயநலத்திற்காகப் பொய்ப் பிரச்சாரங்களைச் செய்வோரை இறை சக்தியே மன்னிக்காது. உலகில் உள்ள மனிதர்களைக்கூட எண்ணிவிட முடியும். ஆனால் சாதிவகைகளை எண்ண முடியாது. ஆகவே சாதிச்சண்டையை ஒழிக்க, சாதிப் பிரிவுகளுக்கு முடிவுகட்ட அரசாங்கம் முடிவு செய்தால் மட்டுமே முடியும்.

நாட்டில் தோன்றிய காந்தி, அம்பேத்கர், பெரியார், நாராயணகுரு போன்ற பலரும் பல காலங்களில் சாதி, மத மோதல்களுக்குத் தீர்வு காணக் கூறினர்.

ஆனால், அவை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே சித்தர்களின் பாடலால் அறியலாகும். செய்திகளை ஊடகங்களின் வழி பரப்புவதின் வாயிலாகவும் பொது இடங்களில் வாசகங்களை எழுதி வைப்பதன் மூலவும் முக்கிய விழாக்களில் அவர்களது கருத்துக்களைக் கூறுவதன் வாயிலாகவும், மேலும் அரசின் சட்டதிட்டங்களின் வாயிலாக அறிவுறுத்துவதின் பேரிலும் பரப்பினால். வரும் தலைமுறை, இளைய தலைமுறை இணையற்ற தலைமுறையாகும்.

## 8. திருக்குறட் சிறப்பும் பொருள் இளையும்

**(பேரா. லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார்)**

தமிழ் மொழியில் உள்ள தலைசிறந்த இலக்கியமாகிய திருக்குறள் என்னும் நூல், இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இந்நூல், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளையும் அவற்றுள், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், அவற்றுள் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களையும் உடையது. இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்திகளில் பெரும்பான்மையானவை. எல்லாருக்கும் எக்காலத்திற்கும் ஏற்றவை. பிறமொழியாளர் பலர், இந்நூலினைத் தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கொண்டதற்கு இது, ஒரு காரணமாகும். இவ்வாறு உலகம் முழுதிற்கும் இது பயன்படுதலால்தான். இந்நூலினை இயற்றிய திருவள்ளுவனாரை.

**“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**

**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”**

என்று பாரதியார் பாராட்டினார். திருவள்ளுவரால், உலகம் முழுதும் பயன் அடைந்தாலும் அவரைப் பெற்ற புகழ், தமிழ் நாட்டினையே சேர்ந்தது என்று பாரதியார் இப்பாடற் பகுதியில் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இக்காலத்து இயற்றப்படும் நூல்களில், அவற்றைப் பற்றிய மதிப்புரைகள் பலவற்றைத் தக்காரிடம் வாங்கிச் சேர்த்தல் போலப் பலருடைய பாராட்டுரைகளை

வாங்கி, நூலுடன் சேர்க்கும் வழக்கம், அக்காலத்தில் இல்லை. பழைய நூல்கள் சிலவற்றிற்கு ஒருவரால் இயற்றப்பட்ட சிறப்புப் பாயிரம் மட்டும் உண்டு. சில நூல்களில், அந்நூல்களைப் பாராட்டிப் பிற்காலங்களில் எழுந்த சில செய்யுட்கள், பதிப்பித்தோரால், சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், திருக்குறளிற்குப் புலவர்கள் ஐம்பத்தைவரின் பாராட்டுச் செய்யுட்கள் அடங்கிய திருவள்ளுவ மாலை, முற்காலத்திலேயே அமைந்துள்ளது. இது இதற்கு முன்னும் பின்னும் உள்ள வேறு எந்நூலிற்கும் இல்லாத தனிச்சிறப்பாகும்.

திருக்குறளிற்குப் பின் தோன்றிய தமிழ் நூல்களுள், இத்திருக்குறட்பாக்களின் சொல்லினையும், பொருளினையும், எடுத்து ஆளாத நூல் இல்லை எனறு கூறலாம். அன்றியும் இத்திருக்குறளில் உள்ள பாக்களையே எடுத்தாண்ட நூல்களும் உள்ளன. இவ்வாறு எடுத்து ஆட்சி செய்தவர்களுள் சிலர், இந்நூலினையும், இதனை இயற்றிய திருவள்ளுவனாரையும் பலவாறாகப் புகழ்ந்து கூறியுள்ளனர். இவர்களும் திருவள்ளுவ மாலை ஆசிரியர்களும் கூறிய புகழ் உரைகளில் பல, திருக்குறளுக்கும், திருவள்ளுவனாருக்கும் சிறப்புப் பெயர்களாகக் கூறப்பெறுகின்றன.

இந்நூற் பெயரின் முன்னும், இந்நூலாசிரியர் பெயரின் முன்னும் திரு என்னும் அடைமொழி சேர்த்து வழங்கப் பெறுவது இந்நூலிற்கும், இந்நூலாசிரியருக்கும் உள்ள தனிப் பேருயர்வினை அறிவதற்குத் தக்க சான்றாகும். கடவுளரைப் பற்றிய நூல்களுக்கு அன்றிப் பிற நூல்களுக்கும், கடவுள் அருள் பெற்றவர்களின் பெயர்களுக்கு அன்றிப் பிறர் பெயர்களுக்கும் திரு என்னும் அடை சேர்க்கும் மரபு இல்லை என்பது. இங்கே நினைத்தற்கு உரியது.

தமிழில், ஒரு நூலிற்கும் ஆறுக்கு மேற்பட்ட உரை, முற்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறிருந்தும், இத்திருக்குறளிற்கு முற்காலத்தில், பதின்மர், உரை எழுதியிருக்கின்றார்கள். இக்காலத்திலும் பலர், எழுதிக்கொண்டே இருக்கின்றார்கள், இதுவும் இதன் தனிப் பெருமைக்குப் பிறிதொரு சான்றாகும்.

மேற்கூறியவைகளிலிருந்து, இத்திருக்குறளில், தொன்றுதொட்டு மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது என்பது நன்கு விளங்கும், மக்கள் ஈடுபட்டு மிகுதியாகப் பயில்வது காரணமாகப் பாட வேறுபாடுகள் பெருகி வருதல் இயல்பாம். இவ்வாறு, பாட வேறுபாடுகள் பெருகும் என்பதற்குக் கம்பராமாயணம். இப்போது, நல்ல சான்றாக இருக்கின்றது. சொல்லையும், பொருளையும் எளிதில் மாறிவிட இயலாத நிலையில், திட்பமும், நுட்பமும் உடையனவாகத் திருக்குறட்பாக்கள் அமந்திருத்தலால், இப்பாக்களின் சொற்களை, மாற்றியும், கூட்டியும், குறைத்தும் வழங்குதல், பெரும்பான்மையும் நேரவில்லை. ஆயினும், சில பாட வேறுபாடுகள், இந்நூலின் கண்ணும் நேர்ந்தமை, இதன் உரைகளால் தெரிகின்றது. இப்போது உள்ள உரைகளிலும் காணப்படாத சில பாட வேறுபாடுகள், நன்னூலின் முதல் உரையாகிய மயிலைநாதர் உரையில் காணப்படுகின்றது.

பிற்காலத்தில் இத்திருக்குறட்பாக்களை அமைத்து, இப்பாக்களை விளக்குவதற்கு ஏற்ற கதைகளைக் குறிப்பிட்டு இயற்றப்பட்ட செய்யுட்களைக் கொண்ட நூல்கள், பல தோன்றியுள்ளன. மேலும், திருக்குறட்பாக்களின் கருத்துக்களைத் தழுவியும், ஆராய்ந்தும் எழுதப்பட்ட உரைநடை நூல்களும், கட்டுரைகளும், திருக்குறட்பாக்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்ற விளக்கக் கதைகளும் பற்பலவாம். இவ்வகையிலும் திருக்குறளுக்கு ஒப்பான நூல், வேறு எதுவும் இல்லை என்று கூறலாம்.

இவ்வாறு, பிற நூல்களுக்கு இல்லாத வீறு பெற்று, இந்நூல் விளங்குதற்குக் காரணம், இதன் கண் அமைந்துள்ள குறட்பாக்களில் வழு இன்மை, சொல் சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் ஆகிய பண்புகள் அமைந்திருத்தலேயாகும்.

**“நவில்தொறும் நூல்நயம் போலும்**

**அறிதோறு அறியாமை கண்டற்றால்”**

என்று, இந்நூலில் கூறப்பட்டிருக்கும் உவமைக் கருத்துக்கள், இந்நூலிற்கு மிகவும் பொருந்துவனவாம்.

இத்திருக்குறளின் சீரிய அமைப்புக்கள் பலவாகும். அவற்றுள், வேறுவேறு அதிகாரங்களில் உள்ள குறட்பாக்களின் பொருள்கள், ஒன்றுடன் மற்றொன்று பொருந்தி அமைந்திருக்கின்ற ஒரு பகுதியினைப் பற்றி மட்டும் இங்கே கூறுவேன். இப்பொருள் இயைபினை, இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன 1. ஒரு குறுட்பாவின் பொருளுடன், மற்றொரு குறட்பாவின் பொருளினை இயைத்துப் பார்க்கும் போது, பொருள் நலம் சிறத்தல், 2. பொருள் இயையாது முரண்படுவன போல் தோன்றும் குறட்பாக்களின் பொருள்கள் இயைதல் என்பன. இவற்றுள் முதற் பிரிவிற்குத் திருக்குறளில் உள்ள பால்கள் மூன்றிலுமிருந்து ஒவ்வோர் எடுத்துக்காட்டுக் கூறுவேன்.

1. ஒரு குறட்பாவின் பொருளுடன், மற்றொரு குறட்பாவின பொருளினை இயைத்துப் பார்க்கும் போது, பொருள் நலம் சிறத்தல்,

**அறத்துப்பால்**

**“ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**

**பொன்றும் துணையும் புகழ்”**

**“ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்**

**பொன்து நிற்பதுஒன்ற இல்”**

இவற்றுள், முதல் குறட்பாவினை மேற்போக்காகப் பார்க்கும் போது, பொறுத்தார்க்கு அவர் இறக்கும் அளவும் புகழ் உண்டு என்னும் பொருள் தோன்றும். அப்பொருள் பொருந்துவது போல தோன்றினும் புகழின் இயல்பினை நோக்கும் போது அது பொருந்தாது. புகழ், அதனை உடையான் இறக்கும் அளவும் நின்று மறைவது அன்று. உலகம் இருக்கும் அளவும் நின்று நிலவுவது. இவ்உண்மையினை இரண்டாம் குறள் விளக்குகின்றது. இக்குறளில் உள்ள “புகழ் அல்லால் உலகத்துப் பொன்றாது நிற்பது ஒன்று இல்“ என்பதுடன், முதற் குறளில் உள்ள “பொன்றும் துணையும் புகழ்“ என்பதனை இயைத்துப் பார்க்கும் போது, பொன்றும் துணையும் புகழ் உண்டாம் என்னும் சிறந்த பொருள் விளங்குகின்றது. எனவே, பொறுமை உடையார்க்கு உலகம் உள்ளவரையும் புகழ் உண்டு என்பது

கருத்தாகும். இவ்வாறே திருவள்ளுவனார். தாம் கருதிய பொருளை விளக்குதற்கு ஏற்ற சொற்களை, அவற்றின் பொருள் இயைபு தோன்றுமாறு அமைத்திருக்கும் இடங்கள் பலவாம். அவ்இடங்களில் உள்ள இயைபுகளைப் பரிமேலழகர் உணர்ந்து, பொருள் நலன்களைப் புலப்புடுத்தியுள்ளார். இது, அவரது உரைத் திறத்திற்கு உள்ள தனிச் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

**பொருட் பால்**

> **“நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
>
> **பின்நீர பேதையார் நட்ப”**
>
> **”பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
>
> **பீழை தருவதொன் றில்”**

இவற்றுள், முதல் குறட்பாவின் பொருள் - அறிவு உடையார் நட்ப, பிறை நிறையும் தன்மை போல, நாள்தோறும் நிறையும தன்மையனவாம் மற்றைப் பேதைமை உடையார் நட்பு, நிறைந்த மதி, பின் குறையும் தன்மை போல, நாள்தோறும் குறையும் தன்மையனவாம் என்பது.

இரண்டாம் குறட்பாவின் பொருள் - பேதையாயினார் இருவர் நட்பு கொண்டு, பின் பிரிய நேர்ந்தால், அப்பிரிவு, அவ் இருவருக்கும் தருவதொரு துன்பம் இல்லை. ஆதலால், பேதையாயினார் தம்முன் கொண்ட நட்பு, மிக இனிது என்பது.

இவற்றுள், இரண்டாம் குறட்பாவினை நோக்கும் போது யாருடன் கொள்ளப்பட்ட நட்பாயினும் பிரியும்போது துன்பம் தருமே! பேயொடு ஆயினும் பிரிவது அரிது“ என்று பெரியோர்கள் கூறுவார்களே! பேதையார் நட்பு, பிரிவின்கண், ஏன் துன்பம் தராது என்ற வினா எழும். இதனை, முதல் குறளில் உள்ள “பேதையார் நட்பு மதிப்பின் நீர்“ (பேதையார் நட்பு, நிறைந்த மதி, பின் குறையும் தன்மை போல நாள்தோறும் குறையும்) என்பதனுடன் இயைத்துப் பார்க்கும் போது, ஐயம் தீர்கின்றது. இவ்வாறு இயைத்துப் பார்த்துப் பேதையார் நட்பு, நாள்தோறும் தேய்ந்து வருதலின் துன்பம் தாராது ஆயிற்று எனப்

பரிமேலழகர், அருமையாக விளக்கவுரை எழுதியுள்ளார். நாள்தோறும் தேய்ந்து, இறுதியில் நட்பே இன்றாய்விடும். ஆதலால் பிரிவினால் வரும் துன்பமும் இல்லை என்பது கருத்து.

**காமத்துப்பால்**

**"வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை**

**ஆரஞர் உற்றன கண்"**

**"பெறாஅமை அஞ்சம் பெறின்பிரிவு அஞ்சும்**

**அறாஅ இடும்பைத்து என் நெஞ்சு"**

இக்குறட்பாக்கள் இரண்டும் தலைவனது பிரிவினால் துன்புறும் தலைவியின் நிலையைக் கூறுவன. முதல் குறட்பாவினைப் பார்த்த அளவில், அதன் கண் உள்ள "வரின் துஞ்சா" என்ற பகுதி, பிரிந்த தலைவன் வந்தால், தலைவியின் கண்கள், ஏன் உறங்கமாட்டா? என்ற வினாவை எழுப்புகின்றது. இவ்வினாவிற்குத் தலைவன் வந்தால் அவனுடன் இன்ப நுகர்ச்சியில் ஈடுபடுவதால், கண்கள் உறங்க மாட்டா என்ற விடையைத்தான் பெரும்பாலோரிடம் எதிர்பார்த்தல் கூடும். இவ்விடையும் இயற்கைக்குப் பொருத்தமானவே. ஆயினும். இவ்விடையும் இயற்கைக்குப் பொருத்தமானவே. ஆயினும். இவ்விடையினை ஏற்றுக்கொண்டால், தலைவியை, அன்று நுகரும் இன்பத்தைப் பெற விரும்பும் பேரார்வம் உடையவளாகக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு கொள்ளாமல், தலைவி, இடையறாது என்றும் நுகரும் இன்பத்தினைப் பெற விரும்புகிறவள் எனக் கொள்ளுதல் சிறப்பாம். இரண்டாம் குறளில் உள்ள "பெறின் பிரிவு அஞ்சும்" என்பதனுடன் இதனை இயைத்துப் பார்த்தால், நன்கு விளங்கும் இவ்வாறு, நூற்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களின் பின்னர் அமைந்த குறட்பாவினை இயைத்து உணர்ந்து வரின் (பிரிந்த தலைவர் வந்தால்) அவர் பிரிவு அஞ்சித் துயிலா. (இனியும் அவர் பிரிவாரோ என அஞ்சிக் கண்கள் உறங்காவாயின) என உரை கண்ட பரிமேலழகர், பெரிதும் பாராட்டுதற்கு உரியர். பரிமேலழகர், திருவள்ளுவனாரின் கருத்து அறிந்து உரை எழுதியவர் என்று

ஆன்றோர் கூறுவதற்கு இதுபோன்ற சில இடங்கள், தக்க சான்றுகளாகும்.

இவ்வாறு குறட்பாக்களுள் ஒன்றுடன் மற்றொன்றை இயைத்து நோக்குவதால், பொருளின் உண்மைத் தன்மையும், பொருளின் தெளிவும், பொருளின் உயர்வும் ஆகிய சிறந்த பயன்கள் விளைதலை, மேற்காட்டிய எடுத்துக்காட்டுக்கள் மூன்றிலும் முறையே காணலாம்.

2. பொருள் இயையாது முரண்பாடுவன போல் தோன்றும் குறட்பாக்களின் பொருள்கள் இயைதல்.

இதனை மூன்று பிரிவாகக் கூறலாம். அவையாவன 1. பொருள் முரண்பாட்டினைப் பரிமேலழகரே எடுத்துக்காட்டித் தீர்க்கும் இடம். 2. பரிமேலழகர் உரை எழுதும் முறையினால் பொருள் முரண்பாடு தீரும் இடம், 3. நாம் உய்த்துணர்ந்து பொருள் முரண்பாட்டினை தீர்க்கும் இடம் என்பன இம்மூன்று வகைக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுக் கூறுவேன்.

1. பொருள் முரண்பாட்டினைப் பரிமேலழகரே எடுத்துக்காட்டித் தீர்க்கும் இடம்.

**“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்**

**உண்மை அறிவே மிகும்“**

**“தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**

**கற்றனைத்து ஊறும் அறிவு“**

இக்குறட்பாக்கள் இரண்டின் கருத்துக்களும் முரண்படுவன போல் அமைந்திருந்தலைக் கண்ட பரிமேலழகர், இரண்டாம் குறளின் உரையில், “.இஃது, ஊழ் மாறுகொள்ளா வழி ஆகலின், மேல் “உண்மை அறிவே மிகும்“ என்றதனோடு மலையாமை அறிக“ என, முரண்பாட்டினை எடுத்துக்காட்டித் தீர்த்துள்ளார்.

2. பரிமேலழகர் உரை எழுதும் முறையினால் பொருள் முரண்பாடு தீரும் இடம்.

**“ஊழின் பெருவல யாஉள மற்றொன்று**

**சூழினும் தான்முந் துறும்”**

**“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**

**தாழாது உஞற்ற பவர்“**

இக்குறட்பாக்கள் இரண்டின் கருத்துக்களும் முரண்படுகின்றன இம்முரண்பாட்டினைப் பரிமேலழகர், வெளிப்படையாக எடுத்துக் கூறாவிடினும் இரண்டாம் குறட்பாவின் உரையில், “ஊழ் ஒருகாலாக இருகாலாக அல்லது விலக்கல் ஆகாமையின், பலகால் முயல்வார் பயன் எய்துவர் என்பார், உப்பக்கம் காண்பர் என்றார்” என எழுதியிருப்பதிலிருந்து “ஊழின் பெருவலி யாஉள“ என்னும் குறட்பா, நம் நினைவிற்கு வருவதுடன், அதற்கும் பின் குறட்பாவிற்கும் உள்ள முரண்பாடும் தீர்க்கின்றது.

3. நாம் உய்த்துணர்ந்து பொருள் முரண்பாட்டினைத் தீர்க்கும் இடம்.

**“கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்**

**கொள்ளார் அறிவுடை யார்”**

**“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்பது அறிவு“**

இவற்றுள், முதல் குறட்பா, கல்லாமை என்னும் அதிகாரத்திலும், இரண்டாம் குறட்பா, அறிவுடைமை என்னும் அதிகாரத்திலும் உள்ளன. முதல் குறட்பா, கல்லாதாரது இயற்கை அறிவின் குற்றம் கூறும் நோக்கத்திலும், இரண்டாம் குறட்பா, அறிவின் இலக்கணம் கூறும் நோக்கத்திலும் அமைந்துள்ளன. ஆயினும், இக்குறட்பாக்கள் இரண்டினையும் பார்த்தவுடன். ஒன்றற்கு ஒன்று மாறுபட்ட பொருள் உடையன போலத் தோன்றுகின்றன. மிக நல்ல பொருள் ஆயினும் கல்லாதான் சொன்னால், அதனைக் கொள்ளுதல் ஆகாது என்ற பொருள், முதல் குறட்பாவில் இருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு பொருள் கொள்வது ஏற்புடையது அன்று. “எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு“ என்ற முடிவுதான் பயன் உடையது. இதனை உணர்ந்த பரிமேலழகர், இக்குறட்பாக்கள் இரண்டிற்கும் முரண்பாடு இன்மையை நாம் உய்த்துணர்த்து கொள்ளுமாறு, உரை எழுதியிருப்பது, கூர்ந்து நோக்குவார்க்குப்

புலப்படும், “ஒண்மை அறிவுடைமை, அது நன்று ஆகாது, ஆயிற்று ஆயினும், ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடு ஆகலின், நிலைபெற்ற நூலறிவு உடையா அதனை மதியார்”. என்பது முதல் குறட்பாவிற்கு எழுதப்பட்ட விளக்க உரை. “சொல்வாரது இயல்பு நோக்காது. அப்பொருளின் பயன்நோக்கிக் கொள்ளுதல், ஒழிதல் செய்வது அறிவு என்பதாம்” என்பது இரண்டாம் குறட்பாவிற்கு எழுதப்பட்ட விளக்க உரை. முதல் குறட்பாவில் உள்ள கொள்ளார் என்ற சொல், சிறிது மயங்க வைப்பினும் அதற்கு எழுதப்பட்ட மதியார் என்ற பொருள் அம்மயக்கத்தினைப் போக்குகின்றது. அஃதாவது, “கல்லாதான் சொல்லும் நற்பொருளை, அறிஞர், ஏற்றுக்கொள்வர், ஆனால், அதனை அவனது அறிவுடைமையினால் விளைந்தது என்று கருதி, அவனது அறிவினை மதிக்க மாட்டார்கள். அவன் கூறும் நற்பொருள், தானாக நேர்ந்தது என்று கொள்வர்“ என்பது, இக்குறட்பாவின் கருத்து. இவ்வாறு தெளிவுறும் போது, குறட்பாக்கள் இரண்டிற்கும் உள்ள முரண்பாடு நீங்குவதுடன், சிறந்த பொருளும் கிடைக்கின்றது.

பெருங்கடல் போன்ற திருக்குறளில், சிறுதுளி போன்ற ஒரு செய்தி, இங்கு எழுதப் பெற்றது. இவ்வாறே, எத்துணையோ பல செய்திகளை விரிவாகவும், விளக்கமாகவும் இந்நூலில், நாம் உணர்ந்து இன்புறலாம்.

## 9. சங்ககால வாழ்வியல்

**(முனைவர் சகோ.அ.அருள்சீவி)**

சங்க காலம் தமிழர்களின் பொற்காலம். சங்ககாலத் தமிழர்களின் பண்பட்ட வாழ்வியலைத் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவது சங்கத் தமிழ் இலக்கியங்கள் ஆகும். அவ்விலக்கியங்கள் வழி சங்கத் தமிழர்களின் வாழ்வியலைக் காண்போம்.

மக்களின் நல்லறிவின் பயனால் அமைவது ஒழுக்கமாகும். வாழ்க்கையில் மேன்மேலும் உயர்ச்சி அடைவதற்குக் காரணமாகிய ஒழுக்கவுணர்வுடைய மக்கள் “உயர்திணை“ எனச் சிறப்பிக்கப்பட்டனர். அவ்வொழுக்க வுணர்ச்சியில்லாத ஏனைய உயிர்களும். உயிரற்ற பொருள்களும் “அஃறிணை“ என வழங்கப்பெற்றன. உலகப் பொருள்களையெல்லாம் உயர்திணை, அஃறிணை என இரண்டாக வகுத்தலும்,

ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என ஐம்பாலாகப் பகுத்து வழங்குதலும், தமிழ் மொழியிலின்றி வேறு எம்மொழியிலும் காணப்படாத சிறப்பியல்புகளாம்.

விலங்கு முதலிய தாழ்ந்த உயிர்களினின்றும் மக்களைப் பிரித்து உயர்திணையாக உயர்த்துவது மனவுணர்வின் பாற்பட்ட நல்லொழுக்கமே ஒழுக்கம் மேன்மேலும் உயர்வைத் தருதலால், அதனை உயிரினும் சிறந்ததாகப் போற்றுதல் வேண்டுமெனத் தமிழ்ச்சான்றோர் அறிவுறுத்துவராயினர். ஒழுக்கமில்லாதார், மக்கள் வடிவிற் காணப்பட்டாலும், மாக்கள் (விலங்குகள்) என்றே இழித்துரைக்கப்படுவர்.

பண்டைத்தமிழர் எல்லோரையும் ஒரு குலத்தவராகவே மதித்துப் போற்றினர். ஒத்த அறிவும் செயலும் உடைய மக்களைப் பல்வேறு சாதியினராகப் பிரித்து வேறுபாடு கற்பிக்கும் நிலை சங்ககாலத் தமிழரிடையே காணப்படாத்தொன்றும் மக்கள் செய்யும் தொழில் வேற்றுமை காரணமாகவே அவர்களிடையே உயர்வு தாழ்வுகள் உண்டாகும் என்பது தமிழர் துணிவு.

தமிழ்மக்களுடைய பழமையான இலக்கண நூலாக விளங்குவது தொல்காப்பியம். அந்நூல் மக்கள் வாழ்க்கையினை “அகம்“, “புறம்“ என இரு வகையாகப் பகுத்து விளக்குகின்றது. ஒத்த அன்புடைய கணவனும் மனைவியும் கலந்து வாழும் குடும்ப வாழ்வினை அகவாழ்வென்றும், இங்ஙனம் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் ஒன்றி வாழ்தற்குரிய அரசியல் வாழ்வினைப் புறவாழ்வென்றும் வகுத்துரைத்தல் தமிழர் மரபாகும்.

அறம், பொருள், இன்பம் என்ற இம்மூன்று பொருள்களையும் “மும்முதற் பொருள்“ எனத் தமிழர் பாராட்டிப் போற்றுவர். எல்லாவுயிர்களாலும் விரும்பப்படுவது இன்பம். அவ்வின்பத்திற்குக் காரணமாக மக்களால் ஈட்டப் பெறுவது பொருள். நடுவு நிலையில் நின்று அப்பொருளை ஈடுபடுதற்குரிய ஒழுங்குமுறை அறம். அறத்தினால் பொருள் செய்து அப்பொருளால் இன்பம் நுகர்தல் மக்கள் வாழ்க்கை முறையாகும். இம்முறையினைத் திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பால்களாக வகுத்து விளக்குகின்றார்.

அகவொழுக்கத்தை ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என ஏழுவகையாக விரித்து விளக்குவர். ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியுமாகிய காதலர் இருவர் இல்லிருந்து நல்லறஞ்செய்தற்கு இன்றியமையாத அன்பின் வழிப்பட்ட உள்ளத்துணர்ச்சியே ஐந்திணை எனப்படும்.

தலைவன், தலைவி என்னும் இருவரும் தம்முட்கூடி மகிழ்தலும், உலகியற் கடமை, நோக்கித் தலைவன் சில நாள் தலைவியைப் பிரிந்து செல்லுதலும், பிரிந்த தலைவன் குறித்த நாள் அளவு தலைவி அப்பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து ஆற்றியிருத்தலும், கணவன் குறித்த நாளில் வர தாமதிப்பின் ஆற்றாமைமிக்கு மனைவி இரங்குதலும், பின் அவன் வந்த போது அன்பினாற் பிணங்குதலும், என ஐந்து பகுதி ஒழுகலாறுகளையும் முறையே குறிஞ்சி, முல்லை, நெயதல், மருதம், பாலை எனப் பெயரிட்டு வழங்குவர்.

மேற்கூறிய அன்பின் ஐந்திணையாகிய அகவொழுக்கம் “களவு, கற்பு“ என இரு வகைப்படும். உரு, திரு, உணர்வு முதலியவற்றால் ஒத்து விளங்கும் தலைவனும் தலைவியும் நல்ல ஊழின் செயலாகத் தாமே எதிர்ப்பட்டு, அன்பில் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் உலகத்தார் அறியாது மறைந்து ஒழுகுதல் களவாகும்.

“மறைவில் நிகழும் ஒழுகலாறு“ என்ற கருத்திலேயே “களவு“ என்னும் சொல் வழங்குகின்றது. இங்ஙனம் மறைந்தொழுகுதலைத் தவிர்த்து,பெற்றோர் உடன்பாடு பெற்று, இருவரும் உலகத்தார் அறிய மணஞ்செய்து கொண்டு மனையறஞ் செய்தலே கற்பு எனப்படும்.

காதலன் காதலி என்னும் இருவரும் ஒருவர் மட்டும் அன்பினால் கூடி வாழ்தலில் விருப்புடையராக, மற்றவர் அவர் உறவில் விருப்பின்றி இருப்பது கைக்கிளையாகும். கைக்கிளையென்பது ஒருதலைக் “காமம் ஒருவனும் ஒருத்தியும், தம்முள் அன்பில்லாதவராய் இருந்தும், கணவனும், மனைவியுமெனப் பிறராற் பிணைக்கப்பட்டு அன்பின்றிக் குடும்பம் நடத்துதல் பெருந்திணையாகும்.

தமிழ் வேந்தர்கள் மக்களைக் காத்தல் தம் கடமை என எண்ணினர் தம்மை நாடி வந்த பரிசிலர்களின் வறுமையைப் போக்கினர். தீயாரை ஒறுத்தலும், நடுவு

நிலைமையுடையார்க்கு அருள் புரிதலும் ஆகிய நீதி முறையில் சோம்பலின்றித் தமிழ் வேந்தர் இடைவிடாது உழைப்பாராயினர். அதனால் மக்கள் அனைவரும் அரசனைத் தெய்வம் எனப் போற்றி மதித்தனர்.

கொல்லுந் தன்மையுடைய யானைகளும் மனஞ்செருக்குற்ற குதிரைகளும், நெடுங்கொடியை உடைய பெரிய தேர்களும், உள்ளத் திண்மை படைத் போர்வீரர்களும் என்னும் நாற்பெரும் படைகளால் வேந்தர் சிறப்புற்றிருப்பினும், அறநெறியை முதலாக்க கொண்டு திகழ்வதே அரசரது வெற்றியாகும் என்ற கருத்தினைப் புலவர்கள் வேந்தர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தமிழ்வேந்தர் அனைவருமே மக்களுக்குக் கண் என்று போற்றப் பெற்ற கல்வித் துறையில் சிறந்த பயிற்சியுடையவராய் விளங்கினர் அறநூற்றுறையிலும், அவ்வறத்தின் வழிப்பட்ட அரசியல் நூலிலும் போர்த்துறையிலும் பயிற்சி உடையவராய்த் திகழ்ந்தனர். அரசியற் கல்வியிலும் இலக்கியத் துறையிலும் நிரம்பிய அறிவுடையராய்ச் செய்யுள் பாடும் சிறப்பமைந்த செந்தமிழ்ப் புலவராயும் விளங்கியமை பண்டைத் தமிழ் வேந்தர்கள் பாடியுள்ள பாடல்களால் நன்கு புலனாகும்.

அக்காலத்தமிழ் அரசர்கள் கற்றறிந்த தமிழ்ப் புலவர்களைப் போற்றி அவர்ள் அஞ்சாது கூறும் அறிவுரைகளை வெறுக்காது ஏற்றுக் கொண்ட தங்கள் தவறுகளைப் போக்கிக் திருத்திக் கொண்டு வாழ்ந்தனர். அரசன்பால் தவறு கண்டவிடத்து அவனை இடித்துரைத்துத் திருத்தும் உரிமை நாட்டில் வாழும் சான்றோர்களுக்கு உரியதாயிருந்தது. எனவே அரசியல் வினைக்குழுவில் நாட்டிலுள்ள பெருமக்கள் சிலரும் இடம்பெற்றுக் குடிமக்களுடைய குறைகளை அவ்வப்போது அறிவித்து வருவராயினர். ஐம்பெருங்குழுவில் “மாசனம்“ எனக் குறிக்கப்பட்டனர் இத்தகைய சான்றோர்.

ஆட்சிமுறைகள் அக்காலத்தில் மிகத்திறமையாகவும் நாகரிகமாகவும் நடைபெற்றுவந்தன. ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இந்த அரசவைப் பாகுபாடே அதற்குப் போதுமான சான்றாகும். அமைச்சர், படைத்தலைவர், காவல்தலைவர், தூதுவர், ஒற்றர் முதலியோரெல்லாரும் இப்பாகுபாட்டில்

சேரந்தவரே,

பழைய அரசியலில் அறங்கூறு அவையம் என்பதும் தனியே இருந்தது. யாரேனும் மக்களுக்குள் மாறுபட்டு வழக்குரைத்து வந்தால் அவர்களுக்கு இந்த அவையம் அறநிலைதிரியாமல் அன்போடும் திறமையோடும் தீர்ப்புக்கூறும். இந்த அவையத்தில் தக்க சான்றோர்களையே தீர்ப்புக் கூறுவோராக அரசன் அமைப்பான்.

**இல்வாழ்க்கை**

அக்காலத்து மக்கள் இல்வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியிருந்தார்கள். உண்பதற்கும் நல்ல வாழ்க்கை வாழ்வதற்கும் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி மகிழ்வதற்கும். பிறஉயிர்களுக்கு விருந்தோம்பி நன்மைகள் செய்வதற்கும், தாமும் எக்காலமும் ஆதரவோடிருப்பதற்கும் இல்வாழ்க்கையே ஏற்றது என்பது அவர்கள் கருத்து.

இல்வாழ்க்கையில் வாழ்வார்க்குப் பொருள் தேடுவது ஒரு கடமையாக இருக்கிறது. அதற்காக அவர்கள் பற்பல தொழில் வகைகள் மேற்கொண்டிருந்தனர். உழவு., வாணிகம், நெசவு முதலியன தொழில் வகைகளாகும். உடல் உழைப்பினால் மேற்கொள்வதற்குரிய இத்தொழில்களில் ஈடுபட்டுப் பொருள் செய்ய விரும்பாது உள்ளத்துணிவினால் மேற்கொள்ளுதற்குரிய அறிவுத்துறையில் ஈடுபட்டுழைப்பவர் புலவர், பாணர், பொருநர், விறலியர் முதலியோர்.

**ஆடவர்நிலை**

ஆண்கள் தமக்கு ஈடிணையில்லாதபடி தமது ஆண்மைத் தன்மையை மேன்மேலும் போர்க்களத்தில் புலப்படுத்துதலையே தம்முடைய பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். காவற்பெண்டு எனக் குறிக்கப்பெற்ற பெண்பாற்புலவருடைய மகனொருவன் பெருவீரனாய் விளங்கினான். அவன் எப்பொழுதும் போர் செய்தலையே பொழுதுபோக்காகச் கொள்ளும் ஆண்மை மிக்கவன். அவனைக் காணச் சென்ற நண்பனொருவன் அவன் தாயினைப் பார்த்து "நின் மகன் எங்கேயுள்ளான்" என வினவி நின்றான். அது கேட்ட அவ்வீரனுடைய தாய் அவனை நோக்கி, "நின் மகன் எங்கேயுள்ளான்" என்ற என்னைக்

கேட்கின்றாய். அவன் எவ்விடத்து இருந்தாலும் அவனை அறியேன் புலி தங்கியிருந்து வெளியே சென்ற குகையினைப் போல் அவனைப் பெற்ற வயிரோ இதுவாகும். அவன் போர்க்களத்தின் கண்ணே வெற்றியாற் பொலிவு பெற்றுத் தோன்றுவான் அங்கே போய்ப் பார்ப்பாயாக (புறம்.86) எனக் கூறியனுப்புகின்றான். "புலியிருந்து போனமையால் வெறுவிதாகிய குகைக்கும் வெளிச்சென்ற புலிக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமைபோல, எனக்கும் என் வயிற்றிற் பிறந்த மகனுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை எனக் காவற்பெண்டு அறிவுறுத்தினமை ஆடவர்களது வீரவாழ்க்கயின் இயல்பினை இனிது விளக்குவதாம்.

நிலத்தில் வாழும் நல்ல ஆடவர்களின் நினைவும் செயலும் பற்றியே அந்நிலம் வளம்பெறுதல் கூடுமெனப் பண்டைத் தமிழ் மக்கள் எண்ணினர்,

**"எவ்வழி நல்லவர் ஆடவர்அவ்வழி**

**நல்லை வாழிய நிலனே!**

என்னும் அடிகள் இதனை விளக்கும்.

**பெண்கள் நிலை**

தமிழ் மக்கள் வீரத்தை விளைத்தற்கென ஆண் பிள்ளைகளைப் பெற விரும்பியது போலவே அன்பும் அருளும் ஆகிய மனப்பண்பினை வளர்த்தற்குரிய பெண் மக்களையும் பெற விரும்பினார்கள் அன்பும் அறிவும் அமைந்த பண்புடைய பெண்மக்களைப் பெற விரும்பிய மக்கள், அத்தகைய நன்மக்கட் பேற்றினை அருளுதல் வேண்டும் என இறைவனை வணங்கிப் போற்றினார்கள்.

**"குன்றக் கறவன் கடவுட்பேணி**

**இரந்தனன் பெற்ற வெள்வளைக் குறுமகள்"**

எனவரும் கபிலர் பாடலால் புலப்படும்.

வீட்டின் புறத்தே போந்து விளையாடும் பருவத்து இளமகளிர், தம் தோழியர்களுடன் கூடி விளையாடி மகிழாது வீட்டின் கண் அடைபட்டு இருத்தல்

அறனும் ஆகாது. அவர்கள் உடலின் ஆக்கத்தையும் சிதைப்பதாகும் என அறிஞர் பலரும் அறிவுறுத்தினர். அதனால் இளமகளிர் எல்லாரும் புதுப் புனலாடியும், பூக்கொய்தும், மாலை முதலியன தொடுத்தணிந்தும் விளையாடி மகிழ்ந்தனர்.

விலங்கினின்றும் மக்களை வேறுபடுத்தி உயர்த்திக் காட்டுவது கல்வி அத்தகைய கல்வியை ஆடவர், பெண்டிர் ஆகிய இரு பாலரும் பயிலுதல் வேண்டும் என்பது பண்டைத் தமிழ் மக்களின் கொள்கையாகும்!

ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலர்க்கும் கல்வி பொதுவாயினும் ஆடவர் கல்வி பயிலும் முறைவேறாகவும் பெண்டிர் கல்வி பயிலும் முறை வேறாகவும் முன்னையோர் வகுத்திருந்தனர். பொருளீட்டலும், போர் செய்தலும், நாடுகாத்தலும் முதலிய புறத்துறைக்குரிய முறையில் ஆடவர் கல்வி பயின்றனர். மனைவாழ்க்கையினை நடத்தலும் அன்பினால் மன அமைதியை வளர்த்தலும் ஆகிய குடும்பப் பணியினை நிகழ்த்தற்கு ஏற்ற முறையில் மகளிர் தம் வீட்டிலிருந்தே கல்வி பயின்றனர். அவர்கள் பயின்ற கல்வி வாழ்வாங்கு வாழும் பயனுள்ள கல்வியாய் அமைந்திருந்தது. உலகியற் பொருள்களின் இயல்பினையும், உயிர்களின் உள்ளத்துணர்ச்சிகளையும் உள்ளவாறு உய்த்துணரும் நுண்ணறிவு பெண்களின் தனியுரிமையாகும்.

சங்ககாலத் தமிழ் மகளிர், இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ்த் துறையிலும் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தனர். ஐம்பதிற்கும் குறையாத பெண்பாற் புலவர்கள் பாடிய செய்யுட்கள், சங்கத் தொகை நூல்களில் காண்ப்படுகின்றன.

கணவனை உணவு முதலியவற்றை பேணிக்காத்தலும். அவனது வருவாய்க்குத் தக்கபடி ஆரவாரமற்ற நிலையில் குடும்பச் செலவினை அமைத்துக் கொள்ளுதலும், பெரியோர்களையும், விருந்தினர்களையும் பேணிப் போற்றதலும் தன் அறிவின் திறத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்திக் கொள்ளாமல் அமைந்து ஒழுகுதலும், தன் குடும்பத்திற்குப் புகழுண்டாக்குதலும் மனைவியின் மாண்புகளெனப் பாராட்டப்படும் நற்குண நற்செய்கைகளாகும்.

பிறந்த வீட்டிலிருந்து நுகரும் இனிய தேன்கலந்த பாலைக் காட்டிலும், என்

தலைவனுடன் சென்ற காலத்துப் பருகிய மான் உண்டு எஞ்சிய கலங்கற் சின்னீர் எனக்குப் பெரிதும் சுவை உடையதாயிற்று எனத் தமிழ் நங்கை ஒருத்தி கூறுகின்றாள் (ஐங்குறுநூறு.203) கணவன் குடும்பமோ, வறுமை நிலையடைந்தது. பெண்ணின் தந்தையோ, மிகப்பெரிய செல்வமுடையவன், தந்தை தன் மகள் வீட்டிற்கு வேண்டிய உணவு முதலிய பொருள்களை நிறையக் கொடுத்து அனுப்பினான். தந்தையின் பொருளைப் பெற்றுத் தாம் இனிதாக வாழ்தல் தகுதியன்று என உணர்ந்த தலைவி அப்பொருளைக் கொள்ளாது தன் கணவன் ஈட்டிய சிறு பொருளை வைத்துக்கொண்டு ஒருபொழுது விட்டு ஒரு பொழுது உண்டு தன் குடும்பத்தைப் போற்றி வரும் செம்மை பெற்றாள் என்ற அருமையான செய்தி நற்றிணைப்பாடலில் குறிக்கப் பெறுகின்றது. தம் குடும்பத்தின் வறுமையினைத் தந்தைக்கும் புலப்படுத்திக் கொள்ளாத செம்மனம் உடையோராய்த் தமிழ் மகளிர் வாழ்ந்தமை மேற்காட்டிய குறிப்பினால் நன்கு புலனாகிறது. குடும்ப வாழ்க்கையில் உண்டாகும். துன்பங்களை எல்லாம் பொறுத்துக்கொண்டு தம் கடமையைச் செய்யும் திறம் தமிழ் மளிரின் தனிச் சிறப்பாகும்.

அமிழ்தினும் இனிய உணவைச் சுவைமிகச் சமைத்துத் தம் கணவனை உண்பித்தலிற் பேரார்வம் உடையோர் பெண்டிர் தமிழ் நாட்டு மகளிர் விருந்தினரை உபசரித்தலில் மிகவும் திறமையுடையவராவர். தம்மிடம் உள்ள பொருள் மிகக் குறைவாயினும் வந்த விருந்தினர் பலர் என்று கருதாமல் எல்லாரையும் இன்முகத்துடன் உண்பிக்கும் இயல்பு அவர்கள்பால் அமைந்திருந்தது.

**ஒற்றுமை**

பல்வேறு வகைப்பட்ட மக்களும், பற்பல தொழில்களைச் செய்தாலும், எல்லாரும், ஒரு தாய் வயிற்றிற் பிறந்தது போலவே ஒருவர்க்கொருவர் சிறிதும் வேறுபாடில்லாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கை வாழ்ந்தனர். எல்லாரும் இந்நாட்டு மக்கள், எல்லா ஊர்களும் தம் ஊரு போன்றதே என்னும் ஒற்றுமை எண்ணம் அவர்களிடம் மேலோங்கியிருந்தது.

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”**

என்பது அவர்களின் தீர்மானமான கொள்கை.

தமிழ் மக்களெல்லோருமே ஒருவருக்கொருவர் உறவினராகவே இருந்தனர். நிலையான தொழில் வகைகளாலும், கலையாத உறவின் முறைகளாலும், கவலை சிறிதுமின்றி மனவொற்றுமையாய் அவர்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தமை, அவர்களது களங்கமற்ற அழகிய உள்ளத்தை எடுத்துக்காட்டுகின்றது. தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும் தம்மவர்கள் என்னும் கண்ணோட்டத்தால் அதனை மறுக்காமல் உண்டு, மேலும் அவர்களோடு பழகும் நோக்கமுடையவர்களாக அக்காலப் பெரியோர்கள் வாழ்ந்திருந்தனர்.

**“முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்”**

என்று நற்றிணையில் இவ்வுண்மை குறிக்கப்படுகின்றது.

**வினாக்கள்**

1. சீவ காருணியம் குறித்து மறைமலையடிகள் கட்டுரையைத் தொகுத்துரைக்க.
2. தமிழ்நாட்டில் தாய்வழிச் சமுதாயம் குறித்து எழுதுக.
3. “எளிமை ஓர் அறம்“ கட்டுரையைத் தொகுத்துரைக்க.
4. குலசேகராழ்வாரின் சிந்தனைகள் என்ற தலைப்பில் ம. திருமலையின் கட்டுரையைத் தொகுத்துரைக்க.
5. பண்டைத் தமிழிரின் கடல் வாணிகம் குறித்து எழுதுக.
6. அவ்வையும் அதியமானும் குறித்து சாமி சிதம்பரனார் கூறும் கருத்துக்களை விவரி.
7. சித்தர்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் கட்டுரையைத் தொகுத்துரைக்க.
8. சங்க கால வாழ்வியலை தொகுத்துரைக்க.
9. திருக்குறள் சிறப்பும் பொருள் இயையும் குறித்து இராமநாதன் செட்டியார் கூறுவது?

## அலகு - 4

## நாடகம்

## ஆதி அத்தி (வரலாற்று நாடகம்)

## (பெ.தூரன்)

**நாடகம் அறிமுகம்**

நாடு அகம் நாடகம் என்று அழைக்கப்படும். நாடு அகம் என்ற தொடரில் நாடு என்பதில் நாடு (ட்உ) அகம் - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் என்ற புணர்ச்சி விதிப்படி நாட் அகம் என்பது நாடகம் எனப் புணர்ந்தது. நடிக்கப் பெறுவது நாடகம். நாடி என்ற அடிச் சொல்லில் இருந்து நாடகம் உருவானது என்போரும் உளர். தமிழின் பெருமையை உலகிற்கு உணர்த்திய பெரியோர்கள்

**"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே - வாளோடு**

**முன் தோன்றிய மூத்தக்குடி"**

என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். மேற்குறித்த புறப்பொருள் வெண்பாமாலைக் கூற்றுக்கொப்ப தமிழ் மொழி தோன்றிய காலந்தொட்டே இயல் , இசை, நாடகம் என்ற அனைத்தும் தமிழில் உண்டு ன்பதை அறியமுடிகிறது. தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வேத்தியல் கூத்து , பொதுவியல் கூத்து என்ற வகையினைக் குறிப்பிட்டுள்ளார். ஒல்காப் புகழ் வாய்ந்த தொல்காப்பியர் தம் இலக்கண நூலில் "உலக வழக்கினும் நாடக வழக்கினும் " என்ற நிலையினைக் குறிப்பிட்டுள்ளார். எனவே நாடகம் என்பது தமிழில் உள்ள முப்பிரிவுகளில் ஒன்று என்பதை உறுதியாக அறிய முடிகிறது. இயல் , இசை, நாடகம் என்று அழைக்கப்பட்ட நாடகத் தமிழில் "தொன்றுதொட்டு வந்துள்ள "ஆதி அத்தி" என்ற நாடகத்தினைப் பற்றி இந்நூலில் அறிவோம்.

**ஆதி அத்தி - நாடகம் அறிமுகம்**

"நாட்டின் அகம் நாடகம் " என்பார் மலையாள கவி குஞ்ஞுண்ணி , அதிலும் அகம்சார் கதைப் பொருளைக் கொண்டு எழுதப்பெறும் நாடகங்கள் என்றும்

வசீகரம் மிக்கவையாக விளங்கும். நடைமுறை வாழ்க்கையைக் கற்பனைக் கண்கொண்டு கண்டு நடித்துக் காட்டப்பெறுகிற நாடகத்தை விடவும் நடந்து முடிந்த வாழ்வின் புகழ் மிகுந்த பதிவாக விளங்குவது வரலாற்றுப் பின்புலம் கொண்டவை நாடகங்கள் ஆக மாற்றம் பெறுகிறது.

பொதுவாக தமிழில் தோன்றுகின்ற நாடகங்கள் , படிக்கத்தக்க நாடகங்களாகவும், நடிக்கத்தக்க நாடகங்களாகவும் அமைகின்றன. வானொலி தோன்றிய பிறகு அதற்கென எழுதப்படுவதுண்டு. அப்படி எழுதப்பட்ட நாடகங்களில் ஒன்றுதான் "ஆதி -அத்தி " என்ற நாடகமாகும். இந்த நாடகத்தின் ஆசிரியர் மஞ்சக்காட்டுவலசு என்ற ஊரில் பிறந்த ம.பெரியசாமிதூரன் என்பவர் ஆவார். இவருடைய பெற்றோர் பழனி வேலப்பக்கவுண்டர் பாவாத்தம்மாள் என்பவர்களாவார்கள். பெ.தூரன் சிறந்த கவிஞர் , இதைதமிழிர், பாரதியாரின் எழுத்துக்களை தேடித் தொகுத்து வெளிக்கொணர்ந்த பிற்கால பாரதியார் ஆவார்.

**ஆதி அத்தி - பெயர்ப் பொருத்தம்**

ம.பெ.தூரன் அவர்கள் எழுதியுள்ள நாடகம் சங்ககால வரலாற்றின் அடிப்படையில் எழுந்ததாகும். இதன் தலைமைப் பாத்திரங்களாகத் திகழும் ஆதி அத்தி ஆகிய இருவர்தம் பெயர்களையும் கொண்டு நாடகத் தலைப்பு அமைந்துள்ளது.

**அத்தி**

அத்தி என்பவன் வெண்ணிப்பறந்தலை என்ற இடத்தில் சோழன் கரிகாற்பெருவளத்தான் என்பவனிடம் போரிட்டுப் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரன் பெருஞ்சேரலாதனின் மைந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. நடனத்தின் விருப்பம் கொண்டவன்.

**ஆதி**

சோழன் கரிகாற்பெருவளத்தான் பெற்று எடுத்த அரும்பெரும் புதல்வி ஆதிமந்தி ஆவாள். நடனக்கலையில் ஈடுபாடு கொண்டவள். இந்த மாந்தர்களின் பெயர்களை முன்னொட்டு , பின்னொட்டு இன்றி எவ்விதப் பட்டப் பெயர்களும்

சுட்டப் பெறாமல் உரிய வண்ணமே கொண்டு "ஆதி அத்தி " என்று இந்த நாடகத்திற்குத் தலைப்பு கொடுத்துள்ளார். கதைப்படி அத்தியாகிய சேரன் கதாநாயகன், அவனுக்குத் தலைவி ஆதிமந்தி. எனவே "அத்தி பெயரை முன்வைத்துப் பின்னர் ஆதி " என்ற வைத்திருக்கலாம். ஆனால் அதை விடுத்து பெண்பாற்பாத்திரமாகிய ஆதியை முதலில் சுட்டியுள்ளார். காரணம் கதை முழுக்கக் கவனத்திற்கு வருபவள் ஆதிதான். இந்நாடகம் ஆதியையும் அவளுக்குக் கணவன் ஆன அத்தியையும் பற்றிப் பேசுகிறது என்ற குறிப்பை இத்தலைப்பு உணர்த்துகின்றது. ஆதி அத்தி பெ.தூரன் இப்பெயரைத் தேர்வு செய்துள்ளார். ஆனால் இந்த வரலாற்று நாடகத்தை இயற்றியுள்ள பாவேந்தரும் , கண்ணதாசனும் ஆடவரின் பெயரையே முதன்மைப் படுத்தியுள்ளனர். "ஆதி அத்தி என்பதில் பெண்மையின் பெயரான ஆதி முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். சிலப்பதிகாரத்தில் , மணிமேகலையில் எவ்வாறு பெண்களின் பெயர்கள் முதன்மைப்படுத்தப்படுள்ளதோ அதுபோல இந்த நாடகத்திலும் பெண்ணின் பெயர் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**பாவேந்தரின் வரலாற்று நாடகம் (1949)**

பாவேந்தர் இயற்றிய "சேரத்தாண்டவம்" என்ற நாடக நுலில் சேர இளவரசனாகிய "அத்தி"யின் முதன்மைப் பாத்திரத்தைக் கொண்டே இந்நாடகத்தைப் படைத்துள்ளார். சேர அரசனின் சிறப்புகளையும் சோழனோடு கொண்ட நட்புகளைக் குறித்தும் சேரத்தாண்டவத்தில் கூறியுள்ளார். இருப்பினும் சேரனின் பெயரைத் தாங்கி "சேரத்தாண்டவம்" என்று அழைக்கப்பெறுகிறது.

**கண்ணதாசனின் வரலாற்று நாடகம் (1959)**

கவியரசு கண்ணதாசனின் வரலாற்று நாடகமான "ஆட்டனத்தி ஆதிமந்தி " என்ற நாடகத்திலும் சேரன் அத்தியின் சிறப்பே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்டனத்தி ஆதிமந்தியைத திருமணம் செய்த சிறப்பினைக் கூறினாலும் சேர அரசனின் பெயரான அத்தியின் பெயரே முன்னர் இடம்பெற்றுள்ளது. பின்னர் ஆதிமந்தியின் பெயர் அமைந்துள்ளது.

**பெ.தூரனின் வரலாற்று நாடகம் (1956)**

பெ.தூரன் அவர்களின் வரலாற்று நாடகம் முன்னர் குறிப்பிட்டுள்ள பெயர்களைப் பின்தள்ளி மாறுபட்ட வகையில் அமைந்துள்ளார். "ஆதி அத்தி" என்ற பெயரில் ஆதி என்ற பெண்ணின் பெயர் முன்பும் அத்தி என்பவரின் பெயர் பின்பும் இடம் பெற்றுள்ளது. இதை நோக்குமிடத்து பெண்மைக்குரிய வகையில் காப்பியங்களைப் படைத்தவர்களைப் போன்று இவரும் இருபதாம் நூற்றாண்டில் பெண்மைக்குப் பெருமை படைக்கும் வகையில் இந்த நாடகத்திற்கு "ஆதி அத்தி" என்று பெயர் வைத்து புதுமைப் புரட்சி செய்துள்ளார். இந்த நாடகத்தின் நாடக அமைப்பு குறித்து அறிவோம்.

**நாடக அமைப்பு**

"ஆதி அத்தி " என்ற இந்நாடகம் நான்கு அங்கங்கள் , 24 காட்சிகள் என வகைமை கொண்டு அமைந்துள்ளது. அதாவது முதல் அங்கம் மூன்று காட்சிகளையும், இரண்டு மற்றும் மூன்றாம் அங்கங்கள் ஆறு ஆறு காட்சிகளையும் நான்காம் அங்கம் ஒன்பது காட்சிகளையும் உள்ளடக்கியிருக்கிறது.

**கதைக் களங்கள்**

சோழ நாட்டையும் சேர நாட்டையும் கதைக்களங்களாகக் கொண்டுள்ள இந்நாடகத்தில், உரையூர், சேர நாட்டுச் சோலை , கழார் நகரம் , காவிரிப்பூம்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம் - கழார் நகர் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காவிரி நதிக்கரையோரங்கள் காட்சிக்குரிய களங்களாக அமைந்துள்ளன.

**காதையின் காலமும் பொழுதுகளும்**

கி.பி.முதல் நூற்றாண்டில் நிகழ்வுற்ற வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது இந்நாடகம். எனவே , இதன் கதைக்காலமும் அதுவேயாகும். காட்சிபடு பொழுதுகள் காலை, மாலை வேளைகளில் நடைபெற்றதாகும்.

**கதை தந்த வரலாற்றுச் செய்திகள்**

ஆதிமந்தியின் காதல் வரலாறு , அகநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் இடம் பெறுவதாகத் தனது முன்னுரையில் குறிப்பிடும் நாடக ஆசிரியர் அப்பாடல்களையோ அப்பாடல்கள் பற்றியோ வேறு எதுவும் தரவில்லை. எனினும் விளக்கம் கருதி அவற்றைப் பன்வர நிரல்படுத்திப் பார்க்கலாம். ப ,ரணர் பாடிய அகநானூற்றுப் பாடல்களில் ( 76, 222, 236, 396) ஆகிய பாடல்கள் ஆட்டனத்தி ஆதிமந்தி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் பின்வருமாறு இடம் பெறுகின்றன.

அத்தியின் தோற்றத்தைக் கூறி "அவனைக் கண்டீர் " என ஆதிமந்தி மொழிந்த செய்தியைப் பரணர் பின்வருமாறு கூறியுள்ளார்.

**"கச்சின்ன் கழலினன் தேந்தார் மார்பினன்**

**வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்**

**கரிபலம் பொருநனைக் காண்டி ரோவென" (அகம். 76)**

களவில் வந்து உறவாடிய காதலன் வாராததால் வருந்திய தலைவி , அவன் சிறைப்புறத்தானாக நிற்கும்போது , தோழி, தலைவியிடம் கூறுவதுபோக கூறுகிற பரணரின் அகநானூற்றுக் குறிஞ்சிப்பாடல் ( 222) ஆதி அத்தியின் காதல் கதையை முன்வைக்கிறது.

இந்தப் பாடலில் கழார் நகரில் நடந்த புதுநீர் விழாவில் ஆடிய ஆட்டன் , அத்தியின் அழகில் மயங்கிக் காவிரியால் கவர்ந்த கொண்ட செய்தியையும் , அதுகண்டு ஆதிமந்தி வாடிய செய்தியையும் , பின்னர் அவளை அவனுக்குக் காட்டித் தந்து மருதி என்பாள் கடலில் புகுந்து மறைந்து புகழ் கொண்டாள், நாமும் அதுபோல தலைவனைத் தேடிச் செல்வோம் என்று கூறுகிறாள் தோழி.

இந்தச் செய்தி மேலும் இடம் பெறும் பரணர் தம் அகநானூற்றுப் பாடல்களிலும் பின்வருமாறு அமைகின்றன. அகநானூறு (அகம். 236, அகம்.396) பாடல்களிலும் மேற்குறித்தவாறு கூறப்பட்டுள்ளன. இதே வரலாற்றுக் குறிப்பு வெள்ளிவீதியார் எனும் பெண்பாற் புலவரின் அகநானூற்றுப் பாடலிலும் இடம் பெறுகின்றது. அதில் அத்தியைப் பிரிந்த ஆதிமந்தியாரின் துயரைத் துயரோடு

இணைத்துப் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"காதலற் கொடுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து**

**ஆதிமந்தி போலப் பேதுற்று**

**அலந்தனென் உழல்வேன் கொல்லோ"**

என்ற பாடல் வழி ஆதியின் துயரை அறிந்து கொள்ள முடிகிறது.

**ஆதிமந்தியின் வரலாறு திரைப்படமானது (மன்னாதி மன்னன்)**

ஆதிமந்தியின் வரலாறு பல ஆண்டுகளுக்கு முன்பே என உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. நாடகப் பண்பு மிகுந்தது. அது மேடையில் நடிப்பதற்கும் திரைப்படமாகப் நடிப்பதற்கும் ஏற்ற சிறந்த அம்சங்கள் பெற்றது " என்ற எம்.ஜி.ஆர் நடித்த "மன்னாதி மன்னன்" வெளிவரும் முன்பே, 1956 -ல் தூரன் குறிப்பிட்டுள்ளார்.

வானொலியில் உலா வந்த அந்த நாடகத்தின் தோற்றக் காலம். பாரதிதாசனின் சேரத்தாண்டம் எழுதுவதற்கு முன்பே ? பின்பா என்பது ஆய்வுக்குரியது. ஆனால் ஒன்று உறுதி , இந்த மூன்று கதைகளும் நவில் முறைகளும் வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டவை. பாரதிதாசன் இக்கதையை, சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களின் ஒற்றுமையை வலியுறுத்தப் பயன்கொள்கிறார்.

கண்ணதாசனின் கதையில் அத்தியிடம் ஆடல் கற்க வந்த மருதி , ஆதிமந்தி இருவரும் காதல் கொள்கின்றனர். அவன் நெஞ்சமோ மருதியை விரும்புகிறது. அவளுக்காகவே கரூர் மன்னனுடன் போர் செய்கிறான். வெல்கிறான். ஆனால் அதற்குப் படை உதவிய சோழன் கரிகாலனின் மகளின் ஆதிமந்தியை மணக்க நேரிடுகிறது. மருதி புத்தத் துறவியாகிறாள். காவிரிப் புது வெள்ளத்தில் நீராடும் போது அத்தியை வெள்ளம் அடித்துச் சென்ற கடலில் தள்ளிவிட அங்கிருந்த மருதி அவனை மீட்டுக் காப்பாற்றிப் பின்னர் , தானே மூச்சை அடக்கி உயிர் நீங்குகிறாள். கணவனைத் தேடிக் கரை வழியே வந்த ஆதிமந்தி அவனைக் காண்கிறாள். இருவரும் மருதிக்குச் சிலை வடித்துக் காதல் தெய்வமாய் வழிபட்டதாய் காவியம் அமைகிறது. ஆனால் ம.பெ.தூரன் இக்கதையை உளவியல் பாங்கோடு

நிகழ்த்திச் செல்கிறார். மூலக்கதையில் மாறுபடாத இம்மூன்று படைப்புகளிலும் ஆதிமந்தி, அத்தி, மருதி ஆகிய மூவரும் வருகின்றனர். இந்த வகையில் மேலும் ஒப்பாய்வு மேற்கொள்ள "ஆதிஅத்தி" என்ற வரலாற்று நூல் துணை செய்கிறது. இதன் ஆசிரியர் பெ.தூரன் இலக்கிய ஆர்வலர்களைத் தூண்டியுள்ளார்.

**நாடக ஆசிரியர் பெ.தூரனின் அறிமுகம்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தை எல்லா வகையிலும் ஆக்கபூர்வமாக பாதித்தவர் சுப்பிரமணிய பாரதியார் , விடுதலை, அரசியல், சமூகநீதி போன்றவற்றின் சாளரங்களைத் திறந்துவிட்டு புதிய சிந்தனைக்கும் செயலாக்கத்துக்கும் புதுப்பாதை அமைத்தவர் பாரதி ஆவார். இதனால் பாரதியார் இருபதாம் நூற்றாண்டில் அனைவருக்கும் ஆதர்சமாக இருந்தவர். பாரதியார் தடம் பற்றி நடந்த ஒரு பாரதி பரம்பரை தோன்றியது. இத்தகு பரம்பரையில் வந்தவர்கள் தொடர்ந்து தமக்கான ஆளுமைகளுடன் சாதனை படைத்தனர். 1921 -ல் பாரதி மறைவிற்குப்பின் தேசியத்தில் பேரெழுச்சி அலைவீசியது. இக்காலத்தில் இளம் தலைமுறையினர் அதன் வீச்சில் ஈர்க்கப்பட்டனர். அவ்வாறு ஈர்க்கப்பட்ட இளம் படைப்பாளிகளில் ஒருவர்தான் ம.ப.பெரியசாமி தூரன். இவர் கவிதை , சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம் மொழிபெயர்ப்பு , இசைப்பாடல், அறிவியல், பாரதி இலக்கியம், பதிப்பு முயற்சி எனப் பன்முகக் களங்களில் ஈடுபட்டு தமிழுக்கு வளம் சேர்த்தவர். ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியைச் சார்ந்த மஞ்சக்காட்டுவலசு என்ற காவிரிக்கரைச் சிற்றூரில் 1908 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் நாளில் தூரன் பிறந்தார். தூரனுக்குப் பெற்றோர் இட்ட பெயர் பெரியசாமி என்பதாகும்.

கல்லூரி மாணவராக இருந்தபோது ஆங்கிலேய அரசுக்கு தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்குத் தன் பெயரை "தூரன்" என்ற வைத்துக் கொண்டார். தூரன் என்பது இவருடைய குலக்குறிப் பெயராகும். தூரனும் அவரது தங்கையும் குழந்தைப் பருவத்தில் தாயாரை இழந்தமையால் தாய்வழிப் பாட்டியிடம் செம்மாண்டம் பாளையம் என்ற ஊரில் சிலகாலம் வசித்தனர். பாட்டி இதிகாசக் கதைகளையும் தஞ்சாவூர்க் கள்ளன் , மதுரைக் கள்ளன் முதலிய வேடிக்கைக் கதைகளையும் சொல்வார். எனவே தூரனின் படைப்புத்திறன்

வளர்ந்தது.

சிறுவயதிலேயே ஆத்திச்சூடி , கொன்றைவேந்தன், மூதுரை போன்ற நூல்களை மனப்பாடம் செய்தார். 1926-27 ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1926 முதல் 1931 வரை மாநிலக் கல்லூரியில் பயின்றார். தேசபக்தராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் இலக்கியப் படைப்பாளியாகவும் உருமாற்றம் பெற்றார்.

1929 -ல் தூரனும் அவரது நண்பர்களும் தங்கள் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஆழமாகக் கலந்துரையாடவும் “வனமலர்ச் சங்கம்“ என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இந்தக் காலத்தில் திரு.வி.க. அவர்களை அடிக்கடி சந்தித்தார். பாரதியார் கவிதைகளில் ஈடுபட்டிருந்த தூரன் சுதேசமித்திரன் அலுவலகம் சென்று பாரதியின் எழுத்துக்ளைத் தொகுத்தார். இவர் எழுதிய 66 க்கும் மேற்பட்ட நூல்களுள் நாடக நூல்களின் எண்ணிக்கை ஏழு ஆகும். அவற்றுள் ஒன்று ஆதி அத்தி எனப்படும். மிகச்சிறந்த வரலாற்று நாடகம் ஆகும். எம்.சி.ஏ. அறக்கட்டளையின் ராஜாசர் அண்ணாமலை செட்டியார் விருது மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தங்கப்பதக்க விருது உள்ளிட்ட விருதுகள் பல பெற்றவர். இயல் , இசை, நாடகம் மன்றம் , தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் , சாகித்திய அகாதெமி , திரைப்படத் தணிக்கைக்குழு உள்ளிட்ட அமைப்புகளில் பொறுப்பு வகித்துள்ளார். இவர் 20.01.0987 -ல் காலமானார். தமிழிலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை இவர் ஏற்படுத்தியுள்ளார் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

ஆதி-அத்தி என்ற வரலாற்று நாடகத்தை எழுதியவர் பெ.தூரன் ஆவார். கரிகாற் பெருவளத்தான் அகவை ஐம்பதைக் கடந்த நிலையில் சோழ அரசனின் தலைநகரான உறையூரில் அமைச்சர். சேனாதிபதி ஆகியோருடன் விவாதித்துக் கொண்டிருக்கிறான். போரில் பெற்ற வெற்றியை விட நாட்டு மக்களுக்கு மேலும் நல்ல வசதிகளைச் செய்ய வேண்டும். சோழநாட்டுக் குடிகளை வளப்படுத்த வேண்டும். காவிரிக்கு கரை அமைத்து நெற்களஞ்சியமாக சோழ நாட்டை மாற்றியுள்ளான். அமைச்சர் , சேனாதிபதியிடம் அரசர் போரில் பெற்றிட்ட

வெற்றிகளைவிட நாட்டு மக்களின் மீதும் கலை வளர்ப்பதற்கும் யோசனை செய்து கொண்டுள்ளார் என்ற கூறினார். காவிரிக்கு கரை அமைத்து புதுப்புனல் வந்து சேரும்போது "புதுப்புனல் நீராட்டு " ஆண்டுதோறும் நடத்தப்பெறுவது வழக்கமாக உள்ளது. சென்ற ஆண்டு கரிகாற் பெருவளத்தான் மகளான "ஆதி" என்பவள் மிகச் சிறந்த நடனம் ஆடினாள். சோழ நாட்டில் கலைக்கு பஞ்சமில்லை. எனவே கலை நயங்களைக் கற்பதற்காகவே பிற நாடுகளிலிருந்து உறையூருக்கு வருவதுண்டு. அவ்வாறு கலையார்வம் உடைய "அத்தி" என்ற சேர இளவரசன் உறையூருக்கு வந்தான். தன் ஆடல் திறமையை மேம்படுத்திக் கொள்ள என்றும் தன் நடனத்தை அரசர் காண வேண்டும் என்றும் விரும்பினான். அதற்கு அரசரிடம் அனுமதி கேட்கிறான். இசைவு பெறுகிறான்.

**ஆடற்கலை வல்லவன் அத்தி**

ஆடற்கலையில் வல்லவனான அத்தி , தனது திறனைச் சோழன் அவைக்களத்தில் நடித்துக்காட்ட இசைவு பெற்றான். தன் நடனத்தை நிகழ்த்திக் காட்டுகிறான். அரசி வேண்மாள் , இளவரசி ஆதிமந்தி , மந்திரி, சேனாதிபதி ஆகியோருடன் சோழன் இருந்து கண்டு களிக்கிறான். "ஆட்டன்" என்ற சிறப்புப் பட்டமும் கொடுக்கிறான். இந்தச் சமயத்தில் தான் வேண்டும் பரிசிலாக மன்னனிடம் ஆதிமந்தியைப் பரிசாகத் தருமாறு கேட்கிறான். நாட்டியக் கலையை தாங்கள் வளர்த்து வருகிறீர்கள். அரசே அத்தியைப் பார்த்தால் நடனக்கலைஞராக மட்டும் தெரியவில்லை என்ற கூறிவிட்டு அவனைப் பற்றி மறுநாள் விசாரித்து உண்மையைக் கூறுகின்றனர். அரசே நடனக் கலைஞராக வந்திருப்பவர் நம்மிடம் புறமுதிகிட்டு ஓடிய சேரன் பெருஞ்சேரலாதனின் மகன்தான் இவன் என்று கூறுகின்றனர்.

கலையின் மீது கொண்ட தனியா ஆர்வத்தால் அத்தியின் நடனத்தைக் காண விழைகிறான். நடனத்தை கண்டு முடித்தபின் "ஆட்டன்" என்ற பட்டம் அவனுக்கு வழங்கப்படுகிறது. பின்னர் தன்னைப்பற்றி அரசனிடம் உண்மையைக் கூறுகிறான். அரசே நான் சிறுவனாக இருந்தபோது என் தந்தை பாண்டியனுடன் சேர்ந்து தங்களை எதிர்த்துப் போரிட்டு தோற்ற சேரனின் மகன் நான்தான். நான்

தற்போது சேர நாட்டை ஆண்டு வருகிறேன் என்றான். ஆடற்கலையை விரும்பும் அரசன் அதனை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும் சேரநாட்டோடு சோழன் நட்புடன்தான் இருக்கும் என்று பதில் கூறினான். சென்ற ஆண்டு தங்கள் மகள் ஆதிமந்தியின் நடனத்தை புதுப்புனல் நீராட்டில் கண்டேன். எனவே நடக்க் கலையில் வல்லவளான அவளை எனக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றான். அரசன் தன் மனைவி வேண்மாளை நோக்கி சம்மதம் கேட்கிறார். அரசனின் மனைவியும் மகளும் சம்மதம் தெரிவித்தனர். கரிகாலன் , அத்தியிடம் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். இந்த ஆண்டு புதுப்புனல் நீராட்டு நடக்க ஐந்து மாதங்கள் இருக்கின்ற சூழலில் திருமணச் செய்தியை அரசன் அறிவிக்கின்றான். மக்கள் அனைவரும் வாழ்க ஆதிமந்தி! வாழ்க ஆட்டனத்தி! என்று மகிழ்கின்றனர் திருமணமும் நடந்தேறின.

**ஊடல்**

ஒருநாள் மாலை நேரத்தில் ஆதியும் அத்தியும் சேரநாட்டில் பாறையின் மீது அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அத்தி உன்னை மணப்பதற்காகவே நான் நாட்டியத்தைக் கற்றேன் என்றான். உடனே பொய் சொல்லாதீர்கள் நாட்டியத்தைக் கற்க வந்த பிறகுதானே என்னைப் பார்த்தீர்கள். இதுபோன்ற பொய்யை ஆடவர்கள் எங்குதான் கற்பார்களோ என்றாள். சேரநாட்டு ஆடவர்களின் அன்பு அருவி போன்றது. அத்தி அருவியின் வேகத்தை அவருடைய அன்பால் அறிய முடியாது. வேகத்தை அறியும்போது காவிரியின் அமைதியான நிலையினை அறிய முடிகிறது. என்றும் வற்றாதது காவிரி , ஆனால் அருவியோ மழர் அற்றுப் போனால் வற்றிவிடும் என்றாள் ஆதி. ஊடல் கொண்ட அத்தி என் அன்பினை வற்றும் அருவியோடு ஒப்பிடுகிறாயா ? நாம் கூடி வாழ்ந்த நான்கு மாதங்களில் என் அன்பில் ஏதேனும் குற்றம் கண்டுள்ளாயா ? என்றான் அத்தி ஐயோ அப்படி எல்லாம் இல்லை இனமான மாலை நேரத்தில் வீணாக கழிக்காமல் இன்பமாக இருப்போம். நாமிருவரும் ஆடிப்பாடி மகிழலாம் என்றாள். நான் ஒரு பாட்டு பாடுகிறேன் நீ ஒரு அபிநயம் பிடி என்றான் அத்தி. அத்தியின் மார்பில் சாய்ந்து கொண்ட ஆதி இப்படியே நாம் வாழ்நாள் முழுக்க இருக்க வேண்டும்

என்ற நடராஜப் பெருமானை வேண்டுகிறேன் என்றாள். அந்த நேரம் தோழி ஒருத்தி வந்து சோழ நாட்டில் இருந்து சில வீரர்கள் வந்துள்ளனர் என்றாள். என்ன செய்தி புதுப்புனல் நீராட்டு விழாவிற்கான அழைப்பு கொண்டு வந்துள்னர் என்றாள். உடனே ஆதியும் அத்தியும் விரைந்து சென்றனர். புதுப்புனல் நீராட்டிற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகள் நடந்து கொண்டு உள்ளது. அப்போது ஒரு மாலைப் பொழுதில் மாரனும் சாத்தனும் உரையாடுகின்றனர்.

**சோழநாட்டில் மாரனும் சாத்தனும் உரை நிகழ்த்தல்**

மாரனும் சாத்தனும் பேச்சுவாக்கில் சில நகைச்சுவை உணர்வுகளுடன் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது சாத்தன் புதுப்புனல் நீராட்டில் ஒருமுழுக்கு போட வேண்டும் என்றான். எப்படியோ வருடத்திற்கு ஒருமுறையாவது உடம்பை கழுவ வேண்டாமா என்றான் மாரன். போடா நான் பொங்கலுக்கும் குளிப்பேன் என்றான் சாத்தன். சரி சரி எப்படியோ வருடத்திற்கு இரண்டு முறையாவது குளித்து உன் உடலை சுத்தமாக்கு என்றான் மாரன். நான் கையில் துணி மூட்டை வைத்துள்ளேன். நீ என்ன வைத்துள்ளாய் என்ற மாரனிடம் கேட்டான் சாத்தன். அதற்கு மாரன் முறுக்கு , சீடை, பனியாரங்கள் போன்றவை நெய்யில் செய்தது. புதுபுனல் நீராட்டு விழாவில் விற்பதற்காக வைத்துள்ளேன் என்றான். நீ கெட்டிக்காரன்தான் அங்குகூடும் கூட்டத்தில் விற்றுப் பணம் சம்பாதிக்கப் போகிறாய் என்றான் சாத்தன்.

இன்று நடைபெறவுள்ள புதுப்புனல் நீராட்டு விழாவில் சேர அரசன் அத்தியும், அரசி ஆதியும் நடனமாடப் போகின்றனர். எனவே அங்கு வந்து மன்மதனையும் ரதியையும் பார் என்றான் மாரன். இதெல்லாம் இருக்கட்டும் எனக்கு 4 முறுக்கு கொடு என்றான். போன வருடம் வாங்கின முறுக்குக்கே பணம் நீ கொடுக்கவில்லை. அதற்குப் பணம் எங்கு போய்விடுகிறது ? அரசன் அரண்மனையில் உள்ளதுபோல் எப்போதும் என் பணம் பாதுகாப்பாக இருக்கும் காவிரிக்கரையில் இளவரசனும் இளவரசியும் நடனமாட தயார் நிலையில் உள்ளனர்.

**காவிரிக்கரையில் புதுப்புனல் நீராட்டு தொடக்க விழா**

கரிகாலன் தன் மக்களோடு மக்களாக காவிரிக் கரையில் கூடியுள்ளார். ஆதியும் அத்தியும நடன நிகழ்விற்குத் தயாராக உள்ளனர். அப்போது அரசன் குடிமக்களிடம் உரை நிகழ்த்துகிறார். உரை நிகழ்ந்த பின் நடன நிகழ்வு தொடங்கிற்று. ஆதிமந்தியின் பாட்டிற்கு அபிநயம் பிடித்து ஆடுகிறான். அதம்தி பல்லவி பாட ஆதியும் ஆடுகிறாள். நடனம் நிகழ்ந்த சில நிமிடங்கள் அத்தி சோழ மக்களுக்கு உரை நிகழ்த்துகிறான். உங்கள் அன்பிற்கும் ஆதரவிற்கும் நன்றி கூறினான். அத்தி , சோழன் கரிகாற்பெருவளத்தானும் மக்களுக்கு நன்றி கூறி விட்டு புதுப்புனல் நீராட்டு விழாவில் அத்தி நீரில் பல சாகச நிகழ்வுகளை செய்ய உள்ளார். நீங்கள் அனைவரும் அதனைக் கண்டு களியுங்கள் என்று அரசன் கூறினார்.

**காவிரி வெள்ளத்தில் ஆடல்**

அத்தி காவி வெள்ளத்தில் பாய்ந்தான். மக்கள் வியந்து பார்க்கும் அளவு அத்தி வெள்ளத்தில் ஆடல் நிகழ்த்தினான். பல வித்தைகள் நடத்தினான். பரத நாட்டியத்தில் இவ்வளவு திறமைகள் உள்ளனவா ? எவர் நீரிலே பிறந்தவரா என்றெல்லாம அதிசயித்துக் கூறினர். அத்தியின் நீர் விளையாட்டைக் காண்பதற்கும் இளவரசி ஆதி பாடுவதைக் கேட்பதற்கும் எவ்வளவு ஆனந்தமாக உள்ளது என்ற மக்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

**வெள்ளப்பெருக்கு**

தம்பி வெள்ளம் பெருக்கெடுத்து வருகிறது என்று ஒருவர் கூறினார். நீரில் மூழ்கிய இளவரசன் வெளியே தெரியவில்லை. ஐயோ எவ்வளவு நேரம் மூச்சடக்கி நீருக்குள் இருக்கிறார் என்றான். சத்தமாகச் சொல்லாதே , இளவரசி காதில் விழுந்தால் பயப்படுவார். இளவரசி பாட்டை நிறுத்திவிட்டு அவரைக் காண வருகிறாள். எல்லோரும் இளவரசிக்கு ஆறுதல் கூறுகின்றனர். மனம் கலங்காதீர்கள் இளவரசியே என்றனர். அரசர் ஓடக்காரர்களை அழைத்து ஒவ்வொரு மடுக்கரையிலும் சென்றுத் தேடுமாறு உத்தரவு போட்டான். காவிரித்தாயே எங்கு என் கண்ணாளனை மறைத்து வைத்துள்ளாய் , ஐயோ!

ஆட்டனத்தி என்று மயங்கி விழுந்தாள் ஆதி. ஓடிச் சென்று ஐயோ மகளே என்று வேண்மாள் தாங்கிப்பிடித்து அழுதாள். உடனே கரிகாலன் வேண்டுமாளிடம் நீ மனம் கலங்காதே. நீ கலங்கினால் ஆதி கலங்குவாள். நானே நேரில் போகிறேன். அமைதியாக இரு என்றார். காவிரிக்கரையின் அந்தப்புரத்தில் வேண்டுமாளை விட்டுவிட்டு தானே நேரில் சென்று துரிதமாகத் தேடுகிறார்.

ஆதி காவிரிக் கரையிலே ஓடிச் செல்கிறாள். ஓ காவிரித் தாயே என் கணவனைக் கொடுத்துவிடு என்று ஓலமிட்டு சென்றாள். அப்போது அரண்மனை மருத்துவர்கள் ஆதி கரையிலே இருக்கட்டும். அவளை மீட்டு அரண்மனைக்கு அழைத்துச் சென்றால் மேலும் வருந்துவாள். அத்தி உயிருடன் இருப்பதாக நம்புகிறாள். அவனை மீட்டு அழைத்துச் சென்றால் நிலைமை வேறு விதமாக அமைந்துவிடும் என்றனர்.

**காவிரித் தாயே கவணவனைக் கொடு**

அமைச்சர் அரசனைக் காண வருகிறார். அரசன் ஆதி எங்கே என்ன செய்கிறாள். என்ற கேட்டார். அரசே காவிரிக்கரையில் நடந்தும் ஓடியும் சென்று 8
காவத்தூரம் சென்றுவிட்டார். காவிரித்தாயே என் கணவனைக் கொடு என்று புலம்பியவாறு செல்கின்றார் என்றார். கல்லிலும் முள்ளிலும் அவள் எப்படி நடந்து செல்கின்றாளோ என்று வேண்டுமாள் அழுகின்றாள். அவளை எப்படியாவது அழைத்து வர முடியாதா என்று கேட்டார். அதற்கு அவர் வழி விட்டால் நல்லது என்று மருத்துவர்கள் கூறியுள்ளார் என்ற அமைச்சர் கூறினார். காவிரிக்கரையில் தோழிகள் ஆடிக்கொணடும் பாடிக்கொண்டும் இருப்பதைப் பார்த்து ஆதி கேட்கிறாள். நீங்கள் எவ்வளவு அழகாக ஆடுகிறீர்கள் அவரை அழைத்து வரக்கூடாது என்றாள் ஆதி நாங்கள் அவருடைய வருகைக்குத்தான் காத்திருக்கிறோம். நீங்கள் எதிர்பார்த்து என்ன செய்ய ? காவிரித்தாய் அவரை விட்டால்தானே என ஆதி அழுகின்றாள். அதற்கு தோழியர் அம்மணி வருத்தப்படாதீர்கள். விரைவில் வந்து விடுவார் என்று ஆறுதல் கூறினர்.

ஆதி, தோழியரை அழைத்துக் கொண்டு காவிரிக் கரையில் தேடிச் செல்கிறாள். காவிரிக் கரையில் தனியாக ஒரு வீடு உள்ளது. மருதி என்ற

பெண்ணும் அவள் தோழி பொன்னியும் உள்ளனர். மருதி வாடி நாம் காவிரிக்குச் சென்று நீராடுவோம் என்றாள். புதுப்புனல் நீராட்டு நேற்று முடிந்துவிட்டது இன்ற ஏன் அங்கு செல்ல வேண்டும் என்றாள் பொன்னி.

**மருதி, அத்தியைக் காணல்**

பொன்னி, வா கடந்த 14 நாட்களாக இந்த வீட்டிலேயே அடைந்து கிடைக்கிறோம். வா காவிரிக்கரையில் நண்டுக்குட்டி பிடித்தாவது விளையாடலாம் வா என்று கட்டாயப்படுத்தினாள். இன்னும் 15 நாளில் என் தந்தை வந்துவிடுவார். அவர் வந்தவுடன் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்றாள் மருதி. உன் தந்தை வந்த பிறகாவது நண்டுக்குட்டி பிடித்து விளையாடலாமா என்றாள் பொன்னி. என் தந்தை வந்த பிறகு நான் சேர நாட்டிற்குத்தான் செல்வேன். சேர நாட்டில் உள்ள அரசனின் ஆடல் திறமைக்கு நான் அடிமையாக உள்ளேன். சோழ நாட்டில் நடைபெற்ற புதுப்புனல் நீராட்டிற்கு அவர் வ்நதிருப்பார்தானே என்றாள் மருதி. ஆம் கண்டிப்பாக வந்திருப்பார் , ஆதியும் வந்திருப்பாள் என்று பேசிக் கொண்டிருந்தபோது மருதி யாரோ வெள்ளத்தில் அடிபட்டு வந்திருக்கிறார். யார் என்று தெரியவில்லை என்றாள். நெஞ்சில் கை வைத்துப் பார்க்கும் போது உயிர் இருப்பதை அந்து கொள்ள அவளால் உணர முடிந்தது. உடனே மருது கூறுகிறாள். நீ உடனே வீட்டிற்கு சென்ற புதிய ஆடைகளைக் கொண்டு வா. இவர் வெள்ளத்தில் நீந்துவதில் திறமை படைத்தவர். தண்ணீர் அதிகமாக இவர் குடிக்கவில்லை. இவர் பிழைத்துவிடுவார் என்ற மருதி கூறினாள். மருதி , ஆட்டனத்தியின் உடலை சூடேற்றி மெல்ல நினைவு திரும்ப வழி செய்கிறாள். அத்தி மெல்லிய குரலில் நீங்கள் யார் ? நான் எப்படி இங்கு வந்தேன் என்று வாய் திறந்தான். உடனே அத்தி இது கழார்பட்டினமா என்றான். இல்லை காவிரிப் பூம்பட்டினத்தின் அடிப்பகுதி, இங்கு என் வீட்டைத் தவிர வேறு வீடு ஏதுமில்லை. நான் பாண்மகள், என்ற பெயர் மருதி என்ற கூறினாள்.

மருதி பொன்னியிடம் வீட்டிற்குச் சென்று இளஞ்சூடான பால் தயார் செய்து தேன் கலந்து கொண்டு வா என்றாள். மருதி , அத்தியிடம் நீங்கள் நீச்சல் கலையில் திறமை பெற்றவர் என்றாள் , எப்படி உனக்குத் தெரியும்

வெள்ளப்பெருக்கில் சிக்கியபோது தண்ணீர் நிறைய குடிக்காமல் தற்போது உயிருடன் உள்ளீர்கள் என்பதை வைத்துக் கூறினேன் என்றாள் மருதி , இவ்வாறு பேசிக் கொண்டு இருக்கும்போது இளஞ்சூடான பாலை பொன்னி கொண்டு வருகிறாள். அத்தியின் கை நடுங்குகிறது. ஆகையால் மருதி கொஞ்சம் கொஞ்சமாக பாலை அத்தியின் வாயில் ஊற்றுகிறாள். அவனும் குடிக்கிறான்.

கழார் நகரில் சிறிய மண்டபம் உள்ளது. அங்குள்ள மண்டபத்தில் சோழ அரசன் உள்ளார். அத்தியை தேடிச் சென்றவர்களைப் பற்றி விசாரிக்கின்றார். ஓடக்காரர்கள் 4 காத தூரம் சென்றுள்ளனர். வலை வீசியவர்களும் தேடிக் கொண்டுள்ளனர். எல்லோரும் ஒரே செய்தியைத்தான் கூறுகின்றனர். இன்னும் கிடைக்கவில்லை என்ற செய்திதான் நமக்கு கிடைக்கிறது. சரி ஆதி என்ன ஆனாள். அவர்கள் காவிரிக் கரையில்தான் நடந்து சென்ற தேடி வருகின்றார். கல்லையும், மரத்தையும் காவிரியையும் பார்த்து என் கணவனை கண்டாயா ? என்று புலம்பிக் கொண்டு செல்கிறார் என்றனர். யாரிடமும் சொல்லாதீர்கள் மருத்துவர்கள் சொற்படி நாம் விட்டுப் பார்ப்போம். அவளின் மனநிலை கெட்டுவிடக்கூடாது என்றார் அரசர் எப்படியாவது அவள் மனம் சாந்தமாகட்டும் என்றார் கரிகாலன்.

**அத்தியும் மருதியும் உரையாடல்**

மருதியும் பொன்னியும் மரத்தடியில் பேசுகின்றனர். உன் ஆடலைக் காண ஒருவர் வந்துவிட்டாரே நான் ஏன் இங்கு இருக்க வேண்டும் நான் வீட்டிற்குப் போகிறேன் என்றாள் பொன்னி. வேண்டாம். இங்கேயே இரு என்றாள் மருதி , சரி அவரை யார் என்று கேட்டாயா என்றாள். அவர் சொல்ல நினைக்கின்றார். வார்த்தை வெளியே வரவில்லை என்றாள் மருதி.

மருதி தனியே சென்று அத்தியைச் சந்திக்கிறாள். அத்தியும் மடல் ஒன்று அனுப்ப வேண்டும். ஆதிமந்தி என்னைக் காணாமல் தவித்து கொண்டிருப்பான் என்றான். நீங்கள் யார் எனறு சொல்லவில்லை. யாருக்கு என்ன செய்தி அனுப்ப வேண்டும் என்றாள். என்னை யார் என்று உனக்குத் தெரியாதா என்று அத்தி கேட்டான். நீ புதுப்புனல் நீராட்டிற்கு வரவில்லையா என்னைத் தெரியவில்லையா

என்றான் அத்தி. நான் வரவில்லை , நீங்கள் யார் என்றும் தெரியவில்லை என்று மருதி கூறினாள்.

உடனே அத்தி என் தந்தையின் மீதுள்ள கோபத்தால் போனால் போகட்டும் என்ற என்னை விட்டுவிட்டார்களோ ஒன்றும் தெரியவில்லை. எனவே நீ எனக்காக மடல் ஏதும் அனுப்ப வேண்டாம். விட்டுவிடு என்றான் அத்தி , சரி நானும் ஆடற்கலையை விரும்புபவள். என் நடனத்தையும் தாங்கள் காண வேண்டும் என்று ஆடிக் காட்டினாள். அவளுடைய நடனம் அவனுக்குப் பிடித்துப் போனது இந்த ஆட்டத்தை ஆதி மந்தி பார்த்தாலும் வியந்து போவாள். அவர் வியப்பது இருக்கட்டும், நீங்கள் வியந்தால் மட்டும் போதும் என்றாள் மருதி. பல நாட்கள் ஆனநிலையில் நான் போகட்டுமா என்றான் அத்தி , வேண்டாம் இன்னும் பூரணகுணம் அடையவில்லை என்றாள் மருதி.

பொன்னி, மருதியை நாடி வருகிறாள். இருவரும் பேசுகின்றனர். பொன்னி அவளிடத்தில் நீ வஞ்சி நாட்டிற்குச் சென்று அத்தியைக் காண வேண்டும் என்ற கூறினாள். அதற்கு மருதி நான் ஏன் அங்கு போக வேண்டும் அவர்தான் இங்கு உள்ளாரே என்றாள் ஆட்டனத்தி யார் என்ற தெரியாமலேயே அவர் மீது ஆசை வைத்திருந்த மருதி தற்போது நேரில் அவரைக் கண்டவுடன் பிரவாளா ? பிரயமாட்டாள். முழுமையான பாசத்துடன் வாழ எண்ணுகிறாள்.

**ஆதி வருகை**

காவிரிக்கரையில் பாடலைப் பாடிக் கொண்டே வருகிறாள் ஆதி. காவிரித்தாயே கணவனைக் கொடுத்துவிடு என்றாள். அந்த நேரத்தில் மருதி அவளைக் காண்கிறாள். உள்ளத்தை உருக்கும் அளவு பாடிவரும் நீங்கள் யார் என்று மருதி கேட்கிறாள். காவிரித் தாயே வந்துவிட்டீர்களா ? என் கணவனைக் கொண்டு சென்றீர்களே எங்கு வைத்துள்ளீர்கள் என்க கணவனைக் கொடுங்கள் என்ற கேட்டாள் ஆதி, நான் காவிரித்தாய் இல்லை என்றாள் மருதி. ஆனால் ஆதி இல்லை நீங்கள் காவிரித்தாய்தான். புதுப்புனல் வெள்ளப்பெருக்கில் என் கணவன் ஆட்டனத்தியை கவர்ந்து சென்றுவிட்டீர்கள். அவரைத் தேடித்தான் வந்துள்ளேன் என்றாள் ஆதி. இப்போது மருதிக்கு உண்மை தெரிகிறது. வந்திருப்பவர் அத்தி

என்றதை அறிந்து வியப்புடன் உள்ளாள். திகைக்கின்றாள். மருதியை மீண்டும் விளித்து காவிரித்தாயே பெயரோ ஆதிமந்தி என்றாள்.

ஐயோ? ஆட்டனத்தி போய்விடுவாரே என்ன செய்வது ? அம்மா நான் காவிரித்தாயில்லை. நான் ஒரு பாண்மகள் , என் பெயர் மருதி என்றாள். நான் சாதாரணப் பெண், நீங்கள் காவிரித்தாயிடம் கேளுங்கள் என்ற கூறிவிட்டு வீட்டை நோக்கி ஓடுகிறாள் மருதி. ஆதி கடலை நோக்கி ஓடுகிறாள். மருதி பார்க்கிறாள். நிற்கிறாள். அவளும் ஒரு பெண்தானே அரசகுமாரிக்கு நான் துரோகம் செய்வதா என்று நினைக்கிறாள் மருதி ஆதிமந்தியை நோக்கி மீண்டும் மருதி ஓடி வருகிறாள்.

**ஆதியிடம் அத்தியை ஒப்படைத்தல்**

எதிர்பாராத நேரத்தில் கிடைத்த அதிர்ஷ்டப் பொருளை தன்னலம் கருதாமல் உரியவருக்கு ஒப்படைப்பது ஒருவகை தியாக உணர்வுதான். ஆம் மருதி , ஆதியை நோக்கிச் சென்ற உண்மையை கூறிவிடுகிறாள். இதோ உன் கணவன் அத்தி இங்குதான் உள்ளார் என்ற அழைத்துச் செல்கிறாள் மருதி. அத்தியைக் கண்டவுடன் ஆதி மகிழ்கிறாள். இருவரும் கட்டித் தழுவிக்கொள்கின்றனர். காவிரித்தாய் உன் கணவனைக் கொடுத்துவிட்டாள் என்றாள் மருதி. நீ ஏன் இப்படி வாடிவிட்டாய் என்று அத்தி கேட்கிறான். தாங்கள் எப்படியும் உயிரோடு இருப்பீர்கள் எனக் கருதி நான் தங்களைத் தேடி அலைந்தேன். அதற்கு அத்தி உன் காதலின் பெருமையை நான் இப்போது உணருகிறேன். இது யாருடைய வீடு. காவிரித் தாய்க்கு இப்படி ஒரு வீடு உள்ளதா என்று ஆதி அத்தியிடம் கேட்கிறாள். காவிரித் தாய்க்கு வீடா? இல்லை என்னைக் காப்பாற்றியது மருதிதான். மருதியை தேடுகின்றனர். அந்த இடத்தில் மருதி இல்லை.

**தியாகப் பாத்திரம்**

மருதி இந்நாடகத்தின் தியாகப் பாத்திரமாக மாறிவிட்டாள். மருதியை தேடிச் சென்றபோது பொன்னி எதிர்ப்படுகிறாள். பொன்னியிடம் மருதி எங்கே என்ற ஆதி. அத்தி வினவுகின்றனர். அவள் கடலுக்குச் செல்வதாகக் கூறினாள் என்றாள். மருதி தன் மனத்தில் ஆட்டனத்தி என் நடனத்தைப் பாராட்டினார்.

அதுவே எனக்குக் கிடைத்தப் பரிசு. அந்த நினைவு ஒன்றே போதும் என்ற கூறிவிட்டு படகில் ஏறி கடலில் வெகுதூரம் சென்றுவிட்டாள். அதனைக் கண்ட ஆதி, அத்தி, மருதியை நோக்கி என்ன செய்கின்றாய் என்று ஓலமிட்டனர். நீரில் தன் பலத்தை இழந்திருந்த அத்தி செய்தவதறியாது திகைத்தான். படகில் மருதியைக் காணவில்லை. நடுக்கடலில் படகுப்பயணம் செய்த மருதி படகை விட்டு எங்கே போனாள் ? என்ன ஆனாள் ? ஐயோ? மருதிய! எங்களுக்கு உயிர் பிச்சை கொடுத்துவிட்டு நீ சென்ற விட்டாயே! நாங்கள் என்ன செய்வது ? ஆதியும் அத்தியும் புலம்புகின்றனர். எங்களை வாழ வைத்துவிட்டு காவிரித்தாயே கடலில் கலந்துவிட்டாயோ? என்று இருவரும் வருந்தினர். மருதி மனதளவில் ஆட்டனத்தியை காணாமலே கண்டு மனத்தில் ஏற்றாள். கண்ட பிறகு அத்தியும் அவளை ஏற்றான். உடையவள் வந்து கேட்கும்போது தனக்குப் பிடித்தமான அத்தியை விட்டு விலகி தியாகப் பாத்திரமாக மருதி திகழ்ந்தாள். பொன்னியும் கரையிலே நின்று கண்ணீர் வடித்தாள்.

இந்த நாடகம் வானொலி நாடகமா முதலில் எழுதப்பெற்றது. பின்னர் நடிப்பதற்காகப் படைக்கப்பட்டது. அதன்பின் எம்.ஜி.ஆர். நடித்த "மன்னாதி மன்னன்" என்ற திரைப்படமானது. சங்க இலக்கியத்தில் உள்ள கருப்பொருளை கொண்டு "ஆதி அத்தி " என்ற நாடகத்தைப் பெ.தூரன் பல்சுவை நிரம்பிய படைப்பாகப படைத்துள்ளார். காலம் கடந்து இந்நாடகம் வாழ்வதற்கு எதார்த்தமான நிகழ்வுகள் நாடக ஆசிரியர் படைத்துள்ளார் என்பதே நாடக வெற்றிக்குக் காரணம் ஆகும்.

**ஆதி அத்தி கதாப்பாத்திரங்கள்**

1. ஆதி - ஆதி அத்தி நாடகத்தில் முதன்மைப் பெண் கதாப்பாத்திரம் கதாநாயகி , தொடக்கம் முதல் இறுதி வரை இடம் பெறும் கதாப்பாத்திரம் , பெண்ணின் பெயரை முன்னதாக வைத்த நாடகத்திற்குப் பெயர் வைத்திருக்கிறார் பெ.தூரன். கரிகாற்பெருளத்தானின் மகள். புகார் நகர் கற்புடை மகளிர் எழுவரில் ஒருத்தி - ஆதி மந்தி ஆவாள்.

2. அத்தி - ஆடற்கலையைக் கற்றவன் , சேர நாட்டரசன் பெருஞ்சேரலாதன் சோழனின் புறமுதுகிட்டவன், பாண்டியனுடன் சேர்ந்து போரிட்டு எதிர்த்த சேரனின்

மகன் அத்தி, சோழநாட்டில் கலையைக் கற்று சோழனின் அவையில் நடனம் ஆடி ”ஆட்டன்“ என்ற பட்டம் பெற்றான். ஆட்டனத்தி என்றழைக்கப்பட்ட இவன் ஆதியை பரிசாகக் கேட்க பகை மறந்து சோழனும் தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்கிறான். புதுப்புனல் நீராட்டு விழாவில் புதுவெள்ளம் காரணமாய் அடித்துச் செல்லப்படுகிறான். மீண்டு வருகிறான்.

3. கரிகாற்பெருவளத்தான் - சோழ அரசன் , ஆதிமந்தியின் தந்தை , தான் பெற்ற வெற்றிகளைவிட கலையார்வம் மிக்கவன். தன் நாட்டை நெற்களஞ்சியமாக மாற்றியவன். தன்னிறைவு கொண்ட வகையில் தன் நாட்டை ஆட்சி செய்தவன்.

4. வேண்மாள் - கரிகாலனின் மனைவி. கரிகாற்பெருவளத்தானுக்கு மனைவியர் பலர் இருப்பினும் பட்டத்தரசியான இவர் பெயர் மட்டுமே கூறப்படுகிறது. “ஆதி“ என்ற பெண்ணைப் பெற்றவள். ஆடல் , பாடல்களின் தன் பெண்ணை ஈடுபடுத்தி ஆதிமந்தியாக அவளை வளர்த்தவள்.

5. அமைச்சர் - கரிகாற்பெருளவளத்தானுக்கு ஆலோசனை கூறும் மந்திரி. சோழ நாட்டிற்கு வந்த இளைஞன் சேர அரசன் என்ற உண்மையை கண்டறிந்து கூறியவன்.

6. சேனாதிபதி - கரிகாலன் பெற்ற வெற்றிகளைவிட அரசன் கலையார்வம் உடையவன் என்ற உண்மையை உலகறியச் செய்தவர்.

7. மருதி - இந்த நாடகத்தில் இடம் பெற்ற இன்னொரு நுண்ணிய பாத்திரம் மருதி. தியாகப் பாத்திரம் என்ற இவரைக் கூறலாம். பாண்மகள் , ஆடல், பாடல், நீச்சல், கை மருத்துவம் உள்ளிட்ட கலைகளில் வல்லவள் , காதலுக்காக அனைத்தையும் தியாகம் செய்தவர்கள்.

8. பொன்னி - மருதியின் தோழி , காவிரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் தனியே குடில் அமைத்து தங்கியிருக்கும் மருதிக்குத் தோழியாக இருப்பவள். மருதி படலில் இருந்து மாயமான பிறகும் பார்த்து கண்ணீர்விட்டு நிற்கும் தோழி.

9. மாரன் - புதுப்புனல் நீராட்டு விழாவில் தின்பண்டங்கள் விற்பவன்.

காவிரி ஆற்ற வெள்ளத்தில் அத்தி அடித்துச் செல்வதை விளக்குபவர்கள்.

10. சாத்தன் - மாரனின் நண்பர். இருவரும் வேடிக்கையாகப் பேசி வருபவர்கள்.

11. காவிரி - காவிரித் தாய் , தன்னலமற்றவள், காவிரியை ஒரு பாத்திரமாக பெ.தூரன் படைத்துள்ளார். புதுவெள்ளம் அத்தியை அடித்துச் சென்றபோது காவிரிக்கரையில் 10 காத தூரத்திற்குமேல ஆதி நடந்து சென்று தாயே என் கணவனைக் கொடுத்துவிடு என்பாள். தன் கணவன் எப்படியும் உயிருடன் கிடைத்துவிடுவார் என்ற நம்பிக்கையில் காவிரித் தாயை வணங்குவாள். மருதி அத்தியைக் காப்பாற்றி ஆதியிடம் ஒப்படைக்கும் போதுகூட மருதியை காவிரித்தாயாகவே கருதினாள் ஆதி.

சேவகன், தோழிகள், பெண்கள், பொதுமக்கள் பலரும் புனைவுப் பாத்திரமாக இடம் பெற்றுள்ளனர்.

**வினாக்கள்**

1. ஆதி அத்தி நாடகத்தை அறிமுகப்படுத்துக.
2. ஆதி அத்தி பெயர்ப் பொருத்தம் தருக.
3. ஆதி அத்தி கதைச் சுருக்கம் தருக.
4. ஆதி அத்தி நாடகத்தில் வரும் கதாபாத்திரங்களின் பண்புகளைக் கூறுக.
5. காவிரிக் கரையில் புதுப்புனல் நீராட்டு விழாவினை குறிப்பிடுக.

## அலகு - 5

## எட்டுத்தொகை

பழங்காலத்தில் நூல்களை நினைவில் வைத்துக் கொள்வதற்காகத் தனிப்பாடல்களைப் பாடி வைத்தனர். எட்டுத்தொகை பற்றிய பாடல்,

**"நற்றினை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**

**இத்திறத்த எட்டுத்தொகை.**

இவ்வெட்டுத்தொகையில் நற்றிணை , குறுந்தொகை ஐங்குறுநூறு , கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் அகப்பாடல்கள். பதிற்றுப்பத்து , புறுநானூறு, இரண்டும் புறப்பாடல்கள் பரிபாடல் அகம் புறம் என்ற இருபொருள் பற்றிய பாடல்களை உடையது. பரிபாடல் வையைப் பாடல்கள் அகம் பற்றியும் , திருமால் செல்வேள் பற்றிய பாடல்கள் புறமாகவும் அமைகின்றன.

**நற்றிணை**

நல் + திணை = நற்றிணையாகும். நல்ல ஒழுக்கத்தை கூறுவது என்பது பொருள். திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்று பொருள். அகத்திணை - அக ஒழுக்கம், புறத்திணை - புற ஒழுக்கம். கொண்ட கொள்கையில் திண்மையாக நிற்பது திணை எனப்பெறும். அகச்சுவை பொருந்திய பாடல்களில் மக்களின் முறையான வாழ்வு , ஓர் அறிவு உயிரையும் உடன் பிறந்த்தாக்க் கருதும் பண்பு , உயர்ந்த கொள்கைகளைப் பொற்றல் , உள்ளறை, இறைச்சி அமைந்த பாடல்களும் உள்ளன. 275 புலவர்களால் பாடப்பெற்றது நற்றிணை , பாடலிலுள்ள சொற்றொடர்களால் பெயர் பெற்ற புலவர்கள் எழுவர். வண்ணப்புறக் கந்தரத்தனார் , மலையனார், தனிமகனார், விழிக்கண்பெதைப் பெருங்கண்ணனார் , தும்பிசேர் கீரனார், தேய்புரி பழங்கயிற்றனார், மடல் பாடிய மாதங்கீரனார் ஆகியோர்.

பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி இப்பாடலை தொகுக்கச் செய்தான். தொகுத்தவார் யார் எனத் தெரியவில்லை. பாடல்கள் 9 அடிச் சிற்றெல்லையும் 12 அடிப் பேரெல்லையும் உடையன. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் 1914 -ல் உரையுடன் பதிப்பித்தார்.

நற்றிணை, எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுகின்றது. இது கடவ . இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. இந்நூலுக்குப் பின்னாளில் உரையெழுதியவர். நற்றிணை (நல் + திணை என்பதற்கு "நல்ல திணை " என்று பெயர். இந்நூல் தொகுப்பித்த மன்னனின் பாடல்களையும் (பாடல் எண்கள் 73, 301) தன்னுள் பெற்றுள்ளது. இந்நூலின் பாடல்கள் யாவும் நற்றிணை நானூறு என்றும் அழைக்கப்பெறும்.

இந்நூலுள் குறிஞ்சித் திணைப் பாடல்களே மிகுதியாக உள்ளன. ஒவ்வொருவர் கூற்றாகக் காணப்படுகின்றன. 131 பாடல்கள் குறிஞ்சித் திணையிலும், 106 பாடல்கள் பாலைத் திணையிலும் , 101 பாடல்கள் நெய்தல் திணையிலும் 32 பாடல்கள் மருதத்திணையிலும் 29 பாடல்கள் முல்லைத் திணையிலும் அமைந்துள்ளன. புலவர்களின் பெயர் தெரியாப் பாடல்களாக 51 பாடல்கள் உள்ளன.

குறிஞ்சித் திணையில் இரவுக் குறியிடத்துத் தலைவன் தலைவியர் பேச்சு நிகழாத போக்குக் குறிப்பிடத்தகுந்த செய்தியாகும். முல்லைத் திணையில் , பாணன் கூற்றும் , தலைவன் தலைவியிடம் கூறும் கூற்றும் இடம்பெறாத நிலையும் சிந்தனைக்குரியன.

பாலைத்திணையில் தேர்ப்பாகன் கூற்று இடம்பெறவில்லை. நெய்தல் திணையில் பாங்கன் கூற்றும் இல்லாதிருத்தல் கவனத்திற்குரியது. இளமைக் காலத்திலேயே இன்பத்தைத் தூய்க்க வேண்டும் என்ற உணர்ச்சி ஒரு பக்கம் , பொருளைத் தேடினால்தான் இன்பத்தைப் பெமுடியும் என்ற அறிவு மற்றொரு பக்கம் என, இவ்விரு பக்கங்களையும் நற்றிணை நமக்குப் புலப்படுத்துகின்றது.

காதலர் வரவைப் பல்லி கூறுவதாக உள்ள நிமித்தமும் , காதல் வரும் வரை காதலி சுவரில் கோடிட்டு எண்ணும் பண்டைய வழக்கமும் இந்நூல் வழி அறியமுடிகின்றன.

**சிறப்புகள்**

எட்டுத்தொகை நூல்களில் முதலிடம் பெற்றுத் திகழ்வது நற்றிணை ஆகும். நல் என்னும் அடைமொழியும் , அகப்பொருள் கூறும் நூல்களுக்கு அமைந்த திணை என்னும் பெயரும் சேர்ந்து இந்நூல் நற்றிணை என்று வழங்கப்படுகின்றது. இதனை நற்றிணை நானூறு என்றும் அழைப்பர்.

இந்நூல் 9அடி முதல் 12 அடிகள் வரை அமைந்த 400 பாடல்களைக் கொண்டதாகும். 234 ஆம் பாடல் மட்டும் முழுவதும் கிடைக்கவில்லை. திருமாலைப் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். 175 புலவர்களால் பாடப்பட்ட இந்நூலைத் தொகுத்தவர் யார் அறியக்கூடவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியாராவர்.

நற்றிணைப் புலவர்கள் பாடல் தொடர்களால் பெயர் பெற்றுள்ளனர். அவர்கள் - வண்ணப்புறக் கந்தரத்தனார் , மலையனார், தனிமகனார், விழிக்கட் பேதைப் பெருங் கண்ணனார், தும்பிசேர்கீரனார், தேய்புரிப் பழங்கயிற்றினார், மடல் பாடிய மாதங்கீரனார் எனும் எழுவராவர்.

நற்றிணைப் பாடல்கள் அக்கால மக்களிடம் பரவிக்கிடந்த பல பழக்க வழக்கங்களை அறியப் பெரிதும் துணை செய்கின்றன. மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, கொடைத்திறம், மன்னர்களைப் பின்பற்றி மக்கள் வாழ்ந்த அறவாழ்வு ஆகியவற்றையும் புலவர்களின் உவமைத்திறம் , உள்ளுறை, உவமம் ஆகியவற்றையும் இதில் கண்டு தெளியலாம்.

**குறுந்தொகை**

குறுகிற அடிகளையுடைய பாடல்களைத் தொகுத்தது என்பது பொருள். குறைந்த அளவு 4 அடிகளாகவும் மிகுதியான அளவு 8 அடிகளாகவும் உள்ள

பாடல்கள். குறுந்தொகை நானூறு என்றழைத்தனர். ஆயின் கடவுள் வாழ்த்துப் பாடல் உட்பட 402 பாடல்கள் உள்ளன. 307, 391 ஆகிய இருபாடல்களும் ஒன்பது அடிகளையுடையனவாய் உள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவது தொக்கப்பெற்றது குறுந்தொகை என அறிகிறோம். இத்தொகையைச் செய்தவன் பூரிக்கோ. இத்தொகை பாடிய புலவர் 205 பேர். இத்தொகையில் பாடல் சொற்றொடர்களால் பெயர் பெற்ற புலவர் பதினெண்மர். உரையாசிரியர்களால் மிகுதியாக எடுத்தாளப்பெற்ற நூலாகக் குறுந்தொகை உள்ளது.

அகவற்பாவின் அமைப்பில் குறுகிய அடிவரையறை கொண்ட பாடல் தொகுதி என்பதால் , குறுந்தொகை எனப் பெயர் பெறுவதாயிற்று. குறுந்தொகை , அடிவரையறை கொண்டு தொகுக்கப் பெற்ற நூல் இந்த அடி அளவினாலும் வேறு சில ஏதுக்காளலும் எட்டுத் தொகை நூல்களில் முதலில் தொகுக்கப்பட்டது என்பர். நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடைய பாடல்களைக் கொண்டவை. இருப்பினும் விதி விலக்காக "வனை உடைத்தனையது ஆகி எனத் தொடங்கும் 307 ஆவது பாடலும் , "உவரி ஒருத்தல் உழாஅது " எனத் தொடங்கும் 391 ஆவது பாடலும் ஒன்பது அடிகளைப் பெற்றுள்ளன.

கடவுள் வாழ்த்து உட்பட 402 பாடல்கள் இந்நூலில் உள்ளன. கடவுள் வாழ்த்துப் பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்டுள்ளது. இந்நூலை "குறுந்தொகை நானூறு " என இறையனாராக பொருள் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

குறுந்தொகையில் 396 பாடல்கள் நேரிசையாசிரியப் பாக்களாலும் , 16, 18, 93, 113, 112 எண்ணுள்ள ஐந்து பாடல்கள் நிலைமண்டில் ஆசிரியப்பாவினாலும் இயற்றப்பட்டவை. இதனுள் குறிஞ்சித் திணைப் பாடல்களே மிகுதி. 145 பாடல்கள் இத்திணையில் அமைந்துள்ளன. 90 பாடல்கள் பாலைத் திணையிலும் , 45 பாடல்கள் முல்லைத் திணையிலு , 50 பாடல்கள் மருதத் திணையிலும் , 71 பாடல்கள் நெய்தல் திணையிலும் அமைந்துள்ளன.

இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். தொகுப்பித்தோன் உப்பூரிக்குடிகிழாராக இருக்கலாம் என்பர். இத்தொகையிலுள்ள பாடல்களை 205

புலவர்கள் பாடியுள்ளனர். 402 பாடல்களுள் ஆசிரியர் பெயர் தெரியாப் பாடல்கள் 10 ஆகும். உவமையால் பெயர் பெற்றோர் 18 பேர் பாடல்களைப் புனைந்த 205 புலவர்களுள் 11 பேர் பெண்பாற் புலவர்கள் ஆவர்.

**குறுந்தொகையின் சிறப்புகள்**

குறுந்தொகை எட்டுத்தொகையில் உள்ள நூல்களுள் ஒன்று. "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் இது குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. . ஏனைய பழந்தமிழ் நூல்களைப் போல் இதுவும் 400 பாடல்களின் தொகுப்பாகவே இருந்திருக்க வேண்டுமென்றும் ஒரு பாடல் இடைச் செருகலாக இருக்ககூடுமென்றும் சிலர் கருதுகிறார்கள். உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் குறுந்தொகையே. ஆதலால் இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது. இது பலவகையிலும் நற்றிணை, அகநானூறு ஆகிய பாடல் தொகுப்புக்களை ஒத்தது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.

**பாடியோர்**

இத் தொகுப்பில் அமைந்துள்ள 391 பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர்.இந்நூலில் அமைந்துள்ள பல் பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆனால் அப்பாடல்களின் சிறப்பு நோக்கி அத்தொடர்களையே ஆசிரியர் பெயர்களாக அமைத்து வழங்கினர். 'அணிலாடு முன்றிலார் ', 'செம்புலப்பெயல் நீரார் ', 'குப்பைக் கோழியார் ', 'காக்கைப்பாடினியார்' என்பன இவ்வாறு உவமைச் சிறப்பால் பெயர் பெற்ற ஆசிரியர்கள் 18 பேர் இந்நூலில் காணப்படுகிறார்கள். கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

**நூலமைப்பு**

நான்கு முதல் எட்டு வரையான அடிகளைக் கொண்டமைந்த 401 பாடல்களின் தொகுப்பு இது. ( 307,391-ஆம் பாடல்கள் 9 அடிகளால் ஆனது) அகப்பொருள்களை அகவற்பாக்களால் கூறுவது குறுந்தொகை. இந்நூலில்

முதல்,கருப்பொருட்களை விட உரிப்பொருளுக்கே சிறப்பிடம் தரப்பட்டுள்ளது. வருணனைகள் குறைந்தும் உணர்வு மிகுந்தும் காணப்படுகின்றன. பொருளுக்கேற்ற பொருத்தமான உவமைகள் கொண்டு கருப்பொருளின் பின்னனியில் மாந்தர்களின் அகத்தெழும் உணர்ச்சிகளை சிறந்த முறையில் சித்தரித்துக் காட்டுபவை குறுந்தொகைப் பாடல்களாகும்.

**கலித்தொகை**

**கலித்தொகையின் உருவம்:**

| | | |
|---|---|---|
| திணை | = | அகத்திணை |
| பாவகை | = | கலிப்பா |
| பாடல்கள் | = | 150 |
| அடி எல்லை | = | 11-80 |
| பாடியோர் | = | 5 |

**பெயர்க்காரணம்**

கலிப்பா வகையால்பாடப்பெற்ற ஒரே தொகை நூல் இதுவே.

**கலிதொகையின் சிறப்புகள்**

திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன் விருத்தத் கவி வளமும்வேண்டோம் - திருக்குறளோ கொங்குவேள்மாக்கதையும்கொள்ளோம் , நனிஆர்வேம் பொங்கு கலி இன்பப் பொருள் என்றும் பழம் பெரும் புலவர்களால்பாராட்டப் பெற்றது.

**வேறு பெயர்கள்**

கலி

குறுங்கலி

கற்றறிந்தோர் ஏத்தும் கலி

கல்விவலார் கண்ட கலி

அகப்பாடல் இலக்கியம்

உரை, பதிப்பு

நூல் முழுமைக்கும்நச்சினார்கினியர் உரை உள்ளது.

நூலை முதலில் பதிப்பித்தவர் = சி.வை.தாமோதரம்பிள்ளை

**கடவுள் வாழ்த்து**

இந்நூலின் கடவுள் வாழ்த்து பாடியவர் = பாரதம் பாடியபெருந்தேவனார்

இந்நூலில் கடவுள் வாழ்த்து குறிப்பிடும் கடவுள் = சிவபெருமான்

**பாடியோர்**

பெருங்கடுங்கோன் பாலை; கபிலன் குறிஞ்சி;

மருதனிளநாகன் மருதம்; - அருஞ்சோழன்

நல்லுருந்திரன் முல்லை; நல்லந்துவன் நெய்தல்

**கல்விவலார் கண்ட கலி**

பாலை திணை பாடல்கள்பாடியவர் = பெருங்கடுங்கோ (36 பாடல்கள்)

மருதம் திணை பாடல்கள்பாடியவர் = மருதன்இளநாகனார் (36 பாடல்கள்)

நெய்தல் திணை பாடல்கள்பாடியவர் = நல்லந்துவனார் (33 பாடல்கள்)

குறிஞ்சி திணை பாடல்கள்பாடியவர் = கபிலர் (29 பாடல்கள்)

முல்லை திணை பாடல்கள்பாடியவர் = சோழன்நல்லுருந்திரன் (17 பாடல்கள்)

**தொகுப்பு**

இந்நூலை தொகுத்தவர் நல்லந்துவனார். தொகுப்பிதவர் பெயர் தெரியவில்லை. நூலின் முதலில் உள்ள கடவுள் வாழ்த்தையும் இறுதியில் உள்ள நெய்தற் களியையும் நல்லந்துவனாரே பாடி நூல் முழுவதையும் தொகுத்தார் என்பார் நச்சினார்கினியர்.

**பொதுவான குறிப்புகள்**

தொல்காப்பிய விதிப்படி கலிப்பாவால் அகத்திணையை பாடும் ஒரே எட்டுத்தொகை நூல் கலித்தொகை மட்டுமே. பா வகையால் பெயர் பெற்ற நூல்கள் = கலித்தொகை , பரிபாடல் கலித்தொகையின் பாடல்கள் ஓரங்க நாடக அமைப்பை பெற்றுள்ளது. பெண்கள் பிறந்த வீட்டுக்கு உரியவர் அல்லர் என கலித்தொகை கூறுகிறது. பாலை திணையை முதலாவதாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது நூல் முழுவதுமே பாண்டியர்களைப் பற்றிய குறிப்பே உள்ளது. பிற சங்க நூல்களில் கூறப்படாத , "கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல்" போன்றவற்றை கூறியுள்ளது.

கலித்தொகையை நல்லந்துவனார் மட்டுமே பாடினார் எனக்கூரியவர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஏறு தழுவுதல் பற்றி கூறும் ஒரே சங்க நூல் கலித்தொகை மட்டுமே பெருந்திணை , கைக்கிளை பாடல்கள் இடம்பெற்றுள்ள ஒரே சங்க நூல் கலித்தொகை மட்டுமே. காமக் கிழத்திபேசுவதாக அமைந்த ஒரே சங்க நூல் கலித்தொகை. மகாபாரதகதையை மிகுதியாக கூறும் நூல் இதுவே.

**முக்கிய அடிகள்**

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் போற்றுதல் என்பது புணர்ந்தாரைப்பிரியாமை பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் அன்பெனப்படுவதுதன்கிளைசெறா அமை அறிவேனப்படுவதுபேதைய

**ஐங்குறுநூறு**

ஐந்து, குறுகிற நூறு , நூறு பாடல்களாக ஐந்நூறு பாடல்களையுடை நூல் என்பது பொருள். ஐங்குறுநூற்றுப் பாடல்கள் , மூன்று அடிச் சிற்றெல்லையும் ஆறு அடிப் பேரெல்லையும் உடையன. ஒவ்வொரு திணைக்கும் நூறு நூறுபாடல்களாக ஐந்து பற்றிய நூறுபாடல்களை ஓரம்போகியாரும். மருதத்திணை அம்மூவனாரும் , குறிஞ்சியைக் கபிலரும் , பாலையை ஒதலாந்தையாரும் , முல்லையைப் பேயனாரும் பாடியுள்ளனர்.

ஐங்குறுநூறு, எட்டுத்தொகை நூல்களுள் மூன்றாவதாக வைத்து

எண்ணப்படுகின்றது. இந்நூற் பாடல்கள் , மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் கொண்டு விளங்குகின்றன. இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். இந்நூலைத் தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இது குறுந்தொகையிலும் குறுகிய அளவுடைய அகத்திணை நூலாக விளங்குகின்றது. சேர மன்னர்களுக்குப் பதிற்றுப்பத்து புற நூல் போன்று அகநுலாக இது அமைகின்றது. பெண்மகவு வேண்டி பாடிடும் பாடல் குன்றக்குறவன்பத்தில் (பாடல் - 257) இடம்பெற்றுள்ளது.

இந்நூலில் உள்ள ஐந்து திணைகளையும் திணைக்கு ஒரு புலவராகப் புலவர்கள் ஐவர் பாடியுள்ளனர். மருதத்திணைப் பாடல்கள் ஓரம்போகியாராலும் , நெய்தல் திணைப்பாடல்கள் அம்மூவனாராலும் , குறிஞ்சித் திணைப்பாடல்கள் கபிலராலும், பாலைத்திணைப் பாடல்கள் ஓதலாந்தையாராலும் , முல்லைத் திணைப் பாடல்கள் பேயனாராலும் பாடப்பட்டுள்ளன. 129, 130 ஆகிய எண் கொண்ட இரு பாடல்கள் கிடைத்தில.

**அகநானூறு**

அகம் + நானூறு எனப்பிரிக்க வேண்டும். அகத்துறைப்பாடல்கள் நானூற்றைத் தனியாகத் தொகுத்தனர். அகம் - உள்ளம் , மனம் எனப் பொருள் பெறும் மனம் , உள்ளம் பற்றிய வீட்டு வாழ்க்கைப் பாடல்கள். 13 அடி குறைந்த நிலையிலும் 31 அடி விரிந்த நிலையிலும் பாடல்கள் உள்ளன. இதனைத் தொகுக்கச் செய்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மர். நீண்ட பாடல்களை இத்தொகுக்க பெற்றுள்ளதால் “நெடுந்தொகை“ எனவும் அழைத்தனர். கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்கள். இதனை முப்பிரிவாகப் பிரித்துள்ளனர். 1-120 பாடல்கள் களிற்றியானை நிரை எனவும் , 121 - 300 வரையுள்ள பாடல் தொகுப்பை மணிமிடைபவளம் எனவும் , 301 - 400 வரையுள்ள பாடல் தொகுதியை நித்திலக் கோவை எனவும் அழைத்தனர். இதனை பாடிய புலவர் நூற்று நாற்பத்தைந்து பேர் 114, 117,165 ஆகிய பாடல்களை எழுதியோர் பெயர் காணப்படவில்லை. இதனை தொகுத்தவர் நல்ல அமைப்பு முறையைக் கையாண்டுள்ளார். 1,3,5,7,9,11,13,15

போன்று ஒற்றைப்படை எண்களையுடைய பாடல்கள் பாலைத் திணைப்பாடல்கள் - அவை 200, 2,8,12,18 போன்ற 2,8 எண்வரும் பாடல்கள் குறிஞ்சிப் பாடல்கள் , அவை 80 6,16,26,36 இவ்வாறு ஆறாம் எண்ணுடைய பாடல்கள் மருதப் பாடல்கள் , அவை 40 4,14,24 போன்ற நான்காம் எண்ணுடைய பாடல்கள் முல்லைப் பாடல்கள் , அவை 40, 10,20,30 என வரும் பத்தாம் எண்ணுடைய பாடல்கள் நெய்தல் பாடல்கள் அவை 40ஈ ஆக 400 பாடல்கள்.

**பதிற்றுப்பத்தின் சிறப்புகள்**

பத்து + பத்து என்பது பொருள். ஒவ்வொரு வேறு அரசனைப் பற்றயும் பத்துப் பத்துப்பாடல்களாகப் பத்துச் சேர அரசர்களைப் பற்றிய பாடிய நூறு பாடல்கள் உள்ள நூல். இப்போது கிடைப்பன எட்டுப்பத்துக்கள் , 80 பாடல்கள். முதல் பத்து இறுதிப்பத்தும் கிடைக்க வில்லை. இதனைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் பற்றிய செய்தகள் கிடைக்கவில்லை. புறநானூறு தமிழக மூவேந்தர்களையும், குறுநிலமன்னர்களையும் பற்றிப் பேச பதிற்றுப்பத்து சேர வேந்தர்களைப் பற்றி மட்டுமே கூறுகிறது. இதனால் சேரவேந்தர் வரலாற்றைத் தெளிவாக அறிய , உணர, இந்நூல் துணைபுரிகிறது. எட்டுத்தொகை நூல்களுள் புறத்திணை நூல்கள் பதிற்றப்பத்தும் , புறநானூறு. இதனைத் தொகுத்தவர் சிறப்பாகத் தொகுத்துள்ளார். ஒவ்வொரு பாடலிலும் வரும் சிறப்பு மிக்க தொடரை அப்பாடலுக்குத் தலைப்பாகத் தந்துள்ளார். புண்ணுமிழ் குருதி , மறம் வீஙடகு பல்புகழ், சான்றோர் மெய்மறை , ஏறாஏணி போன்றவை எண்ணி மகிழத் தக்கன. ஒவ்வொரு பாடல் இறுதியிலும் அதன் துறை , அதன் இசையாகிய வண்ணம் , தூக்கு தலைப்பு ஆகியன தரப்பெற்றளன.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் கல்வெட்டின் மெய்க்கீர்த்தி போன்று பதிகம் உள்ளது. அதில் பாடப்பெற்ற அரசன் , பாடிய புலவர், அப்பத்துப்பாடல்களின் தலைப்புக்கள், பாடிய புலவர் பெற்ற பரிசில் , அவ்வரசன் ஆண்டகாலம் போன்ற செய்திகள் உள்ளன. பிற்கால மெய்க்கீர்த்திக்கு இது அடிப்படையாகலாம்.

**புறநானூறு**

புறத்திணை பற்றிப் பேசும் நானூறு பாடல்களின் தொகுப்பு. தமிழ்நாட்டுப் புறவாழ்க்கை, அதாவது சமுதாய வாழ்க்கை பற்றிப் பேசும் நூல் , கி.மு. மூன்றாம் நுற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள தமிழகத்தின் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டும் பாடல்கள் , மூவேந்தர்கள், குறுநிலமன்னர்கள், வள்ளல்கள், புலவர்கள் இவர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற தொகை நூல் , வாழ்க்கையை எவ்வாறு வாழவேண்டும் என்பதை வடித்துக் காட்டும் நூல், புலவர்களை மிகுதியாக மதித்த காலம்.

**பரிபாடல்**

பாட்டுவகையால் பெற்ற பெயர். ஆசிரியம் , வெண்பா, கலி, வஞ்சி என்ற பாட்டு வகைகளுள் அடங்கப் பெறாமல் நிற்கும் பரிபாடல் உறுப்புக்களாகக் கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்ற தரவுடன் நான்கு அமையும். அகத்திணைப் பொருளில் பாடப்பெறும் எனத் தொல்காப்பியம் நான்கு நூற்பாக்களில் ( 1377, 1378, 1379, 1380) கூறுகிறது. எட்டுத்தொகை நூல்களுள் அகமும் புறமும் என இருபொருள்களையும் பற்றிப் பாடப் பெற்றள்ள நூல் பரிவாடல் மட்டுமே.

**பத்துப்பாட்டு**

சங்க இலக்கியத் தொகுப்பில் நெடும் பாடல்கள் பத்தின் தொகுப்புப் "பத்துப்பாட்டு" என அழைக்கப்படுகின்றது. பத்துப் பாட்டில் உள்ள நூல்களின் பட்டியலை.

**"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோல நெடுல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்**
**பாலை காடத்தொடும் பத்து"**

என்று தொகுத்துரைக்கிறது பழம்பாடல்.

இவற்றுள் திருமுருகாற்றுப்படை , பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பன ஆற்றுப்படை நூல்களாகும். முல்லைப்பாட்டு , குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பன , அக இலக்கியங்களாகும். மதுரைக்காஞ்சி , புறத்திணைப் பாடலாகும். நெடுநல்வாடை அகமா ? புறமா? என்ற விவாத்ததிற்குரிய நூலாகும். இப்பாட்டுகள் ஆசிரியப்பாவால் அமைந்தன. சிலவற்றில் மட்டும் வஞ்சி அடிகள் விரவி வருகின்றன.

**திருமுருகாற்றுப்படை**

முருகனிடம் வழிப்படுத்துதல் என்பது பொருள். ஆற்றுப்படைக்கு இலக்கணம் தொல்காப்பியம் கூறியுள்ளது.

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்**

**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்” (தொல்.1037 3-6)**

கூத்தனோ. பாணனோ , தான் பெற்ற செல்வத்தைக்கூறி எதிர் வந்த கூத்தன். அல்லது பாணனிடம், அவ்வள்ளலை நாடினால் நீயும் என்னைப் போன்று லெவம் பெறலாம் என்று வழிப்படுத்துவது ஆற்றுப்படை. ஆறு -வழி , படை - படுத்துதல். பத்துப்பாட்டில் ஏனைய ஆற்றுப்படை நான்கும் இந்நிலையில் அமைந்தன. யாரை ஆற்றுப்படுத்துகிறானோ அவர் பெயரால்தான் அவ்வாற்றுப்படை பெயர் அமையும். சிறுபாணனை ஆற்றுப்படுத்தியதால் சிறுபாணாற்றுப்படை. பொருநரை ஆற்றுப்படுத்தியதால் பொருநராற்றுப்படை , திருமுருகாற்றுப்படை பெயர் அவ்வாறு அமையவில்லை. முருகனிடம் ஆற்றுப்ப்படுத்துவதால் முருகாற்றுப்படை பாட்டுடைத்தலைவன் முருகனே. பத்துப்பாட்டிற்குக் கடவுள் வாழ்த்துப் போன்று திருமுருகாற்றுப்படை அமைந்துள்ளது. நக்கீரரால் பாடப்பெற்றது. 317 அடிகளை உடையது இவ்வாற்றப்படை காலத்தால் பிந்தியது என்ற கருத்தும் உண்டு. சைவத்திருமுறைகளுள் பதினோராம் திருமுறையிலும்

இவ்வாற்றுப்படை சேர்க்கப் பெற்றுள்ளது. சைவர்கள் நாள்தோறும் பாராயணம் செய்யும் நூல்.

**பொருநர் ஆற்றுப்படை**

சோழன் கரிகாற்பெருவளத்தானைப் பாடியுள்ள பாடல்கள் பத்துப்பாட்டில் இரண்டு அவற்றள் ஒன்று முடத்தாமக் கண்ணியாரால் பாடப்பெற்ற 248 அடிகளைக் கொண்டது இவ்வாற்றுப்படை , பொருநர் என்பதற்குப் போர் செய்வோர் என்ற பொருளும் உண்டு. இங்கும் போலச்செய்வோர் , மற்றவர் போல் வேடமிட்டு நடிக்கும் கலைஞர் என்ற பொருளில் அமைந்துள்ளது. ஏர்க்களம் பாடுவோர் , போர்க்களம் பாடுவோர் , பரணி பாடுவோர் எனப் பொருநர் பலவகையினர். இப்பொருநன் போர்க்களம் பாடுவோன். கரிகாலன் வெற்றிச்சிறப்பினைப் பாடுகின்றான். கரிகாலனிடம் பரிசில் பெற்றவரும் பொருநன் , பரிசில் பெறச் செல்பவனைக் கரிகாலனிடம் வழிப்படுத்துகின்றான். சோழ நாட்டின் வளத்தினையும் காவிரியாற்றின் சிறப்பினையும் புலவர் அழகாகப் படம்பிடித்துக்காட்டுகிறார்.

**சிறுபாண் ஆற்றுப்படை**

பத்துப்பாட்டு நூல்களுள் ஆற்றுப்படை நூல்கள் மொத்தம் ஐந்து ஆகும். அவற்றுள் பாணரை ஆற்றுப்படுத்தும் நூல்கள் இரண்டு அவற்றுள் ஒன்று சிறுபாணாற்றுப்படை. சிறுபாணாற்றுப்படையில் விறலியர் பற்றிய குறிப்புகள் 38 அடிகளில் காணப்படுகின்றன. இந்நூலில் பாலை யாழின் அமைப்பு , இன்னிசை எழுப்பும் முறை , இசைக் குறிப்புகள் , பண்வகைகள் ஆகியன கூறப்பட்டுள்ளன. “பாடல் சான்ற நெய்தல் நெடுவழி என்ற அடிகளால் நல்லிசைப் புலவர்களைப் பற்றிப் பாடப்பட்டுள்ளமையை அறியலாம். சிறிய யாழைக் கொண்டு பாடும் பாணனை வழிப்படுத்திய பாடல் , பாணர், யாழ்ப்பாணர் இசைப்பாணர் , மண்டைப்பாணர் எனப் பலவகைப்படுவர் இப்பாடலில் வரும் பாணன் சிறிய யாழை உடைய பாணன்

**“இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ“ (35)**

என்பதால் அறிகிறோம். ஓய்மான் நாட்டு நல்லியக் கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்னார் பாடியது. 269 அடிகளைக் கொண்டது

சென்னை யருகேயுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகத்தை அடுத்த கடற்கரைப்பகுதி இடைக்கழி நாடு , இன்றம் நல்லூர் என்ற ஊர் உள்ளது. திண்டிவனம் வட்டத்தின் பெரும்பகுதியும் , விழுப்புரம் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், மதுராந்தகம் வட்டத்தின் தென் பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பெ ஓய்மான் நாடு.

**யாழ் பற்றிய குறிப்புகள்**

இந்நூல் குறிப்பிட்டுள்ள யாழ் வகைகள் வருமாறு , 1. சீறியாழ், 2. பேரியாழ், 3. மகரயாழ், 4. சகோடயாழ், 5. செங்கோட்டுயாழ்.

**விறலி வருணனை**

பாணனுக்குத் துணைவியாக விளங்குபவள் விளலி. இவள் விறல்பட ஆடுவதால் இப்பெயர் பெற்றாள். இந்நூல் விறலியைப் பின்வருமாறு வருணித்துள்ளது. கூந்தல் - மழைக்கால மேகம் , தொடை - பிடியினது துதிக்கை , சாயல் - மயில், கொண்டை - வாழைப்பூவின் அமைப்பு, தேமல் - வேங்கை மலர், மார்பு - கொங்கின் அரும்பு, பாதம் - ஓடி இளைத்த நாயின் நா.

**மூவேந்தர் பற்றிய குறிப்புகள்**

இந்நூலில், சேர, சோழ, பாண்டிய நாடுகள் பற்றியும் , அந்நாட்டினை ஆள்வோர் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

**பெரும்பாண் ஆற்றுப்படை**

பேரியாடை வாசிக்கும் பாணனை வழிப்படுத்திய பாடல். பரிசில் பெற்றுவரும் பெரும்பாணன் , பரிசில் பெறச் செல்லும் இரவலனான பெரும்பாணனிடம் கூறும் தொண்டைமான் இளந்திரையனின் பெருமையைப் பேசும் பாட்டு. தொண்டைமான் இளந்திரையன் வென்வேல்கிள்ளி என்ற

சோழனுக்கும் பீலிவனை என்ற நாக கன்னிகைக்கும் பிறந்தவன் என மணிமேலை கூறிகிறது. காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்செலுத்தியவன் அவன். 500 அடிகளைக் கொண்டது இப்பாடலைப் பாடியவர் கடியலூர் உருத்தர்ரங்கண்ணனார் பாணாறு என்ற பெயரும் இப்பாட்டுக்கு உண்டு.

பெரும்பாணாற்றுப்படை என்பது பேரியாழினையுடைய பாணனை ஆற்றுப்படுத்தும் நூல் என்று பொருள்படும். இந்நூலிள் , இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி என்ற வருவதாலும் , “பெரும்பாணர் - குழலர் பாணர் முதலாகிய பெரிய இசைக்காரர் “ என்ற அடியார்க்கு நல்லார் உரையாலும் பெரும்பாணனை ஆற்றுப்படுத்தியது என்பது புலப்படும். இரண்டு பாணாற்றுப் படைகளுள் இதுவே அடி அளவில் பெரியது என்பதாலும் இப்பெயர் பெற்றது. இந்நூலுக்குப் “பாணாறு“ என்ற பெயரும் உண்டு.

இந்நூல் பாடியவர் படியலூர் உருத்திரங்கண்ணனார். இந்நூலின் பாட்டுடைத் தலைவன் காஞ்சிகாவலன் தொண்டைமான் இளந்திரையன் ஆவான்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய மற்றொரு பாட்டு பட்டினப்பாலை. பட்டினப்பாலைத் தலைவன் சோழன் கரிகாலன் பெருவளத்தான். இதனால் தொண்டைமான் இளந்திரையனும் கரிகாற்பெருவளத்தானும் சமகாலத்தவர்கள் என்று தெரிகிறது.

யாழின் வருணனை, ஐந்திணைகள் வருணனை, ஐவகை நிலத்தில் வாழும் மக்களின் இயல்பு , அவர்கள் விருந்து உபசரிக்கும் முறைகள் , இளந்திரையனின் செங்கோல் முறையால் வழிப்போவாருக்கு விலங்குகள் கூடத் துன்பம் செய்யாமை உப்பு வாணிகன் இயல்பு , எயிற்றியர் செயல், வீரக்குடிமகள் இயல்பு, மறவர் வீரம், இடையர் குடியிருப்பின் தோற்றம் ஆய்மகள் செயல் , இடையரின் பண்புகள், உழவர் குடியிருப்பின் அமைப்பு , உழவர் செய்கை , மருத நிலத்தின் நிகழ்ச்சி, வலைஞர் குடியிருப்பின் இயல்பு , அந்தணர் ஒழுக்க முறை , உணவு முறைகள், நீர்ப்பெயற்று என்னும் ஊரின் பெருமை. பட்டினத்தின் சிறப்பு , கலங்கரை விளக்கத்தின் மாண்பு , திருவெஃகாவில் திருமால் பள்ளிகொண்டுள்ள நிலை. இளந்திரையனுடைய வீரம் , கொடை போன்றவற்றின் சிறப்புகள்

அனைத்தும் கூறப்பெற்றுள்ளன.

**மலைபடுகடாம் சிறப்புகள்**

மலையில் படுகின்ற ஒசை என்பது பொருள். மலைக்கு யானையை உவமித்து அதன் மதம் பொழியும் நீராகிய கடாத்தை ஓசையென ஆகுபெயராக்கி மலைபடுகடாம் என இப்பாட்டிற்குப் பெயர் தந்துள்ளனர். மதங்கொண்ட யானை முழங்குவது போல மலையின்கண் கேட்கப் பெறும் ஒசைகளை 296 வது அடியிலிருந்து 348 வது அடிவரை 52 அடிகளில் இன்னிசையும் ( 298) பூசலும் (296,306,314,429) பாடலும் ( 304) அழுகையும் ( 301) குரலும் ( 310) கொள்ளையும் ( 317) உவகையும் (318) குரவையும் (322) இசையும் (324) ஓதையும் (327, 339) கம்பலையும் (335) ஏத்தமும் ( 341) வள்ளையும் ( 342) பறையும் ( 344) என்றிவை அனைத்தும் இணைந்த பேரொசையாக

**”மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப” (348)**

என்ற கூற்றைக் கொண்டு பாடலில் வரும் சிறந்த தொடராகிய மலைபடுகடாஅம் என்பதையே பாடலுக்குப் பெயராக்கியுள்ளார். பதிற்றுப்பத்துப் பாடல் தலைப்புக்கள் அனைத்தும் இவ்வாறு அமைந்தவை.

இது பொருள் நிலையில் பரிசு பெற்று வரும் கூத்தன் பெறச்செல்லும் கூத்தனை ஆற்றுப்படுத்தியுள்ளதால் கூத்தர் ஆற்றுப்படை எனவும் வழங்கப்பெறும்.

நேரிசை ஆசிரியப்பாவில் 583 அடிகளை உடைய நூல் கூத்தராற்றுப் படை ஆகும். இதனை இயற்றியவர் இரணிய முட்டத்து பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார். இந்நூலின் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய்நன்னன். இந்நூலின் இடையில் “மலைபடுகடாம் மாதிரத்து இயம்ப “ என்ற அடி இடம்பெற்றள்ளது. பொருட்சிறப்புடைய இத்தொடரையே இந்நூலின் தலைப்பாக்கினர்.

இந்நூலுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் , “மலைக்கு யானையை உவமித்து, அதன்கண் பிறந்த ஒசையைக் கடாஅம் எனச் சிறப்பித்ததானல்

இப்பாட்டிற்கு இப்பெயர் வந்தது " எனக் குறிப்பிட்டுள்ளார். பரிசு பெற்று வரும் கூத்தன், மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்தும் முறையில் இப்பாட்டு அமைந்துள்ளது. அதனால் இதனைக் கூத்தாற்றுப்படை என்று அழைப்பர்.

**நவிர மலையின் சிறப்பு**

இம்மலை பல்வகை வளங்களைக் கொண்டு விளங்கியது. சோலைகளையும், காடுகளையும் சிற்றூர்களையும் உடையது மலையின் மீது காரியுண்டிக் கடவுளன் கோயில் இருந்தது. அங்கு யானைப்படையும் காலாட்படையும் காவல் புரிந்தது. அம்மலையிலிருந்து எப்போதும் பல்வேறு வகைப்பட்ட ஓசை முழக்கம் ஒலிக்கும் இம்மலையில் தோன்றிய ஆறு "சேயாறு" ஆகும். இது இப்போது செய்யாறு என வழங்கப்படுகின்றது. இம்மலையே இந்நூலின் மையப்பொருளாக விளங்குகின்றது.

**நன்னனின் சிறப்புகள்**

நன்னனின் நாடு வளம் மிக்கது. அவன் பகைவரை அழிப்பதில் , வல்லவன், பகைவரை வென்ற பரிசிலர்க்கு அளிப்பவன்.

**முல்லைப்பாட்டு**

முல்லை ஒழுக்கத்தைப் பற்றிய பாட்டு. இருத்தலும் , இருத்தல் நிமித்தமும் முல்லைக்குரிய உரிப்பொருள் தலைவி , தலைவனுக்காக அவன் கூறிச் சென்ற காலம் கடந்த பின்பும் பொறுமையுடன் இருக்கிறாள். தலைவனும் போர்ப் பாசறையில் இவளை எண்ணிக்கொண்டிருக்கிறான். முல்லை நிலம் , கார்காலம், மாலைக்காலம் போன்ற முல்லைத் திணைச் செய்திகள் இப்பாடலில் உள்ளன.

முல்லைப்பாட்டு என்பதன் பொருள் , "முல்லைத்திணை பற்றிக் கூறும் ஆசிரியப்பாட்டு" என்பதாகும். இங்கு "முல்லை" என்பது, முல்லைத்திணை என்ற பொருளில் முல்லை ஒழுக்கமாகிய ஆற்றியிருத்தலைக் குறிக்கின்றது. அடிகளால் பரந்துப்பட்ட ஓசையுடன் வருவது . இந்நூல் 103 அடிகளை உடையது. அசிரியப்பாவினால் ஆனது. இதனை இயற்றியவர் நப்பூதனார் ஆவார்.

**நூல் சுருக்கம்**

முல்லைப்பாட்டின் தலைவன் வேனிற்காலத்தில் போர் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்றான். கார்காலத்தில் வருவதாகக் கூறியிருந்தான். கார்காலம் தொடங்கியும் அவன் வரவில்லை. தலைவி வருத்தத்துடன் காத்திருக்கிறாள்.

மாலைப்பொழுதில் மழை பெய்தது. அவளின் துன்பத்தைக் கண்ட முதியபெண்டிர், நற்சொல் (விரிச்சி) கேட்கத் திருமால் கோவிலில் சென்று தொழுது நின்றனர். அப்பொழுது தாயைப் பிரிந்து நின்ற கன்றுகள் , தாயைக் காணாது தவித்து நின்றன. அக்காட்சியைக் கண்ட இடைக்குலப் பெண் , அக்கன்றுகளை நோக்கி , இன்னே வருகுவர் தாயர் என்று கூறுகிறாள். விரைவில் வந்து விடுவர் என்ற கூறிய நற்சொல்லைக் கேட்ட முதிய பெண்டிர் தலைவியிடம் சென்று தலைவனும் விரைவில் வந்து விடுவான் என்ற கூறுகின்றனர். இருப்பினும் தலைவி, தலைவனின் பிரிவாற்றாது வருந்துகின்றான்.

தலைவன் பகைவர் நாட்டில் பாசறை அமைத்துத் தங்கியிருக்கின்றான். யானைகள் உண்ணாதிருக்கின்றன. அவற்றைப் பாகர்கள் உண்ணச் செய்கின்றனர். குறுந்தொடி மகளிர் , பாசறையில் இரவில் விளக்கேற்றகின்றனர். நெடிய அனுபவமுடைய காவலர் காவல் புரிகின்றனர். பொழுது அறிந்து கூறுவோர் , அரசனிடம் பொழுதைக் கூறுகின்றனர்.

பாசறையின் உள்ளெ , ஊமையரான மிலேச்சர் காவல் காக்கின்றனர். பாசறைப் பள்ளியறையில் தலைவனின் நிலையும் , வீட்டில் இருக்கின்ற தலைவியின் நிலையும் விவரிக்கப்படுகின்றன. தலைவன் பகைவரை வென்ற அவர் தந்த திறைப் பொருள்களுடன் முல்லை நிலத்தைக் கடந்து வருகின்றான். அவன் தேரில் பூட்டியிருந்த குதிரைகள் கனைக்கும் ஓசை , தலைவியின் செவிகளை நிரப்பியது. அதனால் தலைவன் வருகை அறிந்து தலைவி மகிழ்கின்றாள்.

**நெடுநல்வாடையின் சிறப்புகள்**

நீண்ட நல்ல வாடை என்பது பொருள் காற்றினைப் பற்றிக்கூறும் போது தெற்கிலிருந்து வருவது தென்றல் குணக்கிலிருந்து (கிழக்கு) வருவது கொண்டல் , குடக்கிலிருந்து (மேற்கு) வருவது கோடை , வடக்கிலிருந்து வருவது வாடை எனக்கூறுவர். வடக்கிலிருந்து வரும் வாடைக்காற்றால் , மக்கள் விலங்குகள் , பறவைகள் குளிரால் துன்புறுகின்றன. தலைவனைப் பிரிந்த தலைவியும் வாடைக்காற்றால் துன்புறுகிறாள். பாலை பிரிதலும், பிரிதல் நிமித்தமும், முல்லை ஆற்றி இருத்தலும் இருத்தல் நிமித்தமும். இப்பாடல் முல்லை திரிந்த பாலைப் பாடல் தலைவிக்குத் தலைவனைப் பிரிந்து இருக்கும் சிறுபொழுது கூடப் பெரும்பொழுதாக, நீண்ட பொழுதாகத் தோன்றுகிறது. துன்பம் தரும் வாடைக் காற்று, நல்வாடையாக எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுகிறது. தலைவன் பகைமேற்சென்று பகைவனை வென்று வெற்றி வாகை சூடிவருதலால் அவனுக்கு நல்வாடை ஆகிறது.

நெடுநல்வாடையின் ஆசிரியர் நக்கீரர். இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். இந்நூல் அகவற்பாவில் 188 அடிகளில் அமைந்துள்ளது. இந்நூலைச் சிலர் அகம் என்றும் , சிலர் "புறம்" என்றும் கூறுகின்றனர். அதனால் இன்ற வரை அகமா ? புறமா? என்ற விவாத்ததிற்குரிய நூலாக இருக்கிறது. ஆனால் "வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு" (176) என்ற டி , இந்நூலைப் புறம்சார்ந்த நூலாகக் காட்டுகின்றது. இந்நூலுக்கு நச்சினார்க்கினியர் உரை எழதியுள்ளார்.

**பெயர்க்காரணம்**

தலைவிக்குப் பிரிவுத்துயரால் வாடைக்காற்று நெடியதாகவும் பாசறையில் போர் மேற்கொண்ட வேந்தனுக்கு வெற்றிபெற வாடை காற்று நல்லதாகவும் அமைகிறது. இதனால் இந்நூல் நெடுநல்வாடை எனப்பெயர் பெற்றது. "நெடிய நல்வாடை" என விரியும்.

**மையப்பொருள்**

“தலைவியின் பிரிவுத்துயர் நீங்கப் போர்க்களத்துப் பாசறையினின்றும் தலைவன் வெற்றி பெற்றுத் திரும்பும் வகையில் விறல் தொழில் இன்னே முடிவதாக என வேண்டும் வகையில் பாடலை அமைந்துள்ளார். நக்கீரர் இதுவே , இந்நூலின் மையப்பொருள் ஆகும்.

**நூல் அமைப்பு**

முதல் 72 அடிகளில் கார்காலத் தொடக்கமும் கூதிர்நிலையும் அதன் கண் நடைபெறும் நிகழ்வுகளும் சுட்டப்பட்டன. 72 முதல் 100 வரைவியலான அடிகளில் அரண்மனையில் இயல்பு காட்டப்பட்டது. 101 முதல் 114 வரையிலான அடிகளில் தலைவி உறையும் அரண்மனையின் இயல்பு கூறப்பட்டது. 115 முதல் 135 வரைவியலான அடிகளில் , அரசியாரின் தந்தக் கட்டிலின் சிறப்பும் அமைப்பும் சொல்லப்பட்டன. 136 முதல் 166 வரையிலான அடிகளில் , தலைவியின் பிரிவுத் துயரமும் செவிலி, தோழி, ஆகியோர் தலைவியைத் தேற்றுதலும் கூறப்பட்டன. 167 முதல் 168 வரையிலான இரண்டு அடிகளில் கொற்றவையைப் போற்றுதலும் , 169 முதல் 188 வரையிலான அடிகளில் , போரில் விழுப்புண் பட்ட வீர்ர்நிலை , வாடைக்காற்று வீசுதல் , விழுப்புண் காட்டல் , வேந்தர் அதனைப் பார்த்து வருந்துதல் முதலியன கூறப்பட்டன.

**குறிஞ்சிப் பாட்டின் சிறப்புகள்**

குறிஞ்சி ஒழுக்கம் பற்றிய பாடல் , குறிஞ்சி பாடுவதில் வல்ல கவிஞரான கபிலர் பாடிய பாட்டு ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ப் பண்பாட்டினைத் தெரிவிப்பதற்குப் பாடிய பாடல் 261 அடிகளைக் கொண்ட பாடல். இது அகத்திணைப்பாடல், குறிஞ்சிக்குரிய முதல் , கரு, உரிப்பொருள்கள் மூன்றையும் கொண்ட இப்பாடல் அறத்தோடு நிலைத் துறையைச் சார்ந்தது. தோழி , செவியிடம் நடந்தவைகளைக் கூறுகிறாள். சுனை நீராடல் , 99 வண்ண மலர்களைக் குவித்து மகிழ்தல். தலைவனது அழகைக்கூறல் , தலைவி, தலைவன் காதல் உணர்வுகள் , மாலைக் கால வருணனை , தலைவன் வரும் வழியின் அருமை போன்றவை தரப்பெற்றுள்ளன.

குறிஞ்சிப்பாட்டு நூலினைப் கபிலர் பாடினார். இது ஆசிரியப்பாவினால் அமைந்துள்ளது. இந்நூல் , ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தப் பாடப்பட்டதாகும். கபிலர் கடையெழுவள்ளல்களில் ஒருவரான பாரியின் உயிர் நண்பர். அந்தணர் குலத்தினர். இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் பிறந்தார். பாரியுடனே வாழ்ந்த இவர் , அவன் இறந்தபின் துயரைத் தாங்க இயலாமல் , பாரியின் மகள்களான அங்கவையையும் சங்கவையையும் ஔவையிடம் ஒப்படைத்துவிட்டுப் பெண்ணையாற்றின் கரையில் தீப்புகுந்து உயிர் துறந்தார்.

இந்நூலில் அக்காலத்தில் பூத்துக் குலுங்கிய 99 மலர்கள் பற்றிக் கபிலர் அறிமுகம் செய்துள்ளார்.

**பட்டினப்பாலையின் சிறப்புகள்**

பட்டினம் என்பது சோழ நாட்டின் தலைநகர். கடற்கரையூராகிய காவிரிப் பூம்பட்டினத்தைக் குறிக்கிறது. பாலை என்ற அகத்திணை , பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாகப் பாடப்பெறுவது.

பெரும்பாணாற்றப்படையை இயற்றிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் , இந்நூலினை இயற்றியுள்ளார். பொருநராற்றுப்படைக்குப் பாட்டுடைத் தலைவனாக விளங்கிய கரிகாற் பெருவளத்தானே , இந்நூலின் பாட்டுடைத் தலைவன் ஆவான். இந்நூல் 301 அடிகளை உடையது. இந்நூலில் உள்ள பாடல்கள், ஆசிரியப்பா கலந்த வஞ்சிப்பாவினால் ஆனவை.

பட்டினம் + பாலை = பட்டினப்பாலை பட்டினம் - செழிப்பு மிக்க கடற்கரைப் பட்டினம். பாலை - திணை (பிரிதலும் பிரிதல் நிமித்தமும்).

“காவிரிப்பூம்பட்டினமே எனக்குப் பரிசிலாகக் கிடைப்பினும். நான் என் தலைவியை விட்டுப் பிரியமாட்டேன். காரணம். அக்கானம் வளவனின் வேலைவிட வெம்மையானது. ஆனால் அவனின் செங்கோலைவிட என் தலைவியின் தோள் தண்ணியது என்று தன் நெஞ்சோடு கூறுகிறான் தலைவன். இதனால் இந்நூலுக்குப் பட்டினப்பாலை என்ற பெயர் வந்தது.

இந்நூலில் ஆறு அடிகள் மட்டுமே அகம் பற்றியன. மற்ற 295 அடிகள்

காவிரிப்பூம்பட்டினம் பற்றியும், கரிகாற் பெருவளத்தான் பற்றியும் பேசுகின்ற புறம் சார்ந்தவையாகும்.

**மதுரைக் காஞ்சியின் சிறப்புகள்**

மதுரையில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு, காஞ்சியாகிய நிலையாமை ஒழுக்கத்தைக் கூறிய பாடல். இதனைப் பாடியவர் சங்ககாலப் புலவர் தலைவராகிய மாங்குடி மருதனார். பத்துப்பாட்டில் 782 அடிகளையுடைய நீண்ட பாடல் இதுதான் அதனால் "பெருகு வள மதுரைக் காஞ்சி" எனச் சிறப்பிக்கப் பெற்றது.

பத்துப்பாட்டு நூல்களிலேயே அடி அளவில் மிகப் பெரிய பாடல் , மதுரைக்காஞ்சியாகும். இது வஞ்சியடிகள் கலந்த ஆசிரியப்பாவாலானது. இந்நூலினை இயற்றயவர் மாங்குடி மருதனார். இவருக்கு மதுரைக்காஞ்சிப் புலவர், காஞ்சிப் புலவர் எனும் வேறு பெயர்களும் உண்டு. இந்நூல் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மீது பாடப்பட்டது.

நெடுஞ்செழியனுக்கு உலக இன்பம் , பொருட்செல்வம், இளமை, யாக்கை போன்றவை நிலையற்றவை என்ற காஞ்சித் திணையை விரித்துக் கூறுவதால் , இப்பெயர் பெற்றது. இந்நலுக்குக் காஞ்சிப்பாட்டு , கூடற்றமிழ் என வேறு பெயர்களும் உண்டு.

**நூல் அமைப்பு**

மதுரைக்காஞ்சியில் 238 ஆம் அடி முதல் 699 ஆம் அடி வரையுள்ள பெரும் பகுதியில், மதுரை மாநகரின் சிறப்புகளையும் , ஐவகை நிலம் காட்சிகளையும் குறிப்பிட்டுள்ளார். 238-258 வரையிலான அடிகளில் மருதநிலத்தின் வளமும் , 271-285 வரையிலான அடிகளில் , முல்லை நிலத்தின் வளமும் 286 - 301 வரையிலான அடிகளில், குறிஞ்சி நிலத்தின் வளமும் 302 - 314 வரையிலான அடிகளில் , பாலை நிலத்தின் இயல்பும் 315 - 326 வரையிலான அடிகளில் , நெய்தல் நிலத்தின் வளமும் சுட்டப்பட்டுள்ளன. மதுரைக்காஞ்சியின் இறுதிப்பகுதியில் ( 766 முதல் 781

வரையிலான அடிகளில் , பாண்டியன் நெடுஞ்செழியனின் வீரத்தையும் கொடையையும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**வினாக்கள்**

1. எட்டுத்தொகையுள் நற்றிணையின் சிறப்பைப் புலப்படுத்துக.

2. குறுந்தொகையின் சிறப்பினைக் கூறுக.

3. எட்டுத்தொகையுள் ஐங்குறுநூறு பெறும் இடத்தை விவரி.

4. அகநானூற்றின் சிறப்புகள் குறித்து எழுதுக.

5. கலித்தொகையின் சிறப்புகளை எழுதுக.

6. புறநானூறு ஒரு வரலாற்றுக் களஞ்சியம் - நிறுவுக.

7. பதிற்றுப்பத்தின் சிறப்பியல்புகளை ஆராய்க.

8. பரிபாடலின் தனிச்சிறப்பு யாது? விளக்குக.

9. பத்துப்பாட்டு நூல்கள் யாவை? விளக்குக.

9. முல்லைப்பாட்டு பற்றிக் குறிப்பிடுக.

10. குறிஞ்சிப்பாட்டு பற்றி விவரிக்க.

11. பட்டினப்பாலையின் சிறப்புகளைக் கூறுக.

12. பத்துப்பாட்டுள் நெடுநல்வாடை பெறும் இடம் யாது?

13. சிறுபாணாற்றுப்படை - குறிப்பு வரைக.

14. பெரும்பாணாற்றுப்படை பற்றி விவரிக்க.

**சு.பேச்சியம்மாள்,**
தமிழியல் துறை,
உதவிப் பேராசிரியர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
**EMAIL ID:** spetchi29@gmail.com